# நல்லைக் குமரன்

# மலர் 2003



வெளியீடு

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு

மலர் 11

5·32
L/PR

உ

ஓம் குமாராய நம



# நல்லைக்குமரன் மலர் – 11
# 2003

பதிப்பாசிரியர்:

நல்லையா விஜயசுந்தரம்
B.A.(Spe in.Eco)

**சைவசமய விவகாரக் குழு**

மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றத்தின்

# சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் - 2003

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு.இ.இராமலிங்கம்<br>மாநகர ஆணையாளர்,<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| கௌரவ செயலாளர் | - | திரு.இ.இரத்தினசிங்கம்<br>நிர்வாக உத்தியோகத்தர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| கௌரவ பொருளாளர் | - | திரு.து.சோமசுந்தரம்<br>சனசமூகநிலைய மேற்பார்வையாளர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | - | திரு.க.கிருஷ்ணகுமார்<br>பாதுகாப்பு மேற்பார்வையாளர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | - | திரு.நா.இரகுமார்<br>பொது சுகாதாரப் பரிசோதகர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | - | செல்வி.கு.சிவநந்தினி<br>எழுதுநர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | - | திரு.க.முகுந்தன்<br>எழுதுநர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| | - | திரு.து.இராஜன்<br>பொறுப்பதிகாரி, மோட்டார் வாகனப்பிரிவு<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| விளம்பர முகவர் | - | திரு.த.கனகசபை<br>இளைப்பாறிய பிரதம காசாளர்<br>மாநகரசபை, யாழ்ப்பாணம். |
| கௌரவ பதிப்பாசிரியர் | - | திரு.ந.விஜயசுந்தரம்,<br>ஆசிரியர்<br>யா/கொக்குவில் இந்துக்கல்லூரி. |

# குமரன் திருவடிக்கு........


- **சமர்ப்பணம்**

  ஆன்ம சுகந்தரும் நல்லூரான் - இ.இராமலிங்கம் (தலைவ

  பொருளாளரின் உள்ளத்திலிருந்து - து.சோமசுந்தரம்

- **ஆசிச்செய்திகள்**
  - ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள்
  - நல்லை ஆதீன முதல்வர்
  - மாவை ஆதீனகர்த்தா
  - சுவாமி ஆத்மகனானந்தா

- **வாழ்த்துச்செய்திகள்**
  - கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி
  - கௌரவ இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்
  - இந்து கலாசார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன்
  - மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம்
  - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன்

- நல்லூரிற் கந்தா நீ அருள்வாய் - அருட்கவி சீ.விநாசித்தம்பி 01
- நல்லூர்க்கந்தன் காட்சியும் மாட்சியும் நயினைக்கவிஞர் நாக.சண்முகநாதபிள்ளை 02
- நற்றமிழின் வடிவத்தில் நல்லூரான் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் 04
- விநாயகர் திருநாமச் சிறப்புக்கண்ணிகள் - ச.தங்கமாமயிலோன் 05
- நிம்மதி நிழல் தா - த.ஜெயசீலன் 07
- நல்லூரான் வாசலிலே பிள்ளைக்கனியமுது வேண்டி சஷ்டி விரதமிருந்த ஒரு பெண்ணின் உள்ளக்குமுறல் - கு.துரைராஜன் 08
- குருவரன் தோத்திரம் - பேராசிரியர் வி.சிவசாமி 09
- ஆறுமுகமான பொருள் நீ - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் 15
- நல்லூர் முருகன் திருப்புகழ் - நவாலியூர் சோமசுந்தரப்புலவர் 20
- சித்தர்கள் கண்ட சமய நெறி - சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் 21
- இந்து சமய வழிபாட்டில் போற்றுதற்குரிய பொதுமைப்பண்பு நீர்வைமணி 25

❋ சைவப் பிரசாரகர்க்கு ஒரு பயிற்சிக் கல்லூரி
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் 27

❋ இலங்கையில் இந்து சமயம் சார் பிரபந்தங்கள்
வாகீசகலாநிதி கனக.நாகேஸ்வரன் 29

❋ திருக்குற்றாலம் பொ.சிவப்பிரகாசம் 53

❋ சைவசித்தாந்த நோக்கில் வள்ளி திருமணம்
திருமதி. மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் 68

❋ கொடிமரமும் கொடியேற்ற மகத்துவமும் - ஆ.தியாகராசா 73

❋ அதர்வவேதத்தில் ஆயுர்வேதம் - ச.முகுந்தன் 76

❋ விளங்குவள்ளி காந்தன் - கு.பாலஷண்முகன் 83

❋ நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் - கலாநிதி க.குணராசா 86

❋ கந்தபுராணம் ஒரு நீதிநூற் கருவூலம் - வ.கோவிந்தபிள்ளை 110

❋ தோகை மேல் உலவும் கந்தன் - கோ.சி.வேலாயுதம் 117

❋ நற்காட்சி காண நல்லூரே நற்பதி - சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் 120

❋ கந்தன் கதை கந்தபுராணத்திற்கு முந்தியது - சிவசண்முக வடிவேல் 122

❋ மணிவாசகரின் சிவபுராணம் எமது சுயபுராணமே
எஸ்.ஆர்.சரவணபவன் 126

❋ தமிழ் நிலத்தெய்வம் முருகன் - செ.பரமநாதன் 129

❋ என்.கே.பத்மநாதன் என்றும் எங்களுடனேயே
வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன் 131

❋ பற்றுமிகுந்த எங்கள் தெல்லியூரார் - இரா.இரத்தினசிங்கம் 132

❋ தூய தொண்டினை துடிப்புடன் செய்த தூயவர் நாமம் வாழ்க
இரா.இரத்தினசிங்கம் 134

❋ நல்லூர்க் கந்தன் திருப்புகழ் - சொக்கன் 136

❋ நல்லைக் கந்தனின் அஷ்டவித நாயகிகள்
மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் 138



# சமர்ப்பணம்

நல்லூரான் திருவடிக்கு இது பதினோராவது மலர். முருகப்பெருமானது திருவருளால் அவன் நாமத்து மலர் ஆண்டுதோறும் மலர்ந்து சைவநறுமணத்தை இச்சிவபூமியில் பரப்பி வருகிறது. நல்லூர்க் கந்தப்பெருமானின் அருளாட்சியால் ஈழத்தமிழர்கள் துன்பத்திலும் சாவளாது மனவுறுதியோடு வாழ்கின்றனர்.

ஞானிகளும், யோகிகளும், உலாவித்திரிந்த நல்லூர்த் திருமண்ணில் நாமும் நடமாடப் பெற்றோம் என்றால், அது முன்செய் தவத்தின் பயனேயாம். அப் பயனைப் பெற்ற நாம் நல்லூர்க் கந்தனின் திருநாமத்தை சதா உச்சரிப்பதே இப்பிறவியின் பெரும்பயனாக அமையும்.

நல்லூர்க் கந்தனின் திருவீதியில் நடமாடிய எங்கள் ஞானகுரு யோகர்சுவாமிகள் நமக்கெல்லாம் ஓர் அரிய நற்சிந்தனையை தந்து நம் உய்விற்கு வழிகாட்டினார்.

''நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி கிளியே''

என்ற ஞானகுருவின் திருவாய்மொழி கந்தப்பெருமானின் அற்புதத்தை தெளிவாகக் காட்டிநிற்கிறது. நல்லூர்க் கந்தன் குடியிருக்கும் கோட்டம் ஈழத்து புண்ணிய தலம். அதனாலன்றோ, நல்லூர் மஹோற்சவ காலத்தில் எங்கும் தெய்வீகப் பெருக்கு பாய்ந்தோடுகிறது. சமய அநுட்டானங்களும், உபவாசங்களும், அங்கப்பிரதட்ஷணங்களும் நிறைந்து பக்தியின் உச்சிக்கு நம்மை இட்டுச்செல்கிறது.

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலத்தில் வெளிநாடுகளில் வாழ்கின்ற நம் சைவத்தமிழர்கள் நல்லூர்ப்பதிக்கு வந்து, முருகனை வணங்கிச் செல்லும் காட்சி அற்புதமானது. எங்கு வாழ்ந்தாலும் எங்கள் நல்லைக் கந்தப்பெருமானின் நினைப்போடு நம்மவர்கள் வாழ்கின்றார்கள் என்ற உண்மை நமக்கெல்லாம் மிகுந்த ஆறுதலைத் தருகின்றது.

இருபத்தோராம் நூற்றாண்டில் இன வாதமும், மதவாதமும், மொழி வாதமும் மலிந்துபோயுள்ள வேளையில், யாழ்ப்பாணத்துச் சிவபூமியில் வாழ்கின்ற சைவமக்களை மாற்றுச் சமயங்கள் தம்பால் ஈர்த்திழுக்கும் நேரத்தில் வெளிநாடுகளில் வாழும் எங்கள் சைவத்தமிழர்கள் நல்லூரை நாடி ஓடிவரும் பக்தி மிகுதிகண்டு மனம் நெகிழாமல் இருக்கமுடியாது.

உள்ளூரில் சமயம் மாற்றும் சக்திகள் தீவிரமாக வேரூன்றியிருக்கும்போது அது பற்றி நாம் பாராமுகமாக இருப்பது, நீண்ட காலத்தில் சைவசமயத்திற்குப் பெரும் பாதகமாக அமைந்துவிடும் என்பதால், சமயம் மாறுவதைத் தடுக்கும் பணியில் சைவாலயங்கள் முழுமையாகத் தம்மை அர்ப்பணித்து செயலாற்றவேண்டும். அதற்காக ஆலயங்கள் சமயப்பணியுடன் சமூகப்பணிகளையும் முன்னெடுத்துச் செல்வது காலத்தின் கட்டாயத் தேவையாகும். இப்பணியில் நல்லூர்க் கந்தன் ஆலயம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஏனைய ஆலயங்களுக்கும் முன்மாதிரியாக விளங்கவேண்டும்.

ஈழத்தமிழர்களின் காக்கும் கடவுளாக வீற்றிருக்கும் நல்லூர்க் கந்தனின் பெயரால் மாபெரும் சமூகப்பணி முன்னெடுக்கப்படுமாயின் இச்சிவபூமியில் மதமாற்றமென்ற பேச்சுக்கே இடமில்லாமல் போவதுடன், சைவத்தமிழர்களின் வாழ்வியல்த்தரங்களும் உயர்வடையும் என்ற கருத்தை நல்லைக்குமரனின் பதினோராவது மலரின் கருப்பொருளாகத் தந்து நாட்டில் நிரந்தர சமாதானமும், அமைதியும் ஏற்பட நல்லூர்க் கந்தனை வேண்டி, அவன் பாதகமலங்களில் இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

சைவசமய விவகாரக் குழு,
யாழ் மாநகராட்சி மன்றம்.

பதிப்பாசிரியர்:
நல்லைக்குமரன் மலர்

# ஆன்ம சுகம் தரும் நல்லூரான்

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலங்களில் யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு வெளியிட்டு வரும் நல்லைக்குமரன் மலர் இம்முறையும் மலர்வது மகிழ்விற்குரியது. முருகப்பெருமானின் அற்புதங்களை, அவனின் திருவருளின் பெருமைகளை தாங்கி வரும் இம்மலர் சைவசமயத்தின் கண் நிறைந்துள்ள தத்துவங்களையும், எமது சமயப் பாரம்பரியத்தையும் மிகத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. வருங்கால இளஞ்சமூகம் கடவுள் கொள்கையிலும், சமயச் சடங்குகளிலும் நம்பிக்கை அற்று விடுவார்களோ என்ற ஏக்கம் அறிஞர் பெருமக்களிடம் நிலவி வருகின்றது. அத்தகைய ஏக்கத்தை நீக்கும் கடப்பாடு ஒவ்வொரு சமய நிறுவனங்களுக்கும் உண்டு.

காலத்திற்குக் காலம் உலக மையத்தில் ஏற்படுகின்ற கலாசாரப் பிறழ்வுகளும், பண்பாட்டு மீறல்களும் எங்கும் மலிந்து மனித சமூகத்தை நெறி தவறிய வாழ்வுக்கு இட்டுச் செல்கின்றது இத்தகைய பிறழ்வுகளில் இருந்து மனித சமூகத்தைக் காப்பாற்றி நல்வழிப்படுத்துவதற்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு கருவி சமயமே ஆகும். ஓர் இளம் சமூகம் தாம் சார்ந்த சமயத்தின் கருத்துக்களை புரிந்து கொண்டு இறை நம்பிக்கையோடு தனது வாழ்வியல் பாதையை அமைத்துக் கொள்ளுமாயின் அங்கு கலாசாரப் பிறழ்வுகளுக்கும், விழுமிய மீறல்களுக்கும் இடமிருக்க முடியாது.

அவ்வகையில், நல்லூர்ப் பதியில் வீற்றிருக்கும் கந்தனின் மஹோற்சவ காலத்தில் நம் இளைஞர்களில் காணப்படும் தெய்வீக நம்பிக்கை நல்லூர் முருகன் நமக்கு ஆன்ம சுகம் அளிக்கும் ஞானக்கடவுளாக விளங்குகின்றான் என்பதைச் சுட்டி நிற்கின்றது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு வருடம் தோறும் வெளியிடுகின்ற நல்லைக்குமரன் மலர் நம் இளைய தலைமுறைக்கு ஆன்மீகத்தை உணர்த்தும் மலராக விளங்கவும், அம்மலரைச் சைவப் பெருமக்கள் நல்ல முறையில் பயன் படுத்தவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருளை வேண்டுகின்றேன்.

**தலைவர்,**
**சைவ சமய விவகாரக்குழு.**

**இ.இராமலிங்கம்,**
**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை,**

# பொருளாளரின் உள்ளத்தில் இருந்து

நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் யாழ் மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு நல்லைக் குமரன் மலரை தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதை இட்டுப் பெருமிதம் அடைகின்றேன்.

இக்குழுவிற்குப் பொருளாளராகப் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை நல்லூர் முருகன் எனக்குத் தந்த நல்லருளாகவே கருதுகின்றேன். சைவ சமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் பல் துறைசார்ந்த அறிஞர்களின் ஆக்கங்களைத் தாங்கி வருவதால், அதனை உரிய காலத்தில் வெளியிடுவதில் நாம் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

எனினும் கலியுகவரதனின் மஹோற்சவத்திற்கு முன்னரே அரும்பாகும் இம்மலரை மஹோற்சவத்தின் ஆரம்ப நாட்களில் வெளியிடுவதற்கு நாம் முயன்று, பல முறை நாட்கள் குறித்த போதும், மலர் தன் கார்த்திகைத் திருநாளில் மலர்வதையே முருகன் விரும்பினான் போலும்.

நல்லூர்க் கந்தனின் அற்புதத் திருவருளை தன்னகத்தே தாங்கி வரும் நல்லைக் குமரன் மலர் இப்புண்ணிய பூமியில் மலர்வதற்கு எல்ல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் யாழ்ப்பாண மாநகர சபையின் மதிப்பார்ந்த ஆணையாளர் திரு.இ.இராமலிங்கம் அவர்கள், இக்குழுவின் செயலாளராக இருந்து எல்லாப்பணிகளையும் மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கும் கௌரவ செயலாளர் திரு.இ.இரத்தினசிங்கம் அவர்கள் பாராட்டுதற்கு உரியவர்கள்.

மேலும் இவ்வாண்டு எமது குழுவில் இணைந்து கொண்ட யாழ் மாநகர சபை உத்தியோகத்தர்களின் பங்கும் பணியும் பாராட்டிற்கு உரியது. மேலாக இம்மலர் மலர சகல வழிகளிலும் பணிபுரிந்த எல்லோருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

இம்மலர் தொடர்ந்தும் வெளிவர "நல்லைக் குமரன்" நல்லருள் புரிவானாக.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

**சைவ சமய விவகாரக் குழு,**
**மாநகர சபை.**

**து.சோமசுந்தரம்,**
**பொருளாளர்,**



தங்கரதத்தில்
தங்க வேலவன்



ஆறுமுகன் தேரால்
இறங்கிவருகிறார்

ஸ்ரீ சந்ரமௌளீச்வராய நம:
ஸ்ரீ ஆதிசங்கராச்சார்ய பகவத்பாத
பரம்பராகத மூலாம்னாய ஸர்வக்ஞபீட
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் வழங்கிய

# ஆசிச் செய்தி

மாநகர ஆணையாளர் அவர்களுக்கு தங்களது கடிதம் கிடைத்து பூஜ்யஸ்ரீ மஹாஸன்னிதானத்தில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியில் வசிக்கும் முருக பக்தர்கள் அனைவரும் சேர்ந்து ஆண்டு தோறும் முருகப்பெருமானின் உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தி, அதன் தொடர்பாக மலரும் வெளியிட்டு வருவதைப் போல் இவ்வாண்டும் முருகப் பெருமானின் திருவிழாவை நடத்தி மலரும் வெளியிட இருப்பதை அறிந்து ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். விழாவும் சிறப்பாக நடந்து மலரும் மக்களுக்கு நன்கு பயன்படும்படி நறுமணத்துடன் அமைந்து கந்தன் அருளால் உலகமனைத்தும் சகல மங்களங்களையும் அடைந்து பாமக்ஷேமமாக வாழ வேண்டும் என்று ஆசீர்வதித்து அருளுகிறோம்.

I, சாலைத்தெரு,
காஞ்சிபுரம், 631502.
போன் : (STD 04112) - 22115.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்,
ஸ்ரீமடம் ஸமஸ்தானம்.

⌘⌘⌘

# நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அன்புசால் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நல்லைக் கந்தனின் மகோற்சவத்தைச் சிறப்பித்து வெளியிடும் நல்லைக் குமரன் மலர் இவ்வாண்டும் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பழமையும் பெருமையும் வாய்ந்த யாழ்ப்பாணம் நல்லூரை ஆண்டு கொண்டிருக்கும் முருகப்பெருமான் உலகத்தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவனாக விளங்குகின்றான். அழகிற்கு அழகும், சிறப்பிற்குச் சிறப்பும், அருளுக்கு அருளுமாக விளங்குகின்ற நல்லை முருகனை அழகுபடுத்த நல்லைக்குமரன் மலர் வெளிவருவது சிறப்புடையது. இப்பாரிய பணியை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகச் செய்யும் சைவசமய விவகாரக் குழுவின் பணி எல்லோருடைய மனதையும் மகிழ வைக்கின்றது. இவ்வருடம் 11வது மலராக வெளிவரும் நல்லைக்குமரன் மலர் வளர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கு உதவும் வகையில், சமய விழுமியங்களையும் பண்பாடுகளையும் கொண்ட கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது. இன்றைய காலநிலையில் சைவ மதத்தைச் சார்ந்த மக்கள் சமய நெறி நின்று வாழ்வதற்கு இதில் வரும் கட்டுரைகள் யாவும் வழிகாட்டுகின்றன. அனைவரும் படித்துப் பயன் பெறுவோமாக. இந்நூலை வெளியிடும் சைவசமய விவகாரக் குழுவின் பணிகளை இறைவன் ஆசீர்வதிக்கவும், மலர் தொடர்ந்து வெளிவரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

⌘⌘⌘

# மாவை ஆதீனகர்த்தாவின் ஆசிச் செய்தி

யாழ் மாநகராட்சி மன்றம் சைவசமய விவகாரக்குழு மூலம் பாரெங்கிலும் மனித இனம் பண்போடும், பக்தியோடும், தர்ம கைங்கர்யங்களோடும் வாழ்ந்து முக்தியின்பம் எய்தல் வேண்டுமென்பதற்காக நல்லைக்குமரன் மலர் மூலம் மிகச் சிறந்த தரவுகளை வழங்கி நிற்பதும் யாம் செய்த தவப்பயனேயாம். ஈழத்தில் விதம் விதமான பெயர்களோடும், பல வகையான அம்சங்களோடும் எத்தனையோ சங்கங்கள், மன்றங்கள், பேரவைகள் என்றெல்லாம் இந்து சமய நெறிகளை முன்னெடுப்பதென்ற போர்வைக்குள் தந்திர பாசாங்குகளை வெகு கச்சிதமாக செயற்படுத்துகிறார்கள். ஆனால் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு மிக அமைதியாக, ஆழ்ந்த செயற்திட்டங்களால் சமய வளர்ச்சியின் பேறுகளுக்கு ஆற்றுப்படுத்தி நிற்கிறார்கள். சொல், செயல், திட்டமிடல் அனைத்தும் பாராட்டுதற்குரியன.

தர்மங்களது உயர்வை, அது எத்தகையதென்பதை உணரக்கூடிய கட்டுரைகள் இவர்களது மலரில் வெளிவருவதுண்டு. கடவுள் கொள்ளும் உருவத் திருமேனிகள், போக வடிவம், கோர வடிவம், யோக வடிவம் என மூவகையுண்டு. அம்மையோடு கூடியிருக்கும் வடிவம் போக வடிவம். ஆயுத பாணியாக இருப்பது கோர வடிவம், தக்ஷிணாமூர்த்தி வடிவம். யோக வடிவம். "இடப்பாக மாதராளோடு இயைந்துயிர்க்கின்ப மென்றுமடைபரனாம்" எனும் போது, உயிர்களிடத்தே போகத்தைப் புரிய இறைவன் அம்மையோடு கூடி போக வடிவெடுத்தார். உலகின் சாரமே தர்மம்தான். "தர்ம சாரம் இதம் ஜகத்" என்பது வால்மீகியின் கருத்து. தர்மத்தைப் போற்றிடின் அன்பு வளரும். அன்பு முதிர அருள் விளங்கும். அன்பும் அருளும் கொள்ளும்போது தவம் சித்திக்கும். அதனால் மனம் தெளியப் பெற்று உயிர் இறைவனையடையும். அவ்வாறு அடையின் பிறப்பு நீங்கி பழமையாய்ச் சார்ந்திருக்கப்பட்ட மும்மலங்களும் அகன்று இன்பமுண்டாகும். எனவே தர்மத்தின் உயர்வு எத்தகையதென அறியலாம்.

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழலியு மணையு மாங்கலை
வருவழி தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர்ச் சிவனைச் சேருமால்
சேர்ந்துழி பிறவியும் தீருந் தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத் தனையும் நீங்கிடும்
பேர்ந்திட லரியதோர் பேரின்ப மதனை
ஆர்ந்திடு மதன்பரி சறைய வல்லதோ"

தர்மங்கள் அழிய நேரிடும் போதுதான், அவை விஷ்வரூபமெடுத்து இறைவனையடைந்து "யானிறவாமையும் தேவரீருக்கு வாகனமாகுந்தன்மையும் மிக்க வலியுடைமையும் பெற்று உயிர்வாழ அடியேனுக்கருள வேண்டும்" என விண்ணப்பித்ததனால், தர்ம தேவதை இடபமாக இறைவனுக்கு ஊர்தியானது. அந்நாள் முதல் இறைவன் அம்மையோடு முருகப்பெருமானையும் அணைத்து இடபாருடராக தற்போதும் உற்ஸவ காலங்களில் காட்சி தருகிறார்.

நல்லைக்குமரன் மலர் இது போன்ற தர்ம காரிய செயல்களுக்கு ஊக்குவித்து, நல்லதோர் சூழலில் மக்கள் வாழ வேண்டுமென்ற சிந்தனைகட்கு அறிவூட்டி, ஆற்றுப்படுத்தும் தர்மச் செயல் போற்றுதற்குரியது.

இவர்களது தெய்வீகப்பணி தொடர வேண்டும். இக்குழுவினர் சிறந்த சேவைகள் மூலம் இன்னும் வீரநடை போட்டு முன்னேற வேண்டுமென்பதற்காக, இக்குழுவினருக்கு நல்லூர்க் கந்தப்பெருமான் நிறைந்த திருவருட் செல்வங்களை வழங்கி இரட்சித்தருள வேண்டுமென யான் பிரார்த்திகின்றேன்.

**மாவையாதீனம்,**
**மாவிட்டபுரம்.**

**மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்**
**மாவையாதீனகர்த்தா.**

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு, நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ வைபவத்தை முன்னிட்டு வெளியிடும் "நல்லைக் குமரன்" மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இன்று மனிதனது பௌதீக வாழ்க்கைத் தரம் பல மடங்கு உயர்ந்துள்ளது உண்மையாயினும், அவனது மனக் கவலைகளும் அதே அளவிற்கு அதிகரித்துள்ளதும் உண்மையே. கவலைகளை முற்றிலும் போக்கி, மன நிறைவையும், மன அமைதியையும் அளிக்கும் வல்லமையோ அல்லது உபாயமோ பௌதீக விஞ்ஞானத்தில் கிடையாது. விஞ்ஞானம் அளிக்க இயலாத அமைதியை சமயத்தின் மூலமே இவ்வுலகம் பெற்று வருகிறது. அன்பும், அமைதியும், அருளும் ஒருங்கே அமைந்த நிறைமாந்தர்களைக் கணக்கின்றி வாழையடி வாழையெனத் தொடர்ந்து படைத்துக் கொண்டிருக்கும் பெருமை இந்து சமயத்திற்கு மட்டுமே உண்டு. இது இச்சமயத்தின் உள்ளார்ந்த ஆன்மீக சக்தியைக் காட்டுவதாக உள்ளது. இச்சமயத்தில் காணப்படும் சடங்குகளும், விழாக்களும், விரதங்களும் மனதைத் தூய்மைப்படுத்தி, இறையுணர்வை மேலோங்கச் செய்யவல்லன. ஆனால் சமயத்தைக் கடைப்பிடிப்பதற்கு மிகுந்த சிரத்தையும், தளரா உழைப்பும் அவசியம். ஒழுக்கம் மற்றும் புலனடக்கம், சமய சாதனைகளின் அத்திவாரமாக அமைய வேண்டும்.

நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவம் நிறைவுடன் அமைந்து, மக்களது மனதில் அன்பும், அமைதியும் நிறையப் பிரார்த்திக்கிறோம்.

**இராமகிருஷ்ண மிஷன்,**
**கொழும்பு.**

**சுவாமி ஆத்மகனானந்தா.**

# சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துச் செய்தி

நல்லைக் கந்தா சரணம் சரணம் என்று நாவினால் பாடி நெஞ்சினால் நினைந்து ஆனந்தமடைகின்ற நாட்கள் இந்த நாட்களாகும். யாழ் குடாநாட்டு மக்கள் தமது கண்கண்ட தெய்வமாகப் போற்றுகின்ற பெருமான் நல்லைக்குமரன் ஆவார். "நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி கிளியே இரவுபகல் காணேனடி" என்று பாடினார் கொழும்புத்துறை முனிவர் யோகர் சுவாமிகள். இந்த நிலையை எந்த நாளும் எம் உள்ளத்தில் ஏத்துகின்ற நாட்கள் இந்த நாட்களாகும். யாழ் மாநகராட்சி மன்றம் நல்லூர்க்குமரன் உற்சவத்தை முன்னிட்டு வெளியிடுகின்ற இம்மலர் முருகன் ஒளி வீசும் மலராகும். கடந்த பத்து ஆண்டுகளாக வெளிவந்த நல்லைக்குமரன் மலர் இன்று பதினோராவது மலராக மலர்கின்றது. தமிழ் மன்னனை நல்லூர் ஆட்சிப் பீடத்தில் ஏற்றி வைத்த கந்தப் பெருமான் மேலும் மேலும் தமிழ்ப்பெருந் தலைவனாக வீற்றிருந்து தமிழர்கள் துயர் துடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். கடந்த காலங்களில் எமக்கு ஏற்பட்ட அல்லல்கள் நீங்கி அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டும் என்று வணங்கி அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,**
**சமாதான நீதிபதி,**

**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை – இலங்கை.**

# கௌரவ இந்து கலாசார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

தமிழர் தெய்வமாகிய முருகனுக்கு தமிழர்கள் தாம் வாழும் இடமெல்லாம் கோயில்கள் அமைத்து வழிபட்டு வருகிறார்கள். ஈழமணித் திருநாட்டில் பழமையும், பெருமையும் மிக்க முருகன் திருத்தலமாக கதிர்காமம் காணப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அலங்காரக் கந்தனாக நல்லூர் ஆலயமும், அன்னதானக் கந்தனாக செல்வச் சந்நிதி முருகன் ஆலயமும், அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரம் முருகன் ஆலயமும் விளங்குகின்றன.

சித்த புருஷர்களாகிய செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற மகான்கள் நல்லூர்த் தேரடியில் இருந்து ஞான ஆட்சி புரிந்தார்கள். இருபாலைச் சேனாதிராஜ முதலியார், ஆறுமுகநாவலர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், போன்ற அருளாளர்களும், கவிஞர்களும் நல்லூர் முருகப் பெருமான் மீது பாடல்களைப் பாடி உள்ளார்கள்.

நல்லைக் கந்தனையே நாவலர் பெருமான் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டார். நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அருகில் தனது சொத்தில் சைவ மடம் ஒன்றை அமைத்திருந்தார். முருகப் பெருமானுடைய ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவ காலங்களில் இந்தியாவின் திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து ஓதுவார் மூர்த்திகளை வரவழைத்து சுவாமிக்குப் பின்னால் திருமுறை பாடும் மரபை ஏற்படுத்தினார்.

நாவலர் மணிமண்டபம் சென்ற வருடம் எமது அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டு புனர்நிர்மானம் செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆத்மீகச் சொற்பொழிவு இம் மண்டபத்திலே நடைபெற்று வருகிறது. பண்ணிசை வகுப்பு, யோகாசன தியான வகுப்புக்கள் என்பனவும் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மன்னர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த காலத்தில் நல்லூரே இராஜதானியாக இருந்தது. இன்று யாழ்ப்பாண மாநகரசபையின் தலைமைச் செயலகம் நல்லூரிலேயே இயங்குகிறது. மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினர் வருடம் தோறும் மகோற்சவ காலத்தில் நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு வருகிறார்கள். இம் மலரில் சமயம் சார்ந்த சிறப்பான கட்டுரைகள் பல வெளிவருகின்றன. இந்த வருடம் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**தி.மகேஸ்வரன் (பா.உ),**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.**

# இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ் மண்ணில் உலகப் புகழ்மிக்க நல்லூர்க் கந்தன் ஆலயம் தெய்வீகத் தன்மையும், அழகும் முகாமைத்துவச் சிறப்பும் கொண்ட ஆலயமாகும்.

நல்லூர்க் கந்தன் என்றால் நாவினிக்கும், நற்றமிழ் ஒலிக்கும் அவனது காலடி தொழுது வணங்கினால் காலமெல்லாம் குடிகொண்டிருந்த பாவங்கள் அனைத்தும் ஒழிந்து போகும். வருவோர் தொழுவோருக்கு வாழ்வு தந்து ஒளி காட்டும் கருணைக் கடலாக நல்லூர்க் குமரன் ஆலயம் விளங்குகின்றது.

நல்லூர்க் கந்தன் வருடாந்த மகோற்சவக் காலங்களில் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு அளப்பரிய சேவைகளையும், பணிகளையும் செய்து உற்சவ காலங்களில் ஆலயம் வரும் அடியார்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டு வருவதைக் கடந்த பல வருடங்களாக நான் அறிவேன். இவர்கள் சமய, சமூகப் பணிகள் மூலம் ஆலய மகோற்சவத்திற்கு உயிரூட்டி வருகின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

1993ஆம் ஆண்டிலிருந்து நல்லைக் குமரன் மலர் சைவசமய விவகாரக் குழுவினரால் வெளியிடப்பட்டு வருவது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயத்தின் சிறப்பிற்கும். அதில் அமர்ந்து கருணை பொழியும் தெய்வத்தின் மகிமைக்கும் எடுத்துக்காட்டாக நல்லைக் குமரன் மலர் திகழ்கின்றது எனக் கூறலாம்.

கடந்த 11 வருடங்களாக தளராது இப்பணியை மேற்கொண்டுவரும் யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். குழுவினரின் சேவை அளப்பரியது என்பதற்கு வருடாவருடம் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

2003 ஆம் ஆண்டு நல்லைக் குமரன் ஆலயத்தின் வருடாந்த மகா உற்சவத்தின்போது வெளிவரும் நல்லைக்குமரன் மலர் சைவசமயத்தின் தாற்பரியத்தை உணர்த்திடும் சிறப்பு மலராக அமையப்பெற வேண்டும். சைவசமய விவகாரக்குழு இதன் மூலம் பெருமை கொள்வதுடன், ஆலய மகோற்சவம் எல்லா வருடங்களையும் விட மேலோங்கி நின்று நல்லைக் கந்தன் காலடியில் வந்து சேரும் அடியார்களுக்குக் கருணையினைச் சொரிந்து அவர்கள் துன்பத்தினைத் தீர்த்திட வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல நல்லைக்குமரன் திருவருளை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இந்துகலாசார அமைச்சு,**
**கொழும்பு.**

**க.பரமேஸ்வரன்**
**செயலாளர்.**

# மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரது வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவானது 1993ஆம் ஆண்டு முதல் நல்லைக்கந்தனின் மகோற்சவ காலத்தில் வருடாவருடம் தொடர்ச்சியாக வெளியிட்டுவரும் நல்லைக்குமரன் மலரானது ஒரு தசாப்தத்திற்கு மேலாக வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதொரு விடயமாகும்.

மாநகரசபை ஆணையாளராகப் பதவி வகித்த காலத்தில் என்னுடன் சேர்ந்து பணியாற்றிய வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் மற்றும் அவரது குழாத்தினரின் கடின உழைப்பாலும் விடாமுயற்சியினாலும் ஆரம்பிக்கப்பட்ட இப்பணி தடையின்றித் தொடருவதற்கு முருகன் அருளே தோன்றாய்த் துணையாகவுள்ளதென்பது தெளிவாகத் தெரிகின்றது.

இளைய தலைமுறையினரிடையே சமய அறிவினையும், இறைபக்தியையும், ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் பணியின் ஓர் அங்கமாகவே மேற்படி மலர் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. இவர்களது இந்நோக்கம் வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ஆன்மீக வாழ்வுக்கு அடித்தளம் இடுவதில் நல்லைக்குமரன் மலர் கணிசமான பங்கினை எதிர்காலத்தில் வழங்க வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**வே.பொ.பாலசிங்கம்**
**செயலாளர்.**

**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு.**
**திருகோணமலை.**

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர்க் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் மக்கள் ஆன்மீக எழுச்சியுடனும், பக்தி உணர்வுடனும், திகழ்வார்கள். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் இந்து மக்கள் முருகப் பெருமான் தேரில் பவனி வரும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதற்கு அணி திரண்டு வருவார்கள். ஆலயங்களில் கொண்டாடப்படும் மகோற்சவங்கள் ஊர் மக்களையும், நாட்டு மக்களையும் ஒன்று சேர வைத்து ஒற்றுமையுடனும், ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடனும் செயற்படுத்துவதற்கு வழி சமைத்துத் தருகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

நல்லூர் முருகனின் ஆலயம் விழாக் காலங்களில் இந்திரபுரிபோல் அழகுடனும் புதுப்பொலிவுடனும், எம் மனதைக் கொள்ளை கொள்ளத்தக்க வகையில் காட்சியளிக்கும். சித்தர்களும், ஞானியர்களும் நல்லைக் கந்தனின் அருள் அமுதத்தைப் பருகி மகிழ்ந்துள்ளனர். அவர்கள் கால் பதித்த புண்ணிய பூமி அது. கடந்த கால போர் அனர்த்தங்களினால் பல ஆலயங்கள் பாதிப்புற்ற போதும் முருகனின் அருளாட்சி நடைபெறும் இவ்விடம் மட்டும் பாதிப்பின்றி இருப்பதற்கு முருகனின் பெருங்கருணையும், அற்புதமும், நெறிமுறை தவறாத பூஜை வழிபாட்டு முறையுமே காரணமாகும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு ஆண்டு தோறும் நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் நல்லைக் குமரன் மலரினை வெளியிட்டு வருவது பெருமைப்படக்கூடிய விடயமாகும். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இவ் அரிய பணியினை முன்னெடுத்துச் சென்று இவ்வருடம் 11வது வெளியீடாக இம்மலர் வெளிவருவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இம்மலரில் ஆன்மீகம் சம்பந்தமான பல அரிய விடயங்கள் இடம்பெறுகின்றன.

இவ் அரிய முயற்சியினை தொடர்ச்சியாக ஆற்றிவரும் யாழ் மாநகர சைவ சமய விவகாரக் குழுவினருக்கு எமது மனமுவந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர்கள் பணி மேலும் தொடர நல்லைக் குமரன் அருள் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்,**

**இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.**
**கொழும்பு.**

# நல்லூரிற் கந்தா நீ அருள்வாய்

கவியோகி, அருட்கவி
சீ.விநாசித்தம்பி.

முன்னவனே, யாழ்ப்பாண நகர்நல் லூரில்
முதியதமிழ் வேலேந்தி வீற்றிருக்கும்
மன்னவனே கந்தப்பா மயிலில் ஏறி
வலம்வள்ளி இடம்தெய்வ யானையோடு,
பின்னமிலா அடியாரின் குறைகள் தீர்க்கப்
பிரகாச தினகரனாய்க் காட்சிநல்கும்
அன்னபரி பூரணியின் மகனே எங்கள்
அல்லலெலாம் தீர்க்கமன மிரங்குவாயே,

எத்தனையோ மக்கள்வாழ் விடங்களின்றி
எத்தனையோ மக்கள்உண வேதுமின்றிப்
பித்தனைப்போல் வதிவிடமில் லாதுவாழும்
பெற்றியினைக் கந்தாநீ அறிகிலாயோ,
பத்தியுடன் ஐயாநின் புகழைப் பாடிப்
பகைவறுமை யில்லாத வாழ்வுகாண,
உத்தமராய்ச் சமாதான நலம் சிறக்க,
ஓம் முருகா நீகருணை செய்வாய் போற்றி

மற்றவர்க்குத் துயரிழைக்கா நீதிவாழ்வும்
மதுகளவு பொய்சூது கருதாநெஞ்சும்
பெற்றவரைப் பெரியோரைப் பேணும் பண்பும்
பேசுமறை யாகமத்தை மதிக்கும் போக்கும்
கற்ற வரின் தெளிவுரைகள் உணரும் நோக்கும்
காயம்மனம் வாக்கினால் தருமம் பேணும்
நற்றவத்தில் நின்னடியைப் பிடிக்கும் பேறும்
நல்லூரிற் கந்தாநீ அருள்வாய் போற்றி

# நல்லூர்க் கந்தன் காட்சியும் மாட்சியும்

நயினைக்கவிஞர் நாக.சண்முகநாதபிள்ளை.

நல்லூர்க் கந்தன் கோவிலிற் சென்று,
நாளும் அவனடி நாடித் தொழுதால்
எல்லோர் வினையும் அவனரு ளாலே
எளிதாய் இலாது விலகிப் போகும்
வல்லான் அவன்கை வடிவேல் அதற்கே
வல்லமை உண்டு வாழ்வை உயர்த்திட
பொல்லாப் பெல்லாம் விலகிப் போகப்
புத்தொளி பரப்பும் வேலதன் ஒளிக்கதிர்.

விழிக்குத் துணைதிரு வளர்மலர் அடிகள்
வெற்றிக் அவன்கண் கருணைப் பார்வை
மொழிக்குத் துணைஅவன் முறுவற் புன்னகை
முத்தமிழ்(ப்) பேறவன் முற்றிய வடிவு
வழிக்குத் துணைவரும் சேவற் கூவல்
வணங்கத் துணையாம் வள்ளி தெய்வானை
களிக்கத் துணைஅவன் காட்சியும் மாட்சியும்
கண்டு கண்டுளம் களிக்கூத்தாடுமே!

வீதியில் விழுந்து வணங்கித் துதித்தால்
விரும்பும் பேறுகள் விதமாய்(க்)கிட்டும்
ஓதிப் பண்ணொடு பாடல் இசைத்தால்
உள்ளொளி பரப்பி உவகை சேர்க்கும்
காதில் மணிஒலி கனிவொடு கேட்டால்
கந்தனின் காட்சி கலக்கம் போக்கும்
வேதியர் ஓதும் மந்திர அதிர்வால்
விதிர்ப்பு எய்தி மெய்யது சிலிர்க்கும்

உலாவரும் கந்தன் வள்ளி தெய்வானை
உடன்வரும் காட்சியை உளமதில் பதித்தால்
நிலாவர இருளது அகல்வது போல
நிற்கா(து) ஆணவத் திமிரது நீங்கும்
சீலமாய் நடந்து திருவிழாக் கண்டால்
தெய்வீகத் தேசு தேக்கமாய் நிற்கும்.
மூலஉள் வேலதன் முழுமையில் திளைத்தால்
முற்றிய ஞானம் உற்பவ மாகும்.

தேரடி சுற்றிச் சித்தரின் தெளிவில்
தேர்ந்த தெய்வீகத் தேர்ச்சியைப் பெற்றால்,
சீரடி யார்கள் சீலமாய் ஒழுகிச்
சிந்தையில் நிறைவு சிறப்பாய்(ப்) பெறுவர்.
ஓரடி எடுத்துக் கந்தனை நோக்கி
ஓம்முரு காவென உருகி நடந்தால்
நேரடி யாக வேல்வடி வோடு
நிறையருள் தரஅவன் பலஅடி வருவான்

நின்றும் கிடந்தும் நடந்தும் இருந்தும்,
நித்திய நைவேத்திய பூசைகள் நடத்தல்
கண்டு களித்துக் கற்பூர தீபம்
கண்ணில் ஒற்றிக் காட்சியில் மூழ்கிக்
கொண்டு வீபூதி தரித்துத், தீர்த்தம்
குகனை நினைந்து குணமாய் அருள்திடில்
மிண்டு மனம் போய் மேன்மை மிளிர்ந்திட
மிக்க பேரருள் முருகன் தருவான்.

சப்பறம் மஞ்சம் சார்ந்துள ஊர்திகள்
சாத்துப் படியதன் சகல மணியணி,
எப்பவும் தொண்டர் எடுத்தடி தவறா
இயல்பினில் வீதிகள் எழுந்திடல் காணல்
ஒப்பில்லாத் தேசினை ஏத்திடல் போற்றுதல்,
உத்தம பக்தியில் ஒன்றி ஓம்பிடல்
செப்பிட முடியாச் செழிப்பினைத் தந்து,
சிறப்புற எம்க்குத் திருவருள் கூட்டும்.

அடியவர் கூட்ட நடுவினில் நகர்ந்து,
அரக ரோகரா அறுமுகன் என்று,
முடி மிசை கைகள் கூப்பித் தொழுது
முருகனின் கடைக்கண் பார்வையின் முன்னால்,
பிடிபடும் வாய்ப்பும் பேறதும் கிடைத்தால்,
பிறவிப் பிணிகள் பின்னடை வாகிக்
குடிகுடி யாகக் குலநலம் பிறநலம்
குவையாய் வந்து குதூகலம் கொட்டும்.

சேவடி தொழுது திருவுள் வீதி
சென்று பழனி ஆண்டவர் திருமுன்
பாவடி வாய்அநு பூதியை இசைத்துப்
பரவச மாகித் தீர்த்தமும் மொண்டு

மாவடி சுற்றி விநாயகர் மற்றிரு
மாதர் மூர்த்திகள் வைரவர் தொழுது பின்
காவடிக் காட்சிகள் வெளியினிற் கண்டால்
கந்தன் கருணையின் அற்புதம் புரியும்

தேரினிற் கந்தனின் திருவுலாக் கண்டு,
தீர்த்தமும் ஆடித் திருகல் யாணம்,
நேரில் கண்களில் நிறைத்துக் காட்சி
நிம்மதி யோடு நின்று தொழுதால்,
பூரிப் போடு அருள்மழை பொழிந்து
புறமும் அகமும் புகுக்கிட வரங்களைக்
கோரிப் பெறவும் வாரிக் கொள்ளவும்
கோழிக் கொடியோன் கொட்டிக் குவிப்பான்

# நற்றமிழின் வடிவத்தில் நல்லூரான்

கவிமாமணி-மதுரகவி,
காரை - எம்.பி.அருளானந்தன்.

தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாகக் கந்தா நின்றாய்
உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்காரப் பொருளனைத்தும் உளத்திற் கொண்டாய்
அமிழ்தமெனும் தமிழுக்கே அழகைச் சேர்த்தாய்
அழகுக்கும் அழகாக முருகனென அவதரித்தாய்
தமை நத்தும் எளியவர்க்குத் தாயாய் வந்தாய்
சரவணத்துத் தாமரையில் தமிழாய்ப் பூத்தாய்

தமிழ் வடிவாய் வந்த தமிழ்த் தலைவா போற்றி!
தமிழ்க் குடியைக் காக்கின்ற இறைவா போற்றி!
உமை என்றும் உளம்மறவா உயிரே போற்றி!
ஓம் என்ற மந்திரத்தின் உணர்வே போற்றி
இமைத்திடுமுன் எம் கவலை தீர்ப்பாய் போற்றி!
எழில் மயிலில் பறந்துவரும் இளையோய் போற்றி!
தமிழ்க் கவிதை தனிற் பிறந்த தலைவா போற்றி!
தனை வணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி!

# விநாயகர் திருநாமச் சிறப்புக் கண்ணிகள்

ச.தங்கமாமயிலோன்

ஓம் நமோ விநாயகாய ஓம் நமோ விநாயகாய!
ஓம் நமோ விநாயகாய ஓம் நமோ விநாயகாய!!

சீலமோங்கு கல்விசெல்வஞ் சேரலாகுஞ் செம்மையினை
ஞாலமோங்கத் தந்தருளும் ஓம் நமோ விநாயகாய! 1.

பூமிமீது பிறந்தவெங்கள் பூர்வீகக் கன்மவினை
காமிகமா யல்லதாக்கும் ஓம் நமோ விநாயகாய! 2.

வந்துசேரும் வல்வினைகள் வலியமெலிய நலிந்துபோகப்
புந்திவந்து பூக்குந் தீபம் ஓம் நமோ விநாயகாய! 3.

சீவபோத மேறச்செய்து தீயசிந்தை நீங்கச்செய்து
காவலோடு கருணைசெய்யும் ஓம் நமோ விநாயகாய! 4.

மூவர்பொழி தேவாரம் முத்திநெறி வாசகந்
தேவர்மொழி தேறச்செய்யும் ஓம் நமோ விநாயகாய! 5.

பிறப்பிறப்பு நீங்கியே பேரின்ப மெய்தவே
சிறப்புமிக்க சீவநாதம் ஓம் நமோ விநாயகாய! 6.

தீரவொண்ணாப் பெருங்கவலை தீர்ந்துபோகுந் தீரந்தந்து
ஈரநெஞ்ச மீந்துவக்கும் ஓம் நமோ விநாயகாய! 7.

வானமறை யாகமங்கள் வண்ணத்தமிழ்க் காவியங்கள்
ஆனமுறை அறியவைக்கும் ஓம் நமோ விநாயகாய! 8.

மெய்ப்புலன்க ளாறியே மேன்மை நிலை எய்தவே
துய்ப்பதுய்க்குந் துதிக்கரங்கள் ஓம் நமோ விநாயகாய! 9.

அகத்தமைந்த கரணனான்கும் அகரவுகர மகரமாய
சுகத்தணிமை சூழவைக்கும் ஓம் நமோ விநாயகாய! 10.

ஆனந்தமா யற்புதமாய் ஆர்வலர்கள் ஏத்துவதாய்த்
தானந்தமாந் தத்துவமாம் ஓம் நமோ விநாயகாய! 11.

வண்ணவண்ணப் பூக்கள்சூட்டி வாழ்த்திநாளும் வணங்கவே
நண்ணலரும் பேறளிக்கும் ஓம் நமோ விநாயகாய! 12.

மஞ்சள்குங்கு மத்திலும் மாதவர்கள் மனத்திலுஞ்
செஞ்சரணஞ் சேரவைக்கும் ஓம் நமோ விநாயகாய! 13.

நீலவான மீதிலே நீடுவளர் சோதியாய்க்
கோலஞானக் குளிரளிக்கும் ஓம் நமோ விநாயகாய! 14.

சஞ்சரிப்ப தின்றியே சஞ்சரிப்ப தாவதாய்த்
தஞ்சரணந் தாங்கிநிற்கும் ஓம் நமோ விநாயகாய! 15.

பண்டுமின்று முள்ளதாய்ப் பார்வைக்குள்ளே நின்றதாய்க்
கண்டுகண்டு காட்டிநிற்கும் ஓம் நமோ விநாயகாய! 16.

வானவர்க்கும் அரியதாய் வாழவைக்கு முரியதாய்த்
தேனதுவாய்த் தித்திக்கும் ஓம் நமோ விநாயகாய! 17.

ஓவியமாய்க் காவியமாய் ஓதுமருட் பூரணமாய்
ஆவியதாய் அனைத்துமாகும் ஓம் நமோ விநாயகாய! 18

விண்ணுமண்ணு மெங்குமாய் விண்ணுளோருங் கண்ணதாய்
நண்ணநண்ணு மருள்மருந்து ஓம் நமோ விநாயகாய! 19

தீர்த்தமாகித் திருநீறாய்த் தீவினைகள் தீர்ப்பதுவாய்
ஆர்த்தபிறவித் துயர்கெடுக்கும் ஓம் நமோ விநாயகாய! 20

ஓம் நமோ விநாயகாய ஓம் நமோ விநாயகாய
ஜெகமெலாஞ் சிறக்க வேண்டும் ஓம் நமோ விநாயகாய!! 21

# நிம்மதி நிழல் தா

த.ஜெயசீலன்.

உன்னை மட்டும் நம்புகிற உள்ளத்துக்கு
ஒருகோடி துயரங்கள் தாறதேனோ?
வன்முறைக்கு முயலாது, கடுமையான
வார்த்தையேதும் பேசாது, துயர்கள் சூழ்ந்தால்
மென்னிதயம் இடிந்திருண்டு எரிந்து நீற
வேறெதுவுஞ் செய்யாது, கவியால் மட்டும்
“துன்பத்தைத் தீர்” என்று துடித்துக் கேட்டுன்
‘தூநிழலில்’ அழுமெம்மை மறப்பதேனோ?

அநாதைகளாய் நாம்மாறப் பொறுப்பாய் தானோ?
ஆதரவு இன்றிநடுத் தெருவில் நிற்கும்
பிணங்களென நாம்தவிக்கப் பார்ப்பாய் நீயோ?
பேசாமல் இருந்து எமை வாட்டு வாயோ?
‘மன அழற்சி’ மாற........ ஒரு மருந்து தந்து
வாழ்த்தாயோ? நேற்றுவரைச் சரியாய்க் காத்து
அணைத்தவனே..........! இனிநம்மை அகதி போல
அலைய விட்டு இரசிப்பது உன் திட்டந்தானோ?

உன்னை மட்டும் நம்பிநம்பி உருகுகின்றோம்
உன்நிழலெம் வெயில்துடைக்கும்; இன்றும் வந்தோம்
உன்செயல்தான்..... சூழ்ந்த இடர் தன்னை ஓட்டும்
உறுதி கொண்டோம்; நல்ல பதிலுக்காய்க் காத்தோம்
என்ன இன்னும் மௌனமய்யா? உன்னை நம்பார்
எழுந்து வெல்ல....... நாம் வீழ்ந்து சிதைதல்நன்றா?
கண்ணீரைத் துடைத்து எடு நண்பா! நல்லூர்க்
கந்தவேலா..... நிம்மதியாய்த் தூங்கவை...... வா

# நல்லூரான் வாசலிலே பிள்ளைக்கனியமுது வேண்டி சஷ்டி விரதமிருந்த ஒரு பெண்ணின் உள்ளக்குமுறல்

பூக்கவில்லை இந்த மரம் பூஜைக்கு மலருமில்லை
காய்க்கவில்லைக் கனியவில்லை கள்ளி இது முள்ளுமரம்
சஷ்டியிலே நோன்பிருந்தேன் தண்ணீரும் மிளகுமுண்டேன்
வெட்டி எறிந்த கட்டை வேரோடி முளையாதோ?

தாலேலோ தமிழே தாலேலோ!
தாலேலோ தமிழே தாலேலோ!

சுட்டபழம் கேட்டீரே நல்லூரின் வேலையா
தொட்டிலிட்டுத் தாலாட்ட கைக்குழந்தை தாராயோ
தைப்பூசநாள் முழுவதும் தலை சாய்த்தேன் கதவோரம்
கற்பூரமா யெரிந்தேன் கண்ணீரில் முத்துக்களை

தாலேலோ தமிழே தாலேலோ!
தாலேலோ தமிழே தாலேலோ!

மலடி மலடி என்றார் மாலையிட்ட மணவாளன்
இருளி இருளி என்று ஏசுகிறார் ஊரவர்கள்
மலடிக் கொருகுழந்தை மால்மருகன் தாராயோ
இருளிக் கொருகுழந்தை ஏணையிலே ஆடாதோ

தாலேலோ தமிழே தாலேலோ!
தாலேலோ தமிழே தாலேலோ!

பன்னிரண்டு கண்ணழகில் ஒன்றிரண்டு மலராதோ?
நல்லூரின் வாசலிலே கண்டகனாப் பலியாதோ?
நொந்து கெட்ட பாழ்மலடி சிந்துநடை பார்க்கேனோ?
நல்லூரின் கோவிற்படி பிள்ளையோடு நான் கடப்பேனோ?

தாலேலோ தமிழே தாலேலோ!
தாலேலோ தமிழே தாலேலோ!

கு. துரைராஜன்
கல்வியங்காடு.

# குருவரன் தோத்திரம்

பேராசிரியர்.வி.சிவசாமி

இறைவனை வழிபடுதற்கான சாதனங்களில், அவரின் மிக மேம்பட்ட சிறப்பியல்புகள், மகிமை, ஆன்மாக் களிடத்து அவர் கொண்டுள்ள பேரன்பு, பெருங்கருணை முதலியனவற்றைப் பெருமளவு இசை நயத்துடன் எடுத்துக் கூறும் இறைபுகழ் மாலைகளான தோத்திரங்களும் அடங்குவன. இத்தோத்திரங்கள் பல தமிழ், வடமொழி முதலிய தென்னாசிய மொழிகளிலே உள்ளன. இவை எம்மொழியிலிருந்தாலும் இறைவனுக்கும் வழிபடுவோனுக்கு மிடையிலுள்ள தொடர்புகள் உணர்வு பூர்வமாக இவற்றில் அமைந்திருப்பதால், இவற்றின் பொருளுணர்ந்து பாடுபவர் அல்லது வாசிப்பவர் அல்லது கேட்ப வரின் உள்ளங்களை இவை தொடுவன.

கலியுகவரதனாகிய கந்தனைப் பற்றிய தோத்திரங்கள் பல தமிழில் மட்டுமன்றி வடமொழியிலுமுள்ளன. வடமொழியிலுள்ள தோத்திரங்களில் ஆதி சங்கரர் இயற்றியதாகக் கூறப்படும் "ஸுப்ரஹ்மண்ய பஞ்சரத்தினமும்" ஒன்றாகும். முருகப்பெருமானுக்குரிய பல பெயர்களிலொன்றான இப்பெயர் மிக மேலான பரம்பொருள் எனப் பொருள்படும். பஞ்சரத்தினம் எனில் ஐந்து மணிகள். இவற்றுள்ளே பொன், வைரம் நீலமணி, பத்மராகம், முத்து போன்றவை அடங்கும். இதிலடங்கும் மணிகள் பற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. எவ்வாறாயினும், மேற் குறிப்பிட்ட வைரம் முத்து, பத்மராகம் போன்ற ஐந்து மணிகள் கொண்டு தக்கவாறு கோர்க்கப்பட்ட மாலை மிக நேர்த்தியாக, அழகாக விளங்குமோ, இதுபோல இறைவன் / இறைவி பற்றிய ஐந்து சிறந்த செய்யுட்களாலான வாடாத செஞ்சொற் கவிமாலையும் விளங்கும்.

முருகப்பெருமானைப் பற்றிய பஞ்சரத்தினம் பற்றிக் கூறுமுன் அவர் பற்றிய சில கருத்துக்களைக் குறிப்பிடலாம். வடமொழியில் அவர் ஏற்கனவே குறிப்பிட்டவாறு ஸுப்ரஹ் மண்ய (சுப்பிரமணியர்), கார்த்திகேய (கார்த்திகைப் பெண்கள் ஆறு பேரால் வளர்க்கப்பட்டவர்), சரவணபவ (சரவணப் பொய்கையிலே வளர்ந்தவர்), சிவசுத (சிவபிரானின் மகன்), குஹ (உள்ளமாகிய குகையிலே விளங்குபவர், இச்சா சக்தி, கிரியா சக்திகளான வள்ளி, தேவசேனா ஆகிய சக்திகளை யுடையவர். உலகனைத்திற்கும் அருள் பாலிப்பவர்; ஆன்மாக்களின் பிறவித் துன்பத்தை நீக்க வீடுபேறு வழங்கு பவர்; இளமையாக இலங்குபவர்; மந்திர வடிவினர், வேதங்கள் கூறும்

முடிவான பொருளாக விளங்குபவர்; குரு வடிவாக வந்து ஆன்மாக்களை ஆட்கொள்ளுபவர். இன்னோரன்ன கருத்துக்கள் இத்தோத்திரத்திலே பொதிந்திருப்பதாய் இங்கு கூறப் பட்டுள்ளன.

இறைவனைப் பக்தர்கள் பொதுவாகப் பாதாதிகேசமாக (திருவடி தொடக்கம் கேசம் வரை) வர்ணிப்பர். சிலவேளைகளிலே பக்தனுக்கும் இறை வனுக்குமிடையிலுள்ள மிகச் சிறந்த பரஸ்பர அன்பினால் வருணனை கேசாதிபாதமாகவும் அமையும். ஆதிசங்கரரே அம்பாளைப் பற்றித் தாம் இயற்றிய லலிதாபஞ்சரத்தினம், சௌந்தர்யலஹரீ ஆகியவற்றில் இவ்வாறு வருணித்துள்ளார். தாய்-சேய் உறவினையொட்டி அவர் இவ்வாறு செய்திருப்பார் எனலாம். பிள்ளை பொதுவாகத் தாயின் முகத்தினையே முதலிற் பார்க்கும்.

இப்பஞ்சரத்தினத்திலுள்ள முதலாவது செய்யுள் அப்பெருமானின் தூய்மையான அன்றலர்ந்த தாமரை போன்ற திருவடி (விமல நிஜ பதாம்புஜம்) பற்றிய குறிப்புடன் தொடங்குகிறது. அவர் வேதங்கள் அவற்றின் முடிவாகவுள்ள உபநிஷ தங்களால் அறியப்படுபவது. (வேத வேதாந்த வேத்ய), தொடர்ந்து அவர் முருகன் தம்முடைய முன்னோரின் குலதெய்வம், எனும் கருத்துப்பட ''மமகுல குருதேவம்'' எனக் கூறியிருப்பது தெய்வத்திற்கும், தமக்கும் வழிவழித் தொடர்புகளிருப்பதைச் சுட்டிக் காட்டுவதாகலாம். இந்து சமய மரபிலே குலகுரு முக்கியமான இடத்தைப் பெறுபவர். தந்தையாகிய சிவ பிரானுக்கும் பிரணவத்தின் உட் பொருளை உபதேசித்துச் சுவாமிநாதன் எனப்புகழ்பெற்ற முருகன் தம்முடைய குலகுரு எனப் பெருமிதப் படுகிறார். அஞ்ஞானத்தை நீக்கி மெஞ் ஞானத்தை அளித்து ஆன்மாவை ஈடேற்றுபவர் குருவே. தொடர்ந்து அப்பெருமான் வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை ஆகியவற்றால் மகிழ்ச்சியடைகிறான் (வாத்ய கான ப்ரமோதம்) என அவர் குறிப்பிடுகிறார். அப்பெருமான் விரும்பத்தக்க நற்குணங்களை யுடையவர். (ரமண ஸுகுண ஜாலம்). அவர் அரங்கின் அரசனான திருமாலின் சகோதரியான பார்வதியின் திருமகன், (ரங்கராட்பாகி நேயம்) சிவிலி முருகனின் தந்தையாகிய சிவபிரான் தில்லை நடராசரின்: மாமனாகிய திருமால் ரங்க ராஜனாக ஸ்ரீரங்கத்திலே வீற்றிருக்கிறார். மேலும் தொடர்ந்து படைத்தற் கடவுளான பிரமா முருகனின் திருவடியைத் தொழுதுள்ளார். (கமலஜநுத பாதம்) பிரணவத்தின் உட்பொருள் தெரியாத பிரமாவைத் தண்டித்து முருகன் பின்னர் அவருக்கு அருள் புரிந்தார். இப்பெயர்பட்ட சிறப்பு வாய்ந்த கார்த்திகேயனைத் தாம் வணங்குவதாக ஆசிரியர் முடிவிலே குறிப்பிடுகிறார். இதே மாதிரி ஏனைய நாலு செய்யுட்களும் பெருமளவு முடிவடை கின்றன.

இரண்டாவது செய்யுள் இவர் மங்கலமுள்ள சரவணப் பொய்கையிலே

பிறந்தவர் (வளர்ந்தவர்-சிவசரவண ஜாதம்) எனத்தொடங்குகின்றது. அப்பெருமானுடைய ஆறெழுத்து மந்திரமாகிய சரவணபவ இங்கே கூறப்படுகிறது. தொடர்ந்து அவர் சிவயோகச்செல்வன் (சிவயோ கப்ரபாவம்) என வருணிக்கப்படுகிறார். தொடர்ந்து வருவன நன்கு உற்று நோக்கற்பாலன. அதாவது, ஆன்மாக் களின் பிறவித் துன்பத்தை நீக்கி அருள்பாலிக்கும் குருநாதனாகவும் (பவஹித குருநாதம்) பக்தர் கூட்டத்தினை நன்கு மகிழ்விப் பவனாகவும் அவர் விளங்குகிறார். (பக்தவ்ருந்த ப்ரமோதம்). அவருடைய மென்மையான திருவடிகளிலிருந்து நவரசமாகிய திருவருள் பொழிகின்றது. (நவரசம்ருது பாதம்). இறைவன் திருவருள் அவரின் திருவடி மூலமே ஆன்மாக்களுக்குக் கிட்டுகிறது. நடராஜ திருவுருவத்திலும் தூக்கிய திருவடியே அருள்பாலிப்பதாகும். அப்பெருமான் நாத வடிவினர் (நாதஹ்ரீம்கார ரூபம்) அருணகிரியாரும் ''நாதவிந்துகளாதி நமோ நம'' எனப்பாடியிருப்பதும் ஒப்பிடற்பாலது. அப்பெருமான் இனிமையின் சாரமாக (கவனமதுர சாரம்) இலங்குகின்றார். இறைவன் இனியன் என்பதைச் சைவத்தமிழ் திருமுறைகளிலே குறிப்பாகக் காணலாம். திரும்பவும் ஆசிரியர் இறைவனை வணங்குகிறார்.

மூன்றாவது செய்யுளிலே முதலாவதாக இந்திரனின் மகளான தெய்வயானை அல்லது தேவசேனாவின் நாயகன் என்பதைக் கவிஞர் கவிதை ரீதியிலே ஓர் உருவக மூலம் புலப் படுத்தியுள்ளார். தொடர்ந்து அவர் தந்தையாகிய சிவபிரானைப் போல இளம்பிறையைத் தலையிலே சூடி யிருப்பது கூறப்படுகின்றது. சந்திரன் பதினாறு கலைகளில் பதினைந்தும் தேய்ந்து சிவனைச் சரணடைய மீண்டும் முழுமையடைந்தான் என்பது புராணக் கதை. துன்புற்றோர் இறைவனைச் சரணடைந்து உய்தி பெறுவர் என்பதே இக்கதையின் உட்பொருள். இதைக் குறிப்பிட்டு ஆசிரியர் முருகப்பெருமான் உல கனைத்தும் அனுக்கிரகம் பெறக் காரணமாயிருப்பவர் (லோகாநுகிரக காரணம்) எனவும், அன்பர்க்காக இரங்கும்) சிவபிரானின் மகன் (சிவசுதம்) எனவும் கூறியிருப்பது பொருத்தமாக உள்ளது. உலகிலே மேலான ஆட்சியை நன்கு வழங்குவார் என்பது பற்றியும், முழுமதி போன்ற அழகிய அவரின் திருமுகம் (ராகா சந்திர சமான சாரு வதனம்) பற்றியும், அழகிய வள்ளி நாயகியின் கணவன் அவர் என்பதும் தொடர்ந்து குறிப் பிடப்படுகின்றன. தொடக்கத்திலே கிரியா சக்தியாகிய தேவசேனாவைக் குறிப்பிட்டு பின்னர் இச்சா சக்தியாகிய வள்ளியை ஆசிரியர் குறிப்பிடுகிறார். தொடர்ந்து ஹ்ரீம் காரமாகிய பிரணவத்தின் வடிவமாக அப்பெருமானை வருணிக்கின்றார். வேதங்களின் சாரம் ஓங்காரமாகிய பிரணவமே. முருகன் அதன் வடிவம் தொடர்ந்து ஆசிரியர் வணங்குவது கூறப்படுகிறது.

நாலாவது செய்யுளிலே முதலில் அப்பெருமான் பெரிய தெய்வமாகிய சிவனிலிருந்து (நெற்றிக் கண்ணி லிருந்து) தோன்றியவர். (மஹா தேவாஜ்ஜாதம்); சரவணப் பொய்கை யிலே வளர்ந்தவர். (சரவணபவம்); மகாமந்திர வடிவினர்; வலுவுள்ளவர் (மந்த்ரசரவம்); பேரானந்த வடிவினர் (மஹாத்தத்துவானந்தம்); மேலான பரம்பொருள் வடிவினர்; (பரமலரி) இனிய மந்திர வடிவினர்; (மந்த்ர மதுரம்), பெரிய எல்லாத் தெய்வங் களுக்கும் அப்பாற்பட்டவர்; (மஹா தேவாதீதம்), நற்குணங்களை உடையவர். (சுகுணயுதம்); மந்திரங் களின் பலனை வழங்குபவர். (மந்த்ர வரதம்); உள்ளத்தில் ஒளிர்பவர்; (குஹம்), வள்ளியின் நாயகர்; (வல்லீநாதம்); கழுகு மலையின் தலைவர் (க்ருத்ரகிரீசம்) எனப் பலவாறு அப்பெருமானை வருணித்து இத்தகைய மகிமை வாய்ந்தவரைத் தாம் உள்ளத்திலே வணங்குவதாகத் தியானிப்பதாக (ஹ்ருதிபஜே) அவர் கூறுகின்றார். இச்செய்யுளிலும் அப்பெருமானின் சிறப்பியல்புகள் சில கூறப்பட்டுள்ளன. அவர் வள்ளி நாயகன், பரமசிவன் மகன்; பேரானந்த வடிவர்; மந்திர வடிவினர்; கழுகு மலை ஓரிடத்தின் பெயராகும். அவர் அங்கு கோயில் கொண்டுள்ளார்.

கடைசியாக, ஐந்தாவது செய்யுளில் அவர் என்றுமுள்ளவர் (நித்தியகாரம்) எனத் தொடங்கி எல்லா வரங்களையும் எப்பொழுதும் தருபவர் எனக்கூறப்படுகிறது. அவர் என்றுமுள்ள வராகையால் பக்தர்கள் வேண்டும் வரங்கள் அனைத்தையும் எப்பொழுதும் வாரி வழங்குவார் (நிகில வரதம்). அவர் தூய்மையானவர்; (நிர்மலம்) பரப்பிரம தத்துவமாக விளங்குகிறார்; (ப்ரஹ்ம தத்வம்) தேவர்கள் அவருடைய திருவடிகளை என்றும் வணங்குகின்றனர்; (நித்யம் தேவைர்விநுத சரணம்) அவர் நிர்விகல் பஸமாதியுடைய யோகியா கவும் இலங்குகிறார்; (நிர்விகல் பாதி யோகம்) என்றும் குன்றாத செல்வ முடையவர்; (நித்யாட்ஜம்), வேதங்கள் மூலம் அறியப்படுபவர்; (நிகம விதிதம்) குறிப்பிட்ட குணங்கள் அற்றவர்; (நிர்குணம்) தேவர்கள் அனைவருக்கும் மேலான தெய்வமாகத் திகழ்கிறார். (தேவதேவம்) இவ்வாறு வருணித்து, இப்பெயர்ப்பட்டவரும், ''தூய்மை யானவரும் (நிர்மலம்) என்னுடைய (மம) மிகச்சிறந்த குருவுமாகிய (குருவரம்) கார்த்திகேயனை, நான் வணங்குகின்றேன்'' (கார்த்திகேயம் நித்யம் வந்தே) எனத் தோத்திரத்தை ஆசிரியர் முடிவு செய்கிறார்.

இத்தோத்திரத்தை ஒட்டு மொத்தமாக நோக்கும்போது இதை இயற்றியவர் முருகப்பெருமானையே முழுமுதற் கடவுளாகவும், அவரைத் தம்முடைய குலகுருவாக மிகச் சிறப்பாகக் கொண்டவராகவும் காணப் படுகிறார். சிவபெருமானின் மகனாகவும், தேவர்கள் அனைவருக்கும் மேலான பரபிரமமாகவும், வேதங்களின் சாரமான பிரணவத்தின் வடிவமாகவும், அன்பர்கள் வேண்டும் அனைத்தையும் வழங்கு பவராகவும், ஆன்மாக்களின்

ஈடேற்றத்தில் ஈடுபாடுள்ள குருவாகவும் முருகப் பெருமான் சிறப்பாக இங்கு வருணிக்கப் பட்டுள்ளார்.

அப்பெருமானைக் குறிப்பாகக் குருவாக-குலகுருவாகவும், தன்னுடைய குருவாகவும் கூறி யிருப்பதில் அவரின் அலாதியான இறைபற்று மிகத் தெளிவாக உள்ளது. அப்பெருமானைக் 'குலகுரு தேவம்', 'பவஹித குருநாதம்', 'மம குருவரம்', எனக்கூறியிருப்பதிலும் ஒரு வகையான படிமுறை தென்படு கின்றது. முதலாவது செய்யுளிலே வழிவழியாகத் தம் முன்னோர் வழிபட்டு வந்த தெய்வம் என அவர் குறிப் பிடுகிறார். எனவே குல ரீதியிலான வழிபாட்டு உரிமை அவருக்கு (ஆசிரியருக்கு) உள்ளது. அடுத்த படியாக இறைவன் அனைவரினதும் ஆன்ம ஈடேற்றத்தில் ஈடுபாடு உள்ளவர் என்பது கூறப்படுகின்றது. கடைசிச் செய்யுளிலே இறைவனை "என்னுடைய மிகச்சிறந்த குரு" எனக் கூறுவதிலே உணர்வு பூர்வமான மிக நெருங்கிய தொடர்பு தென்படுகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு தந்தைக்குப் பிரணவோபதேசம் செய்து சுவாமிநாதன் எனப்புகழ் பெற்ற முருகப்பெருமான் குருவடிவாகவும் அன்பர்களுக்கு அருள் பாலித்துள்ளார். அருணகிரிநாதர் கந்தரநுபூதியிலே,

**உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**<br>
**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்**<br>
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்**<br>
**குருவாய் வருவாய் அருவாய் குகனே**

எனவும், பிறிதோரிடத்திலே "குரு வடிவாய் வந்தென்னுள்ளங்குளிரக்குதி கொண்டவே" எனவும் கூறியிருப்பவை ஒப்பிடற்பாலன. நக்கீரர், குமரகுருபரர், முத்துசுவாமி தீக்ஷிதர், திருமுருக கிருபானந்தவாரியார் என்பவர் முருகன் திருவருள் பெற்றுள்ளனர் இத்தோத்திரம் அப்பெருமானுடைய திருவடி பற்றிய குறிப்புடன் தொடங்குவதும் உற்று நோக்கற்பாலது. இறைவனுடைய திருவடியே மிகச்சிறந்ததென்ற கருத்துள்ளது. இத்திருவடி மூலம் ஆன்மாக்களுக்கு இறையருள் கிட்டுகின்றதும் ஏற்கனவே குறிப்பிடப் பட்டது. இதன் முக்கியத்துவத்தினைச் சங்க நூல்களிலொன்றாகக் கருதப்படும் பரிபாடலிலுள்ள திருமால் பற்றிய பாடலிலே (04) கடுவனிளவெயினார் எனும் புலவர் 'நின்னிற் சிறந்தவை நின் தாளிணை' எனச்சிறப்பாகக் கூறி யுள்ளமை குறிப்பிடற்பாலது. இப்பாடல் திருமால் பற்றியதாயினும் இக்கருத்து எத்தெய்வத்தின் திருவடிக்கும் மிகப் பொருத்தமானதே.

இப்பஞ்சரத்தினம் ஸுப்ரஹ்மண்ய பஞ்சரத்தினமெனக் கூறப்படினும் ஐந்து செய்யுட்களிலும் கார்த்திகேய என்ற பதமே வந்துள்ளது. எனவே கார்த்திகேய பஞ்சரத்தினமென இதனை அழைக்கலாம்.

இத்தோத்திரத்திலே "வழிபடு கிறேன்/தியானிக்கிறேன்" எனப் பொருள்படும் 'பஜ்' வினையடியாக வந்த நிகழ்காலத் தன்மை வினைமுற்று களான 'பஜாமி' ஈரிடத்திலும் அதே கருத்துள்ள 'பஜே' அடுத்து வரும் இச்

செய்யுட்களிலும் வந்துள்ளன. கடைசிச் செய்யுளிலே இதே கருத்துப்படும் 'வந்தே' எனும் வினைமுற்று வந்துள்ளது. 'பஜ்' எனும் வினையடி, அன்பு காட்டுதல் வழங்குதல், பங்கு பெறுதல், சரணடைதல், ஆகுதல், அநுபவித்தல், மரியாதை செய்தல், பகிர்தல், வணங்குதல் எனப்பல பொருள்படும். பக்தி எனும் சொல்லும் இதில் இருந்துதான் வந்துள்ளது. இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள தொடர்பு ஒருதலைப்பட்டதாக அன்றி இருதலைபட்டதாகவே இருக்க வேண்டும். ஆன்மாவும் இறைவனை நாடுகின்றது. அதே வேளையில் இறைவனும் ஆன்மாக்களை நாடுகின்றான். இறைவன் தம்மை நாடி வருதலை உணர்ந்த பக்குவமுள்ள ஆன்மாக்கள் எளிதில் அவனை உணர்வன. அவன் குருவடிவாக ஆன்மாக்களை ஆட்கொள்ளுகிறான் என்ற கருத்துச் சைவசித்தாந்த முதனூலான சிவஞானபோதத்திலும், மற்றும் நூல்களிலும் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. மேலும் அகவணக்கத் திற்குரிய தோத்திரமாகவும் இது விளங்குகின்றது.

மேலும் இத்தோத்திரத்திலுள்ள பொருள் நயம் மட்டுமன்றி ஓசை நயமும் குறிப்பிடற்பாலது. எனவே பக்தர்கள் நன்கு பாராயணம் செய்யக்கூடிய ஒரு தோத்திரமாகவும் இது திகழ்கின்றது. எனவே இது தமிழ் வரிவடிவத்திலே கீழே தரப்பட்டுள்ளது.

விமலநிஜ பதாப்யம் வேதவேதாந்
- தவேத்யம்
மம குலகுருதேவம் வாத்ய
- கானப்ரமோதம்
ரமண ஸுகுணஜாலம்
- ரங்ராட்பாகிநேயம்
கமலஜநு தபாதம் கார்த்திகேயம்
- பஜாமி! 1.

சிவசரவண ஜாதம்
- சைவயோகப்ரபாவம்
பவஹித குருநாதம்
- பக்தவ்ருந்தப்ரமோதம்
நவரஸம் ருதுபாதம் நாதஹ்ரீம்கார
- ரூபம்
கவனமதுரஸாரம் கார்த்திகேயம்
- பஜாமி 2.

பாகாராதிஸுதா முகப்ஜமதுபம் பாலேந்து
- மௌலீஸ்வரம்
லோகாநுக்ரஹகாரணம் சிவசுதம்
- லோகேசதத்வப்ரதம்
ராகாசந்த்ரஸ மானசாருவதனம் ரம்போரு
- வல்லீஸ்வரம்
ஹ்ரீம் காரப் ரணவஸ் வருலஹ்ரிம் ஸ்ரீ
- கார்த்திகேயம் பஜே 3.

மஹா தேவாஜ்ஜாதம் சரவணபவம்
- மந்த்ரசரபம்
மஹாத் தத்வானந்தம் பரமலரீம்
- மந்த்ரமதுரம்
மஹாதேவாதீதம் ஸுகுணயுதம்
- மந்த்ரதம்
குஹம்வல்லீநாதம் மமஹ்ருதி
- பஜேக்ருத்ரகிரீசம் 4.

நித்யாகாரம் நிகிலவரதம் நிர்மலம்
- ப்ரஹ்மதத்வம்
நித்யம் தேவைர்விநுதசரணம் நிர்விகல்
- பாதியோகம்
நித்யாட்ஜம் நிகமவிதிதம் நிர்குணம்
- தேவதேவம்
நித்யம் வந்தே மம குருவரம் நிர்மலம்
- கார்த்திகேயம். 5.

# "ஆறுமுகமான பொருள் நீ"

கலாநிதி,
மனோன்மணி சண்முகதாஸ்.

முருக வழிபாடு தமிழர் வாழ்வில் பண்டு தொட்டே இணைந்துள்ளது. இயற்கையோடு இயைந்த வாழ்வு நடந்த போது முருக வழிபாடு சிறப்புற்றிருந்ததை பழந்தமிழ் நூலான திருமுருகாற்றுப்படை என்னும் நூல் அழகாகப் பதிவு செய்து வைத்துள்ளது. 317 அடிகளால் நீண்ட செய்யுள் வடிவில் அமைந்த இந்நூல் கூறும் செய்திகள் மனிதனை மனிதனாக வாழ வைக்க அருந்துணையாக இருப்பவை. உலகத்து வாழும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, வழிபாடு என்னும் பயிற்சி நெறியில் இணைய முடியும். வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் நீக்கி மகிழ்வுடன் வாழ வழிபாடே சாலச் சிறந்தது என்பதை நமது முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். தாம் உணர்ந்ததைப் பின்வருவோரும் அறிய வேண்டி நூல் வடிவில் செய்யுள் நடையில் தொகுத்தும் வைத்தனர். அத்தகைய தொகுப்புகள் காலச் சுழற்சியால் அள்ளுண்டு போகாமல் எம்முடைய முதுசமாக இன்றுவரை நிலைத்து நிற்கின்றன. பிற மொழிகளும் பண்பாட்டு நெறிகளும் தமிழர் வாழ்வியலைத் திசை திருப்ப முயன்ற போதும் இத்தகைய தொகுப்புகளைக் கலங்கரை விளக்குகளாகக் கண்டு செம்மையான நெறியிலே நாம் செல்ல முடியும்.

திருமுருகாற்றுப்படை என்னும் நீண்ட செய்யுள் தமிழரது வழிபாட்டுச் சிந்தனைகளையும் நடைமுறைகளையும் நம்பிக்கைகளையும் நன்கு விளக்கிக் கூறுகிறது. பத்துப் பாட்டு என்னும் நெடும் பாட்டுகளில் முதலாவதாக அமைந்தது ஒருவரை இன்னொருவரிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியே 'ஆற்றுப்படை' ஆகும். ஆறு தான் ஓடும் பிரதேசங்களை ஊடறுத்து வழி சமைத்துச் செல்லும். அதே போன்று தான் பெற்ற பயனைப் பிறரும் பெறும் பொருட்டு வழி காட்டுவதே மனிதனுடைய மாண்பாகும். பொருள் தேட்டத்தில் இத்தகைய வழிகாட்டல் இன்றுவரை நடைபெறுகிறது. அருள் தேட்டத்திற்கான வழிகாட்டலாக திருமுரு காற்றுப்படை விளங்குகிறது. எனவே இது ஏனைய ஆற்றுப்படை நூல்களை விடத் தனிச் சிறப்புடையது. வழிபாட்டால் வாழ்வில் உயர்ந்தவர் ஏனையோரையும் உயர்த்த வேண்டி ஆற்றுப்படுத்தும் மரபு தமிழர் வழிபாட்டு மரபாக இருந்துள்ளது. இயல்பான வாழ்வியல் நடைமுறை களுடே வழிபாட்டு மரபையும் தொடர முடியும். ஆடலையும், பாடலையும், இசைக்கருவிக் கையாட்சியையும் அவாவி நிற்கும் இன்றைய இளந்தலைமுறையும் இந்த வழிபாட்டில் எளிதில் இணைந்து செயற்பட முடியும்.

நக்கீரர் என்னும் பழந்தமிழ்ப் புலவர் செய்த அருள் தேட்டத்திற்கான ஆற்றுப்படுத்தலைச் சற்று உன்னிப்பாக நோக்கின் அது எம்மையும் வழிப்படுத்து வதை நன்கு உணர முடிகிறது.

புலவரான நக்கீரர் பாடிய நெடும் பாட்டு 'புலவராற்றுப்படை' என அழைக்கப்பட வேண்டும். ஆனால் அது திருமுருகாற்றுப்படை என்றே போற்றப்படு கிறது. மானிட வள்ளல்களிடம் மனிதனை ஆற்றுப்படுத்தாமல் அழியாத இன்பம் நல்கும் இறைவனை அறிய ஆற்றுப் படுத்தும் நக்கீரர் தமிழர் வழிபாட்டு மரபைப் புதிய நெறியிலே இணைத் துள்ளார். கூத்தரும், பாணரும், விறலியரும் பொருளை நாடிச் செல்வது போல மக்கள் அருள் நாடி முருகனிடம் செல்ல வேண்டும். முருக வழிபாட்டின் பண்பையும் பயனையும் மக்கள் அறிய நக்கீரர் வழி காட்டுகிறார். அந்த வழிகாட்டல் இன்றும் தேவையாக உள்ளது. திருமுரு காற்றுப்படையின் அமைப்பு இதனைத் தெளிவாக விளக்கி நிற்கிறது. ஆற்றுப் படையின் அமைப்பு வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 01. | தொடக்கம் - முருகனின் இறைமைத்தன்மை | 1 - 3 அடிகள் |
| 02. | முருகனின் அளியும் தெறலும் | 4 - 6 அடிகள் |
| 03. | முருகனின் தார் | 7 - 11 அடிகள் |
| 04. | சூரரமகளிர் மாண்பு | 12 - 19 அடிகள் |
| 05. | சூரரமகளிரின் செயல்களும் விளையாட்டும் | 20 - 41 அடிகள் |
| 06. | முருகனின் அடையாளப்பூ | 42 - 44 அடிகள் |
| 07. | பேய்மகளின் இயற்கை | 45 - 51 அடிகள் |
| 08. | பேய்மகளின் செயல் | 52 - 56 அடிகள் |
| 09. | திருப்பரங்குன்றம் | 67 - 77 அடிகள் |
| 10. | திருச்சீரலைவாய் | 78 - 82 அடிகள் |
| 11. | முருகன் திருமுகம் தோன்றும் மாண்பு | 83 - 90 அடிகள் |
| 12. | திருமுகங்களின் செயல் | 91 - 102 அடிகள் |
| 13. | திருக்கைகளின் சிறப்பு | 103- 118 அடிகள் |
| 14. | திருச்சீரலைவாய் | 119 - 125 அடிகள் |
| 15. | திருவாவினன்குடி | 126 - 137 அடிகள் |
| 16. | திருவேரகம் | 176 - 189 அடிகள் |
| 17. | குன்று தோறாடல் | 190 - 215 அடிகள் |
| 18. | பழமுதிர் சோலை | 218 - 315 அடிகள் |

இவ்வமைப்பினுள் முருகன் தோற்றமும் தொடர்புடையோர் நிலைகளும் உறையும் தலங்களும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. முருகனின் தோற்றம் உருவ வழிபாட்டால் இன்று அனைவரும் அறிந்த ஒன்றாக இருப்பினும் அது பற்றிய ஐயப்பாடும் தெளி வின்மையும் எமது இளந்தலை முறையிடம் தோன்றி வளர்வதை நாம் உணர முடிகிறது. எனவே அதனைத் தெளிவுபடுத்தி வழிபாட்டு மரபில் இளையவரையும் ஆற்றுப்படுத்த வேண்டியது எமது கடனாகும்.

எமது வழிபாட்டு மரபில் உருவ வழிபாடு இணைந்தபோது அதன் விளக்கத்தை, திருமுருகாற்றுப்படை கூறுவதற்காக எழுந்தது. இயற்கையை, அதன் எல்லையற்ற ஆற்றலை மனிதன் உணர்ந்தபோது அதனை அவன் வழிபடும் மரபு தோற்றம் பெற்றது. முருகவழிபாடு தமிழர் வாழ்வில் இணைந்தவற்றைத் திருமுருகாற்றுப்படை எடுத்துக் கூறுகிறது. முருகன் உறையும் வழிபாட்டிடங்கள் பற்றிய செய்திகள் இதற்குச் சான்றாக உள்ளன. 'ஆறுபடை வீடு' எனச் சிறப்பிக்கப்படும் முருக வழிபாட்டுத் தலங்கள் மக்கள் நிலத்து வாழ்வியலோடு ஒன்றியிருந்தன. நிலத்தின் இயல்புக்கு ஏற்ற விளைபொருட்களை மடை செய்து கூட்டாக நடைபெற்ற வழிபாடு

இயல்பானதாயிருந்தது. ஆனால் ஆரியப் பண்பாடு தமிழர் பண்பாட்டுடன் வந்து கலந்தபோது முருக வழிபாட்டில் சில புதிய நடைமுறைகளும் இணைந்தன. சிறப்பாக உருவ வழிபாடு குறிப்பிடத் தக்கது. மனிதனுடைய வாழ்வியலோடு வழிபாட்டைத் தொடரச் செய்ய மனித நிலையிலே உருவங்களைக் கண்டு, வழிபாடு செய்வது இயற்கையாக அமையும் எனக் கருதப்பட்டது. குடும்ப உறவுகளை இறையின் தன்மையாக மனித மனம் எண்ணி அமைதியடைய உருவ வழிபாடு பெரிதும் உதவியது. வழிபாடு மனித உறவுகளோடு தொடரவும் கூட்டாகச் செய்வதற்கும் இது வாய்ப்பாக இருந்தது. இன்று வழிபாட்டு நிலையில் இறை உருக்களின் தோற்றம் பற்றிப் பல வினாக்கள் தோன்றியுள்ளன.

முருக வழிபாட்டில் முருக னுடைய திருவுருவம் மிக முக்கியமானது. திருச்சீரலைவாய் என்னும் தலத்தில் உறையும் முருகன் ஆறுமுகம் கொண்டவன் அந்தத் திருமுகங்களின் மாண்பினைத் திருமுருகாற்றுப்படை விளக்குகிறது. தாமம், மகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்னும் ஐந்து வகையாகச் செய்யப்படும் தொழில்நுட்பம் நிறைந்த தலையணிகள் பொலிய ஒளியும் நிறமும் பொருந்திய ஆறுமுகங்கள் பற்றி நக்கீரர் பாடுகிறார். வழிபாட்டில் ஒன்றியவர் மனங்களிலே ஆறுமுகங்களும் நன்கு பதிந்து இருக்கும். மனமொன்றாத நிலையில் ஆறுமுகங்களைப் பற்றி ஐயுறுவோர் சிலர் உளர். எனவே அவரை வழிபாட்டில் மனமொன்றி இணைய வைக்க ஆறுமுகம் பற்றிய விளக்கம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. முருகனின் திருமுகங்களின் செயற்பாட்டை மனித நிலையிலே உணர்வதற்கு இவ்விளக்கம் பெரிதும் உதவும்.

### முதல் திருமுகம்

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்"
(திருமுருகாற்று : 91 - 92)

உலகத்துப் புற இருளை நீக்கும் ஞாயிற்றைத் தோற்றுவிக்கும் முதல் திருமுகம் எல்லோருக்கும் நலம் தருவது. வழிபாடு செய்யாதவர் வாழ்விலும் ஒளி ஊட்டுவது. உலகம் உவப்ப ஒளி தரும் ஞாயிறு எம்மை மகிழ்விக்கும். அந்த மகிழ்வினை எமக்கு அருளும் முதல் முகம் அனைவரும் காண்பது. அக இருளை நீக்கி அன்பு நெறியில் செலுத்தும் ஒளி முகம் அது. மனத்து இருளால் அல்லலுறுவார் முதல் முகத்தின் ஒளியால் இருளகன்று மனம் தெளிந்து சிறந்த செயற்பாடு களைச் செய்வார். முதல் முகத்தின் தரிசனம் மன இருள் களைய மனம் இரண்டாவது திருமுகத்தைத்தேடும்.

### இரண்டாவது திருமுகம்

"ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி
காதலில் உவந்து வரம் கொடுத்தன்றே ஒரு முகம்"
(திருமுருகாற்று : 93 - 94)

தன்னை ஆர்வத்தோடு வழிபடு வோரை நோக்கி, அவர்கள் ஏத்தும் நிலையைக் கண்டு இனிது நோக்கி, அவர் பால் காதல் கொண்டு உவந்து, வேண்டும் பொருள் வழங்கும் முகம் தோன்றும்

மனத்திலே இருளின்றித் தூய்மையாக வழிபாடு செய்யும் முகம் கண்டு முருகன் இரண்டாவது திருமுகம் அருள் நோக்குச் செய்யும் அவர் வேண்டுவதைத் தரும் மனித நிலையில் வழிபாடு செய்கின்றவர் நிலைக்கேற்ப அந்தந்த இடங்களிலே தோன்றும் திருமுகம் இது. அன்பினாலே ஆர்வம் கொண்டு விழிபடுவோர் மனம் அறிந்து உதவும் மக்கட்பண்பு நிலையில் இந்த இரண்டாவது திருமுகம் விளங்குகிறது.

### மூன்றாவது திருமுகம்

**"மந்திர விதியின் மரபுளி வழாஅ**
**அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்"**
(திருமுருகாற்று : 95-96)

இந்த திருமுகம் மந்திரம் ஓதி மெய்ந்நூல் வகுத்த முறைப்படி வேள்வி செய்து வழிபாடு செய்வோருக்கு இடையூறு நேராதபடி காத்து நிற்கும் முருகனுக்குரிய 'சரவணபவ' என்னும் ஆறெழுத்து மந்திரத்தை ஓதி வழிபடும் மரபு உண்டு. நூல்களில் கூறப்பட்ட மரபின்படி கன்ம வேள்வி, தவ வேள்வி, செப வேள்வி, தியான வேள்வி, ஞான வேள்வி என்பவற்றை இயற்றுவார். அவற்றை இடையூறு இன்றிச் செய்ய மூன்றாவது திருமுகம் கண்காணித்து நிற்கும்.

### நான்காவது திருமுகம்

**"எஞ்சிய பொருளை ஏமுற நாடி**
**திங்கள் போல திசைவிளக்கும்மே ஒருமுகம்"**
(திருமுருகாற்று : 97 - 98)

மனித அறிவினால் உணர முடியாதவற்றை வழிபடுவோர் ஆராய்ந்துணர அவர்களைக் காவல் செய்து நிற்கும் இத்திருமுகம் திங்களை ஒத்தது. இரவின் இருளகற்றும் திங்கள், வழிபடுவோர் நினைவில் முருகன் திருவருளை நினைவூட்டும். வழிபாட்டு நிலையில் ஆய்வு செய்யும் மனிதருக்கு ஏற்படும் சிக்கல்களை இத்திருமுகத்தின் அருள் நோக்கு நீக்கிவிடும். 'எஞ்சிய பொருள்' எனக் குறிப்பிடப்படுவது அநுபூதி எனப்படுகிறது. இறையருள் என்பது உலகம் முழுவதும் பரந்து நிற்கும் எல்லையில்லாத ஆற்றல் என்பதைத் தானும் உணர்ந்து பிறர்க்கும் உணர்த்துவோரும் உளர். அவர் உள்ளம் ஒளிபெற இந்த முகம் அருள் சுரப்பது.

### ஐந்தாவது திருமுகம்

**"செறுநர் தேய்த்து செல்சமமுருக்கி**
**கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே**
**- ஒரு முகம்"**
(திருமுருகாற்று : (99 - 100)

போர் என வரும் பகையை அழிக்க வெகுண்டு போர் செய்து அழிப்பது இத் திருமுகம், கள வேள்வியை வேட்ட முகம் தமக்கும் பிறர்க்கும் தீமை செய்வோரை இனங்கண்டு அழிப்பதே நடுநிலையான போர் மரபாகும். இறை அருள் இன்றி இதனைச் செய்ய முடியாது. போர் முகம் என வெளிப்படத் தோற்றாது அதனைத் தீர்க்கும் அருள் முகமாக ஐந்தாவது முகம் விளங்குகிறது. வீரர் வழிபடும் வெற்றி முகம் இது.

### ஆறாவது திருமுகம்

**"குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்**
**மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே"**
(திருமுருகாற்று : 101-102)

இந்த முகம் குறவருடைய இளமகளாகிய பூங்கொடி போன்ற இடையையும் மடப்பத்தையும் உடைய

வள்ளியோடு மகிழ்வோடு இருப்பதைக் காட்டும். உலக மக்களின் இல்லற வாழ்வியல் நெறியை இந்த முகம் காட்டி நிற்கும். வழிபாட்டு நிலையில் மக்கள் இல்லற வாழ்வு இனிதே நடைபெற இறைவனை வழிபடும் மரபு தொன்றுதொட்டே இருந்து வருகிறது. முருகனின் இந்த ஆறாவது திருமுகம் நகையோடு விளங்கும் இனிய முகமாக இருப்பது மண வாழ்வின் நிறைவை மக்களுக்கு உணர்த்துவதாக உள்ளது. அது இல்லற வாழ்வு பற்றிய நம்பிக்கையை ஊட்டுவதாக விளங்கு கிறது.

மனித வாழ்வியலில் உறவும் நட்பும் மிகவும் இன்றியமையாதவை. இன்பத்திற்கும் துன்பத்திற்கும் துணையாக இருப்பவை. உறவுகளை இழந்தவர்களும் நட்பினைத் தொலைத் தவர்களும் இறைவனையே எண்ணி வாழ முடியும். இறை உருவிலே உறவையும் நட்பையும் கண்டு மனம் தேற வழிபாடு ஆற்றுப்படுத்துகிறது. முருக வழிபாடு மக்கள் வாழும் நிலத்தோடு இயைந்த இயற்கை வழிபாடாக விளங்குகிறது. துன்பம் இருள் அகற்றும் ஒரு சுடர் விளக்காக வழிபாடு உள்ளத்திலே ஒளியைத் தருகிறது. மனம் விரும்புவதைக் கேட்டுப் பெறும் நிலையை உரு வாக்குகிறது. கூட்டுறவு நிலையில் மக்களை ஒரு இலக்குடன் ஒன்றிணைய வைக்கிறது. நடைமுறை பேண வழி சமைக்கின்றது. அறிவினால் எல்லோ ரையும் ஒன்று சேர்த்து இயங்க வைக்கிறது. தீமையைக் களைந்து நன்மையைச் செய்யத் தூண்டுகிறது. நட்புடன் வாழவும் தொண்டு செய்து பிறரை வாழ்விக்கவும் ஊக்குவிக்கிறது. பிறர் துன்பத்தைக் கண்டு இரங்கி உதவும் அருள் சுரக்கும் உள்ளம் வழிபாட்டால் நிறைவு பெறுகிறது. முருக வழிபாட்டின் பயனை வேண்டுவோர்க்கு திருமுரு காற்றுப்படை தெளிவான விளக்கத்தை தருகிறது.

மக்களுடைய முகங்களில் தோன்றும் வேறுபட்ட உணர்வுகளை வகைப்படுத்தினால் ஆற்றுப்படை கூறும் ஆறுமுகங்களாக அமையும். வாழ்வியலில் இந்த ஆறுமுகங்களையும் இனங்கண்டு ஒருவரோடு ஒருவர் உறவும், நட்பும் கொள்ளுமிடத்து சிக்கல்கள் தோன்ற இடமில்லை. உள்ளத்திலே உறைந்து கிடக்கும் இந்த முகங்களை மனிதன் இயல்பாகப் பெற்றிருக்கும் ஒரு முகத்திலே காட்டும் நிலைகள் உண்டு. ஆனால் அந்த வேறுபட்ட முகங்களின் செயற்பாட்டைப் பயனுள்ளதாக்க திருமுருகாற்றுப்படை வழிகாட்டுகிறது. முருகனின் திருமுகங்களை எமது முகங்களிலே காணமுடியும். அதை வழிபாட்டினால் நன்கு உணரலாம். இதுவே சமய வாழ்வாக மாற வேண்டும். எமக்குத் தேவையான நெறிகளை ஏற்ற சமயத்தில் உணர்த்தவே இலக்கியங்கள் எழுந்துள்ளன. எனவே அவற்றை அறிந்து செயற்படுத்த வழிபாட்டுக்கெனக் கணிக்கப்பட்ட காலங்கள் மிகப் பொருத்த மானவை. சமய இலக்கி யங்களை நாம் கற்க வேண்டிய தேவை ஒன்றுண்டு. எம்மைச் சீர்செய்யவும் பிறரை எம்மோடு இணைத்து ஒற்றுமையாக வாழவும் வழிபாடே துணை செய்யும். அதற்கு ஆறுமுகமான பொருளை நாம் எம் உள்ளத்தில் நிலையாக இருத்திக் கொள்ள வேண்டும்.

# நல்லூர் முருகன் திருப்புகழ்

**நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**

ஆறு பிறையறு
கோடு விடவர
வானையுரிதரி உமைபாகன்

ஆதியடியவர்
மீது திருவடி
ஆவமலரணி யருநேசன்

நீறுவிழிமணி
யேறுபுயனுயிர்
நேசநெருசெவி நிறைவாக

நேடியுரை செயு
மாதிமறை மொழி
நீயினிதினருள் செயவேணும்

ஏறுமரகத
கோலசுரகத
மீதிலொருநொடி யுலகேழும்

ஈசவெருகர
மேவுபவமுன்
வோடிவலம் வரு குமரேசா

நாறுபொழிலிடை
யூனு மது நதி
நாறுகதி வர வயலாடே

நாகு மடையுற
வாறிவிழிதரு
ஞான நலையமர் பெருமாளே

# சித்தர்கள் கண்ட சமய நெறி

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்,
உதவிப்பணிப்பாளர், இந்துசமய
விவகார அலுவல்கள் அமைச்சு.

இந்து சமயத்தில் காலத்துக்குக் காலம் பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள் எனப் பலர் தோன்றி எமது சமயத்தை வளப்படுத்தினார்கள். நாயன்மார்கள், ஆழ்வார்கள், வடநாட்டு பக்தி நெறி யாளர்கள் போன்றோர் பக்தர்களாகவும், சங்கரர், இராமானுஜர், மத்துவர், மெய் கண்டார் போன்றோர் தத்துவ ஞானி களாகவும், பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள், ஈழத்துச் சித்தர்கள் போன்றோர் சித்த புருஷர்களாகவும் திகழ்ந்தார்கள். சித்த புருஷர்கள் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்களாகக் காணப் பட்டார்கள். கடவுளைக் காண முயல் பவர்கள் பக்தர்கள் என்றும், கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. “எழும்பாமல் வாசனையைக் கொன்றோர் ஞானி, ஏகாமல் வாசனையை அடித் தோன் சித்தன்” எனச்சட்டை முனிச் சித்தர் ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கு கிறார். வாசனை என்பது கர்மவினை ஆகும். பிரபஞ்ச வாழ்வின் இரகசியத்தை சித்தர்கள் அறிந்திருந்தார்கள். சித்தர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகாயதராக வாழ மாட்டார்கள். இவர்கள் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்பவர்கள்.

சித்து என்னும் சொல் தெளிந்த ஞானத்தைக் குறிக்கும். ஞானம் பெற்றவர்களைச் சித்தர் என்று கூறுவதும் உண்டு. சித்தி பெற்றவர்களைச் சிவனோடு ஒத்தவர்களாய்க் கருதி மக்கள் மதித்துப் போற்றுகின்றனர். “சித்தன் போக்கு சிவன் போக்கு” என்பது தமிழ் மக்களிடம் நிலவி வரும் பழமொழி ஆகும். சித்தத்தைச் சிவன் பால் வைத்துச் சிந்தனையில் மூழ்க மூழ்கச் சித்த விகாரம் ஒடுங்கும். சித்த விகாரம் ஒடுங்க ஆத்ம சக்தி அகத்திலே பீறிட்டு எழும். ஆத்ம சக்தி முழுமை பெறுகின்றபோது சித்துக்கள் அனைத்தும் கைகூடும். இத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்யும் சித்தர்களை வித்தகச் சித்தர் கணம்” எனத் தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

சித்தர்கள் மரணத்தை வென்று நீண்ட நாள் வாழும் கலையை நன்கு அறிந்திருந்தனர். உடல் நலத்தோடு இளமைப் பொலிவோடு வாழ அற்புதமான மருந்துகளைத் தயாரித்தனர். சாவா மருந்தாகப் பயன்படும் பச்சிலை மூலிகை களை அறிந்து பயன்படுத்தினர். பிணி தீர்க்கும் மருந்துகளைச் செய்தனர்.

சித்த புரிசர்களுக்கு சமாதிக் கோயில் அமைத்து வழிபடும் மரபு நம்மவர்களிடம் உண்டு. இவர்களுடைய சமாதிகளைத் தொழுதால் தீராத நோய்கள் தீரும், பொல்லா வினைகள் நீங்கும். கருதியவை கைகூடும், நல்லவை நடக்கும் என மக்கள் நம்புகின்றனர்.

சித்தர்கள் மக்களின் மன இருளைப் போக்கி ஞான ஒளி பரப்பக் கூடிய அற்புதமான பாடல்களைப் பாடியுள்ளார்கள். உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகள், கோள்களின் நிலை, கால் மாறுபாடு, சுடர்களின் இயக்கம் ஆகியவற்றை விளக்கி சோதிட நூல்கள் எழுதினார்கள். நிறைமொழி மாந்தர்களாக விளங்கிய அவர்களின் மறை மொழிகள் மந்திரம் எனப் போற்றப் பட்டன. மனித ஆற்றலை ஒருமைப் படுத்தவும், கூர்மையாக்கவும், வெளிப் படுத்தவும் கூடிய வழிகளைக் காட்டினார்கள். ஆத்ம சக்தி, யோக நிலை ஆகியவற்றை விளக்கிப் பாடல்களைப் பாடினார்கள்.

சித்தர்கள் யாவரும் மனித நேயம் மிக்கவர்கள்; சாதி சமய வேறுபாடுகள் அற்றவர்கள்; சமரச சன்மார்க்கத்தைப் போற்றுபவர்கள்; போலிச்சடங்குகளையும், பொருளற்ற செயல்களையும், மூட நம்பிக்கைகளையும் கண்டிப்பவர்கள்.

மனித வாழ்வு மிக உயர்ந்தது என்பது சித்தர்களின் கருத்தாகும். உடம்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று தங்கள் பாடல்களில் வற்புறுத்துகிறார்கள். உத்தமனாகிய இறைவன் வீற்றிருக்கும் கோயில் உடம்பு ஆகையால் இதனை அலட்சியம் செய்யக்கூடாது. உடலை சுடுகாடாக மாற்றக்கூடாது. புலாலைப் புசிப்பதையும், மதுவை அருந்து வதையும் தவிர்த்து இறைவன் வீற்றிருக்கும் ஆலயங்களைப் பாதுகாப்பது போல உடலைப் பாதுகாக்க வேண்டும். இதனை தவயோகி திருமூல நாயனாரின், பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

**உடம்பினை முன்னம்**
**இழுக்கென்றிருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே உறுபொருள்**
**கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்**
**கொண்டானென்று**
**உடம்பினை யானிருந்து**
**ஓம்புகின்றேனே.**

மனத்தூய்மை இன்றி செய்யும் தெய்வ வழிபாடு பயன் தராது. பொய், களவு, கொலை, கோபம், கள், காமம் ஆகியவை மனித இனத்தை நாசமாக்கி வீழ்த்திவிடும். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்ற வாழ்க்கை பயனற்றது. எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த இறைவனை மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் திரிகரண சுத்தியுடன் போற்ற வேண்டும். அன்பு, இரக்கம், தொண்டு ஆகியவற்றைக் கொண்டு வாழ்பவர்களின் வாழ்வே சிவ வாழ்வு, தவ வாழ்வு என்பதைச் சித்தர்கள் மக்களுக்கு உணர்த்தி வைத்தார்கள். மனம் அடங்கினால் முத்தியும், சினம் அடங்கினால் சித்தியும் கிடைக்கும் என்பதை இடைக்காட்டுச் சித்தர் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

**மனமென்னும் மாடு அடங்கில்**
**தாண்டவக்கோனே! முத்தி**
**வாய்த்ததென்று எண்ணேடா**
**தாண்டவக்கோனே**
**சினமென்னும் பாம்பு இறந்தால்**
**தாண்டவக்கோனே யாவும்**
**சித்தியென்று நினையேடா**
**தாண்டவக்கோனே.**

அண்ட சராசரமெல்லாம் வீற்றிருக்கின்ற பரம்பொருளை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே ஞானிகள் கண்டார்கள். இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயில் என்றே சித்தர்கள் மானுட உடலைக் கூறுகிறார்கள். இத்தகைய அரிய உடலைச் சிலர் காம, களியாட்டங்களில் ஈடுபடுத்திப் பாழாக்கி விடுகின்றார்கள். தாய் தனது பிள்ளையை பத்து மாதம் கருவிலே சுமந்து பெற்று

எடுக்கிறாள். இறைவன் தாயின் கர்ப்பத் திலே வளரும் சிசுவிற்கு உயிரைக் கொடுத்து இப்பூமிக்கு அனுப்பி விடு கிறான். பிள்ளை வளர்ந்து வரும் காலத்தில் ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு விதமான மயக்கங்களுக்கு உட்பட்டு, தான் எடுத்த அரிய மானிடப் பிறப்பை சிதைத்தும், சீரழித்தும் விடுகின்றான். இதனைக் கடுவெளிச் சித்தர் தனது பின்வரும் பாடலின் ஊடாக விளக்குகிறார்.

**நந்தவனத்திலோர் ஆண்டி**
**- அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை**
**- வேண்டிக்**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி**
**- மெத்தக்**
**கூத்தாடிக் கூத்தாடிப்**
**- போட்டுடைத்தாண்டி**

மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசை ஆகிய ஆசைகளின் ஊடாக வாழ் நாளை வீழ்நாளாக்கும் மனிதர்களுக்கு பட்டினத்தார் பின்வருமாறு அறிவுரை வழங்குகின்றார்.

**மண் பெண் பொன்னாசை**
**- மயக்கத்திலே விழுந்து**
**கண்கெட்ட மாடது போல்**
**- கலங்கினேன் பூரணமே.**

மனம் ஒரு குரங்கு; ஒவ்வொரு மனிதனின் வாழ்வுக்கும், தாழ்விற்கும் அவனுடைய மனத்திலே தோன்றும் எண்ணமே மூல வித்து ஆகும். இதனாற் றான் "நல்லவை எண்ணல் வேண்டும்" என்று மகாகவி பாரதியும் தனது பாடலில் குறிப்பிடுகிறார். மனதுக்கு உபதேசம் செய்யும் பாடல்கள் பலவற்றை நமது அருளாளர்களின் தோத்திர நூல்களில் காணலாம். "கெடுவாய் மனனே கதிகேோர் கரவாது இடுவாய்" என அருணகிரியார் முருக மந்திரமாகிய கந்தரநுபூதியிலும் "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு ஆழ்கின்றாய்" என மணிவாசகர் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்திலும், "துயரறு கடரடி தொழு தெழு மனனே" என நம்மாழ்வார் தனது திருவாய்மொழிப் பாடலிலும் மனதிற்கு உபதேசம் செய்வதைக் காணலாம். பட்டினத்தார் மனதிற்கு உபதேசம் செய்த பின்வரும் பாடல் உலகில் வாழும் சகல மக்களுக்கும் இன மொழி மத பேதங் களுக்கு அப்பால் நின்று கூறும் ஆப்த வாக்கியமாகக் காணப்படுகிறது.

**ஒன்று என்று இரு தெய்வம்**
**- உண்டு**
**என்று இரு; உயர்செல்வம்**
**- எல்லாம்**
**அன்று என்று இரு; பசித்தோர் முகம்பார்**
**- நல்லறமும் நட்பும்**
**நன்று என்று இரு; நடு நீங்காமலே**
**- நமக்கு இட்ட படி**
**என்று என்று இரு! மனமே**
**- உனக்கு உபதேசம் இதே.**

இலங்கையைச் சிவபூமி எனத் திருமூலநாயனார் அழைத்தார். சிவபூமி யாகிய இலங்கையில் ஞான பூமியாகத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடு ஆகும். யாழ்ப்பாணம் முருகப் பெருமானுடைய அருளாட்சிக்கு உட்பட்ட பிரதேசம் ஆகும். அலங்காரக் கந்தனாக நல்லூர் முருகன் ஆலயமும், அபிசேகக் கந்தனாக மாவிட்டபுரம் முருகன் ஆலயமும், அன்ன தானக் கந்தனாக செல்வச்சந்நிதி முருகன் ஆலயமும் காணப்படுகின்றன.

இந்த ஞான பூமியிலே பல சித்த புருஷர்கள் நடமாடித் திரிந்தார்கள். ஈழத்துச் சித்தர்களில் மூல புருஷராக இருந்த கடையிற் சுவாமிகளின் சீடர்

செல்லப்பா சுவாமிகள் நல்லூர்த் தேரடியை தனது ஞான அனுபவத்திற்கு உரிய இடமாகத் தேர்ந்து எடுத்து வாழ்ந்து வந்தார். செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு அருள் செய்யப்பட்ட ஞானச் செல்வரே தவத்திரு யோகர் சுவாமிகள் ஆவார். பேசும் தெய்வமாக நின்று பேரருள் செய்கின்ற நல்லைக் கந்தனின் திருவருளும் செல்லப்பா சுவாமிகளின் குருவருளும் ஒருங்கே கிடைக்கப்பெற்ற யோகர்சுவாமிகள் நல்லூரான் மீது பாடிய பாடல்கள் முருகப்பெருமானின் திருவருளை அனைவருக்கும் உணர வைக்கும் ஞானப் பாடல்களாக காணப்படுகின்றன.

உலகியல் வாழ்வில் நாம் படும் துன்பங்கள் நீங்க வேண்டுமானால் செல்லப்பா சுவாமிகள் தவம் செய்த நல்லூரை நாம் வலம் வந்து வணங்க வேண்டும் என்பதை யோகர் சுவாமிகளின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

எந்நாளும் நல்லூரை வலம்வந்து
- வணங்கினால்
இடர்கள் எல்லாம்
- போமே
அந்நாளில் ஆசான் அருந்தவம்
- செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த
- உண்டு

நமது சொந்த வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் நீங்குவதற்கு மாத்திரம் அல்லாது, நமது நாட்டைப் பீடித்திருக்கும் யுத்த மேகங்கள் நீங்குவதற்கும் சாந்தியும், சமாதானமும் நமது நாட்டில் ஏற்படுவதற்கும் நல்லூரானை வணங்கி உள்ளமுருகிப் பாடவேண்டும் என்பதை,

**"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு - அதனாலே**
**நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்"**

என யோகர் சுவாமிகள் தனது நற்சிந்தனைப் பாடலில் குறிப்பிடுகிறார்.

ஊன் உருகினால்த்தான் உள்ளத்தில் ஆன்ம ஒளி கிடைக்கும். சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும்;

**யானும்பொய் என் நெஞ்சும்பொய் என்**
**- அன்பும்பொய்**
**ஆனால் வினையேன் அழுதால்**
**- உன்னைப் பெறலாமே.**

என்றே மணி வார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. கல்லுக் கூட உருகினாலும் கல்நெஞ்சம் உருகாது என்பதை தாயுமான சுவாமிகள்,

**கல்லேனும் ஐயா ஒருகாலத்தில் உருகும் - என்**
**கல் நெஞ்சம் உருகவில்லையே.**

எனப்பாடுகிறார். நல்லைக் கந்தனின் திருவருள் கிடைத்து விட்டால் கல் நெஞ்சும் கசிந்துருகும் என்பதை,

**நல்லைப் பதிக்கரசே நல்லைப்பதிக்கரசே**
**நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா**
**கல்லை நிகர்த்த மனங் கரையவருள் தந்திடடா**
**எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி**
**- வைத்திடடா**

என நற்சிந்தனைப் பாடலில் யோகர் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

நல்லூரிலே வீற்றிருந்து ஞான ஆட்சி புரியும் நல்லைக் கந்தனின் திருவருளை தவத்திரு யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனைப் பாடலின் ஊடாக நமக்கு எல்லாம் உணர்த்தி வைத்துள்ளார்.

# இந்து சமய வழிபாட்டின் போற்றுதற்குரிய பொதுமைப் பண்பு

நீர்வைமணி.

பழைமையும் பெருமையும் வாய்ந்த எமது இந்து மதத்தின் மிகச் சிறப்பான அம்சம் அதன் பரந்து விரிந்த மனப் பான்மையேயாகும். மற்றைய சமயங் களில் உள்ளது போன்ற ஆதிக்க மனப் பான்மைகள் இந்து சமயத்தில் கிடை யாது. ஆதிக்க மனப்பான்மைகள் தான் மக்களிடையே வேற்றுமையுணர்வுகளையும், சண்டை சச்சரவுகளையும் ஏற்படுத்துவன வாயுள்ளன. இறைவழிபாட்டிலுள்ள தவறான செயற்பாடுகள்தான் சமயங்களின் பெயரால் போட்டி, பொறாமைகளை உண்டாக்குகின்றன.

இந்து சமயமானது இறைவழி பாட்டுச் சுதந்திரத்தைச் சிறப்பாகக் கொண்டிருக்கும் உண்மைத் தத்துவ நிலையை உணராதார் தவறாகவும், கேலியாகவும் கருதுகின்றனர். ஆதி, அந்தமில்லாத இந்து மதக் கோட் பாடுகளைக் கண்டும், கேட்டும் அறிந்த வெளிநாட்டார் பெரிதும் வியந்து போற்றுகின்றனர். மற்றைய மதங்களிலிருந்து வேறுபட்ட, இந்து சமய சுதந்திர வழிபாடானது நன்கு ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பின், அதுவே அதன் மகத்துவமிக்க நிலைக்குக் காரணம் எனலாம். மக்கள் மனத்தைப் பொறுத்தமட்டில், எத்தனையோ குறைகள், கொள்கை வேறுபாடுகள், கருத்து முரண்பாடுகள் பலப்பலவாக இருந்து வருகின்றன.

மக்கள் மனத்தைப் பொறுத்தளவில் எத்தனை, எத்தனையோ கருத்து வேற்றுமைகள் காணப்படும். ஒவ்வொருவர் மனத்திலும், வெவ்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படும். பல நிறப்பட்ட பசுக்களும் ஒரே நிறப்பாலைத் தருவது போலப் பலவித மனக் கருத்துக்கள் ஏற்பட்டாலும் இறை வழிபாடு எம்மை ஓரிடத்திற்கே அழைத்துச் செல்லும் என்பது உபநிட தங்கள் காட்டும் வழியாகும். மனிதர்கள் எவ்வெவ் வழியில் என்னை அணுகி னாலும், அவ்வவ் வழியில் நான் அவர் கட்கு அருள் தருவேன் எனக் கீதையில் கண்ணபரமாத்மா கூறுகின்றார்.

இந்து மதத்தவர்கள் இறைவனைத் தேவர்களாகவும், மனிதர்களாகவும், மற்றும் பலதரப்பட்ட உயிர்களிலும், புல்பூண்டு மரம் செடிகளிலும், உயிரற்ற பலவற்றிலும் காண்கின்றார்கள். இதன் மூலம் இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப் பான் என்ற மன உறுதியுடன், நம்பிக் கையுடன் வழிபாடுகள் செய்கின்றனர்.

எங்கும், எதிலும், உள்ளும், புறமுமாக வியாபித்திருக்கும் இறை

சக்தியை வழிபடுவதில் இந்து மதத்திற்கு இருக்கும் பொதுமைப் பண்பு மகத்தானது. இந்தப் பொதுமைப் பண்பும், இப்பண்பின் வழிப்பட்ட வழிபாடும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, இந்து மதத்தை உலகம் போற்றும்படியாகவும், அதுபற்றிச் சிந்திக்கும்படியாகவும் வைத்திருக்கின்றது என்றால், அதுவே அதன் மகத்துவமாகும். எத்தகைய கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும், அவற்றுக்கப்பால் தன்னகத்தே ஆழமான சிறந்த உயிர்த் தத்துவார்த்த நெறிகளை அடிப்படையாகக் கொண்டதுமாக உள்ளது, இந்து சமயம் என்றால் அது மிகையாகாது.

இன்று உலகில் உள்ள பிற மதங்கட்கெல்லாம் ஒவ்வொரு வேத நூல்கள் மட்டுமே சிறப்பிடமாக விளங்கு கின்றன. ஆனால் இந்து மதத்தைப் பொறுத்த மட்டில் வேத, ஆகம, உபநிடத, புராண, இதிகாச நூல்கள் ஆழ்ந்த தத்துவங்களை உலகுக்கு எடுத்துக் கூறுவனவாக உள்ளன. இவற்றிற் பலவும் இந்துக்களின் பொதுமைப் பண்பினை வளர்ப்பனவாகவே காணப்படுகின்றன. உலகில் உள்ள அனைத்திலும் இறைவன் மறைந்தும், நிறைந்தும் நிற்கின்றான். எவனுடைய செல்வத்திலும் ஆசை வையாது பற்றினை விட்டு வாழ்வதன் மூலம் பேரின்பம் பெறலாம் என உபநிடதம் கூறுகின்றது.

அந்த உபநிடத வாக்கியம்,

ஈசா வாஸ்யம் இதம் சர்வம்
யத் கிம்ச ஜகத்யாம் ஜகத்
தென தியக்தென புஞ் சீதா
மாக்ருதஹ் கஸ்ய ஸ்வித் - தனம்.

என்பதாகும்.

இந்துக்களாகிய நாம் உலகப் பெரியார்கள் பலரும் போற்றும் உயர்ந்த, ஆழ்ந்த உண்மைத் தத்துவங்களைப் புரிந்து அதன்வழி எங்கள் சமயத்தின் பொதுமைப் பண்பினைப் போற்றிக் கைக்கொண்டு வாழ்வோமாயின் இந்துவின் சிறப்பையும், பெருமையையும் உலகம் நன்கு உணர வழிகாட்டலாமன்றோ......!

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

## நல்லையில் தலங்கொண்டாய்

அலங்காரக் கந்தனே ஆனந்த
முருகா! அருளாட்சி புரிந்தடியவர்
நலங்காக்க நல்லையில் நர்த்தனம்
புரியும் நாதா! நல்லார்க்கருள்புரிய
நானிலங்காக்கும் நாயகா! தொன்மைச்
சிறப்பாம் தமிழர் தலைநகர்நல்லையில்
தலங்கொண்டருள் புரியும் வேலா!
உன்பாதம் சரணம் சரணம் ஐயா!

**இராம ஜெயபாலன்**

# சைவப் பிரசாரகர்க்கு ஒரு பயிற்சிக்கல்லூரி

செஞ்சொற்செல்வர், சிவநெறித்தவமகன்,

ஆறு.திருமுருகன்

சிவபூமியென அழைக்கப்படும் ஈழத்திருநாட்டில் சைவ சமயம் நிலைபெற உழைத்தவர் நாவலர் பெருமான். அப்பெருந்தகையின் சிந்தனைகளில் ஒன்றாகிய சைவப் பிரசாரகர் பயிற்சிக் கல்லூரி இதுவரை எம்மண்ணில் உருவாகாதது. சைவ மக்களின் தவக்குறைவே. நாவலரின் சிந்தனைகள் பல அவர் காலத்திலேயே அவரால் நிறைவேற்றப்பட்டன. ஆனால் சைவப் பிரசாரகர் பயிற்சி நிலையம் அவர் உருவாக்கத் திட்டமிட்டபோதும் இறைவன் ஐம்பத்தாறு வயதில் அவரை அழைத்துவிட்டான். நிறுவன ரீதியாகச் சைவ சமயத்தைக் கட்டி வளர்க்க வேண்டும் என்ற நாவலரது கூற்று சைவ பரிபாலன சபையாகவும், சைவ வித்தியா விருத்திச் சங்கமாகவும் உருப்பெற்ற போதிலும் அந்நிறுவனங்களால் சைவப் பிரசாரகர், சைவப் போதகர் உருவாக்குந் திட்டம் செயற்படுத்தப்படவில்லை. இதனால் ஈழநாட்டுச் சைவர்களின் சமய அறிவு இன்றுவரை உண்மை வளர்ச்சியை எட்டவில்லை என்பதை மறுக்க முடியாது. 21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் இன்றைய உலக வள நிலையில், இந்துமத அறிவியற் சிந்தனைகள், ஆத்ம ஞானச் சிந்தனைகள் மக்களிடையே தெளிவு பெற்றமை கால வளர்ச்சிக்குப் போதாது. சைவப்பிரசாரகர் பயிற்சிக் கல்லூரி உருவாக்கப்படவில்லை எனச் சென்ற ஆண்டு இந்து சாதனப் பத்திரிகை ஆசிரியர் பேராசிரியர். இ.குமாரவடிவேல் மிகுந்த கவலை தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது. தமிழர்கள் நிறைந்து வாழும் தமிழீழப் பிரதேசத்தில் சைவ மக்களின் தொகைக்கமைய சைவப் பிரசாரகர் இன்று இல்லை.

குறிப்பாக, கிழக்கிலங்கை முதல் மலையகம், வன்னி, சிலாபம், மன்னார் பகுதிகளில் சைவ சமயத்தினுட் பொருளைப் பொது மக்கட்கு அறியத் தருவதற்குப் போதனையாளர்கள் இல்லாமையை அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் வேதனையோடு எடுத்துரைக்கிறார்கள். கிழக்கிலங்கையில் சைவப்பிரசங்கம் என்ற நிலை இதுவரை பெரிதாக வளர்ச்சி பெறவில்லை. கலைகள் உயரிய வளர்ச்சியைக் கண்டபோதிலும் சமய நெறிகளை அறிகின்ற வாய்ப்பு அரிதாகவே காணப்படுகிறது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமானால், சைவ மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் தோறும், சைவப் பிரசாரங்கள்

மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே எம் தேசத்தில் சைவப் பிரசாரகர் பயிற்சிக் கல்லூரி ஒன்று உருவாகி ஆளுமை மிக்க இளைய தலைமுறையை, பயிற்சியாளர் களாகப் பயிற்றுவித்து அவர்களை வேதனத்தோடு இப்பணியிலீடுபடுத்த வேண்டும். பௌத்த மதத்தவர்கள், இஸ்லாமிய மதத்தவர்கள், கிறிஸ்தவ மதத்தவர்கள் நிறுவன ரீதியாகப் போதனையாளர்களை உருவாக்கிச் செயற்பட்டு வரும் வேளையில், நம் மதத்தவர்கள் இப்பணியில் அக்கறை காட்டாதிருப்பது மிகவும் ஆபத்தானது. இந்து சமய விவகாரத்துக்கென அமைச்சு உருவாகி இருபது வருடங்களைக் கடந்தும் இத்தகைய முயற்சிகளில் அவ்வமைச்சு அக்கறை காட்டாதிருப்பது கவலைக்குரியது. இந்து சமயத்தின் பேரில் எழுந்த நிறுவனங்கள் இதுவரை சைவப் பிரசாரகர் பயிற்சி பற்றி தக்க முயற்சி காணாதது பெருந்தவறாகும். கிளிநொச்சியில் குருகுலம் அமைத்த பெரியார், இந்துப் போதகர் பயிற்சித் திட்டமொன்றை ஆரம்பித்தார். இந்திய ராணுவத்தின் வருகை மற்றும் கெடுபிடியால் குருகுலப் பிதாமகரின் நோக்கம் நிறைவேறவில்லை.

அதனால் அங்கு ஆரம்பிக்கப்பட்ட இந்துப் போதகர் பயிற்சி நெறி முற்றுப் பெற்றது. சைவ சமயத்தின் பேரால் வெறும் சடங்குகட்கும், விழாக்களுக்கும் பெருநிதியைச் செலவு செய்து உரிய பயனை அடையாது தவிக்கும் யாம் எதிர்காலத்தில் மேற்குறித்த திட்டத்தை உருவாக்க முயல வேண்டும்.

சைவ சமயப் பிரசாரகர் பயிற்சிக் கல்லூரி சர்வகலாசாலையின் தரத்திற் கமைய உருவாக்கப்பட வேண்டும். இந்நெறியைக் கற்க வரும் மாண வரிடையே சேவை மனப்பான்மையும் உயர்ந்த குறிக்கோளும் பிரதான தகுதிகளாக அமைய வேண்டும். பிரசாரகர்களைச் சமூகம் மதிக்கும் தன்மை அவர்களின் செயல்களால் உருவாக வேண்டும். இவற்றைக் கருத்திற் கொண்டே சைவப் பிரசாரகர் பயிற்சிக் கல்லூரி உருவாக்கப்பட வேண்டும். சைவப் பிரசாரகர் பயிற்சிக் கல்லூரியில் கற்கும் மாணவர்க்கான விடுதிச்சாலை, வெளிக்களப் பயிற்சியில் பங்கு பற்றுதற்கான போக்குவரத்து வசதி, கற்கை நெறிக்கால வேதனம், தக்க விரிவுரையாளர்கள், இதர வசதிகள் அனைத்தும் உள்ளடக்கிய நிறுவனமாக இக்கல்லூரி அமைதல் வேண்டும். இதனை சைவ நிறுவனங்கள், சைவத்தின் பெயரால் இயங்கும் அமைச்சு, முதன்மை யான ஆலய நிர்வாகங்கள் விரைவில் முயற்சி செய்யுமேயானால் மிகுந்த பயனாக அமையும்.

**மெதுவாகப்பேசு - அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும்.**
**உண்மையே சொல் - அது உன் வார்த்தைகளைப் பாதுகாக்கும்.**
**நல்ல எண்ணத்தோடு இரு - அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.**
**கலந்து யோசனை செய் - அது உன் சிந்தனையை வளமாக்கும்.**

*- வள்ளலார்-*

# இலங்கையில் இந்து சமயம் சார் பிரபந்தங்கள்

வாகீசகலாநிதி,
கனகசபாபதி நாகேஸ்வரன்.
(முதுநிலை விரிவுரையாளர்)

## 1.1 பிரபந்த இலக்கியம்-அறிமுகம்

தமிழிலக்கிய வரலாறு என்பது பரந்த பொருளிலே தமிழ் நூல்களின் வரலாற்றையும் உள்ளடக்கும் ஓர் ஆய்வுத்துறையாகும். தமிழிலே சிற்றிலக்கிய வகைகள் எனச் சுட்டப்படும் இலக்கிய வடிவங்கள் 'பிரபந்தங்கள்' எனவும் அழைக்கப் படலாயின. பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை என்னும் நூல்களிலே பிரபந்த இலக்கிய வகைகளினது இலக் கணங்கள் கூறப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என்று கூறப் பட்டுள்ளது.[1] அடியார்க்கு நல்லார் 'பிரபந்தம்' என்னுஞ் சொல்லை ஆண்டுள்ளார்.[2] 'பிரபந்த உரு இசை யுரு' என்பது அவரது உரை. தெய்வங் களிடம் முறையீடு என்ற முறையிலே தெய்வங்களைப் பண்புருவங்களாகப் பாடுவதுங் காணப்படுகின்றது. மாலை, தூது, பஞ்சகம் போன்ற சிறு பிரபந்த யாப்பு முறையிற் பாடுவதும் இசைப்பா வடிவ முறையிற் பாடப்பெறுவதும் இந்தப் பக்திப் பாடல்களின் படைப்பு முறையாகும்.[3] 'பிரபந்தம்' என்பது வடசொல் இதன் பொருள், தொடர்ந்த பொருள் பற்றிய இலக்கியம் என்பது; நன்கு ஆக்கப்பட்டது என்றுமாம்.[4] 'பிரபந்தம்' என்பது அடிவரையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது[5] என்பார். அடியார்க்கு நல்லார் என்பது மு.அருணாசலம் அவர்கள் கொள்ளும் கருத்தாகும். செய்யுள் நூல்களைப் 'பிரபந்தம்' என்னும் பெயராற் 'பிரபந்த மரபியல்' என்னும் நூல் முதன் முதற் குறிப்பிடுகின்றது.

சிவந்தெழுந்த பல்லவராயன் என்ற ஒரு சிற்றூர்த் தலைவன் மீது மிதிலைப் பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் பாடிய உலாவிற் 'பிரபந்தம்' என்ற சொல் எடுத்தாளப் படுகின்றது.

**'ஆலப்ரவஞ்சம் போலாகிய தொண்ணூற்றாறு**
**கோலப்ரபந்தங்கள் கொண்டபிரான்''**

*(வரிகள் 103-104)*

'பிரபந்தம்' என்ற சொற் பெயரையும், அவை தொண்ணூற்றாறு என்ற விளக்கத்தையும் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலெழுந்த சதுரகராதி விளக்கியுரைக்கின்றது.

"வைணவ ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுதி நாலாயிரத் திவ்ய பிரபந்தம் எனப்படும். பெரு

வழக்காகப் பயன்படுத்தப்பட்டுச் சமூகத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ள திவ்யபிரபந்தம் என்ற பாசுரத்தாற் 'பிரபந்தம்' என்ற சொல் பெற்றுள்ள முதன்மை நிலை ஆராயப்பட வேண்டியதவசியமாகின்றது. வடமொழியில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச் செய்த தேசிகப்ரபந்தம் என்னும் நூல், ஸ்ரீ அநந்நாசாரிய ஸ்வாமிகள் இயற்றிய ப்ரபந்த ஞானாம்ருதம் என்பன ஆழ்வார்கள் திவ்ய சரித்திர ஆய்வினுக்கு மூல நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. ஆழ்வார்கள் காலத்தைக் கணிப்பிட்ட கலாநிதி எஸ்.கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பி.டி.ஸ்ரீநிவாஸ ஐயங்கார், டி.ஏ.சோமுநாதராவ், ராவ் சாஹிப் மு.இராகவையங்கார் முதலிய ஆராய்ச்சி நிபுணர்கள், அது கி.பி ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டிற்குட்பட்ட ஐந்நூறு வருஷங்கள் என்கின்றனர்.[6]

இலக்கிய, யாப்பியல் அடிப்படை காரணமாக ஏற்பட்ட ஒரு வழக்கே 'பிரபந்தம்' எனும் கருத்தும் நிலவுகிறது. 'செய்யுள் வகை' பற்றிய வரை யறையினால் ஏற்பட்டதொரு தோற்றமே' 'பிரபந்தம்' என்ற கருத்தும் மனங் கொள்ளத்தக்கது.

"நாலாயிரத்திவ்ய பிரபந்தத்திற்கு 'பிரபந்தம்' என்ற பெயர் கொடுக்கப் பட்டமைக்கு அதன் கண் காணப்பெறும் அந்தாதி, தாண்டகம், திருப்பள்ளி யெழுச்சி, நூற்றந்தாதி, மடல், மாலை, விருத்தம் போன்ற பிரபந்தங்களும் வத்தியார், கோத்தும்பி, சப்பாணி, தாலாட்டு, திருவெழுகூற்றிருக்கை, திருப்பாவை ஆகிய இலக்கிய வகைகளும் காரணமாகலாம்".[7]

'தமிழிலுள்ள நூல்களை யொருவாறு வகைப்படுத்தி யெண்ணித் தொண்ணூற்றாறென வரையறை செய்திருக்கிறார்கள்' என்று கூறுகிறது கலைக்களஞ்சியம். சிற்றிலக்கியங் களையும், பிரபந்தங்களையும் இடைக் காலத்திலே தோன்றியனவாக ஒரு சாராரும்[8] பிற்காலத்திலே தோன்றி யவை யெனப் பிறிதொரு சாராரும்[9] கூறுவர். தமிழிலுள்ள சிற்றிலக்கி யங்களைத் தொண்ணூற்றாறு என்னும் வரையறைக்கு உட்படுத்திக் கூறுவது மிகப் பிற்பட்ட காலத்திலே தோன்றிய வழக்காகும். சிற்றிலக்கியங்கள் அளவிறந்தனவாகப் பல்கியிருந்த போதிலும் பொருட் சிறப்பால் புதுமை பெற்ற ஒருசில சிற்றி லக்கியங்களே பெரும்பான்மையாக வழக்கில் இருந்து வருகின்றன. மேலும், 'ப்ரபந்தம்' என்ற வடசொல்லுக்கு நன்கு கட்டப்பட்ட நூல் என்பது பொருள் என்றும் கூறுவர் ஆய்வாளர் ந.வீ.செயராமன்.[10]

அறிஞர் மு.சண்முகம்பிள்ளை, " 'பிரபந்தம்' " என்னும் வடசொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருளாகும். செய்யுள், யாப்பு என்னும் சொற்களின் பொருளை ஒத்த அமைப்பை உடையது இச்சொல். எனவே நன்கு அமைக்கப்பட்ட செய்யுள் நூல் அனைத்தையும் இது குறிக்கும். நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், ஆர்த்திப்

பிரபந்தம், அட்டப் பிரபந்தம், தேசிகப் பிரபந்தம் என்னும் நூல் வழக்குகளைக் கொண்டு இவ்வடமொழிச் சொல்லை வழக்கிற்குக் கொண்டு வருவதற்குக் காரணமாய் அமைந்தவர்கள் 'வைணவ சமயத்தார்'' என்று கொள்ளலாம்.[11] எனக் கருதுகிறார். சைவ சமயத்தில் 11ஆம் திருமுறையையும், பிரபந்த மாலை, என வழங்குவர். எனவே பிரபந்தப் பெயரும் சமயப் பொதுமை யுடன் விளங்குகிறது.

சிறுநூல்கள், சிற்றிலக்கியங்கள், பிரபந்தங்கள் குறித்த ஆய்வாளர்களது கருத்துக்கள் வேறுபாடுகளைக் கொண்டமைகின்றன. பிரபந்தங்கள் என்ற வரையறைக்குள் புராணங்கள், தல புராணங்கள், காவியங்கள் என்பனவும் அடங்குகின்றனவா? என்ற ஆய்வு இன்னும் முடிந்தபாடில்லை. குறிப்பாக, புராணங்கள் குறித்த புதிய வரவுகள் காலத்துக்குக் காலம் தோன்றிய வண்ணமேயுள்ளன. சமயப் பொருள் மரபையும், தனி மனிதப் புகழ்ச்சியையும் கொண்டமையும் பிரபந்தங்கள் பலவும் தோற்றம் பெற் றுள்ளன. எனினும் கலாநிதி க.செ.நடராசா, மகாவித்துவான் எவ்.எக்.ஸி.நடராசா, பேராசிரியர்கள் சி.தில்லைநாதன், சதாசிவம், க.கைலாசநாதக்குருக்கள், கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், ஆ.வேலுப்பிள்ளை, டாக்டர் மா.இராசமாணிக்கனார், கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, மு.அருணாசலம், ச.வே.சுப்பிரமணியன், சி.பாலசுப்பிரமணியன், ந.வி.செயராமன் போன்றோர் காவியங்கள், புராணங்கள், தல புராணங்கள் என்பன 'பிரபந்தங்கள்' எனும் வரையறைக்குள் பெரும்பாலும் வாரா, என்பதனையே அழுத்தியுரைத் துள்ளனர். கலாநிதி க.செ.நடராஜாவின் கலாநிதிப்பட்ட ஆய்வோடு ஈழத்துப் பிரபந்தங்கள் குறித்ததொரு தீர்க்கமான முடிவினை அறிவிக்கும் ஆய்வாக அமைந்துள்ளமையைக் கருத்திலெடுக்க வேண்டியுள்ளது. பிரபந்த வகையுள் இடம்பெற வேண்டிய இலக்கிய வடிவங்கள் எவை என்னும் கருத்தில் மகாவித்துவான் வெ.எக்ஸ்.சி.நடராசா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''பிரபந்த இலக்கணங்கூறும் பாட்டியல் நூல்கள் காவிய இலக்கணத்தையும் உள்ளடக்கிக் கூறுவன. எனவே பெருங் காப்பியம், காப்பியம் என்பனவும் பாட்டிய லாசிரியர்களாற் பிரபந்தங்களாகக் கருதப்பட்டன என்பதை அறியலாம். இது முற்கால வழக்கு. தற்காலத்தில் பெருங்காப்பியம், காப்பியம், புராணம் ஆகியன ஒழிந்த ஏனைச் செய்யுள் இலக்கியங்களையே 'பிரபந்தம்' என்று வழங்குவர்.[12]

'சிறுநூல்களால் அறியப்படுவன' என உப தலைப்பீட்டு டாக்டர் மா.இராசமாணிக்கனார் பின்வருமாறு எழுதியுள்ளமை நமது கவனத் திற்குரியதாகிறது.

''வடமொழியாளர் சிறுநூல் களைப் பிரபந்தங்கள் என்பர். அவை 96வகை என்பர். அம்மானை, உலா, கலம்பகம், பிள்ளைத் தமிழ், அந்தாதி, இரட்டை மணிமாலை, நான்மணிமாலை,

பன்மணி மாலை, பரணி, மடல் முதலியன சிறுநூல்களிற் சில வகைகளாகும். உலா, பரணி, பிள்ளைத் தமிழ், கலம்பகம் என்பன இறைவனைப் பற்றியும் அரசனைப் பற்றியும் பெருமக்களைப் பற்றியும் எழுவன. மற்றவை சமயத் தொடர் பாலும் பல்வேறு பொருள் பற்றியும் தோன்றுபவை. இவற்றைப் படிப்பதால் அவ்வக்கால அரசர்களைப் பற்றிய விவரங்கள் (போர்ச்செயல்கள், உடைச் சிறப்பு, அணிச்சிறப்பு, கொடைச்சிறப்பு, பிற பண்புகள் முதலிய பலவற்றை, அறியலாம். இவை வரலாற்றிற்குத் துணை செய்யும். பல தலங்களைப் பற்றிய விவரங்களை அறியலாம். அடியார்களைப் பற்றிய செய்திகள், பொது மக்களைப் பற்றிய நூல்கள் மதங்கியார், பிச்சியார், கொற்றியார், காளி மகன், மறவர் போன்ற மக்களைப் பற்றிய விவரங்கள் இன எனவும் ஓரளவு அறியலாம். உலா நூல்களில் ஏழு பருவப் பெண்களைப் பற்றிய குணம், குறி, சுபங்கள் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு சிறு நூலிலும் நாம் அறியத்தகும் செய்திகள் பலவுண்டு. இச்சிறு நூல்களும் அரசியல், வரலாறு, சமுதாய வரலாறு, சமய வரலாறு, மக்களுடைய பழக்கவழக்கங்கள், நாகரிகம், பண்பாடு முதலியவற்றை அறியத் தம்மால் இயன்ற அளவு துணை செய்கின்றன."13

பதினாறாம் நூற்றாண்டிலே தோன்றிய பிரபந்த மரபியல், "பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறெனும் தொகையதான" என்னும் நூற்பாவால் பிரபந்த வரையறை கூறும். பிரபந்த எண்ணிக் கையிலும் நூல்கள் மாறுபடுகின்றன எனக் கூறும் டாக்டர். இ.சுந்தரமூர்த்தி, வீரமாமுனிவர் (1733) தொகுத்த சதுரகராதியிலே 96 பிரபந்தங்களின் பெயர்கள் சுட்டப்படுகின்றன எனக் குறிப்பிடுகிறார். அறிஞர்கள் தங்கள் நூல்களில் தொகுத்துள்ள பிரபந்த எண்ணிக்கை களும் ஒன்றுக்கொன்று மாறுபடுவது இங்கு எண்ணத்தக்கது எனினும் பிரபந்தங்கள் 96 என்னும் வழக்கு நிலைபெற்று விட்டது எனக் குறிப்பிடுகிறார்.

"....அடியார்க்கு நல்லார் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டில் கூட பிரபந்தம் என்ற சொல்லுக்கு இன்று நாம் கருதுகிற ஓர் இலக்கியப்பிரிவு - சிற்றிலக்-கியம் என்ற பொருள் அமையவில்லை என்பது தெரிகிறது"14

## 1.2 சைவக் கோவிலைப் பாடும் ஈழத்திலக்கியம்

தமிழ்க் கவிதையிற் சைவக் கோவில்களைப் பாடும் மரபு ஈழத்து இலக்கிய வரலாற்றிலே எப்போது ஆரம்பமாகியது என்று நோக்குவது பொருந்துவதாகும். முதன் முதலில் தோன்றிய சைவக் கோவிலைப் பாடும் ஈழத்துச் செய்யுளாகப் பதவியாவிற் கிடைத்த செய்யுளே யமைகின்றது. இக்கருத்தினைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை,

"சைவக் கோவிலைப் பாடும் ஈழத்து இலக்கியங்களுள் இன்று கிடைக்கும் ஈழத்தவராற் பாடப்பட்ட மிகத் தொன்மையான செய்யுளாகப் பதவியாச் செய்யுள் காணப்படுகிறது"[15]

எனக் கூறுகின்றார். தலப் பெருமைகளை எடுத்துக் கூறும் செய்யுள் மரபின் தோற்றம் பற்றிய இக்கருத்துக்கள் ஈழத்துக் கவிதை மரபின் தோற்றத்தினையும் வளர்ச்சி யையும் பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு உதவுவனவாம்.

ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு என்னும் நூலிலே ஈழத்து இலக்கிய வரலாற்றுக் கட்டங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

"போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலப் பிரிவிலே போதாகிய இலக்கிய வடிவங்கள் ஆங்கிலேயர் காலப் பிரிவிலே மலர்ந்தனவென்லாம். பிள்ளைத்தமிழ், துதி, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டை மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் முதலிய பிரபந்த வகைகளும், புராணங்களும், ஆங்கிலேயர் காலப் பிரிவிலே பெருமளவிற்றோன்றின.[16] என அந்நூல் கூறுகின்றது.

"ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்" என்னும் ஆய்வுக் கட்டுரை யொன்றிலே பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி பின்வருமாறு எழுதுகிறார்.

"பிரபந்தங்களையே பிரதான இலக்கிய வடிவங்களாகவும், தொடர் நிலைச் செய்யுளை அளவு கொண்டு அகலக் கவியாகவும் பார்த்த ஓர் இலக்கியம் கோட்பாட்டின் பின்னனியிலே தோன்றியனவே ஈழத்தின் முதற் கட்டக் கவிதை இலக்கியங்கள்''[17] என்று குறிப்பிடுகிறார்.

பதினான்காம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு இறுதி வரையான ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியினை ஆய்வு செய்துள்ள கலாநிதி க.செ.நடராசா தமது நூலின் இரண்டாம் இயலையும், மூன்றாம் இயலையும் முறையே 'ஈழத்து அகப் பொருள் இலக்கிய வளர்ச்சி', 'புறப்பொருள் இலக்கிய வளர்ச்சி' எனப் பிரித்து, பிரபந்த இலக்கிய வளர்ச்சியை எடுத்து விளக்கியுள்ளார்.

செய்யுள் வடிவிலமைந்த நெடும் பாடல்களை மட்டுமே 'பிரபந்தம்' என்ற வழக்கிலே இன்று பெரும்பான்மையாக அறிஞர் கொள்வர். ஆனால் யாழ்ப் பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுதிய கண்டனங்களும், கட்டுரைகளும், வாதப் பிரதி வாதங்களும் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்று 'நாவலர் பிரபந்தத் திரட்டு" என்ற பெயரிலே 1951ஆம் ஆண்டிலே வெளியிடப் பட்டுள்ளது. நாவலர் சமூக, அரசியற் பிரச்சனைகளில் ஈடுபட்டுக் காலந்தோறும் வெளியிட்ட கட்டுரைகள், கண்டனங்கள் மிகப்பல. அவற்றுட் சில நாவலர் பிரபந்தத்

திரட்டு என்ற பெயரில் வந்திருக் கின்றன.[18]

"நாவலர் இலக்கிய நோக்கும் பணியும்" என்ற கட்டுரை ஒன்றிலே சபாபதி நாவலரைப் பற்றி எழுதிய பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி கைலாசபதி, சொல்லணி, பொருளணி குழுமி விளங்கும் நல்ல தமிழ்ப் பிரபந்தங்கள்; கொழி தமிழ்க் கனிகள்"[19] என்று சபாபதி நாவலரது வரிகளையே எடுத்துக் காட்டித் தமிழ்ப் பிரபந்தங்களது சிறப்பினை உணர்த்தியுள்ளார். பிறிதொரு கட்டுரையிலே அதே தொடர்பில்,

''......சபாபதி நாவலர் வெளியிட்டனவாகச் சுமார் இருபது நூல்கள் உள்ளன. அவற்றுள் மாவையந்தாதி, நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம் என்பன மாவையையும், நல்லையையும் பற்றிய பிரபந்தங்களாகும்."[20]

புலோலி சதாவதானி நா.கதிரவேற் பிள்ளை, "போலியருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டன கண்ட மாருதம்"[21] என்றும் அழைக்கப் பட்டார். இராமலிங்க வள்ளலாரது அருட்பாவினை மறுத்துரைத்த கண்டனங்களாற் பெறப்பட்ட பட்டமாகவும் இது அமை கின்றது.

முதன் முதலாகக் குறவஞ்சி, பள்ளு முதலிய பிரபந்தங்களிலேதான் கீர்த்தனை முறையிலமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. இவ்விரண்டினுள்ளும் முற்பட்டது பள்ளு என்ற பிரபந்த வகையாகும் என்பது பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளையின் கருத்தாகும். எவ்வாறாயினும் சிந்து, பள்ளு, குறவஞ்சி முதலிய பிரபந்த வகைகள் தமிழ்க் கீர்த்தனையின் ஆரம்பக் கட்டத்தினை அறிவதற்கு நன்கு துணை புரிவன. மேலும் இப்பிரபந்த வகைகள் பாமர மக்களின் இலக்கிய வடிவங்களாகவுந் திகழ்வன. எனவே இவற்றையொட்டி எழுந்த அல்லது இவற்றுடன் தொடர்புள்ள கீர்த்தனையின் அடித் தளத்திலே மக்கள் இலக்கியப் பண்பும் நிலவுவது குறிப்பிடற்பாலது. இது பின்னர் சாஸ்திரிய மயமாக்கப் பட்டிருக்கலாம். மேலும் தமிழ்க் கீர்த்தனைகளின் மொழிநடை பொதுவாக எளிமையாக உள்ளது என்பதும் மனங்கொள்ளற் பாலது.

"கதிரைமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, குருநாதசுவாமி கிள்ளை விடுதூது, வெருகல் சித்திரவேலாயுதர் காதல், கல்வளை யந்தாதி முதலிய பிரபந்தங்கள் ஈழத்துத் தலங்களையும், தலமுறை தெய்வங்களையும் பாடலாயின. தமிழகத்தோடு ஈழ நாட்டினர் கொண்ட தொடர்பாலும் தமிழகத்திலே உள்ள தலங்களைத் தரிசித்தமையும் இக்காலப் பிரிவிலே புலவர்கள் சிலர் தமிழகத்துக் கோவில்களையும் பாடியுள்ளனர். மறைசையந்தாதி, புலியூர்யமகவந்தாதி முதலியன காண்க. திருக்கரசைப் புராணம் முதலிய தலபுராணங்களோடு விரத மகிமைகளை எடுத்துரைக்கும்

புராணங்களும் இக்காலத்திலெழுந்தன. (1620-1600) மக்களிடம் சமய பக்தியை வளர்க்க இத்தகைய புராணங்கள் உதவின. சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் முதலியன காண்க. சீமந்தனி புராணம், கந்தசஷ்டி புராணம் முதலியன பின்னெழுவதற்கு வரதபண்டிதர் முன்னோடியாக விளங்கினார்"22

"——கோவை, தூது, அந்தாதி முதலிய பிரபந்த வகைகளில் புலவரின் வித்துவத் தன்மையைக் கண்டால் இத்தகைய இலக்கிய வடிவங்களில் அவர்களின் 'எளிமை'யையும் தமிழின் இனிமை'யையுங் காணலாம்."23

பொது மக்களைக் கவரும் எளிமைப் பண்பு இருவகையாகப் பிரபந்தங்களிலே இடம் பெறலாயிற்று. எளிமையான சொல்லாட்சி ஒன்று, இரண்டாவது நாடகப்பாங்கும் இசை வளமும் என்னும் அம்சமெனலாம். இது குறித்து மகாவித்துவான் F.X.C.நடராசாவின் கருத்து வருமாறு,

"வடமொழி, சைவரின் சமயமொழியாக அமைந்திருந்தது மட்டுமன்றி வடமொழிக் கருத்துக்களும் நூல்களும் பேணப்பட்டமையும் வடமொழிச் சொற்களும் தமிழில் பெருமளவில் இடம்பெறத் தொடங்குவதற்கு காரணமாயின. 1620-1800 காலப் பகுதியிலே குறிப்பிடத்தக்க பிறிதொரு பண்பு நாடக வளர்ச்சியாகும். பள்ளு, அம்மானை முதலிய இலக்கிய வடிவங்கள் சிலவற்றில் நாடகப் பண்பு ஏனைய இலக்கிய வடிவங்களிலும் பார்க்கச் சிறப்பாக அமைந்திருந்த போதிலும் அவற்றை முற்றாக நாடகங்கள் என்று கூறுவதற்கில்லை"24

இலங்கையிலே இந்து சமயம் சார் பிரபந்தங்கள் எழுந்த பின்னனி பற்றியறிவது சாலப் பொருந்துவதாகும். அந்நிய மதங்களின் தாக்கங்கள் காரணமாகவும், செல்வாக்குக் காரண மாகவும் இந்து மதம் சார் பிரபந்தங்கள் முகிழ்ந்து கிழம்பின. குறிப்பாகக் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு இந்து மதம் சார் இலக்கிய வடிவங்களின் பேரெழுச்சிக்கு உந்து சக்தியாயிற்று. இப்பண்புகள் குறித்து F.X.C. நடராசா முன் வைக்கும் கருத்துக்கள் பிரதானமானவையெனலாம்.

"-------போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப் பிரிவினிலே போதாகிய இலக்கிய வடிவங்கள் ஆங்கிலேயர் காலப் பிரிவிலே மலர்ந்தன எனலாம். பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் முதலிய பிரபந்தங்களும் புராணங்களும் ஆங்கிலேயர் காலப் பிரிவிலே பெருமளவிற்றோன்றின. இசைத் தமிழும் நாடகத் தமிழும் இக்காலப் பிரிவிலே சிறப்பாகப் பேணப்பட்டன. வண்ணார் பண்ணை சி.விநாயகமூர்த்திச்செட்டியார் பாடிய கதிரையாத்திரை விளக்கம் நொண்டிச் சிந்தாற் பாடப்பட்டதாகும்.25

ஆங்கிலேயர் ஆட்சிக்காலம், இலங்கையின் பிரபந்த இலக்கிய வடிவத்துக்கும், சமயச் சார்பான முனைப்பான போக்கிற்கும் இடங் கொடுத்து சைவத்தை பல வழிகளிலும் பேணுவதற்கு வழி வகுத்தது. இக்கால கட்டத்து இலக்கியச் செல் நெறி பற்றிய F.X.C.நடராசாவின் கருத்து வருமாறு,

"ஆங்கிலேயர் காலப்பகுதியில் சமயமே தனிப்பொருளாக ஆட்சி செலுத்தியதென்று கூறல் மிகையாகாது. மேலைத்தேயங்களிற் செல்வாக்குப் பெற்ற சமயங்கள் ஈழத்திலும் பெற முயன்றதால் ஏற்பட்ட விழிப்பும், தமிழகத்தின் இலக்கிய நெறியின் தாக்கமும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்து இலக்கியப் பொருளைச் சமயப் பொருளாகக் கொள்ள வழிவகுத்தன. ஆங்கிலேயர் காலப் பிரிவிலே சமயத்தின் தாக்கம் இலக்கியத்தில் முன்னைய காலப் பிரிவிலும் அதிகமாகப் படிந்திருந்தது. கிறிஸ்தவர்கள் இக்காலப் பிரிவிலே ஈழத்தின் பழைய சமயங்களை வன்மையாக எதிர்க்க முற்பட்டனர். அவர்களின் எதிர்ப்பு ஆறுமுகநாவலர், சங்கர பண்டிதர், சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர் முதலியவர்களை சைவத்தைப் பல வழிகளிலும் பேணத் தூண்டிற்று.

கதிர்காம புராணம், திரிகோணாசல புராணம், நகுலமலைக் குறவஞ்சி, அடைக்கலக்கோவை, திருகோணமலையந்தாதி, நெல்லியவோடையம்பாள் பிள்ளைக்கவி, நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளை விடுதூது, வல்வைக் கலித்துறை, கதிரேசர் பதிகம், சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், நல்லை வெண்பா, நீராவிக் கலிவெண்பா, நல்லைக் கந்தரகவல் முதலியவை தல சம்பந்தமான இலக்கிய வடிவங்களாகும். ஈழத்துத் தலங்கள் மட்டுமன்றித் தமிழ் நாட்டின் தலங்களும் ஈழத்துப் புலவர்களால் ஆங்கிலேயர் காலத்திற் போற்றப் பட்டுள்ளன. இளசைப் புராணம், சிதம்பர சபாநாத புராணம், திருக் கழிப்பாலைப் புராணம், புலியூர்ப் புராணம், நெல்லை வேலவருலா, திருவிடை மருதூர்ப் பதிற்றுப் பத்தந் தாதி, மறைசைக் கலம்பகம், சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக்கோவை, திருத்தில்லைப் பல்சந்த மாலை முதலியன காண்க.

.ஈப்போ தண்ணீர் மலை வடிவேலர் மும்மணிக்கோவை மலாயாவிற் சிறப்பிடம் வகிக்கும் தல சம்பந்தமான பிரபந்தமாகும். தலங்களைப் பாடுவ தோடமையாது விரதங்களையும் முன்னைய காலத்திற் போன்று, இலக்கியப் பொருளாகக் கொண்டு ஆங்கிலேயர் காலத்திற் பாடியுள்ளனர். சீமந்தனி புராணம் சோமவாரத்தின் மகிமையைக் கூறுவது, கந்தசட்டி புராணம் கந்தசட்டி விரதத்தின் மாண்பினை உரைப்பது.[26]

**ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி** (19ஆம் நூற்றாண்டு வரை) எனும் நூலிலே (பக். 85 இல்) கலாநிதி

சி.சிவலிங்கராசா் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை இத்தொடர்பில் அவதானித்தற்குரியது.

"..... ஒல்லாந்தர் காலத்தெழுந்த பிரபந்தங்களாக கண்ணியவளை குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது, வெருகல் சித்திரவேலாயுதர் காதல், கல்வளை யந்தாதி, மறைசையந்தாதி, புலியூரந்தாதி இணுவில் சிவகாமி யம்மை பதிகம், வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி ஊஞ்சல் என்பன தலச்சார்புடைய இலக்கியங்கள். இக் காலத்தில் வாழ்ந்த ஈழத்துப் புலவர்கள் தமிழகத்துத் தலங்கள் மீதும் பிரபந்தங்கள் பாடியுள்ளனர்.[27]

## 1.3 பறாளை விநாயகர் பள்ளு

இலக்கிய கலாநிதி பண்டிதமணி, சி.கணபதிப்பிள்ளை, இரசிகமணி கனக செந்திநாதன், அறிஞர் க.சி.குலரத்தினம், வித்துவான் க.சொக்கலிங்கம், பேராசியர்கள் ஆ.சதாசிவம், பொ.பூலோகசிங்கம், வி.செல்வநாயகம், க.கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன், சி.தில்லைநாதன், அ.சண்முகதாஸ், கா.சுப்பிரமணியன், க.பாலசுந்தரம், சி.மௌனகுரு, தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, திருமதி கலையரசி சின்னையா, கலாநிதி துரை-மனோகரன் போன்றோர் பறாளை விநாயகர் பள்ளுக் குறித்து அறிமுகஞ் செய்துள்ளனர். 'இலக்கிய வழி' என்னும் நூலிலே பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை விரிவாகவே எழுதியுள்ளார். பண்டித மணியின் மாணவராகிய அறிஞர் க.சி.குலரத்தினம் பறாளை விநாயகர் பள்ளுப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"........ சின்னத்தம்பிப்புலவர் பண்ணைத் தொழிலாளனின் மனைவியர் இருவரின் வாயில் நாட்டுப்பற்றை வெளிக்கொண்டு வரும்போது ஈழ மண்டலத்துப் பெண் எங்கள் நாட்டைப் பற்றி உருக்கமாகப் பாடுகிறாள். அவற்றைக் கேட்கும் போது நாட்டுப்பற்று நம்மை அசைக்கிறது. நாம் அசைந்து ஆடுகிறோம். ஈழ மண்டலத்தின் இணையிலா இயற்கை வளத்தைச் சின்னத்தம்பிப் புலவர் வரிசையறிந்து பாடுகின்றார். நீர்வளம், நிலவளம், மனைவளம், வனவளம், கடல்வளம் எல்லாம் பாடுபவர் அப்பால் கல்வி வளம், சொல் வளம், கொடை வளம், பக்தி வளம் என்பவற்றையும் பாடுகின்றார்.

ஈழ மண்டலத்துக்கு இயல்பாய் அமைந்த பக்திப் பாரம்பரியம் ஒன்றுண்டு. இராவணனும் மண்டோ தரியும் கொண்ட பக்தி வளம் திருமுறை களிலும் போற்றப் பெற்றுள்ளன. ஈழ நாட்டவரின் பக்தி வெள்ளம் சிங்கள மக்களையும் நன்றாக நனைத் திருந்தது.

"பறாளை பழையவூர் அங்கே கோயில் கொண்டருளியுள்ள அற்புத மூர்த்தியாய் விநாயகப் பெருமானின் திருக்கோயிலைப் பறங்கியர் இடிக்க வந்தபோது பெரிய காகம் பறந்து வந்து தலைவனின் மூக்கைக் கொத்தியது. இடிப்பு வேலை தடைப்பட்டது."[28]

## 1.4 வரதபண்டிதரின் சிவராத்திரி புராணம்

இருவர் சிவராத்திரி புராணத்தைப் பாடியுள்ளனர் என்ற தகவலைத் தரும் அறிஞர் க.சி.குலரத்தினம்,

"...... வரதபண்டிதர் சிவராத்திரி புராணஞ் செய்த பின் நெல்லைநாதர் என்னும் புலவர் ஒருவரும் சிவராத்திரி புராணஞ் செய்துள்ளார். நெல்லைநாதப் புலவரின் புராணத்தை வட்டுக்கோட்டை நாகேசு ஐயர் சிவசுப்பிரமணியஐயர் என்பார் திருத்திக் கொடுப்ப அவ்வூரவரான வேலாயுதர் சதாசிவம்பிள்ளை என்பார் புரசை சபாபதி முதலியாரின் சிறப்புப் பாயிரத்தோடு 1881ஆம் ஆண்டில் சென்னை ஸ்கொட்டிஷ் யந்திர சாலையில் பதிப்பித்துள்ளார். ஐந்து அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் 302 திருவிருத்தங்களைக் கொண்டது. 29 என்று குறிப்பிட்டுள்ளார்."

இலங்கையிலே இந்துமதம் சார் பிரபந்தங்கள் சிவன், திருமால், அம்பாள், விநாயகர், முருகன், வைரவர் சுவாமி, காளி, வீரபத்திரர் போன்ற தெய்வங்கள் மீது பாடப்பட்டுள்ளன. 'மாரியம்மன் தாலாட்டு' இன்றும் மிகப் பிரபலமானதொரு சக்திப் பிரபந்தமாகும். 'அபிராமி மான்மியம்' என்னும் நூல் உரைநடையிலே அபிராமி அந்தாதிப் பாடல்களுக்கான நயவுரையைக் கொண்டமைந்த நூலாக விளங்குகின்றது. சைவப்புலவர் அநு.வை.நாகராஜன் 'அபிராமி மான்மியம் என்னும் நூலை எழுதியுள்ளார். சிவத்தல மகிமைகள் கூறும் புராணங்கள் பல்வற்றையும் தமது நூலிலே வரிசைப்படுத்தியுள்ளார் வித்துவான் F.X.C.நடராசா.

**தட்ஷிண கைலாச புராணம்**

**திரிகோணாசல புராணம்**
ம.முத்துக்குமாருப் புலவர்.

**நகுலாசல புராணம்**
மாதகல் சு.ஏரம்பையர்

**நகுலகிரிப் புராணம்**
கா.அப்பாசாமி ஐயர்

**திருக்கரசைப் புராணம்**

**கதிர்காம புராணம்**
வதிரி.சி.நாகலிங்கப்பிள்ளை

**திருக்கேதீச்சரப் புராணம்**
பண்டிதர் ச.இராமச்சந்திரன்

**நல்லூர் கைலாசநாதப் புராணம்**
வட்டு.ச.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்

**சிதம்பரசபாநாத புராணம்**
சபாபதி நாவலர்

**திருக்கழிப்பாலைப் புராணம்**
நீர்வேலி.ச.சிவப்பிரகாச பண்டிதர்

**புலியூர்ப் புராணம்**
பன்னாலை.க.சிவானந்தையர்

**தென்கோயிற் புராணம்**
வட்டு.நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்

**வியாக்கிரபாத புராணம்**
அளவெட்டி.வைத்தியநாத தம்பிரான்

**ஏகாதசிப் புராணம்**
சுன்னாகம்.அ.வரதபண்டிதர்

**கந்தசஷ்டிப் புராணம்**
வட்டு.நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர்

**திருநெல்வாயிற் புராணம்**
வதிரி சி.நாகலிகம்பிள்ளை

என இப்புராண வரிசை உள்ளமை மனங் கொள்ளற்பாலது.

## 1.5 சிவமணி மாலை

1927ஆம் ஆண்டு சிவமணி மாலை என்னும் பிரபந்தத்தைத் தெல்லிப்பழைப் பாவலரும், மகாஜனக் கல்லூரியின் நிறுவகருமான தெ.அ.துரை யப்பாபிள்ளை இயற்றினார். ஆங்கில அறிவும் சுதேச பண்பாட்டுப் பேணலும், இந்து சமயப் பற்றும், கவித்துவ மேதாவிலாசமுங் கூடிய ஆளுமைகள் பலவற்றையுங் கொண்ட பாவலர் துரையப்பாபிள்ளை அக் காலத்திலே நிலவிய அடிமை நிலை வாழ்வையும் அந்நிய கிறிஸ்தவ மேலாதிக்கத்தையும் நிராகரித்து, இந்து சமய, சைவ சமயப் பற்றுதியுடன் 'சிவமணிமாலை' என்னும் பிரபந்தத்தை இயற்றினார். 'சிந்தனைச் சோலை' என்னும் பாவலர் தெ.அ.துரை யப்பாபிள்ளையின் தொகுப்பு நூலிலே இடம் பெற்றுள்ளது சிவமணி மாலையெனும் பிரபந்தம். 'பாவலரது ஆத்ம சமர்ப்பணம் - சிவமணிமாலை' என்னும் அரியதொரு கட்டுரையினை எழுதியுள்ளார் நாடக ஆசிரியரும், மகாஜனக் கல்லூரியின் உதவி ஆசிரியருமான புராண வித்தகர் செ.கதிரேசர்பிள்ளை.

'சிவமணிமாலை' பற்றி, செ.கதிரேசர்பிள்ளை பின்வருமாறு எழுதியுள்ளார்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகிய காலப்பிரிவிலே வாழ்ந்த ஈழத்துத் தமிழறிஞர் சிலரிடத்தே ஒரு பொதுமை நிலை காணப்படுகின்றது. அவர்கள் ஆரம்பத்திலே கிறிஸ்தவ மதத்தினராக வாழ்ந்து பின்னர் சைவர்களாக மாறிக் கலைத் தொண்டு புரிந்தனர். கறல் விசுவநாத பிள்ளை, சி.வை.தாமோதரம் பிள்ளை, பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை போன்றோர் இத்தகையோராவர். இவர் களுள் பாவலர் அவர்கள் தெல்லிப் பழையிலே ஓர் ஆங்கிலப் பாட சாலையை நிறுவியும், அக் காலத்துச் சமூகத்தை முன்னேற்றும் வகையிற் பல கவிதைகள் யாத்தும், கட்டுரைகள் எழுதியும் மதித்தற்கரிய பெருந் தொண்டாற்றி வாழ்ந்தார்கள். சமூகத்தை நோக்கி உணர்ச்சி கொண்டு பாடல்கள் பாடி, கவிதை மூலம் ஓர் உன்னத சமூகத்தை ஆக்கிவிட முடியும் என்று துணிந்து முயன்றவர்களுள் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களை முதல்வர் என்று குறிப்பிடலாம். அவர் ஈழத்துத் தமிழினத்தின் தேசிய கவி களின் முன்னோடியாகத் திகழ்கின்றார். இத்தகைய பெருமைக்குரிய பாவலர் தமது ஆத்ம சமர்ப்பணமாக யாத்த பிரபந்தமொன்று 'சிவமணிமாலை' என்னும் பெயருடன் அவரது ஆக்கம் எல்லாம் கொண்டு வெளிவந்திருக்கும் 'சிந்தனைச்சோலை' என்னும் நூலிலே முதலாவதாக விளங்குகின்றது. இப் பிரபந்தம் பாவலர் அவர்களது பல்வேறு ஆற்றல்களையும் இயல்பு களையும் விளக்கி நிற்கும் ஒரு பக்தி நூலாக உள்ளது.

தமிழ்மொழியிலே உள்ள பக்தி இலக்கியங்கள் பல, மாலை என்னும் பெயரையுடையன. மாணிக்கவாசகனார் 'ஆனந்த மாலை' எனப் பெயரிட்டு ஒரு

பதிகம் பாடியுள்ளார். தொண்டரடிப் பொடியாழ்வாரது நூலொன்று 'திரு மாலை' எனப்பெயர் கொண்டு விளங்குகின்றது. இவையன்றி 'நான்மணி மாலை', 'இரட்டைமணி மாலை' எனப் பல பிரபந்தங்களுள் ஈடுபாடு மிக வுடைய பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களும் சிவார்ப்பணமாகத் தாம் பாடிய பிரபந்தத்துக்குச் 'சிவமணி மாலை' எனப்பெயர் தந்துள்ளார். பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணிபோல் ஆக அந்த மணிகளின் தொடையால் இயன்ற காரணத்தால் நூல்கள் மணிமாலை எனப் பெயரிடப்பட்டன. ஈண்டு, சிவனுக்கு அணிந்த மணிமாலை என்னும் பொருளிலே பாவலர் தமது நூலுக்குச் 'சிவமணி மாலை' எனப் பெயர் சூட்டினர் எனக் கூறலாம். பலவின மணிகள் கொண்டு தொடுக்கப்பட்டனவாய் அவை யாவும் ஒருமித்து ஒரு பேரெழிலை ஆக்குவனவாய் அமைதல் போலச் சிவமணி மாலையும் பல்வேறு உணர்ச்சிகள் பொருந்திய பாடல்களால் இயன்று முழுமையில் பக்தி உணர்வைப் பெருக்கி நிற்கும் ஒரு நூலாக விளங்குகின்றது.

அந்தாதி, அலங்காரம் முதலிய பிரபந்தங்களைப் போலவே, பாவலரும் தமது 'சிவமணி மாலை'யைக் கட்டளைக் கலித்துறைப் பாக்களிலே பாடியுள்ளார். ஆனால் அந்தாதி முதலியன நூறு செய்யுட்களைக் கொண்டிருக்கும் மரபையுடையனவாக, இந்தச் 'சிவமணி மாலை' தொண்ணூற்றாறு செய்யுள்களினாலே நிறைவெய்துதலாகிய சிறு வேறுபாடு பெற்றுள்ளது. ....சைவ சித்தாந்தம் 96 தத்துவங்களை எடுத்தியம்பி, அவற்றைக் கடந்து நிற்பதே சிவ பரம்பொருளாகும் எனக் காட்டுவதை உணர்ந்தே, பாவலர் ஒவ்வொரு தத்துவத்துக்கும் ஒவ்வொரு பாடலாக, தொண்ணூற்றாறு தத்துவங்களையும் குறிப்பிட அத்தொகையளவினதாகப் பாடல் செய்திருக்கலாம் எனவும் கொள்ள இடமிருக்கிறது. 'சிவமணி மாலை'யின் இறுதிச் செய்யுளின் ஈற்றடி ''சாயுச்சிய வீடுறல் நிச்சயமே'' என்றமைந்திருப்பது எமது இந்தக் கருத்தை வலியுறுத்து கின்றது. பாவலர் துரையப்பா பிள்ளையவர்கள் தமது பரசமய வாழ்வு குறித்து மிகமிக மனம் நொந்தார்கள், பச்சாதாபமடைந்தார்கள்; நினைந்து நினைந்து உருகினார்கள். இந்தவித மனோநிலையிற் பிறந்த உணர்ச்சிப் பெருக்கே 'சிவமணி மாலை'ப் பிரபந்தமாக உருப்பெற்றதெனலாம். இக்கருத்துக்கு ஆதாரமாக,

**"...... உன்அற்புத ஆனந்தத் தன்மை பெற்றா தீனப் பவங்களு ளாழ்ந்தேன்"**

**"புன்மையெனு நெறி மீதினில் யான்செலும் போக்கொழித்து நின்மய மாக்கு......"**

என்னும் இவையும், இவை போன்ற பல செய்யுள்களும் 'சிவமணிமாலை'யினகத்தேயுள்ளன. பரசமய வாழ்வினாற் புனிதங்கெட நின்ற தம்மைத் தேசுபெற்ற தூயவனாகும் வண்ணம் அருள் புரிய வேண்டுகின்றார் மற்றொரு பாடலிலே,

**"ஆரும் வியக்கு மரிய**
**மனத்தை நின் ஆரணங்கள்**

தேரவும் நின்னை வணங்கவும்
மாநலஞ் செய்யவுமாங்
காரணமாய்த் தந்தனை பர
னேயதைக் கன்மவினை
சேரும் வித்தாக்கினன் ஆள்வா
யெனைத்துய்ய தேசுறவே"

பாவலரது கவிபுனையும் ஆற்றல் ஆரம்ப காலத்திலே கீர்த்தனைகள் புனைவதிலேயே சிறந்து விளங்கிற்று. அவரது முதனூலாகிய "கீதோபதேச கீதாரச மஞ்சரி" கீர்த்தனங்களின் தொகுப்பேயாகும். ஒரு பொருள் மேற் பல செய்யுள்கள் தொடர்பாக அமைக்கும் காவியப் படைப்பாற்றலும் பாவலர்க் குண்டென்பதற்குச் சான்று பகர்வது 'சிவமணி மாலையே' பிரபஞ்ச மாயையில் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வு வேட்டலையே இந்நூல் பொருளாகக் கொண்டுள்ளது. பாவலர் அவர்களுக்கு, பட்டினத்தார் பாடல், கந்தரலங்காரம், அப்பர் சுவாமிகளின் தேவாரப் பகுதிகள் ஆகிய நூல்களிலே நல்லாட்சியும் பயிற்சியுமுண் டென்பதைச் சிவமணி மாலையைப் படிப்பவர்கள் நன்குணர்வர். மேற்காட்டிய நூல்கள் திருவருள் வேட்டலையும், நிலையாமையையும் பொருளாகக் கொண்டு கட்டளைக் கலித்துறை யாப்பில் இயன்றுள்ளன. அந்தப் பொருளை அந்த யாப்பிலே பாட முனைந்த பாவலரது பாடல்களும் அந்தப்பாடல்களின் சாயல் பெற்று நடப்பது இயல்பேயாகும்.

"நோயென்ன செய்யுந் தரித்திர
மென்செயும் நூறெனுமெண்
ணாய்வரு மின்னல் எனையென்ன
செய்யு மரிமனமே
சேயனின் மேற் கருணாநிதி
யாய சிவபெருமான்
நேயமென் னெஞ்சில் நிறைந்தெந்த
நாளும் நிலைத்திடவே"
*(சிவமணி : செய் : 16)*

என்ற 'சிவமணிமாலைப் பாடலைப் படிக்கும்போது,

"நாளென்செயும் வினைதானென்செயு
மெனை நாடிவந்த......"

என்ற கந்தரலங்காரப் பாடல் நினைவூட்டப் படுகின்றது.

தமது உறுப்புக்களின் பயன் சிவதொண்டில் ஈடுபடுதலேயென அத் தொண்டுகளைச் சிறிது விரித்துக் காட்டுகின்றார். 'சிவமணி மாலை'யின் 80, 81, 82, 83ஆம் பாடல்கள் முறையே தேகம், கண், கை, கால் என்ற உறுப்புக்களின் பயன் பற்றி எடுத்துக் கூறுகின்றன.

"கைகளைத் தந்தனை கூப்பவும்
சேர்த்த கடிமலரால்
வைகலும் நின்னை வணங்கவுந்
தர்மம் வழங்கவுமே......"

என்ற செய்யுள் 'கைகாள் கூப்பித் தொழீர்" என்னுந் திருவங்க மாலையை நினைவு படுத்துதாகிறது.

திருமுறைப் பாடல்களின் பொருளை முழுமையும் சுவீகரித்துக் கொண்டு அப்பொருள் தமது பாடலில் மிகப் புதுமையும் எளிமையு மமையுமாறு அமைத்துவிட்டார் பாவலர்.

**"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை"** என்ற திருமந்திரப் பாடல்,

**"தருமஞ் சிறிதெனினுஞ் செய்ய**
**- வேதுந் தருணமிலார்**
**அருமன்பு செய்ய அநேக வழியுள.**
**- ஆக்களுக்குத்**
**தருமொரு கைப்பிடி புல்லேனுமிட்டுத்**
**- தயை மொழிகள்**
**வருமெவருக்கும் வழங்கிடு வாரருள்**
**- வாய்ந்தவரே"**

எனப் பாவலரது செய்யுளிலே தெளிவுறுமாறு வெளிப்பட்டு நின்று சிறக்கின்றது. திருஞானசம்பந்தரது தேவாரங்களில் உள்ள தொடர்களும் பொருளும் 'சிவமணி மாலை'யில் காணப்படுகின்றமையையும் இங்கு எடுத்துக் காட்டலாம்.

**"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"** என்ற தேவாரத் தொடரின் பொருள்,

**".....என்றும் நினைந்து சிவநேசமென்னும்**
**- இரு நிதியம்**
**ஒன்றே மெய்ச் செல்வம்"**
*(சிவமணி; செய். 31)*

எனும் பாடலிலே விழுகிற தல்லவா!

'சிவமணி மாலை' பெரியார்களது கொள்கைகளையும், சொல், பொருள் ஆகியவற்றையும் தாங்கி நிற்றலோடு அமையாது, பஞ்சமா பாதகங்களின் இழிவும், பலியிடல், நாத்திகம் பேசுதல், வீண் செலவு, போதைப் பொருள் கொள்ளல் ஆகிய செயல்களின் தகவின்மையும் பற்றி எளிமையான செஞ்சொற்களால் கண்டனமுஞ் செய்கின்றது.

**"கள்ளே கதியென் றிராப்பக**
**லாயதைக் காதலுடன்**
**உள்ளே செலுத்தி யுளந்தடு**
**மாறி யுலைந்து நிதம்**
**கள்ளே புரிகின்ற மூடர்முன்**
**மாதிரி தாரணியில்**
**கொள்ளேன் மதுச்சிறிதும் பரு**
**கேனென் குருபரனே."**

என்ற பாடல் மதுவினால் வரும் தீமையையும், அதைத் தீண்டலாகாது என்னும் உறுதியையும் எவ்வளவு எளிமையாக உணர்த்துகிறதென்பதைக் காண்க. இன்னும் இச் 'சிவமணி மாலை'யிலே சைவசித்தாந்தத்து உண்மைகளும், திருக்குறள், நாலடியார் முதலாம் நீதி நூல்கள் காட்டும் நன்னெறிகளும் ஆங்காங்கு பரந்து காணப்படுகின்றன. வடமொழிப் பிரயோகம் இச் 'சிவமணி மாலை'யில் நிறைந்து காணப்படுகின்றது. பாவலரது காலம் வடமொழி, தென்மொழி எனப் பேதங் காணாத தமிழ்நடை பயின்ற காலமாகும். கிறிஸ்தவத் தமிழிலக்கி யங்களிற் காணப்படும் சொல்ல மைப்புக்களும் இம்மாலையில் இடம் பெற்றுள்ளன. சிவபாஸ்கரன், சாயுச்யம், மனுஷர், ஞானவரோதயவீஸ்வரன், கர்த்தன், விசுவசித்தல், துர்ச்சிந்தை ஆகிய சொல்லமைப்புக்கள் இப் பந்தியில் யாம் கூறியவற்றுக்கு உதாரணங்களாகும். இப்பிரயோகங்கள் சந்தஇசைவு நோக்கியும், இனிய ஓசை

பயக்கும் என்று கருதியும் அமைக்கப் பட்டன போலும்.

பாவலர் தமது ஆத்மாவின் தூய்மைக்காக, கடவுளை வேண்டிப் பாடிய இந்நூல், பயில்வாருக்கும் அத்தகைய தூய்மை நிலையையும் பத்தி உணர்வையும் நல்கும் ஒரு தோத்திர நூலாகும் எனலாம். இறுதிச் செய்யுளிலே பாவலரவர்கள் இந்நூற் பயனின்னது தான் என்று தெளிவு பெற்ற உள்ளத்துடன் கூறியிருப்பதும் எம் முடிவுக்கோர் ஆதாரமாகும். அதனை இங்கு காண்க.

"பலமே விய நித்தி யானந்த
மூர்த்தியைப் பாசமதில்
அலையா தெனைத் தடுத் தாள்குரு
நாதனை அன்புருவ
நலமார் சிவாலய வாசனை
யர்ச்சிக்கி னாடொறும் நாம்
நிலையா கியவுயர் சாயுச்ய
வீடுறல் நிச்சயமே"

*(சிவமணி; 96)*

**ஈழ நாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள்,** (1967) என்னும் நூலிலே தென் புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வரும் பிரபந்தங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இணுவில் சிவகாமி அம்மை மீது இரட்டை மணிமாலை.
இணுவில் சிவகாமி அம்மை மீது சதகம்
இணுவில் சிவகாமி அம்மை மீது திருவூஞ்சல்
இணுவைப் பதிகம்
இணுவைப் பதிற்றுப்பத்தந்தாதி
இணுவையந்தாதி
கதிர்காம சதகம்
கதிர்காமசுவாமி பேரிற் கீர்த்தனைகள்
கதிர்காம வேலவர் தோத்திரமாலை
கதிரேசன் ஊஞ்சல்
கதிர்காமத்தந்தாதி
கதிர்காமத்தம்மானை
கதிர்காம புராணம்
கதிர்காம வேலவர் திருவருட்பா
கதிரமலைக் கந்தசுவாமி கீர்த்தனைகள்
கதிரமலைக் கந்தசுவாமி விருத்தங்கள்
கதிரை நான்மணிமாலை
கதிரைமலைக் குறவஞ்சி
கதிரைமலைப் பள்ளு
கதிரைமலையந்தாதி
கந்தசாமி கலிவெண்பா
கந்தவனநாதர் ஊஞ்சல்
கந்தவனநாதர் பதிகம்
கருவூர் மான்மியம்
கலைசைச் சிலேடை வெண்பா
காரைக் குறவஞ்சி
குமாரவேள் பதிகம்
சங்கிளை அந்தாதி
சங்கமாங் கண்டிப் பதிகம்
சண்முக சடாட்சரப் பதிகம்
சிதம்பர மான்மியம்
சிதம்பர மும்மணிக்கோவை
சுன்னாகம் அரிகர புத்திரனார் ஊஞ்சல்
செந்தில் யமகவந்தாதி
திருச்செந்திற் திருவந்தாதி
திருச்செந்தூர் முருகன் பதிகம்
திருச்செந்தூரவகல்
திருவிடை மருதூர் பதிற்றுப் பத்தந்தாதி
தில்லை நடராசர் பதிகம்
நகுலமலைக் குறவஞ்சி
நடராசர் பதிகம்
நயினை நீரோட்டக யமகவந்தாதி

நயினை மான்மியம்
நல்லூர் கந்தசுவாமி பேரில் கோவை
நல்லூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ்
நல்லூர் நீரோட்டக யமக வந்தாதி
நல்லைக் கலித்துறை
நல்லைக் கலிவெண்பா
நல்லைக் குறவஞ்சி
நல்லைச் சண்முகமாலை
நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம்
நல்லைச் சுப்பிரமணியர் திருவிருத்தம்
நல்லைநகர்க் குறவஞ்சி
நல்லைநாயக நான்மணிமாலை
நல்லை நான்மணிமாலை
நல்லையந்தாதி
நல்லை வெண்பா
நால்வர் நான்மணிமாலை
நீர்வை வெண்பா
நீராவிக்கலி வெண்பா
நீராவிப் பிள்ளையார் மீது கலிவெண்பா
நெல்லை வேலவருலா
புலோலிப்பர்வத வர்த்தனியம்மை தோத்திரம்
புலோலி வைரவக் கடவுள் தோத்திரம்
புளியநகர் ஆனைப்பந்தி விக்னேஸ்வரர் பதிகம்
பெருமாக் கடவைப் பிள்ளையார் இரட்டைமணிமாலை
பேரின்ப ரஞ்சித மாலை
மண்டூர் வேலவர் குறம்
மயிலணிச் சிலேடை வெண்பா ஊஞ்சற் பதிகம்
மயிலைச் சுப்பிரமணியர் ஊஞ்சல்
மயிலைச் சுப்பிரமணியர் விருத்தம்
மயிலை மும்மணி மாலை
மருதடி அந்தாதி
மாணிக்கப் பிள்ளையார் திருவருட்பா
மாமாங்கப் பிள்ளையார் பதிகம்
மாவிட்டபுரம் சுப்பிரமணியக் கடவுள் மீது ஊஞ்சல் பதிகம்
மாவைக் கந்தசுவாமி பேரில் மும்மணிமாலை
மாவைப் பதிகம்
மாவையந்தாதி
மாரியம்மன் குளுத்தி
மாரியம்மன் பதிகம்
முத்துக்குமாரசுவாமி இரட்டைமணிமாலை
மூளாய்ச் சித்தி விநாயகர் ஊஞ்சல்
வடிவேலர் திருவிருத்தம்
வண்ணைக் குறவஞ்சி
வண்ணைச் சிலேடை வெண்பா
வண்ணைத் திருமகள் பதிகம்
வண்ணைநகரூஞ்சல்
வண்ணையந்தாதி
வண்ணை வேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல்
வண்ணை வைத்தியலிங்கர் குறவஞ்சி
வல்லிபுரநாதர் பதிகம்
வல்லை வயித்தியேசர் பதிகம்
வள்ளியம்மன் ஊஞ்சல்
வறுத்தலைவிளான்மருதடி விநாயகர்மேல்இருபாவிருபஃது
விஷ்ணு பதிகம்
வீரபத்திரர் ஊஞ்சல்
வீரபத்திரர் சதகம்
வீரபத்திரர் பதிகம்
வீரமாகாளியம்மன் பதிகம்
வெல்லை அந்தாதி
வெல்லை மணிமாலை
வேதாரணியேசுவரர் ஊஞ்சற் பதிகம்
வேலணை இலந்தைக்காட்டுச் சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை
வேலணை மகாகணபதி திருவூஞ்சல்
வைரவர் ஊஞ்சல்
வைரவர் தோத்திரம்
வைரவர் ஸ்தோத்திரமாலை

17-07-87இல் வல்லிபுரத்தான் தலபுராணம் வெளிவந்தது. கு.பெரியதம்பி ஆழ்கடலான் என்போர்

இதனைப் பாடினர். இந்து கல்வி கலாசார மன்றம், புலோலி இந்நூலை வெளியிட்டுள்ளது. இந்நூலிலே இடம் பெற்றுள்ள முன்னுரை தமிழ்ப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டுள்ளது. 'புராண இலக்கியம்' பற்றிய நவீன போக்குகளையறிய விரும்புவோர் இம்முன்னுரையைப் படித்தல் வேண்டும். 'புராண பிரபந்தங்கள்' பற்றிய தெய்வீக அம்சங்கள், கடவுள் விளக்கம், சூக்கும தத்துவம் என்பனவற்றை அறிந்து தெளிதல் இந்துக்கள் கடனாம்.

**'வைரவ மான்மியம்'** என்னும் நூல் 1995 ஆம் ஆண்டு இரா.மயில்வாகனம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இவர் சைவ நன்மணி, சிவநெறிச் செல்வர் என்ற பட்டங்களையும் பெற்றுச் சிறந்தவர். 'வாழ்த்துரை' வழங்கியுள்ள முதுபெரும் தமிழ்ப் பேராசிரியரும் இலக்கிய விமர்சகருமான பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் 08-08-1995இல் வெளிப் படுத்தியுள்ள கருத்துக்கள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

"கிராம மட்டங்களில் சிறுதெய்வ வழிபாடாகவே விளங்கி வந்துள்ள இவ் வழிபாடானது இப்பொழுது முற்று முழுதான 'ஆகமக் கிரியை' மரபுக்குள்ளே கொண்டு வரப்படும் தெய்வமாக மாறிவரும் இன்றைய சூழ்நிலையில் வைரவ வழிபாட்டின் செந்நெறிப் பௌராணிகத் தொடர்பு களை எடுத்துக் கூறுவது காலத்தின் இயல்பு ஆகின்றது எனலாம். வைரவர், ஞான வைரவரென வழிபடும் முறை வளரத் தொடங்குகின்ற பொழுது இத்தகைய தேடல் தவிர்க்க முடியாததாகின்றது.

வைரவ வழிபாடு இன்று கிராம மட்டத்துக்கு உரிய ஒன்றாகக் காணப்படுகின்றதெனினும் அது சிவ வழிபாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகும்.

வைரவ மூர்த்தம் பற்றிய தேவாரக் குறிப்புக்களை நோக்கும் பொழுது, வைரவம் காபாலிகத்துடன் தொடர்புபட்டதென்பது தெரிய வருகிறது. கி.பி. 5,6ஆம் நூற்றாண்டு களில் தமிழ் நாட்டின் காளாமுகம், காபாலிகம், பாசுபதம் ஆகிய 'வன்நிலை' வழிபாடுகள் காணப் பட்டமை வரலாற்றுண்மையாகும். இறைவனைப் பேயாகக் காணுதல், கபாலத்தைக் கொண்டு சென்று பிச்சையெடுத்து வாழ்தல், எலும்பை (கார் காலம்) அணியாகப் போடுதல் ஆகியன இந்தப் பாரம்பரியங் களுக்குரியன. 'கபாலிகர்' குறிப்பாகக் குடியிருப்பின் எல்லைகளில் வாழ்ந்து வந்தமை ஒரு முக்கிய அம்சமாகும். இத்தகையோருக்கு 'நாய்' இன்றிய மையாத துணைப் பிராணியாகும். வைரவரைக் காவல் தெய்வமாகக் கொள்வதும் இங்கு நோக்கப்படத் தக்கது.

வைரவ வழிபாடு தெலுங்குப் பிரதேசத்திலிருந்தே தமிழ் நாட்டினுள்

வந்திருக்க வேண்டும் போலத் தோன்றுகின்றது. வைரவரை 'வடுகன்' என்று போற்றுவதற்கான காரணம் யாதென நோக்கல் வேண்டும். கந்த புராணம்

"புரிதருவடுகனைப் போற்றி செய்குவாம்" என்று கூறும்.

கபாலிக மரபிலே சிவனுடன் இணைத்துப் பேசப்பெறும் சில பண்புகள் பின்னர் தனி ஒரு மூர்த்தமாக உருவகிக்கப் பட்டுள்ளமையை இன்றைய வழிபாட்டிலே காணலாம்.

தாந்திர மதத்திலும் 'வைரவம்' (பைரவம்) முக்கிய இடம்பெறுகின்றது. தாந்திர வளர்ச்சியின் இரண்டாவது பிரதான கட்டமாக அமையும் யாமன இலக்கியங்களின் கையளிப்பு எட்டு 'வைரவர்'களினாலே செய்யப்பட்டது என்பர். சிவ தந்திரங்கள் சதாசிவ அல்லது ருத்திர மரபினைச் சுட்ட யாமளங்கள் வைரவ மரபைச் சுட்டுகின்றன. அந்த மரபில் 'பைரவர்' என்பது முற்றுமுழுதான முத்தியெய்திச் சிவநிலையை அடைந்தவரைக் குறிக்கும். இவ்வாறாக வைரவக் கோட்பாடு சிவ மதங்களில் முக்கிய இடம் வகிக்கின்ற ஒன்றாகும். இலங்கையில் இவ்வழிபாடு ஆகமம் சார்ந்த நிலையிலும், ஆகமம் சாராத நிலையிலும் நிலைபெற்றுக் கொண்டிருக்கின்றது.[30]

கண்டா வைரவர், உன்மத்த வைரவர், கபால வைரவர், விபூஷண வைரவர், மார்த்தாண்ட வைரவர், சுதந்திர வைரவர், சுவேச்சர வைரவர், உலோக வைரவர், உக்கிர வைரவர், பிரச்சய வைரவர், நிர்வாண வைரவர், பூஷண வைரவர் என்று அபிதான சிந்தாமணியிலே வைரவரது திருநாமங்கள் சுட்டப் படுகின்றன.

## 1.6 காகப்பிள்ளையார் மான்மியம்

(மறுமலர்ச்சிப் பாதையில் மக்கள் கலைகள் VII வெளியீடு)
Four Literature in the path of Reviral
Glories of God Kauesham Kugan
Press Tellippalai 15-08-1983

திரு.த.சண்முகசுந்தரம், 15-08-1983 ஆம் ஆண்டு **"காகப்பிள்ளையார் மான்மியம்"** என்னும் வாய்மொழிப் பிரபந்த நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இச்சிறு நூல் பிள்ளையார் மீது பக்தியுடன் பாடப்பட்டுள்ளதுடன் இதனுள் கதை மரபொன்றும் இடம்பெற்றுள்ளமையுங் கண்டின்புறத்தக்கது. காங்கேசன்துறை குருநாதர் கோயிலுக்குத் தெற்கே கிட்டத்தட்ட ஒரு கல் தொலைவில் இந்தக் காகப்பிள்ளையார் கோயில் அமைந் துள்ளது. இதனை இப்போது கூத்திய வத்தைப் பிள்ளையார் என்பர் அடியார்கள். இதன் தல விருட்சம் பெரியதோர் மருது; இதனைச் சின்ன மருதடிப் பிள்ளையார் எனவும் கூறுவர். காங்கேசன்துறைப் பகுதியைத் தலையாரி மருதப்ப வன்னியனார் ஆண்டு வந்தார். அவர் சிறந்த முருகனடியார். முருகனை நினைந்து கெவுடு ஒன்றைக் கையிலே கட்டியிருந்தார். ஒரு நாள் எண்ணெய்

தேய்த்து முழுகுவதற்காக அந்தக் கெவிட்டை அவிழ்த்து வைத்தார். அவர் சற்றுக் கண்ணயந்திருக்கும்போது அண்டங்காகம் ஒன்று வந்து கெவிட்டைத் தூக்கிக் கொண்டு ஓடியது. உடனே மருதப்பர் தன் பணியாளருடன் சேர்ந்து காகத்தைக் கலைத்துக் கொண்டு ஓடினார். காகம் மிகவும் தந்திரமாக அங்கும் இங்கும் பறந்தது. ஈற்றிலே மருத மரத்திலிருந்தபடி கெவிட்டைக் கறையான் புற்று ஒன்றடியில் போட்டு விட்டுப் பறந்தது. மருதப்ப வன்னியனாரும் அவன் பணியாளரும் கறையான் புற்றை வெட்டி முருகனுக்குரிய அந்தக் கெவிட்டைத் தேடினர். கெவிடு கிடைக்கவில்லை. அழகியதோர் பிள்ளையார் சிலைதான் அப்புற்றி லிருந்து வெளிவந்தது. கெவிடு கிடைக்கவில்லை. சோர்வுற்ற வன்னி யனார் வீடு சென்று முழுகினார். முழுகிய பின்னர் மீண்டும் சற்றுக் கண்ணயர்ந்தார். அந்தக் காகம் அவர் கனவில் வந்து தோன்றியது. தோன்றிப் பேசியது.

"மருதப்ப வன்னியனாரே! சோர வேண்டாம். நான்தான் உங்கள் கெவிட்டை எடுத்தேன். கெவிடுதான் பிள்ளையார் வடிவமாக மாறியது. தம்பி முருகனை அன்புடன் வணங்குகின்றீர், ஏன் பிள்ளையாரை வணங்குவதில்லை? நானும் முருகனும் சிவன் மைந்தர் தாமே!"

இதனைக் கேட்ட மருதப்பர் அன்று தொடக்கம் அந்த மருதின் கீழ் பிள்ளையாரை வைத்து வழிபாட்டினைத் தொடங்கினார்.

இந்தக்கதை எக்காலத்தில் தோன்றியது இல்லை. என்பது ஆராயப்பட வேண்டிய அலுவல். குறுமுனியும் கமண்டலமும் காக வடிவில் வந்த பிள்ளையார் கதையை இக்கதை ஒத்திருக்கின்றது. காங்கேசன் துறையில் வன்னிமைகள் இருந்தார்கள் என்ற கதையை இப்பாடல் மேலும் வலியுறுத்து கின்றது. "குருநாதர் மான்மியம்", "காகப் பிள்ளையார் மான்மியம்", "வெற்றிலை மான்மியம்'," "நாச்சிமார் மான்மியம்", என்ற நான்கைப் பாடிய புலவர் யாரெனத் தெரியவில்லை.[31]

## 1.7 முருக வழிபாட்டு மரபு

"தமிழ் மக்களது நம்பிக்கைக் குரிய தெய்வமாக முருகக் கடவுள் விளங்குகிறார். முருக வணக்கத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து அறிவதற்கு நம்பகமான இலக்கிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சிவபெருமானையும் முருகனையும் இணைத்து நோக்கும் வழக்கமும் உண்டு. இன்னும் சிவனையும் சூரியனையும் இணைத்து நோக்கி யாராயும் மரபும் உள்ளது. சிவசூர்ய வழிபாடு என்பது சிவபெருமானைச் சூரியனாகக் கொண்டு வழிபடுவதைக் குறிக்கும்."[32] என்று கருதுகிறார் பேராசிரியர், கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை பேராதனைப் பல்கலைக் கழகத்திலே திரு.செ.நவரத்தினம் தமது முதுமாணிப் பட்டத்திற்கான முருக வணக்கம் பற்றிய தமது ஆய்வேட்டிலே பின்வரும் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

"........ஆயினும் சூரியன் சிவனை வழிபடுவோனாகக் கொள்ளப் படுகின்றான். இவ்வெடுத்துக் காட்டுகளாற் சிவபெருமான் சூரியனிலும் மேம்பட்டவர் என்ற ஆய்விலே சூரிய வணக்கமே காலப் போக்கில் முருக வணக்கமாக உருப்பெற்றதெனலாம்[33]"

இக்கட்டுரையாளர், 1987இல் தமது முதுகலைமாணி (எம்.ஏ.) ப்பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு எழுதிச் சமர்ப்பித்த ஆய்வேடு "நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பற்றியும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பற்றியும் எழுந்த பிரபந்தங்கள் - ஓர் ஆய்வு" என்பதாகும். அவ்வாய்வேட்டின் 'பின்னிணைப்பு' 'இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரபந்தங்கள்' என்பதாகும். அப்பகுதியை அப்படியே பிரதிப் படியாக இங்கு தருவது பொருத்தமுடையதாகும்.

1. நற்சிந்தனைக் கீர்த்தனைகள்
   கொழும்புத்துறை சிவயோகசுவாமிகள்
2. "கந்தனே என் சித்தனை நல்லைக் கந்தனே என் வந்தனை"
   பண்டிதர் க.வீரகத்தி
3. மாவைக்கந்தன் பக்திரசக் கீர்த்தனைகள்
   மயிலிட்டி, சி.வேலுப்பிள்ளை
4. நல்லூர்க் கந்தன்
   பன்னை மூலை ந.சுப்பிரமணியம்
5. நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழ்
   கவிஞர் வ.கோவிந்தபிள்ளை
6. மாவைப் பிள்ளைத்தமிழ்
   பண்டிதர் மு.கந்தையா
7. நல்லைச் சண்முகமாலை
   வண்ணை நெ.வை.செல்லையா
8. நல்லைத் திருவருக்கமாலை
   புலவர்மணி ஆ.தில்லைநாதப்புலவர்
9. நல்லூர் நான்மணிமாலை
   வித்துவான் க.சொக்கலிங்கம்
10. மாவை மும்மணிமாலை
   கரணவாய் செவ்வந்திநாத தேசிகர்
11. மாவை இரட்டை மணிமாலை
   சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்
12. மாவைச் சித்திரக்கவித் திருவிரட்டை மணிமாலை
   தெல்லிப்பழை பொன்னம்பலபிள்ளை
13. திருநல்லையந்தாதி
   புலோலி சிவ.பஞ்சாட்சரக் குருக்கள்
14. நல்லைக் கந்தரந்தாதி
   கவிஞர் நாக. பரமசாமி
15. மாவை யமகவந்தாதி
   வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை
16. நல்லைப்பதிகம்
   மயிலிட்டி க.மயில்வாகனப்பிள்ளை
17. நல்லூர்க் கந்தர் பதிகம்
   நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்.
18. மாவை நகர் முருகவேள் பதிகம்
   நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்
19. மாவைப் பதிகம்
   வறுத்தலைவிளான் க.சரவணமுத்து
20. மாவைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்
   மாவை சுவாமி குமாரசுவாமிக்குருக்கள்

21. மாவைக் கந்தன் பதிகமும் அதன் உரையும்
தென்மயிலை இலக்கண வித்தகர், பண்டிதர் இ.நமசிவாயம்

22. மாவைக் கதிர்காம வடிவேலர் பதிகம்
வறுத்தலைவிளான் க.சரவணமுத்து

23. மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம்
மயிலணி முத்துக்குமாரகவிராசர்

24. மாவைப் புராணம்
சுவாமி குமாரசுவாமிக்குருக்கள்

25. நல்லைச் சுப்பிரமணியர் திருவிருத்தம்
வண்ணை நெ.வை.செல்லையா

26. நல்லைக் கலிவெண்பா
சுழங்கைத் தம்பிரான்

27. நல்லூரான் வெண்பா நாற்பது
புங்குடுதீவு வித்துவான் சி.ஆறுமுகம்

28. நல்லை வெண்பா
இருபாலை, வித்துவசிரோமணி, சேனாதிராய முதலியார்

29. நல்லைநகர்க் கந்தரகவல்
பரமானந்தப்புலவர்

30. மாவைக் கந்தரகவல்
க.மயில்வாகனம்பிள்ளை

31. மாவைமுருகன்
மாவை, பண்டிதர் க.சச்சிதானந்தன்

32. ஆறெழுத்துப்பத்து
மாவை, மு.பூ.பொன்னம்பலபிள்ளை

33. நல்லூர் நாற்பது
கவிஞர் வி.கந்தவனம்

34. மாவைக் கந்தசுவாமி பேரில் பாடிய ஊஞ்சற் பாக்கள்
நல்லூர் ம.சரவணமுத்துப் புலவர்

35. மாவை முருகன் காவடிப்பாட்டு
மாவை த.சண்முகசுந்தரம்

36. மாவை முருகன் காவடி கரகப்பாடல்கள், (வாய்மொழியாக வழங்கும் பாடல்கள்)
அம்பனை
சிவநாதக்கலைமணி சி.சிதம்பரப்பிள்ளை

37. மாவைக் கந்தர் மலரடி போற்றி
மாவை த.சண்முகசுந்தரம்

38. நல்லூர் முருகன் காவடிச்சிந்து
கோண்டாவில் கவிஞர், சோ.பத்மநாதன்

39. நல்லைக்குமரன் குறவஞ்சி
இணுவில் ந.வீரமணி ஐயர்

இந்துப் பிரபந்தங்களிலே பொருள டக்கமாக அமையும் செய்திகளைக் கொண்டு அவற்றின் பன்முகப்பட்ட பயன்பாடுகளையும் அறிந்து கொள்ள முடியும்.

I. இந்து சமயப் பிரபந்தங்களில் கடவுட் கொள்கை

II. இந்துசமயப் பிரபந்தங்களில் திருமுறைச் செல்வாக்கு

III. இந்து சமயப் பிரபந்தங்களில் புராண மரபு கொண்டுள்ள இடம்

IV. இந்து சமயப் பிரபந்தங்களில் கவித்துவ வளம்

V இந்து சமயப் பிரபந்தங்களில் கையாழப்பட்டுள்ள பாவினங்கள்

VI. இந்து சமயப் பிரபந்தங்களில் நாட்டுச்சிறப்பும், நகரச் சிறப்பும்

VII. இந்துசமயப் பிரபந்தங்களில் பண் -பாட்டுக்கூறுகள் பெற்றுள்ள இடம்

VIII. இந்து சமயப் பிரபந்தங்களில் இடம் பெறும் வரலாற்றுச் செய்திகள்

IX. இந்து சமயப் பிரபந்தங்களில் மொழி வளம்

X. இந்து சமயப் பிரபந்தங்களில் காணப்படும் சைவசிந்தாந்தக் கொள்கைகள்

XI. இந்து சமயப் பிரபந்தங்களில் கோயில்கள் பற்றிய செய்திகள்

XII. இந்து சமயப் பிரபந்தங்களில் உவமையும் உருவகங்களும்

XIII. இந்து சமயப் பிரபந்தங்களில் வட மொழிச் செல்வாக்கு

XIV. இந்து சமயப் பிரபந்தங்களில் வேற்றுமத மறுப்புக் கொள்கை

XV. இந்து சமயப் பிரபந்தங்களின் ஒருமைப்பாட்டுக் கொள்கை

XVI. இந்துசமயப் பிரபந்தங்களில் அமையும், மரபிறுக்கமும் நெகிழ்வும்

மேற்கூறப்பட்ட ''பதினாறு'' நிலைப்பட்ட ஆய்வு நோக்கிலே இன்னும் எதிர்காலத்திலே தமிழ்த் துறையிலே / மொழித்துறைகள் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களிலே முழுமையான நுண்ணாய்வுகள் நடைபெற வேண்டிய அவசியம் இப்போது உணரப்பட்டு வருகிறது. இந்தவொரு தேவையையும், அவசியத்தையும் "உலக இந்து மாநாடு" அதன் சிறப்பு மலர் வலியுறுத்தி நிற்கிற தல்லவா? சைவத்தின் பழைமையையும், புதுமையையும் வெளிப்படுத்தவல்லன. சமயம் சார் இலக்கியங்களே யாகும். 'தமிழ் மொழியின் தெய்வீகத் தத்துவம்' பேணப்படும் இலக்கிய வடிவங்களே பிரபந்த இலக்கியங் களாகும். இந்து / சைவ சமயங்களிலே 'சமரசம்' தெய்வக் கொள்கையிலே என்பதுண்டா? என்ற ஐயம் முகிழ்க்கின்ற கால கட்டம் ஒன்று தோன்றியுள்ள தல்லவா? எது 'தெய்வ நீதி', 'சமரச நெறி', 'இயற்கை விதி', 'நியதி' என்னும் வினாக்களும் நம்முன் உள்ளன வென்பதையும் மனந்திறந்து விவாதிக்க வேண்டிய நிலைப்பாடு உண்டு. 'விதி', 'மதி' என்பன பற்றிய கோட்பாடுகளின் 'மெய்மை'யும் விளக்கமுற வேண்டியே யுள்ளன. 'கன்மம்', 'மறுபிறப்பு', 'வினைப்பயன்', 'ஊழின் வலி' என்பனவும் பெரும் தத்துவ விகாரங்களே! மெய்யியல், விக்கிரகவியல், ஒழுக்க வியல், மானுடவியல், தத்துவவியல், சமூகவியல் அடிப்படை விஷயங் களிலே பெரும் 'தெளிவு' ஏற்பட வேண்டியுள்ளது. இத்தகு பயன் பாட்டுக்கு ஏற்றதொரு இலக்கிய ஆராய்ச்சியாகப் 'பிரபந்த இயல்' பற்றிய ஆய்வு அமைய வேண்டும். இவ்வாய்விலே ஈடுபடுவதற்கான பற்றும், முயற்சியும், உற்சாகமும், துறைசார் ஈடுபாடும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு வாழும் அனைத்து இந்துக்களுக்கும் இலக்கிய நெஞ்சங் களுக்கும் ஏற்பட வேண்டியது மிகமிக அத்தியாவசியமாகும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

*(திருமந்திரம்)*

## அடிக் குறிப்புகள்


1. சுப்பிரமணியன், ச.வே., பகவதி, கே., (பதிப்), **தமிழ் இலக்கியக் கொள்கை**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1983, ப.107.

2. அருணாசலம், மு., **சேயூர் முருகன் உலா**, முன்னுரை. 1990, ப.7.

3. கனகசபாபதி, சி., **பாரதியும் பாரதிதாசனும், ஒப்பியல் திறனாய்வு**, (Ph.D Thesis, Madurai University, 1977), அகரம், சிவகங்கை, 1980, ப.46.

4. சுப்பிரமணியன், ச.வே., பகவதி, கே., (பதிப்.), **மு.கு.நூல்** ப.7.

5. அருணாசலம், மு., **தமிழ் இலக்கிய வரலாறு, (10ஆம் நூற்றாண்டு)**, ப.210.

6. மாதவதாஸன், மயிலை., **நாலாயிரத் திவ்ய பிரபந்தம்**, கபீர் பிறின்ரிங் வேக்ஸ், 1962, ப.30.

7. சுப்பிரமணியன், ச.வே., **இலக்கணத் தொகை யாப்பு பாட்டியல்**, தமிழ்ப் பதிப்பகம், அடையாறு சென்னை. 1978, ப.77.

8. பாலசுப்பிரமணியன், சி., **கட்டுரை வளம்**, முதற் பதிப்பு, நறுமலர்ப் பதிப்பக வெளியீடு, காக்ஸ்டன் அச்சகம், சென்னை. 1966, ப.123-137.

9. செந்திநாதன், கனக, "பள்ளுப் பிரபந்தம் 1", (அறிமுகம்), **பிரபந்தப் பூங்கா**, வரதர் வெளியீடு, 1967, ப.9.

10. செயராமன், த.வீ., **தூது இலக்கியங்கள்**, மணிவாசகர் நூலகம், சிதம்பரம். ஐடியல் பிரிண்டர்ஸ், சென்னை. ப.10-12.

11. சண்முகம்பிள்ளை, மு., **பாட்டியல் காட்டும் இலக்கியப் பாகுபாடு**, தமிழாய்வு, தொ.1, ப.2-3.

12. நடராசா, F.X.C., மகாவித்துவான், **ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு**, அரசு வெளியீடு, கொழும்பு. 1970, ப.46.

13. இராசமாணிக்கனார், மா.டாக்டர், **தமிழ் அமுதம்**, மாருதி பிரஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1985, ப.134.

14. அருணாசலம், மு., **தமிழ் இலக்கிய வரலாறு, (10ஆம் நூற்றாண்டு)**, ப. 212-213.

15. வேலுப்பிள்ளை, ஆ., பேராசிரியர், கலாநிதி, **தொடக்க கால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வர லாற்றுப் பின்னணியும்**, (தொடக்கப் பேருரை), யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1986, ப.7.

16. நடராசா, F.X.C., **ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு**, அரசு வெளியீடு, கொழும்பு. 1970, ப.29.

17. சிவத்தம்பி, கா.பேராசிரியர், கலாநிதி **ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம் பரியம்**, சிந்தனை (மறுபிரசுரம்), தொகுதி II, இதழ் I,1984.

18. வரதர், **நாவலர்**, (சுருக்க வரலாறு), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, 1979, ப.35.

19. கைலாசபதி, க.பேராசிரியர், கலாநிதி, **நாவலர் இலக்கிய நோக்கும் பணியும்**, நாவலர் நூற்றாண்டு மலர், 1979, ப.48-59.

20. அம்பலத்தான், **நாவலரும் சபாபதி நாவலரும்**, நாவலர் நூற்றாண்டு மலர், 1979, ப.163.

21. பூலோகசிங்கம், பொ., பேராசிரியர், கலாநிதி, **"நாவலரும் கணபதிப் பிள்ளையும்"**, நாவலர் நூற்றாண்டு மலர், 1979, ப.249.

22. நடராசா, F.X.C, மு.கு.நூல், ப.29, ப.30, ப.31, ப.32, ப.34.

23. சிவலிங்கராசா, சி., கலாநிதி. **ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி**, (19 ஆம் நூற்றாண்டு வரை), யாழ்ப்பாணம், ப.85.

24. குலரத்தினம், க.சி., **தமிழ் தந்த தாதாக்கள்**, சுடரொளி, வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1987, ப.64.

25. மு.கு.நூல், ப.81.

26. மயில்வாகனம், இரா., **வைரவ மான்மியம்**, (பார்க்க, முன்னுரை, பேராசிரியர், கலாநிதி, கார்த்திகேசு சிவத்தம்பி எழுதியுள்ளார்.), ப.V-VI.

27. சண்முகசுந்தரம், த., **காகப் பிள்ளையார் மான்மியம்**, குகன் அச்சகம், தெல்லிப்பழை, 15-08-1983, (பார்க்க:- பதிப்புரை, கதைச் சுருக்கம்), ப.4-5.

28. வேலுப்பிள்ளை, ஆ., பேராசிரியர், கலாநிதி, **"அப்பர் தேவாரத்துள் சிவசூரிய வழிபாடு"**, இந்து தர்மம், இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1979.

29. நவரத்தினம், செ., **முருக வணக்கம்**, (ஆரம்ப காலந்தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை), தமிழ் முதுமாணிப்(எம்.ஏ) பட்டத் திற்கான ஆய்வுக் கட்டுரை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1975.

## சிவசண்முகனே சரணம்!

கண்டவர்கள் கண்குளிர
இருகைகள் தலைக்குஏற
விண்டுளம் நின்று உருக
மன்னோர் விண்ணவர்கள் போற்ற
பண்டகு நல்மொழியாள்
இருபாகம் மகிழ்ந்து உறையும்
தண்டலை சூழ் நல்லைவாழ்
சிவசண்முகனே சரணம் ஐயா!

**பரமானந்தப்புலவர்**

# திருக்குற்றாலம்

**பொ.சிவப்பிரகாசம்,**
கொழும்புத்துறை மேற்கு.

**முதலாந் திருமுறை** **பண்: குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

பக்கம் வாழைப் பாய் கனியொடு பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி, தூங்குங் குற்றாலம்
அக்கும் பாம்பும் ஆமையும் பூண்டு ஓர் அனல் ஏந்தும்
நக்கன் மேய நன்நகர் போலும்; நமரங்காள்!

*- சம்பந்தர் தேவாரம்.*

## வரலாறு

முன்னொரு காலத்தில் குற்றால நாதர் விஷ்ணு மூர்த்தியாக, மூலவராக இருந்தவர். ஆகவே குற்றாலம் வைணவத் தலமாக திருமுற்றம் என்ற பெயரில் வைணவ ஆச்சாரியார்களால் பூசிக்கப்பட்டு வந்தது. அகத்திய முனிவர் இத்தலத்திற்கு நீறணிந்த மேனியராய் சிவக்கோலத்துடன் உட்சென்றார். அகத்தியமுனிவரின் திருமேனியில் சிவசின்னங்கள் தரித்திருப்பதைக் கண்ட வைஷ்ண வாச்சாரியர்கள் இம்முனிபுங்குவரை இத்திருத்தலத்திற்குள் உட்புகவிடாமல் தடுத்தனர். இதனால் சினமுற்ற அகத்தியர்; அண்மையில் அமைந்துள்ள திருவிலஞ்சியில் கோயில் கொண்ட முருகப் பெருமானிடம், குற்றாலத்தில் நிகழ்ந்தவற்றை முறையிட்டார். தமிழ் முனிவன் முறையீட்டைக் கேட்ட தமிழ்க் கடவுளும் குற்றாலத்தில் உள்ள பெருமாளை சிவமாக்க வழி கூறினார்.

சில நாட்களுக்குப்பின் அகத்தியர் வைணவக் கோலமுற்று மிக்க ஆசாரமாக கோயிலுட் புகுந்தார். அங்கே சங்கு, சக்கரம் ஏந்திய பெருமாளை மனமுருகப் போற்றித் தொழுது, மகிழ்ந்து, திருக்கதவைச் சாத்தி அப்பெருமாளின் மேனியைத் தொட்டு சிவலிங்கத் திருமேனி யாக்கினார். அருகிருந்த ஸ்ரீதேவி, பூதேவியையும் முறையே குழல் வாய்மொழியம்மையாகவும், ஸ்ரீ பராசக்தி யாகவும் மாற்றினார். பின்பு திரிகூடநாதரின் சங்க வீதியில் தென்மேற்குப் பக்கத்தில் பெருமாளை வைத்துப் பூஜை செய்ய ஆவன செய்தார். இவ்வாறு மாற்றிய திருவுருவங்களை மிகவும் பய பக்தியோடு வணங்கிய பின் அகத்தியர் திருக்குற்றாலத்தில் இருந்து வெளியேறியதாக தலபுராணங் கூறுகிறது. இன்றும் குற்றாலத்தில் இறைவனைப் பகலில் தேவர்களும்,

இரவில் அகத்தியரும் பூஜை செய்வதாக இப்பகுதி மக்களின் நம்பிக்கை. குற்றாலநாதருக்கு நாளாந்தம் ஒன்பது காலப் பூஜைகள் நடை பெறுகிறது. பூஜைகள் மகுடாகம முறையில் முதலில் விநாயகருக்கும், அடுத்து தொல் பழங்கோயிலில் எழுந்தருளி இருக்கும் கூத்தப்பிரானுக்கும், மூன்றாவதாக மூலவராகிய திருக் குற்றாலநாத சுவாமிக்கு நடை பெறுகிறது.

## உற்சவங்கள்

குறும்பலா ஈசனாகிய குற்றால நாதருக்கு சித்திரைத் திருவிழா பத்து நாட்களுக்கு நடைபெற்று, புது வருடப் பிறப்பன்று நிறைவெய்தும். ஐப்பசித் திருவிழாவும் பத்து நாட்களுக்கு, நடைபெற்று ஐப்பசி முதலன்று நிறைவெய்தும். இவ்விரு திரு விழாக்களுக்கும், திருவிலஞ்சி முருகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராக பிரசன்னமாகி இருந்து திருவீதி உலா வருவர். ஐப்பசித் திருவிழா முதல் நாளன்று அப்பர் சுவாமிகளின் உழவாரப் பணிவிடை நடைபெறும். அப்போது அப்பரும் வீதி உலா வருவார். முதல் நாள் கொடியேற்றம், ஐந்தாம் நாள் தேர்த்திருவிழா, ஏழாம் நாள் காலை, மாலை இறைவனும், இறைவியும் வெள்ளிச் சப்பரத்தில் வீதி உலா வருவர். நடராசருக்குத் தாண்டவ தீபாராதனை நடைபெறும். பத்தாம் நாள் தீர்த்தோற்சவம். வருடத்தில் அடுத்து நடைபெறுவது, மூன்றாவது உற்சவம், தென்தில்லை எனப்படும் திருக்குற்றாலத்தில், திருவெம்பாவைத் திருவிழா மார்கழி மாதத்தில் பத்து நாட்களுக்குச் சிறப்பாக நடைபெறும். ஆடல் வல்லானாகிய கூத்தப் பிரானுக்குக் காலையும், மாலையும் தாண்டவ தீபாராதனை மகுடாகம முறைப்படி நடைபெறும், சிறப்பு ஆராதனையாகும். திருக்குற்றாலத் திருவாதிரைத் திருவிழா ஆராதனை களைக் காணக் கண்ணாயிரம் வேண்டும். இங்கே இறைவனுடைய, இறைவன் காட்டிய நடனக் காட்சியே ஒளி வடிவில் வெளிப்படுகிறது. இதுவே தாண்டவ தீபாராதனையாகும். தேவர்கள் விரும்பிப் பூஜை செய் கிறார்கள். இறைவன் காட்சி தருகிறார். தாண்டவ தீபாராதனை அற்புதம், அற்புதம்.

## குற்றாலம் - பொதிகை

"பொதிகை மலை விட்டெழுந்து சந்தனத்தின்
புதுமணத்தில் தோய்ந்து பூந்தாது வாரி
நதி தழுவி அருவியின் தோள் உந்தித், தெற்கு
நன்முத்துக் கடல் அலையின் உச்சி தோறும்
சதிராடி, மூங்கிலிலே பண் எழுப்பித்
தாழை யெல்லாம் மடற்கத்தி சுழற்ற வைத்து
முதிர் தெங்கின் இளம் பாளை முகம்சு வைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதிநோக்கி
அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச், செந்நெல்
அடி தொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை உடல் அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கச்
செல்வம்ஒன்றுவரும்,அதன்பெயர்தென்றற் காற்று"!

*-பாரதிதாசன்*

திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் மத்தியில் குற்றாலம் உள்ளது. தென்காசியிலிருந்தும், செங் கோட்டையில் இருந்தும் நேரத்திற்கு நேரம் தவறாமல் பேருந்துகள் விரைகின்றன. மேலும் திருநெல் வேலியில் இருந்தும், மதுரையிலிருந்தும் பேருந்துகள் குற்றாலம் வழியாகச் செல்கின்றன. புகையிரத மார்க்கமாகச் செல்வதானால் சென்னை - கொல்லம் தபால் வண்டி மூலமும் சென்னை செங்கோட்டை புகைவண்டி மூலமும் சென்ற செங்கோட்டையில் இறங்கி பேருந்தில் குற்றாலம் செல்ல முடியும்.

குற்றாலம் நீர்வள, நிலவள, மலை வளம், மிகுந்த பெருநகர். குற்றாலம் பருத்தி, மா, பலா, வாழை, கரும்பு, கமுகு, ஏலம், கராம்பு, சாதிக்காய், மிளகு, குங்கிலியம், தேன், முல்லை மலர்கள் மிகுந்த பிரதேசம். ஆண் மயில்கள் பேடையுடன் தோகை விரித்தாடும். வண்டுகள் ரீங்காரம் செய்யும். மலை அருவி மலர்களை அடித்து அள்ளி மிதந்து வரும். திருக்குற்றாலம் சிவபெருமான் கோவில் கொண்ட திருநகர். பாண்டி நாட்டின் தேவாரப் பாடல்பெற்ற பதிநான்கு சிவத்தலங்களுள் குற்றாலமும் ஒன்றாகும். திருக்குற்றாலத்தின் மறுபெயர்கள் திரிகூடாசலம், திரிகூட மலை, திரிகூடம் ஆகும். திரிகூடம் என்றால் மூன்று கொடு முடிகள் ஒன்றாகக் கூடியது. எனப் பொருள்படும். இதனால் பொதிகை மலையைத் திரிகூடமலை எனவும் அழைப்பர். குற்றாலத்திற்குப் பெருமை சேர்ப்பது, சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுப்பது, திருத்தல யாத்திரைத் தலமாக அமைந்தது, கோவிலும் குற்றால நீர் வீழ்ச்சியும், இதன் சுகந்தமும், சுவாத்தியமும், குழு குழு தன்மையும், தென்றற்காற்றும் ஆகும். சுற்றுலாத் தலமாகையால் இங்கே ஏராளமான சத்திரங்களும், சாவடிகளும், உணவ கங்களும் நிறைவாக உண்டு. தென் மேற்குப் பருவமழை தொடங்கியதும், பன்நாட்டு மக்களும் வருகை தந்து ஆனந்தமாகப் பருவகாலம் முடியும் வரை பல நாட்கள் தங்கி இருப்பர். அருவி நீராடுவர். மேலும் குற்றால யாத்திரை செல்ல மக்களைத் தூண்டுவது மூர்த்தி, தல, தீர்த்த விசேடமாகும். கோவிலைச் சுற்றிய நாநூறு ஏக்கர் நிலப் பரப்பையும் பெரு நகராக்கவும் பெரு வீதியாக்கவும் அரசு ஆவன செய்து வருகிறது. கோவில் நிர்வாகம் சமூக நல சேவைகளையும் செய்து வருகிறது. இலவச மருத்துவ நிலையம், தேவாரப் பண்ணிசைப் பள்ளி, பராசக்தி மகளிர் கல்லூரிக்குக் காணி நன்கொடை, நலிந்த கோவில்களின் நன்மை நிதியம், குழந்தை நலன், பசுப்பால் வழங்கல், சத்திரம், சாவடிகளில் சம பந்தி போசனம், பாரிய நூலகம், நூல்கள் வெளியீடு, குறிப்பிடத்தக்கவை ஆகும்.

## குற்றால நாதர் திருக்கோயில்

**இரண்டாந் திருமுறை பண் : காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

**திருந்த மதி சூடித் தெண் நீர் சடைக்**
**- கரந்து, தேவிபாகம்**
**பொருந்திப் பொருந்தாத வேடத்தால் காடு**
**- உறைதல் புரிந்த செல்வர்**
**இருந்த இடம் வினவில்-ஏலம் கமழ்**
**- சோலை இனவண்டு யாழ்செய்,**
**குருந்த மணம் நாறும் குன்று இடம் சூழ்**
**- தண்சாரல், குறும்பலாவே.**
*- சம்பந்தர் தேவாரம்.*

இறைவன் குற்றாலநாதர் நிழல் தரும் தல விருட்ஷமான குறும்பலா மரத்தின் கீழ் கோயில் கொண்டு உள்ளார். குற்றாலநாதர் கருவறையில் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து திருமுகங்களுடன் சிவலிங்க உருவில் அருள் பாலிக்கிறார். உலகில் வாழ்ந்து மறைந்த பெரியவர்களைத் திராவிடர்கள் தெய்வமாக வழிபட்டனர். இறந்த மனிதனின் உடலைப் புதைத்த இடத்திலேயே மரம் ஒன்று நாட்டி அம்மரத்தின் அடியில் நடுகல் நட்டு வழிபாடு செய்து வந்தனர். இந்த அடிப்படையிலேதான் தல விருட்ஷங்கள் தமிழகத்துத் திருக் கோவில்களில் காணப்படுகிறது. இது போலவே குறும்பலா குற்றாலத்தில் தல விருட்ஷமாகியது. இந்தக் குறும் பலாவின் கொப்பெல்லாம் நான்கு மறைகள், அதன் பழங்கள் எல்லாம் சிவலிங்கம், அதன் சுளைகளெல்லாம் சிவலிங்கம், அதன் வித்துக்கள் எல்லாம் சிவலிங்கம் என்றார் கவிராயர். இந்த மரத்தில் பழுக்கின்ற பழங்களை யாரும் பறிப்பதில்லை. அவை குற்றால மந்திகட்கே உணவாகிறது. தேன் போன்ற பலாச் சுளைகளை குற்றாலக் குறவர் தேனில் கலந்து குற்றால நாதர் திருமுன் படைப்பர். திருக்குற் றாலத்திற்கு இருபத்தியொரு திருப் பெயர்கள் உண்டு, எனத் தலபுராணம் கூறுகிறது. இறைவனைக் குற்றால நாதர், குறும்பலாவீசர், திரிகூடாசலபதி திருகூடாசலேஸ்வரர் என்றும் இறை வியைக் குழல்வாய் மொழியம்மை என்றுங்கைதொழுவர்.

ஆதியில் மாமன்னன் இராச ராசனால் வடிவமைக்கப் பெற்று, நாயன்மார்களால் பாடப்பெற்று, பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர், செட்டிநாட்டவரால் திருப்பணி செய்யப் பெற்று, மக்களின் பேராதரவைப் பெற்றுக் காலத்திற்கு காலம், குற்றாலநாதசுவாமி கோவில் முன்னேற்றம் கண்டு வந்தது. சங்கு வடிவத்தில் அமைந்த கோவில் இது. மகுடம் என்றால் சிரசு என்றும் பொருள் கூறலாம். மகுடாகம முறையில் குற்றாலநாதர் கோவில் வழிபாடு நடைபெறுகிறது. தீர்த்தம் சிவமது கங்கையாகும். இந்தப் புனித நீர்தான் அபிஷேக தீர்த்தத் திரவியமாகப் பயன்படுகிறது. குற்றாலமலையின் அடிவாரத்தில் சிவபெருமான் எழுந்தருளி உள்ளார். முன்னொரு காலத்தில் கங்கையானவள் சிவபெருமானை மதியாது பூமியில் பிரவாகித்து வந்தபோது அவள் ஆணவத்தை அடக்க இறைவன் அவளைத் தன்

சடையில் வைத்தார். அடங்கிய கங்கையும் இறைவனை வணங்கச் சிவபெருமானது ஆணையால் திரிகூட மலையின் உச்சியில் சிவலிங்கத்தை வைத்துத் தேனால் பூஜித்தாள், நற்பேறையும் பெற்றாள். கங்கை தேனால் பூஜித்தமையால் இத்தலத்தின் தீர்த்தம் சிவமது கங்கை ஆயிற்று. இவ்வருவியே தேனருவியென அழைக்கப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் குற்றாலநாதர் கோவில் பற்றிய செய்திகள் அதிகம் இல்லை ஆயினும், குற்றாலநாதர் கோவில் வழிபாடு சங்க காலத்தில் இருந்ததென்றே கருத முடியும். பல்லவர் காலத்தில் நாயன்மார்களால் பாடப்பெற்று, சோழர் காலத்தில் முதல் சுற்று வீதியும், பாண்டியர் காலத்தில் மூலவர், சிகரம், அர்த்த மண்டபம் இரண்டாவது சுற்று வீதியும், நாயக்கர் காலத்தில் சித்திரசபை, தேர், வாகனங்களும், உருவாகின். சங்க வீதியில் அமைந்துள்ள அறுபத்திநாலு சக்தி பீடங்களில் ஒன்றான குழல் வாய் மொழியம்மை என்னும் தரணி பீடம் 1925ல் செட்டி நாட்டவரால் பளிங்கு போல் இழைக்கப்பட்ட கருங்கல்லால் கட்டப்பட்டது. ஞானசம்பந்தரின் திருக்குற்றாலப் பதிகம், குறும்பலாப் பதிகம், அப்பரின் திருவங்கமாலை ஆகிய மூன்றையும், சலவைக் கல்லில் எழுதி, செப்பேடுகளிலும் பதித்துக் கொடுத்த பெருமை ஸ்ரீ காசிமடம் தம்பிரான் சுவாமிகளையே சாரும். வெள்ளிச் சப்பரம், வெள்ளி ரிஷபம், வெள்ளி மயில், சிற்பங்கள், வண்ண ஓவியங்கள் செப்புத் திருமேனிகள் குற்றாலத் திருக்கோயிலில் நிறைந்து காணப்படுகின்றன. நந்தா விளக்குகள் ஏற்ற; பசு நெய்க்காக பசுக்கள் பல தானம் செய்யப்பெற்றன. அற்புதமான விலையுயர் தங்க நகைகள், சுவாமிக்குத் தங்கக் கிரீடம், சிவகாமி அம்மையின் மாம்பழக் கொண்டை, தும்பிப் பதக்கம், உத்தரகுண்டலப் பதக்கம், நடராசர் வீர கண்டமணி, நீலகண்டம், சடைநாகம், சாமந்திப் பூமாலை, ஒட்டியாணம், திரு மாங்கல்யம், தங்க வீபூதிப்பட்டை, போன்றவை இன்றும் மிக்க பாதுகாப்புடன் உளது.

திரிகூட மண்டபத்தில் உள்ள சிற்பங்களில் யானை, குதிரை வீரர்களும், பழத்தை வாயில் வைத்துக் கொண்டும், கையில் பழத்தை ஏந்திக் கொண்டும், மரங்களில் இருந்து இறங்கும் மந்திகளின் சிற்பங்கள் மிகவும் அழகானவை. இருபுறமும் உள்ள கொடுங்கைகள்; பலாப்பழம் போல் அமைக்கப்பட்டு அவற்றைக் கிளி கொத்துவது போலவும், புறாக்கள் பறித்து வருவது போலவும் உள்ள சிற்பங்கள் மிகவும் உன்னதமானவை. ரிஷப வாகனத்தில் சுவாமி அம்பாள் சிற்பங்களை என்றென்றும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அகத்தியரால் தாபிக்கப்பட்ட சக்தி பீடத்தைச் சுற்றி சப்த மாதர்களாகிய பிராமி மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மாகேந்திரி, சண்டி, மகாலட்சுமி காணப் படுகின்றனர். கோவில் வாசலில்

துவாரபாலிகைகளாகப் பெண்கள் இருவர் வீரவசீகரமாக உளர்.

குற்றாலநாத சுவாமி கோவிலுக்குக் காலத்துக்குக் காலம் அரசர்களாலும், பிரபுக்களாலும், செட்டி நாட்டாராலும் வழங்கிய நன்செய், புன்செய் நிலங்கள், கட்டிடங்கள் மூலம் கிடைக்கும், நெல், பணம், தேங்காய், இளநீர், நந்தவனத்தில் இருந்து பெறப்படும் அன்றலர்ந்த மலர்கள், வருமானங்கள் கோவில் பூஜைகள் குறைவற நடைபெறப் பெரிதும் உதவுகின்றன.

## குற்றாலம் சார்ந்த கோவில்கள்

திருக்குற்றாலநாத சுவாமி கோவிலின் நிர்வாகத்தின் கீழ் பன்னிரண்டு கோவில்கள் உள. இவற்றுள் மூன்று முக்கிய கோவில் களைப் பார்ப்போம்.

## சித்திர சபை

சித்திரசபை குற்றாலநாதர் திருக்கோவிலுக்கு வடபால் தனிக் கோவிலாக உளது. இந்தச் சித்திர சபையில் தான் சிவபெருமான் திருக்கூடத்தாட உமையாள் தாளம் கொட்டிக் களித்து நின்றாராம். சிவபெருமான் திருநடம் புரியும் ஐந்து சபைகள் தமிழ் நாட்டில் உண்டு. இவற்றில் குற்றாலத்தில் உளது சித்திரசபை (ஓவிய வடிவிலுளது). சித்திர சபைக்கு எதிரில் தெப்பக்குளம். இந்தத் தெப்பக்குளம் நடுவில் மணி மண்டபம். இதன் சபா மண்டபத்தில் நுழைந்தால் குறவஞ்சிச் சிலைகளின் அருமையான காட்சிகளைக் காணலாம். கீழே கற்பீடம். மேலே முன் மண்டபம் மட்டும் மரத்தாலானவை. விமானம் செப்புத் தகட்டாலானது. எட்டுக் கலசங்கள் விமான உச்சியில் மிக அலங்காரமாக உளது. சித்திரசபையின் வெளிச்சுற்றில் ஊர்த்துவ தாண்டவம், பத்திரகாளி, மயிலேறும் முருகன், சூரபத்மன், சிங்கமுகன் தாரகன் மன்மதன் ரதி ஆகிய உருவங்கள் வண்ணத்தில் உள. கொடுங்கைகளின் அழகு பார்த்து அதிசயிக்கத் தக்கது. சித்திரசபையின் உள்ளே நடராசர் சிவகாமி அம்மையுடன் தேவர்கள் தொழுமாறு அழகான சித்திரமாக உள்ளார். பார்வதி பரமேஸ்வரன் திருமணக் காட்சிச் சிற்பம் - அதன் அழகு, வாயால் வர்ணிக்க முடியாது.

மர வேலைப்பாடு உள்ள தூபியில் கண்ணாடி உளது. அகத்தியருக்குக் காட்சி தந்தது போன்ற பல சிற்பங்கள் உள. சித்திர சபை கிழக்கு நோக்கி இருக்கிறது. உள்ளே நடராஜர் சிற்பம் தெற்கு நோக்கிய நிலையில் இருக்கிறது. குற்றாலப் பெருந் திருவிழாவான எட்டாம் திருவிழா அன்று நடராஜப் பெருமான் ஆலயத்தில் இருந்து சித்திரசபைக்கு எழுந்தருளி பச்சை சாத்தி ஆஸ்தானம் திரும்புவர். சித்திர சபையிலே, சிவபெருமான் கூத்தாடிய வண்ணம் இருப்பதை, மணிவாசகர் தனது திருவாசகத்தில், திருவாரூரில் அருளிய திருப்புலம்பல் எம்மையெல்லாம் கசிந்துருக வைக்கிறது.

கொச்சகக் கலிப்பா

**உற்றாரையான் வேண்டேன்**
**- ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்**
**கற்றாரை யான்வேண்டேன்**
**- கற்பனவும் இனியமையுங்**
**குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா**
**- உன் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக் கசிந்துருக**
**- வேண்டுவனே**

*-மணிவாசகர்.*

என்று கண்ணீர் மல்கினார்.

திரோபம் (மறைத்தல்) தொழிலைச் செய்யும் நடமாடும் இறைவனுக்கு சிவாச்சாரியர்கள் தாண்டவ தீபாராதனை செய்கின்றனர். உமையாள் இன்னிசை பாட, தாளத்திற்கு ஏற்ப ஆடும் நடனத்தைத் தேவர்களும் தேவ கணங்களும், தவத்திலுயர்ந்த முனிவர்களாகிய பதஞ்சலி, வியாக்கிர பாதரும் கண்டு களித்தனர்.

சித்திரசபையானது ஐந்தருவிச் சாலையில் தனிக்கோவில் போலுளது. சித்திரசபை முன் உள்ள மண்டபத்தில் இருபத்திநான்கு தூண்கள் அலங்கார மாக உளது. நடு நாயகமாக நந்தி சிற்ப வேலைபாடுகளுடன் கூடிய மரக்கதவு பரந்து விரிந்த கற்றள வரிசைகள். இவை 17ம் நூற்றாண்டைச் சார்ந்தவை. செப்போடுகளைக் கூரையின் மேல் பொருத்த 1008 செப்பாணிகள் பொருத்தப் பட்டன. இந்தச் செப்பாணிகளில் பிரணவ மந்திரம் எழுதப்பட்டுளது.

## செண்பகாதேவி அம்மன்

செண்பக மரங்கள் நிறைந்த சோலைகளின் மத்தியில் அமைந்த அழகிய சிறிய கோவில், கருவறையில் மூன்று தேவியர்கள் எழுந்தருளி உள்ளனர். செண்பகாதேவியின் பெருமை தல புராணத்திலும் உள. தெற்குப் பக்கத்தில் பேச்சி அம்மை வலக் கரங்களில் உடுக்கை, சூலம் இடக் கரங்களில் கிளி, தீ தெரிகிறது. அருகில் செண்பக அருவி, நீராட வசதி உண்டு. குற்றாலநாதர் திருவிழா சிறப்புற நடைபெற முதல் வழிபாடு இங்கே தான் நடைபெறுகிறது. வனவிலங்குகள் இங்கே அதிகம் உலாவுகின்றன.

## கூத்தர் கோவில்

அப்பரும் மணிவாசகரும் பாடிய கோவில். சோழன் கோச்செங்களான் காலத்தில் கட்டப்பட்ட செங்கற் கோயில். தல விருட்ஷம் செண்பக மரம். பெரிய புராண உரையில் திருக்குற்றாலத்தில் இரண்டு சிவன் கோயில்கள் இருந்தன, என்ற செய்தியை ஆராயும்போது தொல் பழங் கோயில் கூத்தர் கோயில் தான் என்ற உண்மை உய்த்து உணர முடிகிறது. பிற்காலச் சோழர்கள் குறும் பலா ஈசர் கோவிலையும், கூத்தர் கோவிலையும் இணைத்து குற்றாலநாதர் கோவில் என ஒரே பெரிய கோவிலாக அமைத்தனர். இருந்தபோதும் கூத்தர் கோவில்தான் தொல் பெருங்கோவில் என ஒரே பெரிய கோவிலாக அமைத்தனர். இருந்த போதும் கூத்தர் கோவில்தான் தொல்பெருங் கோவிலாக இருந்த

காரணத்தால் கூத்தர் கோவில் பூஜைகள் நடந்தேறிய பின் தான் குற்றாலநாதர் கோயில் பூஜைகள் ஆரம்பமாகின்றன.

## மேலகாரம் செண்பக விநாயகர்

குற்றாலத்தில் இருந்து தென் காசி செல்லும் வழியில் இயற்கையான சூழலில் இக்கோயில் அமைந்துளது. இந்தக் கிராமத்தில்தான் திரிகூடராசப்ப கவிராயர் வாழ்ந்தவர். தனது அனைத்து இலக்கியங்களையும், இந்த விநாயகரைத் துதித்த பின்னரே பாட ஆரம்பிப்பார். குற்றாலநாதர் ஆண்டுக்கு ஒரு முறை மேலகரம் வருகிறார். இங்கே தங்கி இருந்து, இந்த ஊரில் தனக்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்களைப் பார்வையிட்டு அறுவடை மசூலைப் பெற்றுத் தனது ஆஸ்தானம் திரும்புவதாக மக்களிடையே ஓர் நம்பிக்கை.

## திருவிலஞ்சிக் குமரன் கோயில்

குற்றாலம் - செங்கோட்டை சாலையில் ஐந்தருவியும், சித்திரா நதியும் கலக்கும் கரையில் வளமான நெல் வயல்கள் சூழ்ந்த நிலப்பரப்பில் முருகப் பெருமானுடைய திருக்கோவில் அமைந்துள்ளது. வற்றாத நதிக் கரையில், சுற்றுமதில் சூழ கோபுரம், கொடிமரம் யாவும் உள்ள தனிக் கோயில். முருகப் பெருமான் குற்றாலநாதர் திருவிழாக் காலங்களில் எழுந்தருளி வருகை தந்து, பத்து நாட்களும் குற்றாலத்தில் தங்கி இருந்து, திருவிழாக் காலங்களில் குற்றாலநாதரோடு வீதி வலம் வருவர். வைஷ்ணவ ஆச்சாரியர்கள் அகத்தியரைத் தடுத்து நிறுத்தியபோது அகத்தியருக்கு உதவிக் கரம் நீட்டியவர் திருவிலஞ்சி முருகன்தான். பழமையான இந்தக் கோவிலைப் புதுப்பித்தவன் குலசேகர பாண்டியன் ஆவான்.

## அகத்தியர்

**திங்கள் முடி சூடுமலை தென்றல்**
**- விளை யாடுமலை**
**தங்க புயல் சூழுமலை தமிழ்**
**- முனிவன் வாழுமலை**
**அங்கயற்கண் அம்மைதிரு வருள்**
**- சுரந்து பொழிவதெனப்**
**பொங்கருவி தூங்குமலை**
**- பொதியமலை யென்மலையே.**

*- மீனாட்சியம்மை குறம்*

தமிழ் முனிவராகிய அகத்தியர் வாழும் மலை பொதியமலை ஆகும். பொதியமலை பாண்டி நாட்டில் உள்ள மலை. ஒருகால் தேவரெல்லாம் கூடியிருந்த இடம், ஆதலின் பொதிய மலையைப் பொதுவில் என வழங்கினர். அகத்தியர் குறுகிய வடிவம் உடையவர். அகத்தியரின் வலக் கையில் கமண்டலமும், இடக் கையில் எழுத்தோலையும் உளது. அகத்தியர் தமிழிலக்கண ஆசிரியராகையால் பொதியமலை தமிழ் பிறந்த பொருப்பென்றும் கூறுபர். பொதிய மலையில் சந்தன மரங்கள் அதிகம். ஆகவே தெனறல் காற்று இம்மரங்களில் தோய்ந்து இனிமை பெற்றதென்று தமிழ் நூல் வல்லார் பெருமிதம் உறுவர். இமைய மலையிலும் பார்க்கப் பொதிய மலை காலத்தால் முந்தியது.

பொதியமலை மேற்கு மலைத் தொடரில் ஒரு பகுதி. ஏக பொதிகை யின் அருகில் பொருநை என்ற தாமிரபருணி ஆறு ஊற்றெடுக் கிறது. தமிழ் நாகரிகத்தின் பிறப்பிடம் இது ஆகும். கிழங்கு கிள்ளி, தேனருந்தி, யானைத் தந்தம் ஒடித்து, தினை இடித்து, தேனும் தினைமாவும் உண்டு வாழ்ந்த மக்கள் பொதிய மலைச் சாரலில் வாழ்ந்தவர்கள்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் செந்தமிழிற்கு இலக்கணம் அளித்தவர் அகத்தியர் பெருமான். அகத்தியம் என்ற இலக்கண நூலை இயற்றியவர், இறை நிலைக்கு உயர்ந்தவர். அகத்தியருக்கு கோவிலும் உண்டு. முதற் சங்க காலத்தில் வாழ்ந்தவர். அகத்தியம் 12,000 சூத்திரங்களைக் கொண்ட இலக்கண நூல். இந்த நூல் இப்போது இல்லை. தேவாரத் திருப்பதிகங்களை ஒன்று சேர்த்தவர், அகத்தியர் சேக்கிழாரின் பெரிய புராணத்தை வடமொழியில் எழுதியவர். கடல் கடந்து தூர கிழக்கு நாடுகட்கெல்லாம் சென்றவர். இமைய மலையில் சிவபெருமான் பார்வதி தேவியாரைத் திருமணம் செய்தபோது வடநாட்டில் பலரும் கூடியதால் அப்பகுதி தாழ்ந்து தென்நாடு உயர்ந்தது. இவ்வாறு உயர்ந்த தென்நாட்டைச் சமமாக்க சிவபெருமான் அகத்திய முனிவரை தென் நாட்டிற்கு அனுப்பி வைத்தார். அப்போது அகத்தியர் முருகப் பெருமானிடம் தமிழ் கற்று தென்நாடு வந்தார்.

## கல்வெட்டுக்கள் - செப்பேடுகள்

திருத்தலக் கட்டுரைகளைத் தொகுத்து எழுதும்போது அரச பரம்பரையினர் ஆற்றிய திருப்பணிகளை எடுத்து இயம்புவது கல்வெட்டுகளும் - செப்பேடுகளும் ஆகும். சோழர் காலத்தில் பல்லவர் நிர்மாணித்த செங்கற் கோவில்கள் கருங்கற் கோவில்களாக மாறியது. குற்றாலத்தில் கிடைத்த கல்வெட்டுக்கள் எண்பத்து ஒன்பது ஆகும். இவற்றில் பதினான்கு பிற்காலச் சோழர்களுடையது. இந்தக் கல் வெட்டுகளில் பதினெட்டு வட்ட எழுத்துக்களிலும் எஞ்சியவை தமிழ் எழுத்துக்களிலும் உள. செப்பேடுகள் நாயக்க மன்னர்களால் வழங்கப் பட்டவை. பழைய கோயிலை இடித்த பொழுது அதில் காணப்பட்ட வட்ட எழுத்தில் அமைந்த கல்வெட்டுக்கள் தமிழ்ப் படுத்தப்பட்டு புதிய கோயிலில் பொறிக்கப்பட்டன. இன்றைய கோயில் இராசராசன் காலத்தைச் சார்ந்தது. சோழர் கோயிலைப் புதுப்பிக்கும்போது குற்றாலத்துக் கூத்தன் கோயிலையும், குறும்பலா ஈசன் கோயிலையும் ஒன்றாக இணைத்து பெரிய கோயிலாகக் கட்டி இருக்க வேண்டும்.

குலகேசர தேவ பாண்டியன் காலத்தில் வணிகன் ஒருவன் கோயிலுக்கு நன்கொடையாக வெள்ளிப் பாத்திரங்கள் வழங்கிய செய்தியும், இதேபோல் காலை நேரத்தில் மேலகரம் கைலாசநாத பட்டருக்கு வேதம் ஓத காணி மான்யமாகக் கொடுபட்ட செய்தியும் இதற்கு மேலாக குற்றாலநாதர் சந்நிதியில்

புராண படனத்திற்கு நிலமளித்தமையும், அம்மன் சந்நிதியில் தேவாரம் பண்ணிசைக்காக மெய்கண்ட தேவன் சிந்தாமணி என்பவருக்குப் பாண்டிய மன்னன் காணி மான்யமாக வழங்கியதையும் கல்வெட்டுகளில் கண்டறிய முடிகிறது. 921 - 922ல் பாண்டி நாட்டை ஆண்ட சடையன் மாறன் கல்வெட்டுப்படி ஆயன்குட்டன் ஏன்னும் வணிகப் பெருமகன் விளக்கு எரிக்க மூன்று எருமைகள் வழங்கிய செய்தியும் காணப்படுகிறது. முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற மன்னர் குற்றாலத் தல புராணம், உலா, அந்தாதி, குறவஞ்சி போன்ற இலக்கியங்கள் இயற்றிய திரிகூட ராசப்பக் கவிராயரைப் பாராட்டி, கோவில் வித்வானாக நியமித்துக் குறவஞ்சி மேடு என்னும் விளை நிலத்தை இறையிலியாக வழங்கிய செய்தி தாங்கிய செப்பேடு இன்றும் குற்றாலத் திருத்தலத்தில் பாதுகாப்பாக உளது.

## குற்றாலக் குறவஞ்சி

இந்நூல் ஓர் இனிமையான நாட்டிய நாடகம் ஆகும். குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் ஆவார். ஏறக்குறைய முந்நூறு வருடங்கட்கு முன் இயற்றப் பெற்றது. இந்நூல் திருக் குற்றாலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானை பாட்டுடைத் தலை. வனாகக் கொண்டு பாடப்பெற்ற நூல். சொல்லழகு, பொருளழகு, கருத்தாழம் மிக்கது. இக்குறவஞ்சி, ஓசை இன்பம் பாமரரும் விளங்கக்கூடிய இனிய, சுவை மிக்க இலகு தமிழ் நடையிலுள்ளது. குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் குற்றால நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பதினான்கு இலக்கியங்களைப் படைத்துள்ளார். திருக்குற்றாலக் குறவஞ்சியின் சிறப்பைக் கண்டு வியந்த தென் தமிழகத்தை ஆண்ட முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கரவர்கள் திரிகூடராசப்பக் கவிராயருக்கு வித்துவான் என்ற பட்டம் சூட்டி, ''குறவஞ்சிமேடு'' என்னும் நன்செய் நிலத்தை ஈந்து அதற்குரிய செப்பேடும் பொறித்து கவிராயருக்கு உரிமையாக்கி கை யொப்பம் இட்டு வழங்கினார்.

குறவஞ்சி என்னும் சொல்லிற்கு குறமாது என்பது பொருள். குறவரின் வாழ்விடம் மலைநாடு ஆகும். குறவரின் தொழில் பறவை பட்சிகளை வேட்டை ஆடுதல், பாம்பாட்டுதல், கூடை பின்னு தல், கயிறு திரித்தல், திருகணை, உறி, புட்டில், பாய் பின்னுதல், குறி சொல்லுதோடு, குறமகளிர் பரண் மீது இருந்து தினைப்புனத்தைப் பாதுகாக்க இரைதேடி வரும் பட்சிகளைக் கவண் வீசிக் கலைப்பதுமாகும்.

குற்றாலநாதர் உலா வருகிறார். இறைவன் உலா வரும்போது, அவரைக் கண்ட ஏழு வகைப் பருவப் பெண்களான, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்கள் இறைவனிடம் மனதைப் பறிகொடுத்து, காதல்

வயப்பட்டு, உணர்விழந்து நிற்கும் நேரத்தில் இவ்வண்ணம் வருந்தும் தோகையர்க்குக் கைக்குறி பார்த்து குறி சொல்ல வருகிறாள் குறவஞ்சி அவள் குறி சொல்லும் வண்ணத்தைப் பார்ப்போம்.

**இராகம் - தோடி தாளம் - ஆதி**

**பல்லவி**

**வித்தாரம் என்குறி அம்மே! - மணி**
**முத்தாரம் பூணு முகிழ் முலைப் பெண்ணே!**
**வித்தாரம் என்குறி யம்மே!**

வித்தாரம் =பெரியது, சிறந்தது குற்றாலக் குறவஞ்சி போல், மீனாட்சியம்மை குறம்
கொடுமளூர்க் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி போன்றவை மிகவும் தித்திப்பானவை.

## குறவஞ்சியின் தோற்றம்

குறமகள் வெண்சேலை உடுத்து, குன்றி மணிமாலை, பாசிமணி மாலை அணிந்து, இடுப்பில் தாங்கிய கூடையும், வலது கையில் குறி சொல்லும் மாத்திரைக் கோலும் கொண்டு, நீறணிந்த நெற்றியினளாய், பூச்சூடி பொட்டிட்டு, குலுக்கு நடையும், மொழிக்கொரு பசப்பும் விழிக்கொரு சிமிட்டும், ஊர்வசி, அரம்பை, போன்ற தேவமாதர்கள் தோற்றுப்போக, முனிவரும் சித்தரும் வாய் பிளந்து நிற்க, குற்றால அருவியைப் பார்க்கச் சொல்லி, அருவியின் இரைச்சலைக் கேட்கச் சொல்லி, அருவியில் முகிழ்ந்து எழச் சொல்லி, மந்திகள் குற்றாலத்தில் கொப்பு விட்டு கொப்பு பாய்வதைச் சொல்லி, மந்திகள் கனி கவரும் பாங்கைச் சொல்லி, அக்கனிகள் தேன் பிலிற்றுவதையும், குற்றால நன்நகரில் செந்தமிழும் தென்றலும் சேர்ந்து தவழுவதையும் தென்பாண்டி நாட்டின் வளத்தையும், குற்றாலநாதரின் பெருமையையும், குறத்தி தான் குற்றாலநாதருக்கு உறவானவள் என்பதையும், தன் முத்துப்போன்ற வெண் பற்களை உடைய செவ்வாயால் தலைவிக்குக் குறி சொல்ல வந்த நோக்கத்தையுங் கூறி, குறியும் சொல்லி, வசந்தவல்லிக்கு உன் தலைவர் திரிகூடநாதர் என்று சொன்னதும்; தலைவி நாணத்தால் தலை குனிந்து குறத்திக்குப் பரிசாக பல தங்க நகைகளை அணிவித்தாள்.

## குற்றால இலக்கியங்கள்

தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர் திருக்குற்றாலப் பதிக மொன்றும், திருக்குறும்பலாப்பதிகம் ஒன்றும், அப்பர் சுவாமிகள் அருளிய திரு அங்க மாலையும், மணிவாசகர் ஊனினை உருக்கும் திருவாசகத்தில் திருப் புலம்பலும், திருக்கோவையாரில் குழல்வாய் மொழி அம்மையின் எழிலையும் பாடியுள்ளார். மேலும் அருணகிரிநாதர் தனது திருப்புகழில் திருவிலஞ்சி முருகப் பெருமானையும், திருப்பத்தூர் புராணத்தில் திரிபுர தாண்டவம் ஆடிய செய்தியையும், அழகுறப் பாடியுள்ளார். கந்த புராணத்தில் சித்திர சபையில்

நடம்புரிந்த சிறப்பையும், பட்டினத்தடிகள் அந்திம காலத்தில் குற்றாலக் கூத்தனை நினைவு கூர வேண்டிய தன்மையையும் கூறி, சேக்கிழாரும் தனது பெரிய புராணத்தில் குற்றாலக் கூத்தனைப் போற்றியுள்ளார். திரிகூடஇராசப்பக்கவிராயர் தாம் இயற்றிய பதிநான்கு சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் திருக்குற்றாலத் தலத்தையே பாட்டுடைப் பொருளாக வைத்துப் பாடியுள்ளார். இவற்றுள் குற்றாலக் குறவஞ்சி இன்று மேல் வகுப்பு மாணவர்கட்குப் பாட நூலாகத் தமிழ் நாட்டில் அமைந்துள்ளது. குற்றாலத் தல புராணமும் ஆய்வு மேற்கொள்ளப் பல விடயங்களைத் தந்து உதவுகிறது.

## ரசிகமணி டி கேசி

குற்றாலம் என்றால் குற்றால நாதர் கோவிலும் கோபுரமும், கூத்தப்பிரான் சந்நிதியும், தேரும் திருவிழாவும், பாட்டும் பரதமும், தவிலும் தாளமும், சிற்பமும், சித்திரமும் நிறைந்த தென்காசி நகரமாகும். இங்கே குற்றால அருவி வீழ்ச்சியும், தென்றலும், குளிர்மையும் கூட இருக்கும். குற்றாலக் குறவஞ்சி தோன்றிய திருவிடம் தென்காசியை அடுத்த மேலகரம் என்னும் நகரமாகும். எனவே இந்தத் திருவிடயங்களை நோக்கும் போது எனது மனக்கண் முன் தோன்றுவது நிறைவாழ்வு வாழ்ந்த ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாராவர். **''தோன்றிற் புகழொடு தோன்றுக''** என்பதற்கிணங்க 1881ம் ஆண்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் ரோகிணி நட்சத்திரத்தில் அவதரித்தார் எங்கள் ரசிகமணி. நெடி துயர்ந்த தோற்றம், நீண்ட கைகள், செந நிறம், நீண்ட மூக்கு, அடர்த்தியான மீசை, சந்தனப் பொட்டு இவை தாம் ரசிகமணியின் தோற்றம் ஆகும். தென்காசியில் ஓங்கி வளர்ந்த மரங்களும், மா, பலாத் தோப்புகளும், தென்னங் கன்றுகளும், நிறைந்த ஆற்றங் கரையிலே சம்பாத் தெருவிலே ரசிகமணியின் பூர்வீக மனை அமைந்து இருந்தது. நன்செய், புன்செய் நிலங்களும் பால், தயிர், நெய், கல்வி, பண்பாடு, இடம், பொருள், ஏவல் நிறைந்த வசதி மிக்க குடும்பம். மன்னர் போல் வாழ்ந்த காரணத்தால் இராமாயணம், முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களைப் படிக்கவும், ரசிக்கவும் ரசிகர் குழாத்தை தம் வீட்டில் அழைத்து இன்முகத்தோடு விருந்தோம்பவும் பெரு வாய்ப்பாய் அமைந்ததெனலாம்.

ஐந்து வயதில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து முதலில் மணலில் எழுதிப் பழகினார். பின் ஏடு எழுத்தாணி கொண்டு ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். ஈற்றில் தமிழை, ஆங்கிலத்தை ஆழக்கற்று B.A.B.L பட்டங்கள் பெற்று வக்கீல் ஆனார். 1927ல் M.L.C ஆனார். 1930ல் இந்து அற நிலைய ஆணை யாளரானார். இந்தப் பட்டம், பதவிகள் இவர் உயர ஏணியாக அமைந்தது. மட்டுமே! ஆனால் தமிழ் இலக்கிய காவிய நயம், அதன் மேல் கொண்ட மோகம் தான், தமிழுலகில் ரசிகமணியின் புகழை இமயம் போல் உயர்த்தியது.

குற்றாலத்தில் ரசிகமணியின் வீடு பாவலர்களையும், பாமரர்களையும், படித்த மேதாவிகளையும் ஈர்க்கத் தொடங்கியது. வீட்டிற்கு வந்த விருந்தாளிகட்கு அடுக்களையில் சாதம், சாம்பார், அவியல், பொரியல், அப்பளம், மோர், ரசம் யாவும் தயாராகி இலையில் பந்தி பரிமாறப்படும். விருந்தினருடன் ரசிக மணியும் கூட இருந்து உணவு உண்பதுவே ஒரு தனி அழகு. திருச்சி வானொலியில் நடைபெறும் கவி யரங்கிற்கு ரசிகமணி தலைமை ஏற்று நடத்த அழைக்கப்படுவார். பழைய காலத்தில் தென்காசியில் வாகன வசதி மிகக் குறைவு. ஆகவே ரசிகமணி கூடார வண்டியிலேயே பிரயாணம் செய்வார். மாட்டு வண்டிப் பிரயாணத்தில் கூட கையில் கம்பராமாயணம் இருக்கும். நாட்செல்லச் செல்ல ரசிகமணியின் வீடு காவியக் கலாசாலையாக மாறியது. சதா இலக்கிய ரசிகர் குழாம் ரசிக மணியைச் சூழவே இருப்பர். ஆனந்த விகடனில் டி.கே.சி யின் கட்டுரைகள் வரத் தொடங்கின. தமிழகமும், ஏன் ஈழமும் இவற்றை விரும்பிப் படித்தது. கவிதை வகுப்புகள், நூல் நயம் காணல் தாம் அனுபவித்த சுவைத்த கம்பராமாயணப் பாடல்களை ஏனையோர்க்கு விளக்கிய வண்ணமே இருப்பார். ரசிக மணியின் வீடு தமிழாயும் தமிழ்ச் சங்கமாயது. தமிழ் இலக்கியம் ரசிக மணியை மதுபோல் மயக்கியது ரசிகமணியின் கம்ப ராமாயண முத்தொள்ளாயிர விரிவுரைகள் எளிமையாகவும் தெளிவாகவும் அழகாகவும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பிரசங்கமாகவும் அமைந்திருந்தன. ரசிகமணியின் கவிநயம் காணும் தன்மை கற்றவரையும், கல்லாதவரையும் இவர் பால் சுண்டி இழுத்தது. ரசிகமணியின் தலைவாசல் காலை, மாலை, இரவு எல்லாம் தமிழாயும் புனித இடமாகவும் மாறியது. பாவத்தோடு பாடுவார். இவரது உரையில் நகைச்சுவை மிகுந்து இருக்கும்.

இராஜாஜி அவர்கள் ஒரு முறை ரசிகமணியை "ஸ்ரீ இராமன் கம்பர் உள்ளத்தில் எப்படி அவதரித்தாரோ அவ்வாறே கம்பரும் டி.கே.சி யின் உள்ளத்தில் அவதரித்தார்" எனப் புகழ்ந்து உரைத்தார். தமிழ்க் காவிய நயம் பெருக வேண்டி, அந்தப் பேரவாவால் தனது பொருளை அள்ளி அள்ளிக் கொடுத்த வள்ளல் ரசிகமணி நல்ல சாரல் நேரங்களில் சிறிது நேரம் அருவி நீராடுவார், ரசிகமணி 1926ல் தனது குடும்பத்தினரோடு தமிழகத் தல யாத்திரை மேற்கொண்டார். டி.கே.சி யின் அந்தஸ்து, கல்வி, பதவி யாவும் இமயம் போல் வளர்ந்து வந்தது. கல்கியில் 'கம்பர் தரும் காட்சி' தொடராக பன்னிரண்டு வருடங்கள் ரசிகமணி எழுதி வந்தார். கல்கி வார ஏட்டைத் தமிழுலகம் எங்கும் வார முடிவில் தேடி, ஓடி, வாங்கிப் படித்து வந்தது. கவிதைகளைச் சந்தி பிரித்து தெளிவு படுத்திச் சந்தம் கொடுத்து எல்லோரும் பாடுவதற்கு ஏற்ற முறையில் எழுதி வந்தார். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ரசிகமணிதான் பாடல்களின் பொருளை

நல்ல அரிய, எளிய வசனங்களாக்கித் தெளிவு படுத்தியவர். போலிக் கவிதைகளை, செருகு கவிதைகளை இடைச் செருகல்களைக் கண்டறிந்து அவற்றை நீக்கி, பிழைகளைத் திருத்தி கம்ப ராமாயணத்தின் மூன்று காண்டங்களை வெளியிட்டார். பழைய காலத்தில் ஏன் இந்த இடைச் செருகல் கவிதைகள் கம்பராமாயணத்தில் புகுந்தது? பெரும்பாலும் ஓலைச் சுவடிகள் கறையான் அரித்தும் நனைந்தும், இன்னும் காலத்தால் சிதிமலடைந்தும் இருந்த பகுதிகளை நீக்கி நிரப்பினா் பலர் இவை தாம் இந்த இடைச் செருகல்கள். ரசிகமணி இவற்றைக் கண்டறிந்து நீக்கி உண்மையான கவிதைகளைப் பிழையறப் பதிப்பித்தார். இவ்வண்ணம் நீக்கியதைப் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் போன்றோர் ஏற்கவில்லை.

ரசிகமணி தமிழ்த் தாயின் பொன்முடியைத் தலைவாரி, கொண்டையிட்டு, பூச்சூடி, பொட்டு வைத்து அலங்காரம் செய்தவர் "கம்பர் தரும் இராமாயணம்" வெளியீட்டு விழா 1953ல் குற்றாலத்தில் நடந்தது. இந்தியாவை ஆண்ட இராஜாஜி அவர்கள் தலைமை தாங்கினார். கற்றறிந்த பெரியோர் சபை கூடி இருந்தது. குற்றால மைந்தரான ரசிகமணியின் புகழ் கேட்டு தமிழுலகம் தலை வணங்கியது. மங்களமாக வைபவம் நிறைவெய்தியது. காலங் காலமாக சங்கீதம் என்றால் பிறமொழி, எவருக்கும் விளங்காத மொழி, இதனால் தமிழிசையின் அவசியத்தை ரசிகமணி சொல்ல, அந்தக் கருத்துக்களை அப்படியே ஏற்றார் ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள். தாமதம் இன்றி ரசிகமணி முத்துத் தாண்டவர், மாரிமுத்தாபிள்ளை ஆனை ஐயா, அருணாசலக் கவிராயர், கோபாலக் கிருஷ்ணபாரதி போன்றவர்களின் பாடல்களை எடுத்து கீர்த்தனை, பதம் என்றும் பிரித்து தமிழிசைப் பாடல்கள் என்று வெளியிட்டார் ரசிகமணி.

திருமதி ருக்மணி அருண்டேல் சிறந்த நடன மாதரசி, நடன ஆசிரியரும் கூட ரசிகமணி இவர்களிடம் "குற்றாலக் குறவஞ்சி" பாடல்களைப் பத்து நாட்களாகத் தொடர்ந்து விளக்கி வந்தார். ருக்மணி அம்மையார் கேட்டு மகிழ்ந்தது மாத்திரமல்ல குறவஞ்சியை நாட்டிய நாடகமாகத் தயாரித்து அரங்கேற்றினார். பக்தி, பண்பாடு, ஞானம் கல்வி, தமிழிசை கூடிக் குலாவியது குற்றாலத்தில்.

## டி. கே. சி. பதிப்பித்த நூல்கள்

01. முத்தொள்ளாயிரம்
02. கம்பராமாயணம் (மூன்று காண்டம்)
03. கம்பர் தரும் இராமாயணம்
04. இதய ஒலி
05. கம்பர் யார்?
06. அற்புத ரசம்
07. கடிதங்கள்
08. வாழ்க்கைக் குறிப்பு

திருக்குற்றால வரலாறு, உற்சவங்கள், குற்றாலம்-பொதிகை குற்றாலநாதர் திருக்கோவில், குற்றாலம் சார்ந்த கோவில்கள் சித்திரசபை

செண்பகாதேவி அம்மன், கூத்தர் கோவில், மேலகரம் செண்பக விநாயகர், திருவிலஞ்சிக் குமரன் கோயில், அகத்தியர், கல்வெட்டுக்கள் செப்பேடுகள், குற்றாலக் குறவஞ்சி, குறவஞ்சியின் தோற்றம் குற்றால இலக்கியங்கள் ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள் பற்றி ஓரளவு தொகுத்து விரித் துரைத்தோம்.

## தொகுத்து எழுத உதவிய நூல்கள்


01. திருக்குற்றாலநாத சுவாமி கோவில்
முனைவர் சொ.சுப்பிரமணியக் கவிராயர்.

02. நலம் தரும் தமிழ் நாட்டுத் திருக் கோவில்கள் (1)
திரு.கே.பாலசுப்பிரமணியம்

03. திருமுறைத் தலங்கள்
புலவர் பு.மா.ஜெயசெந்தில் நாதன் எம்.ஏ.

04. திருகுற்றாலத் தலபுராணம்
வித்துவான் மேலகரம்
திரிகூடராசப்பக்கவிராயர்

05. திருகுற்றாலக் குறவஞ்சி
வித்துவான் மேலகரம்
திரிகூடராசப்பக் கவிராயர்

06. தேவாரம், திருவாசகம்.

07. கலைக் களஞ்சியம் 1-4

08. மாந்தருள் ஓர் அன்னப்பறவை
திரு.கி.ராஜநாராயணன்

09. ரசிகமணி டி.கே.சி.வித்வான்
ல.சண்முகசுந்தரம்

10. பாரதிதாசன் கவிதைகள்

11. மீனாட்சியம்மை குறம்.


## திருப்புகழ்

ஆறுமுடி யாட
ஆறுமுக மாட
ஆரவடமாட - வரைபோலி

ஆறுபுயமாட
ஞான அருளூறி
ஆறு விழியாட - நகையாட

வீறுகலனாட
வாகுவலமாட
வீசுபடையாட - விளையாட

வேதபரநாத
கீதகழலாட
வேடுவகுமாரி - வலமாட

ஏறு மயிலாட
கூறு மயிலாட
ஈறில் பிடியானை - இடமாட

ஏழுலகுமாட
எழுபவ மாட
ஞானநடமாடும் - முருகேசா

ஆறுமலர்தாதா
ஆறுபதமேறி
நாத இசைபாடும் - பொழில்சூழும்

ஞான தவயோகர்
சேரும் நலையூரில்
நாளும் அருள் கூறும் - பெருமாளே

நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

# சைவசித்தாந்த நோக்கில் வள்ளி திருமணம்

**திருமதி.மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**
**முன்னாள் அதிபர், இராமநாதன் கல்லூரி.**

பக்தர்கள் பக்தி மேலீட்டினால் இறைவன் மீது திருப்பள்ளி எழுச்சி, திருப்பல்லாண்டு, திருவூஞ்சல் என்பவற்றைப் பாடியுள்ளனர். ஆலயங்களில் இறைவனுக்குத் திருக்கல்யாண உற்சவமும் நடை பெறுகிறது. இவையெல்லாம்,

**"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் மொப்பின்மையான்"**
- *திருவருட்பயன்*

தன்மையுடைய இறைவனுக்குத் தேவைதானா என்பாரும் உளர். பக்தர்கள் தாங்கள் வாழ்வதற்கும், வாழும் முறையை அறிந்து கொள் வதற்கும் இவ்வாறு செய்கின்றார்கள் எனலாம். புலவர் குழாம் போற்றும் புனிதமிகு கச்சியப்பசிவாச்சாரியார் சைவசித்தாந்த அடிப்படையில் கந்தபுராணத்தைப் பாடி சைவ உலகுக்கு வழங்கியுள்ளார். உபநிடதங்களிலும் திருமந்திரத்திலும் கூறப்பெற்ற சைவசித்தாந்தக் கோட்பாடுகள் சாதாரண மக்களும் தெளிவாக அறியும் வண்ணம் பிற்காலத்தில் திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய பல நூல்களில் எழுதப்பெற்றன.

கந்த புராணத்தில் சித்தாந்தக் கருத்துக்கள் பல வலியுறுத்தப் பெற்றுள்ளன. யுத்த காண்டத்தில் சூரன், சிங்கன், தாரகன் மூலம் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றின் தன்மைகள் விளக்கப் பெற்றுள்ளன. வள்ளி திருமணம் சித்தாந்தக் கோட்பாட்டை மிக இலகுவாக விளக்குவதோடு மக்கள் மனதைக் கவர்ந்த ஒரு பகுதியாகவும் விளங்கு கிறது. சினிமாப் படமாகவும், நாடகமாகவும், வில்லிசை யாகவும், இசை நாடகமாகவும், கதாப்பிர சங்கமாகவும் பலமுறை பார்த்தும் கேட்டும் பக்தர்கள் பரவச மடைந்துள்ளனர். எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட் செயல்களை,

**ஆக்கி யெவையும் அளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல்**

எனத் திருவருட்பயன் கூறுகிறது.

பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் பற்றி பல நூல்கள் விளக்கியுள்ளன. இதனை அடிப் படையாக வைத்தே கந்த புராணத்தில் வள்ளி திருமணம் பாடப் பெற்றது. முத்தியின்பம் பெறுவதற்கும் வழிகாட்டுவது சைவசித்தாந்தம்.

**சான்றவர் ஆயந்திடத் தக்க வாம் பொருள்**
**மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன**
**ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த்தொகை**
**வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே**

எனக் காசிப முனிவர் தன் புதல்வர்களுக்கு உபதேசிப்பதைக் கந்த புராணம் கூறுகிறது. முருகப்பெருமான் தெய்வயானையைத் திருப்பரங் குன்றத்தில் திருமணம் செய்த பின், வள்ளி நாயகியாரைத் தொண்டை மண்டலத்தில் உள்ள மேற்பாடி என்னும் ஊரில் திருமணம் செய்தருளினார். ஞான சக்தி, கிரியா சக்தியாகிய இருவரும் முருகப் பெருமானுக்கு இருமருங்கிலும் வீற்றிருந் தனர். சித்தாந்தக் கோட்பாட்டின் பிரகாரம் இறைவன் மக்கள் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப பிறவிகளைக் கொடுத்து, வாழ்க்கையிலே பல அனுபவங்களை ஏற்படுத்தி பரிபக்குவ நிலையை உண்டாக்கி அவர்களுக்கு மோட்ஷத்தை அருளுவார். மக்கட் பேறின்மையால் வருந்திய நம்பிராசன் வேட்டையாடச் சென்ற பொழுது வள்ளிக் குழியில் திருமகள் போன்ற அழகுடைய ஒரு பெண் குழந்தையைக் கண்டெடுத்து தன் சிறு குடிலில் வளர்த்து வந்தான். சாதாரண சைவ மக்களுடைய வாழ்க்கை முறை, வழிபாட்டு முறை, ஆசாரம் என்பன வேட்டுவ மக்களுடைய வாழ்க்கை முறையிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்டது. வேட்டுவ குலத்தவர்கள் சுப தினங்களிலே குறிஞ்சிப் பறை ஒலிப்பக், குரவைக் கூத்தாடி வெண்மை யாகிய அரிசியையும் மலரையும், மஞ்சளையும் தூவி, ஆட்டுக்கடாவை அறுத்து வேலைக் கொண்டு வெறியாட்டுவித்து முருகப் பெருமானை வணங்கினர். வேட்டுவர்கள் செய்த தவத்தின் பயனாக வள்ளி நாயகியார் அங்கு வளர்ந்து, தவழ்ந்து, தளர் நடை நடந்து, சிற்றில் இழைத்து, சிறு சோறு சுட்டு, பெற்றோர் மகிழ பன்னிரண்டு வயதை எய்தினாள். தாய் தந்தையர்கள் தமது சாதியாசாரப்படி வள்ளி நாயகியாரைத் தினைப்புனங் காக்க வைத்தனர். முருகப்பெருமான் வள்ளி நாயகியாரை பரிபக்குவ நிலையடைந்து விட்டாரா எனப் பல பல விதமான வேடங்களைத் தாங்கி தினைப்புனம் சென்று மகிழ்ந்தார். வேட்டுவ மக்கள் மத்தியில் வாழ்ந் தாலும் தாமரைப்பூ, பூச்சி, புழுக்கள் நிறைந்த சேற்றில் வளர்ந்தாலும் மேலெ ழுந்து அழகும் நறுமணமும் குன்றாத மலராக விளங்குவது போல வள்ளி நாயகியார் தான் வளர்ந்த சூழலால் பாதிக்கப்படாது அருள் நாட்டம் உடையவராக வாழ்ந்தார் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

வள்ளி நாயகியார் தினைப் புலத்திலே அட்டதிக்குகளையும் பார்த்து தினைப்புனத்தைக் காக்கத் தக்கதாக பரணிலிருந்து தட்டை, குளிர், தழல் ஆகிய கருவிகளை ஏந்தி கிளி, மான், மரை, பன்றி என்பன அங்கு வராதவாறு பாதுகாத்தாள் என்பதனை,

**"பூவைகாள் செங்கட் புறவங்காள்**
**ஆலோலம்**
**தூவிமா மஞ்ஞைகாள் சொற்கிளிகாள்**
**ஆலோலம்**

கூவல் சேர்ப ற குயிலினங்கள்
ஆலோலம்
சேவல்காள் ஆலோலம் என்றாள்
திருந்திழையாள்

கச்சியப்பசிவாச்சாரியர் கந்த புராணத்தில் விளக்கிக் காட்டுகிறார். மக்களுக்கு பற்றுப் பாசம் என்பன ஐந்து புலன்களாலும் ஏற்படுகின்றன. விட்டிற் பூச்சிகள் பிரகாசமான விளக்குகளால் கவரப்பட்டு அவைமீது விழுந்து மடிகின்றன. தூண்டிலிலுள்ள சிறு புழுவை உண்ண விரும்பி மீன்கள் புழுவை உண்ண எத்தனித்து தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றன. நறுமணத்தினாலே கவரப்பட்ட தேனீக்களும் தேன் அருந்த முற்பட்டு தமக்கு முடிவைத் தேடிக் கொள் கின்றன. ஆனால் வள்ளி நாயகியார் பற்றுகள், பாசங்கள் தன்னைப் பீடிக்காதவாறு அங்கு வந்த பறவைகளையும் மிருகங்களையும் விரட்டுவது மனத்துாய்மையை ஏற்படுத்துவதற்கு முயலும் ஒரு முயற்சியாகும். பற்றற்றான் தாள்களை அடைவதற்கு பற்றுகளைக் கைவிட வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு. கந்தக் கடவுள் தினைப்புனத்தைக் காத்த வள்ளி நாயகியாருக்கு அருள் புரியக் கருதி தனியே திருத்தணிகை மலையில் எழுந்தருளியிருந்தார், என்பதனை கச்சியப்பசிவாச்சாரியார்,

இந்த முறையில் இவள்ஏனற்
- புனங்காப்ப
அந்த வளவில் அவளுக்
- கருள்புரியக்
கந்த வரைநீங்கிக் கதிர்வே
- லவன்தனியே
வந்து தணிகை மலையிடத்து
- வைகினனே.

எனப் பாடி விளக்கியுள்ளார். அருளானது சிவத்தைக் காட்டி உலகத்தை மறைக்கும். ஆணவம் உலகத்தைக் காட்டி சிவத்தை மறைக்கும். வெயிலால் வருந்தியவன் மகிழ்ச்சியுடன் நிழலையடைவது போல மலங்களினால் துன்பப்பட்டவன் திருவருளைக் காணும்போது பெரு மகிழ்ச்சியுடன் தானாக அதைச் சேருவான் நாரத முனிவர் மூலம் தினைப்புனங் காவல் புரிகிறார் இலக்குமியை ஒத்த வள்ளி நாயகியார் என்பதனை அறிந்த முருகப் பெருமான் மானுட வேடந்தாங்கி வேடுவனைப் போல வில்லும், அம்புந் தாங்கி திருப்புனம் வந்தருளினார். வேடுவ வேடந் தாங்கிய முருகப்பெருமான் பல விதமான ஆசை வார்த்தைகளைக் கூறி அவளைத் தன் வசப்படுத்த முயன்று அவள் பேரைக் கேட்டு, ஊரைக் கேட்டு, பின் ஊருக்குச் செல்லும் வழியைக் கேட்டு மனமுருகி நின்ற நிலையை,

மொழியொன்று புகலாயாயின்
முறுவலும் புரியாயாயின்
விழியொன்று நோக்காயாயின்
விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின்
மனமுஞ் சற்றுருகாயாயின்
பழியொன்று நின்பாற் சூழும்
பராமுகந் தவிர்த்தி என்றான்.

எனக் கச்சியப்பசிவாச்சாரியார் விபரிக்கிறார். அவ்வேளை நம்பிராசன் பல்வேறு வாத்தியங்கள் ஒலிப்ப தன் புதல்விக்கு வள்ளிக்கிழங்கு, தினைமா, தேன், காட்டாவின் பால் என்பவற்றைக் கொண்டு வந்து கொடுத்தான். உடனே வேடுவனாகக் காட்சியளித்த முருகப் பெருமான் வேங்கை மரமாக மாறினான். மேலும் மானிட வடிவந்தாங்கி அவளை அடைவதற்கு பல இனிய வார்த்தை களைக் கூறித் தோல்வி கண்டவர். முற்றாக பற்றுகள் பாசங்கள் நீங்கிய நிலையில், அடிமரம் வேதங்களாகவும், நடுப்பகுதி ஆகமங்களாகவும், ஏனைய பகுதிகள் பல்கலைகளாகவும் காட்சி யளித்த வேங்கை மரம் மூலம் வள்ளி நாயகியாருக்கும் சமய சாஸ்திர அறிவு திறம்பட ஏற்பட்டது மட்டுமல்ல பரிபக்குவ நிலை அடைவதற்கு ஏதுவாகியது. ஆனால் முருகப் பெருமான் மோகம் தவிர்க்க முடியாத நிலையில் பல முறை அவள் முன் தோன்றி எண்ணிலாத பல வார்த்தை களைக் கூறினான். எனக்கு உன் னுடைய கழல்களல்லாது வேறு புகலிடம் இல்லை எனவும், பெண்ணே நீ ஆடும் சுனையாயும், அணியும் சந்தனமாயும், சூடும் மலராகவும் விளங்க முடியாமல் இருக்கிறாயே எனவும், தினைப்புனத்தைக் காப்பது ஒரு சிறந்த தொழில் அல்ல என்றும் கூறி நிற்க, நம்பிராசன் தன் பரிசனங்களோடு அங்கு வந்தான். வேடுவனாகத் தோற்றிய முருகப் பெருமான் மீது தோன்றிய இரக்கம் காரணமாக, வேடுவர்கள், தீயவர்கள் அவ்விடத்தைவிட்டு ஓடுமாறு வள்ளி நாயகியார் கூற அவர் ஒரு விருத்தராகிய சிவனடியார் வேடம் பூண்டு வேட்டுவ ராசனுக்கு விபூதி கொடுத்து அருள் செய்தார். நம்பிராசன் விருத்தரென வந்தீர் வேண்டியதைக் கூறும் என,

**ஆண்தொழிலின் மேதகைய அண்ணலிது**
**- கேண்மோ**
**நீண்டதனி மூப்பகல நெஞ்ச மருள்**
**- நீங்க**
**ஈண்டுநும் வரைக்குமரி**
**- எய்தியினிதாட**
**வேண்டிவரு கின்றனன் மெலிந்துகடி**
**- தென்றான்**

*- கந்த புராணம்*

தனது அருமை மகளுக்கு நல்ல துணை கிடைத்து விட்டதே என மகிழ்ந்து அவ்விடம் விட்டகன்றான் நம்பிராசன். பசியால், தாகத்தால், மோகத்தால், தவிப்பவர் போல விருத்தராகிய முருகப் பெருமான் நடித்தருள, வள்ளி நாயகியாரும் தேனும் தினைமாவும் கொடுத்த பின் அவரை அழைத்துக் கொண்டு ஏழுமலைகளைத் தாண்டி தாகத்தையும் நீக்கிய நிலையில், மோகத்தையும் தணிக்கும் படி கேட்ட விருத்த சன்னியாசிக்கு, சினந்து நடு நடுங்கி,

**நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு**
**- சற்றுமிலிர்**
**எத்துக்கு முத்தீர் இழிகுலத்தேன்**
**- தன்னைவெஃகிப்**
**பித்துக் கொண்டார்போல் பிதற்றுவீர்**
**- இவ்வேடர்**
**கொத்துக் கெலாமோர் கொடும்பழியைச்**
**- செய்தீரே.**

என வினாவினார் எனக் கந்த புராணம் அழகாகக் கூறுகிறது. ஏழு பிறப்புகள் முடிய ஒருவருக்கு நல்லுணர்வு, நல்லறிவு, ஞான உணர்ச்சி என்பன ஏற்படும் என்பது அறிஞர் கருத்து. ஏழு மலைகளைத் தாண்டிச் சென்று விருத்த சன்னியாசிக்கு உதவியமை வள்ளி நாயகியார் ஏழு பிறப்புக்களிலும் வினைகளை அனுபவித்து, கர்மத்தினால் வரும் இன்ப துன்ப நுகர்ச்சியினால் ஆணவப் பிணிப்புக் குறையப் பெற்றார். குருவருள் இன்றி ஆணவம் வலிகெட மாட்டாது, என்பதனை சூரபன்மன் வரலாறு விளக்குகிறது. ஆணவம் வலி கெடுதல் மலபரிபாகம் எனப்படும். மலம் வலிகெட சிவசக்தி ஆன்மாவிற் பதிந்து, சிவத்தோடு சேர்வதற்காக அதைச் செலுத்துகிறது. இதனை சத்திநி பாதம் என்பர். சுப்பிரமணியக் கடவுள் வள்ளி நாயகியாரைக் கவர்ந்து சென்ற பின் நாரத முனிவரோடு சிற்றூர் சென்றார். நம்பிராசனின் உறவினர்கள் மிக மகிழ்ந்து தங்கள் தவப்பயனை எண்ணி மகிழ்ந்தனர். ஒரு சுபமுகூர்த்தத்தில் வேட்டுவராசன் சுப்பிரமணியக் கடவுள் திருக்கரத்தில் தன் புதல்வியின் திருக்கரத்தை வைத்து தம்முடைய தவப்பயனாய் வந்த குமாரியை அன்பினால் இன்று உமக்கு மணஞ்செய்து தந்தேன் ஏற்றுக் கொள்ளும் என்று தாராதத்தம் செய்தான். பார்வதி பாகராகிய பரமசிவன் உமாதேவியார் சகிதமாக, அரிபிரமேந்திராதி தேவர்களும் பிறரும் கூடி ஆகாயத்தில் எழுந்தருளி, திருமணக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர், வேடுவ மக்கள்.

இதனைத் தொடர்ந்து சுப்பிர மணியக் கடவுள் வள்ளி நாயகி யாருடன் திருத்தணிகை மலை சென்று அங்கு எழுந்தருளியிருந்தார். ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருத்தணிகையின் சிறப்பை,

விரையி டங்கொளும் போதினுள்
- மிக்கபங் கயம்போல்
திரையி டங்கொளும் நதிகளிற்
- சிறந்தகங் கையைப்போல்
கரையி டங்கொளும் பதிகளிற்
- காஞ்சியந் தலம்போல்
வரையி டங்களின் சிறந்ததித்
- தணிகைமால் வரையே

எனக் கந்த புராணம் கூறுகிறது. வள்ளி நாயகியாரது திருமணம் மூலம் சாதாரண, மக்களால் ஒதுக்கப்பெற்ற வேட்டுவ குலத்தில் தோன்றிய குறமகள் பரிபக்குவ நிலையடைந்து முன் செய் தவப்பயனால் முருகப்பெருமானை அடையும் பேறு பெற்றாள். என்ற உண்மையையும், முருகப்பெருமானே வள்ளி நாயகியரைத் தேடி வந்து திருவருள் பாலித்தார் என்ற செய்கையையும் அறிய முடிகிறது.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**
**-குறள்-**

# கொடிமரமும் கொடியேற்ற மகத்துவமும்

ஆ.தியாகராசா

தலைவர், நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் தேவஸ்தானம்.

திருக்கோவிலைத் தூரத்தே கண்டு தொழுவதற்கு வசதியாக அமைந்துள்ளது கோபுரம். வானுற ஓங்கி நின்று எம்மை வா வா என்று வரவழைப்பது கோபுரத்தின் உச்சியில் பறக்கும் கொடி. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றும், கோபுர தரிசனம் பாவ விமோசனம் என்றும் கூறுவர். இதனை சுப்பிரபோதாகமம் பின்வருமாறு ஒரு சுலோகத்தின் மூலம் எடுத்துக் கூறுகின்றது.

"அதி தூரத்தில் இருந்து, விமானத்தையோ கோபுரத்தையோ பார்த்துவிட்ட மாத்திரத்தே எவன் கை கூப்பி வணங்குகின்றானோ அவன் பாம்பானது தனது சட்டையில் இருந்து விடுபடுவது போல, சகல பாவங்களில் இருந்தும் விடுபடுகின்றான். ஒரு கோவிலின் தூபிகளும் கோபுரங்களும் எவ்வளவு தூரம்வரை தெரிகின்றதோ அவ்வளவு தூரமும் கைலாயமாகக் கொள்ளப்படும் என்று கூறப்படுகின்றது."

இதனாற்றான் போலும் சகல மத வழிபாட்டுத் தலங்களும் ஏதோ ஒரு வகையில் தத்தம் வழிபாட்டுத் தலங்களை வானுற நோக்கிப் பல பல வடிவ அமைப்பில் கட்டி உள்ளார்கள். அமைப்புக்கள், வடிவங்கள் எதுவாக இருந்தாலும், நோக்கம் ஒன்றுதான் என்பது தெளிவாகின்றது. இந்த வகையில் கொடியேற்றமும் சகல மதத்தவராலும் தத்தமது சமய அனுட்டானங்கட்கு அமைய ஏற்றப்படுகின்றன. ஆனால், இந்து மத வழிபாட்டில் கொடி ஏற்றமும், கொடி மரமும் வழிபாட்டு முறையில் தனிச் சிறப்பைப் பெறுகின்றது. கொடி ஏற்றம் முதல் கொடி இறக்கம் வரை நடைபெறும் பக்தி பூர்வமான பூஜைகள் கோயில்களில் தனிச்சிறப்பான ஒரு நிகழ்வாகும். இதிலும் கொடிமரப் பூஜை ஒரு சில ஆலயங்களில் மிக மிகச் சிறப்பாக நடைபெறுவதைக் காணும்போது ஏன் இப்படி எல்லா ஆலயங்களிலும் நடைபெறுவது இல்லையென்ற ஒரு ஆதங்கமும் அடியார்களின் உள்ளத்தில் எழுவதும் உண்டு. இது செய்வார், செய்விப்போர், நுகர்வோர் என்ற முத்திறத்தாரின் சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும்.

**நின்று கோபுரத்தை நிலமுற பணிந்து**
**நெடுந்திரு வீதியை வணங்கி**
**மன்றவார் செல்வ மறுகினூடேகி**
**மன்னிய திருப்பதி அதனில்**
**தென்திசை வாயில் கடந்து முன்போந்து**
**கேட்பருந் திருவெல்லை இறைஞ்சிக்**
**கொன்றைவார் சடையான் அருளையே நினைவார்**
**கொள்ளிடத் திருநதி கடந்தார்.**

என்று கூறுகின்றது பெரிய புராணம்.

கோபுரத்தைத் தொழுது உள்ளே போகும்போது துவாரபாலகர் இருவர் நிற்பதைக் காண்கின்றோம். அவர்

பரம்பொருளின் பெரும்புகழ் பாரினிலே அழிவுறும் வேளைதனில்
பழம்பெரும் சமயமாம் சைவ சமயத்தைக் காக்கும் காப்பரணாம்
"நல்லைக்குமரன் மலர்தனை"
நமக்கெல்லாம் அருளிய யாழ் மாநகரசபை சைவ சமய விவகாரக்குழு
மற்றும் விளம்பர உதவி செய்தோர் யாவரது பணிகளும் மேலும்
தொடர்ந்து சமயப்பணி திக்கெட்டும் பரவ "நல்லை நாதா" நீயே துணை
என வேண்டுகின்றோம்.

**அன்றும்! இன்றும்! என்றும் "சுத்தத்தின் செல்வன்" என்று**
**மக்களால் மகுடம் சூட்டப்பெற்ற ஒரேயொரு சைவ உணவகம்,**

# மலாயன் கபே

**T.P. 021 - 222 2373**

**36, 38, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

உ

- கணனி எழுத்துருவமைப்பு
- ஓவ்செற் பிறின்ரிங்
- ஸ்கிறீன் பிறின்ரிங்
- புத்தகம் கட்டுதல்
- கூல் லெமனேசன்
- கில்டிங் வேலைகள்
- கணனி றபர் முத்திரைகள்

*குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து பெற*
*நாடவேண்டிய இடம்.*

676, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P :- 021-2226722

களையும் தொழுது விடைபெற்று உள்ளே போகும்போது ஓங்கி உயர்ந்த கொடி மரத்தைக் காண்கின்றோம். கொடிமரம் கோயிலின் மையப்புள்ளி போல் அமைந் துள்ளது. அதன் முன் பலிபீடம் என்னும் பத்திரலிங்கமும், நந்தி என்னும் பக்கு வான்மாவும் இருப்பதை நாம் காணலாம்.

திருக்கோயில் நித்ய பூஜைகளின் போது உண்டான குறை குற்றங்களைப் போக்குவன நைமித்ய பூஜைகள். இப் பூஜைகள் ஆண்டுக்கொரு முறை நடை பெறுகின்றன. நைமித்ய விழா ஆரம்பிப் பதற்குக் கொடியேற்றுதல் பிரதான கருமமாகும். கொடியேற்றுதற்கு ஆதார மாக அமைவது கொடி மரமாகும்.

கொடி மரத்தைத் துவஜஸ்தம்பம் என்றும் வீணா தண்டம், மேரு தண்டம் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. கொடி மரம் மூலஸ்தானத்திற்கும் தேவ விம்பத் திற்கும் நேராக நிறுத்தப் பெற்றுள்ளது. அது திருக்கோயிலின் விம்பத்தின் உயரத் திற்குத் தகுந்த அளவு உயரமானது. இது கொடி மரம் என வழங்குவதால் மரத்தால் செய்யப்பட்டது என்பது கருத்து. அது தாலம், மூங்கில், வில்வம், கருங்காலி, பலாசு, தேவதரு ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றால் அமையும். அதன் உயரத்தில் ஐந்தில் ஒரு பாகம் நிலத்தினுள் புதைக்கப்பெறுவது வழக்கம். கொடி மரத்தின் சுற்றுப் பகுதி பொன், வெள்ளி, தாமிரம் முதலிய உலோகமொன்றால் தகடு செய்து மூடப்படும்.

கொடி மரத்தின் தத்துவம் பெரிது. அதிலுள்ள முப்பத்து மூன்று கணுக்கள் நமது சரீரத்தின் முள்ளந் தண்டின் முப்பத்து மூன்று என்புக் கோவைகளைக் குறிப்பன. கொடி மரம், மூன்று பெரும் பிரிவுகளை உடையது. அவையாவன, பிரம்ம பாகம், விஷ்ணு பாகம், உருத்திர பாகம் என்பனவாம். கீழேயுள்ள பிரம்ம பாகம் சதுர வடிவாகவும், நடுவிலுள்ள விஷ்ணு பாகம் எண்கோண வடிவ மாகவும், மேலேயுள்ள உருத்திர பாகம் நீளமாய் விருதித்தமாகவும் அமையும். கொடி மரத்தில் உருத்திரர், சக்தி, எட்டுத் திக்குப் பாலகர் அர்ச்சிக்கப் பெறுவர்.

கொடி மரமானது யோகியொருவர் தமது மூர்ச்சை நடு நாடியாகிய சுழு முனையால் அசைவற்று நிறுத்திக் கொண்டு, தியானம் செய்யும்போது மனம் முதலிய கரணங்கள் யாவும் ஓய்ந்து நிற்க, உலகம் தோன்றாது சிவதர்சனம் உண் டாகும் என்னும் உண்மையை உணர்த்து கிறது. கொடி மரத்தை இருதயத்தானம் என வழங்குவர்.

திருக்கோயில்களில் கொடி மரம், பலிபீடம், நந்தி என்னும் மூன்றும் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம் ஆகிய ஆதாரங்களின் இருப்பிடங்களைக் குறிப்பனவாகும். கொடி மரத்திலிருந்து உள்ளே கர்ப்பக்கிரகம் வரையுள்ள இடப்பரப்பு புனிதத்துள் புனிதமானதாகும். அந்த இடத்திலே நாம் கண்டபடி உலாவு தலாகாது. குறுக்கே போக லாகாது. இறைவனை வீழ்ந்து வணங்குதலாகாது.

கொடி மதிப்புக்குரியதோர் அங்கம். அது தசாங்கம் என்னும் பத்து அங்கங் களில் முதலாவதாகும்.

"கொடி பாடி தேர் பாடிக் கொய்
தண்டார் மாறன் முடிபாடி முத்தாரம் பாடி"

என வரும் பாடலில் அரசருக் குரிய, இறைவனுக்குரிய தசாங்கங்கள் குறிக்கப்படுகின்றன.

திருக்கோயில் கொடியேற்றம் பெருந்தத்துவத்தைக் குறிப்பது அது

ஜீவாத்மா, பரமாத்மாவுடன் ஒன்றுபடும் தத்துவத்தைக் குறிப்பது. இதுவே பிரம்மோற்சவம் எனப்படும். (பெருந் திருவிழாவை ஆரம்பித்து வைப்பது) அது பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான படைப்புக் கிரமத்தைக் குறிக்கிறது. பிரம்மோற்சவத்தைத் தொடர்ந்து நடை பெறும் விழாக்கள் ஏனைய கிருத்தி யங்களைக் குறிப்பன.

எங்கும் வியாபித்துள்ள இறைவன் தயிரில் வெண்ணெய் போல் ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். அவரை உற்சவ காலங்களில் கொடி மரத்திலும், உற்சவ மூர்த்திகளிலும், கும்பத்திலும் எழுந்தருளச் செய்வதற்கு யாகங்கள், பூஜைகள் செய்வர். ஸ்தம்பம், விம்பம், கும்பம் ஆகியவற்றில் இறைவனை மூன்று இடங்களில் எழுந்தருளச் செய்து வழிபாடு செய்தல் முறைமையாகும். இதனால்த் தான் மகோற்சவத்தில் கொடிமரப் பூஜை, வசந்த மண்டப பூஜை, யாகசாலைப் பூஜை என்பன மிக முக்கியமாக அமைகின்றன.

கொடிமரம் சிவன் என ஓங்கி நிமிர்ந்து நிற்கிறது. கொடிச் சீலை ஆன்மாவைக் குறிக்கின்றது. அதனைச் சேர்ந்துள்ள தர்ப்பக் கயிறு பாசத்தைக் குறிக்கின்றது. ஆன்மா பாசத்தினின்றும் நீங்கிச் சிவத்துடன் இணைவதைக் குறிப்பதே கொடியேற்றமாகும்.

மகோற்சவ காலங்களில் கொடிமரம் சிவமாக நிற்பதால் அதற்குப் பகலிலும், இரவிலும் விசேடமாகப் பூஜைகள் செய்கின்றார்கள். அப்பூஜையைப் பார்ப்ப தால் நாம் நம்மை வெகுவாகச் சுத்தி கரித்துக் கொள்கிறோம். பெரும் பயனடை கின்றோம்.

சிவாலயங்களில் கொடிச் சீலையில் வரையப்படும் எருது தரும தேவதையைக் குறிக்கும். நமக்குரிய நான்கு புருடார்த் தங்களுள் முதலில் வருவது தர்மம், அதை அறம் என்றும் வழங்குகின்றோம். எதுவும் அற வழியிலேயே நடத்தல் வேண்டும். அறத்தை நாம் காத்தால், அறம் நம்மைக் காப்பதோடு, நம்மைத் தாங்கிக் கொள்ளும். தர்மம் ஓங்குதல் என்னும் கருத்தில் தர்ம தேவதையை வரைந்து உயர்த்தி நம்மையும், நாட்டையும் உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதைக் கொடியேற்றத் தத்துவம் குறிக்கின்றது. என்றும் கொள்ளலாம். திருக்கோயிலில் கொடியேற்றித் திருவிழாச் செய்யும் காலத்தில் தேவர்கள், முனிவர்கள், ஆகாசவாசிகள் முதலாகவுள்ள கணத் தவர்கள் திருக்கோயிலின் அண்மையில் வந்து நமக்குப் புலப்படாமல் இருந்து இறைவனை வணங்கி எமக்கு நல்லருள் புரிவர். இதனை "ஆரார் வந்தார்" எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப் பதிகம் உறுதிப்படுத்துகின்றது.

கொடிக்கவி தந்தருளிய உமாபதி சிவாச்சாரியார்,

**"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்**
**- நாலெழுத்தும்**
**பிஞ்செழுத்தும் மேனாலப் பெருவெழுத்தும்**
**- நெஞ்சழுத்திப்**
**பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்**
**கூசாமற் காட்டக் கொடி"**

- என்று பாடுகிறார்.

எனவே கொடியேற்றத் திருவிழாச் செய்வதால் நாட்டின் வறுமை, பிணி, துன்பம், தீவினை, அஞ்ஞானம், முதலியன நீங்கி நல்வினை, ஞானம், கீர்த்தி, செல்வம், ஆயுள், ஆரோக்கியம் முதலாய ஐசுவரியங்கள் கிடைக்கும்.

# அதர்வ வேதத்தில் ஆயுர்வேதம்

ச.முகுந்தன், உதவி விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

விஞ்ஞான உலகம் என்றும், தகவல் தொழில்நுட்ப யுகம் என்றும் அறிவியல் வளர்ச்சிக்கு அளப்பரிய முக்கியத்துவத்தை தந்து கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்துள் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நான்காம் தமிழாகவும் அறிவியலை அரவணைத்துக் கொண்டாயிற்று. எனவே காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு எமது முன்னோர்கள் பேணி வைத்த சாஸ்திர முதுசங்களில் அறிவியல் விஞ்ஞானச் செழுமைகளை அடையாளங்காண வேண்டியது அவசியமாகிறது. "இல்லா தது எதுவும் தோற்றுவிக்கப்படவில்லை." இதனைப் பண்டைய சற்காரிய வாதமும், நவீன அறிவியலில் சக்திக் கோட்பாடும் கூட ஆமோதித்துள்ளன. அந்த வகையில் காலாதி காலமாக இந்துநாகரிகத்தில் இழைந்து வளர்ந்த வானியல், மருத்துவம், எண்கணிதம் போன்ற அறிவியற் துறைகள் நவீன விஞ்ஞானிகளால், வியப்புடன் நோக்கப்படுவதும் இங்கே சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

அந்த வகையில், மருத்துவத்துறை சார்பாக இந்துக்கள் தொன்று தொட்டு அறிந்து வந்துள்ள விடயங்களைப் பற்றி ஒரு மேலோட்டமான அறிமுகத்தை அதர்வ வேதத்தினை அடிப்படையாகக் கொண்டு கூற முனைவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

பிணியினைப் போக்குதல், ஆரோக்கியம் காத்தல் என்பதனூடாக ஒருவரிற்கு நீண்ட ஆயுளைத் தருகின்ற முறைமையால் இந்துக்கள் ஆயுர்வேதம் என தமது மருத்துவக்கலையைப் போற்றினார்கள்.

காஸ்யப சம்ஹிதையிலும், பிரம்ம வைவர்த்த புராணத்திலும் ஆயுர் வேதமானது 5ம் வேதம் என்றே கூறப் பட்டுள்ளது. ஆயினும் பொதுவாக நான்கு உபவேதங்களுள் ஒன்றாக ஆயுர்வேதத்தைக் கருதுவதே மரபாகும்.

எல்லாக் கலைகளினதும் மூலத் தையும், தோற்றத்தையும் இறைவனோடு தொடர்புபடுத்தி தெய்வீகப் பாரம் பரியத்தோடு அவற்றை போற்றிக் காத்தல் இந்துக்களுடைய வழக்கமாகும். அந்த வகையில் ஆயுர்வேதத்தின் தோற்றம் பற்றியும் ஒரு தெய்வீக வரலாற்றுப் பாரம்பரியம் பேசப்படுகிறது. ஆயுர் வேதத்தை பிரம்மா தக்ஷப்பிரஜாபதிக்கு கற்பித்தார் என்றும் அவரிடமிருந்து அச்வினி குமாரர்களும், இவர்கள் மூலம் இந்திரனும் கற்றான் என்றும், இந்திரனே பூவுலக மக்கள் நோயின்றி வாழவென ஆயுர்வேதத்தின் ஒரு கிளையாகிய உடல்

மருத்துவத்தை பரத்வாஜ முனிவருக்கு கற்பித்தான் என்றும் கருதப்படுகிறது. பரத்வாஜரிடமிருந்து ஆத்ரேயர் - அக்னிவேசர் வழியாக சரகர் அறிந்து கொண்டு சரக சம்ஹிதையை இயற்றினார் என்பர். ஆயுர்வேதத்தின் இன்னொரு பிரிவான அறுவைச் சிகிச்சை முறையை தன்வந்திரி, சுச்சுருதர் முதலிய சீடர் களுக்கு உபதேசித்தார் என்றும் சுச்சுருதர் அதைப் பயின்று சுஸ்ருத சம்ஹிதையை இயற்றினார் என்றும் கருதப்படுகிறது.

பொதுவாக தன்வந்திரியையே ஆயுர்வேதத்தின் தந்தையாகப் போற்று வோருமுள்ளனர். சிகிச்சா தத்துவ விஞ் ஞானம், சிகிச்சா கௌமுதி, சிகிச்சா தர்சனம் ஆகிய மருத்துவ நூல்களை இவர் எழுதியதாக அறியப்படுகிறது. ஆனால் இந்நூல்கள் எவையும் கிடைக்க வில்லை. இவருடைய காலம் கி.மு.3000 என்று கூறப்படுகிறது. இவரே ஆயுர் வேதத்தினை அஷ்டாங்கமாக வகுத்துத் தந்தவர் ஆவார்.

அவையாவன,

1. காய சிகிச்சை (உள்மருந்து)
2. பால சிகிச்சை (குழந்தை வைத்தியம்)
3. கிரக சிகிச்சை (மனை இயல்)
4. சாலக்ய தந்த்ரா (கண், காது, மூக்கு, தொண்டை தொடர்பான சிகிச்சை முறைகள்)
5. சல்யதந்த்ரா (அறுவைச் சிகிச்சை)
6. விஷதந்த்ரா (விஷமுறிவு வைத்தியம்)
7. ரசாயன தந்த்ரா (மூப்பியல் மருத்துவம்)
8. வாயிகரண தந்த்ரா (ஆண்மலட்டுத் தன்மை/அலித் தன்மைக்கான சிகிச்சை)

வடமொழி மரபில் சுச்சுருத சங்கிதை, சரக சங்கிதை ஆகியவற்றுடன் விருத்தவாகபட்டரால் இயற்றப்பட்ட அஷ்டாங்க சங்கிரகம் என்ற மருத்துவ நூலும் முற்றுமுழுதாக மருத்துவக் கலையைப் பற்றி விபரிப்பதாகும்.

தென்னாட்டில் மருத்துவக் கலையானது அகத்தியர், திருமூலர் வழியில் சித்தர்களால் வளர்த்தெடுக்கப் பட்டதாகக் கருதும் நிலையில், சித்த மருத்துவம் என அழைக்கப்படுகிறது. குறிப்பாக திருமந்திரம், அகஸ்தியர் ஞானம், சிவயோகசாரம், நிசானந்த போதம், ஞானசரநூல், காகபுகண்டர் ஞானம் போன்ற சித்தர் பனுவல்கள் மருத்துவ வாகடங் களாகவும் திகழ்கின்றன என்றால் மிகையில்லை.

சிந்துவெளி நாகரிகத்தில் வாழ்ந்த மக்கள் இந்து மதத்தைப் பின் பற்றினார்களா? என்பதில் சர்ச்சைகள் இருப்பினும் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் 'சிலாஜித்' என்ற மருந்தின் பயன்பாடு பற்றி அறிந்திருந்தனர். மேலும் வேப்பிலையைத் தூளாக்கி குடுவைகளில் அடைத்து மருந்தாகப் பயன்படுத்தி யிருந்தனர் என்பதில் ஆய்வாளர்கள் ஏகோபித்த கருத்தைக் கொண்டு விளங்குவர். காண்டாமிருகக் கொம்பையும் மீன் (Cuttle Fish) முள்ளையும் பொடி செய்து மருந்தாகப் பயன்படுத்தி உள்ளமையும் தொல்பொருள் ஆய்வு களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் வேத காலத்தை நோக்கும்போது ரிக் வேதத்தில் வருகின்ற ஔஷதசூக்தம் இந்துக்களுடைய

மருத்துவ அறிவு வளர்ச்சியின் ஒரு முக்கிய ஆரம்ப நிலையாகும். ரிக் வேதத்தின் அஸ்வினி குமாரர்கள் தேவ மருத்துவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள தோடு அவர்கள் செயற்கைக்கால் பொருத்தல், குருட்டுத் தன்மை, செவிட்டுத் தன்மை நீக்குதல், பற் சிகிச்சை போன்றவற்றில் சிறந்து விளங்கியமை சில கதைச் சம்பவங்களூடாகப் புலனாகின்றது. வாதம், பித்தம், கபம் எனப்படும் அடிப்படையிலான மூன்று தோஷங்களை "திரிதாது" என ரிக் வேதம் குறிப்பிடுகிறது.

சுக்கில யசுர் வேதத்திலும் குஷ்டம், இதய நோய், சித்த சுவாதீனம், காச நோய் ஆகிய பிணிகள் தெளிவாகக் குணங்குறிகளோடு அடையாளங் காணப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றிற் கான சிகிச்சைகள் மருந்தளவில் அன்றி மந்திர உச்சாடனங்களாகவே கூறப் பட்டிருத்தல் குறைபாடாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

ஆயினும் மருத்துவக் கலையைப் பொறுத்தளவில் அதர்வ வேதம் இத்த கைய குறைபாடுகளிலிருந்து நீங்கிய வேதமாகவே விளங்குகிறது. அறியாமை என்ற அந்தகாரத்தை அதர் எனும் அனல் எரிப்பதால் இதற்கு அதர்வம் என்ற பெயர் தோன்றிற்று. மாந்திரீக விதிகளின் அறிவு என்றும் இதற்கோர் பொருள் கொள் ளப்படும். அதர்வர்கள், ஆங்கிரஸர்கள் ஆகிய புரோகித குழுவினரால் இயற்றப் பட்டதால் அதர்வவாங்கிரஸ் என்ற பெயரும் இதற்கு வழங்குகிறது. பிரம்ம வித்தையைப் பிரகாசிக்கச் செய்வதால் பிரம்ம வேதம் என்றும் ஷத்திரம் எனும் துட்ட சம்ஹாரத்தைத் தூண்டுவதால் ஷத்திர வேதம் என்றும், நோய்களுக்குரிய சிகிச்சை முறைகளை அறிவிப்பதனால் பைஷஜ்ய வேதம் எனவும் இவ்வேதம் பல காரணச் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது.

பைப்பலாதம், தௌடம், மௌடா யனம், சௌநகியம், ஜாஜயம், ஜலதம், பிரமவாதம், தேவதர்சம், சரணவைதம் என ஒன்பது சாகைகளை (கிளை) உடைய இவ்வேதமானது இருபது காண்டங்களையும் 731 சூத்திரங்களையும் ஏறக்குறைய 6000 பாட்டுக்களையும் உடையது. சிறப்பாக அதர்வ வேதத்தின் பைஷஜ்யானி சூக்தானி, ஆயுஷ்யானி சூக்தானி பகுதிகள் மருத்துவ சிந்தனைகளைக் கொண்டு விளங்குகின்றன. பைஷஜ்யானி சூக்தானியானது நோய்கள், அவற்றிற் கான சிகிச்சை முறைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆரோக்கியமான சுக வாழ்வையும், நீண்ட ஆயுளையும் பெறுவது பற்றிய வழி முறைகளை விபரிப்பதாக ஆயுஷ்யானி சூக்தானி அமைகிறது.

**"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்ப செயல்"**

என்ற பொய்யா மொழியாரின் நோய்ச் சிகிச்சைக்கான படிமுறையான அணுகு முறையை அதர்வ வேதத்திலும் தரிசிக்க முடியும்.

அந்த வகையில் நோய்களின் பெயர்கள், நோய் அறிகுறிகள், நோய்க் காரணிகள், நோய் நீக்கத்திற்கான

மருந்துகள், நோய் வராது தடுக்கவல்ல தாயத்து வகைகள், நோயாளிக்கு போஷணை தரவல்ல கஷாயங்கள், சுகாதாரப் பழக்கவழக்கங்கள், மனித உடற்கூற்றியல் பற்றிய விபரணங்கள் என அதர்வ வேதத்தில் இடம்பெற்றுள்ள மருத்துவ சிந்தனைகளைத் தொகுத்து நோக்கலாம்.

அதர்வ வேதத்தில் காமாலை, வெண் குஷ்டம், வாதம், *சீதச்சரம்*, இருமல், சீதபேதி, இதயநோய், சுரப்பிகள் வீக்கம், மேக நோய், யானைக்கால் நோய், வைசூரி போன்ற நோய்கள் பற்றியும் அவற்றின் அறிகுறிகள் பற்றியும் தெளிவான குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டாக விட்டுவிட்டுக் காயும் *சீதச்சுரத்துக்கான* நோய் அறிகுறிகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

> **"*சீதச்சுரத்துக்கு* நமஸ்காரம்..............**
> **உக்கிர வெம்மைக்கு நான் வணக்க மளிக்கிறேன்.**
> **ஒருநாள் விட்டு, இருநாள் பின்னர்**
> **மூன்று தினங்களுக்கு அப்பால்**
> **வரும்**
> **சுரத்திற்கு நமஸ்காரமாகும்............."**

*(அதர் 1ம் காண்டம் 25ம் சூக்தம்)*

மேலும் மஞ்சட்காமாலை நோய் பற்றியும் சூரியனின் கதிர்களுக்கு அதனைக் குணப்படுத்தும் ஆற்றல் உள்ளது என்பதனையும் அதர்வ வேதம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

> **"இவன் நோய் நீங்கி மஞ்சளா**
> **- காமலிருக்க**
> **நீண்ட காலம் வாழ உன்னை**
> **- சிவப்புக்**
> **கதிர்களால் நாங்கள் சூழ்கிறோம்"**

> **"சூரியனை அனுசரித்து உனது இருதய நோயும் காமாலையும் நீங்குக"**

*(அதர்வ - 22ம் சூக்தம்)*

சூரியக் கதிர்களில் மஞ்சட்காமாலையைக் குணப்படுத்தும் ஆற்றல் நிரம்பியுள்ளதை நவீன மருத்துவ ஆராய்ச்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

மேலும் வாத நோய் பற்றியும் அதர்வ வேதத்தில் குறிப்புக்கள் உள்ளன. வாத நோயினைக் குணப்படுத்தவல்லதான ஈயச் சிகிச்சை முறை பற்றியும் அதர்வ வேதம் விபரித்துள்ளது. வாத நோயினை 'விஷ்கந்தம்' என்ற பெயரால் அதர்வம் குறிப்பிடுகிறது. அந்நோய் பற்றியும் பல விபரங்கள் தரப்பட்டுள்ளன.

பிப்பிலி வெட்டுப் புண்ணுக்கு மருந்தாகும் என்றும் இரஜனியால் குஷ்டரோகம் நீங்கும் என்றும் அதர்வம் கூறுகிறது. தலைவலி மற்றும் கபாலத்துடன் தொடர்புடைய வலிகளைக் கர்ண சூலம் என்ற மருந்து குணப்படுத்தும் என்றும் அதர்வம் குறிப்பிடுகிறது.

ஆயினும் அதர்வத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலிகைகள், மருந்து வகைகளிற் பெரும்பாலானவை எல்லோராலும் அடையாளங்கண்டு கொள்ளப்படக் கூடாது என்ற நோக்கோடு குழூக்குறிகளால், சங்கேத மொழியால் குறிப்பிடப்

பட்டுள்ளமை துர்அதிஷ்டகரமானதாகும். எனினும் வடமொழிப் புலமையும் ஆயுர்வேத வைத்திய சாஸ்திரங்களோடு நெடுங்காலப் பரீட்சையமுமுள்ளவர்களால் இவற்றை ஓரளவு விரிவாக ஆராயமுடியும்.

வெண்குஷ்டத்தை நீக்க வல்லதான ஆஸ்ரி என்பவரால் கண்டறியப்பட்ட கறுப்புச்செடி மூலிகை பற்றியும் அதர்வ வேதம் குறிப்பிடுகிறது. மேலும் கருச் சிதைவைத் தடுக்க "பிருஷ்ணி பர்ணி" என்ற பச்சிலை மருந்து உதவும் என அதர்வவேதம் குறிப்பிட்டுள்ளது. பிற் காலத்தில் எழுச்சி பெற்ற சுச்ருத சங்கிதை என்ற மருத்துவ நூலிலும் இதே விபரம் தரப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

மேலும் அதர்வ வேதத்தில் விஷ முறிவு வைத்தியம் பற்றியும் அநேக குறிப் புக்கள் காணப்படுகின்றன. வரணாவதி எனும் ஔஷதமும், அபஸ்கம்பம் என்ற மூலி கையும் விஷ முறிவை ஏற்படுத்தக்கூடியன என அதர்வவேதம் குறிப்பிட்டுள்ளது. இவ்வேதத்தின் 108ம் சூக்தம் விஷமுறிவு பற்றி விரிவாகப் பேசுகிறது.

அதர்வவேதத்தில் நோயினால் பாதிக்கப்பட்டு பலவீனனாகக் காணப் படுகின்ற மனிதனுக்கு அரக்கு கஷாயம் மிகச் சிறந்த ஒரு வகை போஷாக்குப் பான மாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரக்குடன் பல மூலிகைச் சாறுகளையும் கலந்து தயாரிக் கப்பட்ட இந்தக் கஷாயமானது நோய் எதிர்ப்பு சக்தியையும், போஷணையையும் தருவதனால் அதர்வவேதம் இதனை "மக்களைக் காப்பாற்றும் தாய்" என வர்ணித்துள்ளது.

மேலும் கண்டமாலை நோய் பற்றியும் சூரிய ஒளிக்கு கண்ட மாலையைக் குணப்படுத்தும் சக்தி இருப்பது பற்றியும் அதர்வ வேதம் குறிப்பிட்டுள்ளது.

அதர்வவேதத்தில் நோய்க் காரணிகள் எவை என்பது பற்றிய ஆராய்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. நுணுக்குக்காட்டிகள் எதுவும் கண்டறி யப்படாத அந்தக் காலத்தில் மக்கள் நோய்களுக்குக் காரணம் பேய்களும், சாத்தான்களும், துஷ்ட தேவதைகளும், தெய்வ கோபங்களுமேயாகும் எனப் பலவாறு எண்ணித் தவித்த காலத்தில் நோய்க் கிருமிகளே நோய்கள் பல வற்றிற்கு காரணமாகின்றன, இவையே நோய்களைப் பரப்புகின்றன. என்ற மருத்துவ உண்மையை மிகத் தெளிவான முறையில் அதர்வ வேதம் எடுத்தியம்பியுள்ளது. அதர்வ வேதத்தின் இரண்டாம் காண் டத்தில் 66ம் 67ம் சூக்தங்களாக கிருமி நாசம் என்ற பகுதி இடம் பெற்றுள்ளமை நோக்கற்பாலது. எடுத்துக்காட்டாக,

"காண்பது காணாததையும்,
- குரூரத்தையும்
நான் நாசஞ்செய்கிறேன். நாங்கள் பல
- நாமங்களுள்ள
புழுக்களையும் கிருமிகளையும் வாக்கால்
- விழுத்துகிறோம்"

"குடற்புழு, சிரக்கிருமி, நரம்புக்
- கிருமிகளை
அவயங்களைத் துளைக்கும்
- புழுக்களை
வாக்கால் வீழ்த்துகிறோம்."

என்று அமையும் பாடல்களைச் சுட்டிக்காட்டலாம்.

மேலும் மனித உடற்கூற்றியல் பற்றிய அறிவு மருத்துவத் துறைக்கு இன்றியமையாததாகும். அந்த வகையில் மனித உடற்கூற்றியல் பற்றிய சில ஆரம்ப நிலை விளக்கங்களை அதர்வ வேதத்தில் காணலாம். குறிப்பாக அதர்வ வேதத்தின் 10ம் காண்டத்தில் இத்தகைய விளக்கங்கள் சில இடம்பெற்றுள்ளன.

"புருஷனது இரண்டு குதிக் கால்கள் எவனால் சேர்க்கப்பட்டன எவனால் அவனில் இறைச்சி ஒன்று சேர்க்கப்பட்டது அவனது இரண்டு கணுக்கால்கள் அவனது அழகான விரல்கள் அவனது நவத்துவாரங்கள் எவனால் சேர்க்கப்பட்டன."

"அவனது மூளை அவனது நெற்றி அவனது பிடரி என்பை, அவனது கபாலத் தைச் செய்த தேவன் எவன்?"

இவ்வாறு மிக நீண்ட விவரணம் ஒன்று அப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேலும் இதயத்திலிருந்து சுத்த ரத்தத்தை எடுத்துச் செல்லும் ரத்த நாடிகளைப் பற்றியும், கழிவு ரத்தத்தை அவயவங்களிலிருந்து கொண்டுவரும் நாளங்களைப் பற்றியும் அதர்வவேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாடிகளில் பாய்கின்ற பிரகாசமான சிவப்பு நிறமுடைய குருதியை "அருணா" எனவும் நாளங்கள் தாங்கி வருகின்ற ஓரளவு கருஞ்சிவப்பு நிறக் குருதியை "லோஹினி" என்றும் அதர்வ வேதம் வேறுபடுத்தி அடையாளங் கண்டுள்ளது.

மேலும் நாடிகளிலும், நாளங் களிலும் ஓடுகின்ற குருதியினிடையே ஓடும் வேகம், நிறம் ஆகிய பண்புகளில் காணப்படும் தெளிவான வேறுபாட்டை இன்றைய உடற்கூற்றியல் வல்லுநர்களே வியக்கும் வகையில் அதர்வவேதம் தெளிவாக இனங்காட்டியுள்ளது. எடுத்துக் காட்டாக,

"இப்புருஷனில் துரிதமாயும்
- சிவப்பாயும்,
சிவந்து கறுத்தும் கலங்கியும்
- நிதானமாயும்
மேலுங்கீழும் குறுக்குமாகி
அதிகம் பாய்ந்தோடும்
- நதியோட்டத்துக்கு
தனித்தனியோடும் நீர்களை
- எவன் செய்தான்"

என்ற பாடற் பகுதியைக் குறிப்பிடலாம்.

மேலும் குருதிப் பெருக்கை நிறுத்துவதற்கான வழி முறைகள் பற்றியும் சில ஆரம்பநிலைச் சிந்தனைகள் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன.

"சிகப்பு உடைகளுடன் சலனமாகும்
- ஸ்திரீகளாம்
நாடிகளான நீங்கள் சக்தியொழிந்து
- சாந்தமாகுங்கள்"

என்று தொடங்கும் இச்சூக்தமானது இரத்தப் பெருக்கைத் தடுப்பதற்கான சூக்தமாகக் கருதப்படுகிறது எனப் பேராசிரியர் வி.சிவசாமி தனது சமஸ்கிருத

இலக்கியச் சிந்தனைகள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

மேலும் மனித உடலிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கையை முதன் முதலில் கணித்துக் கூறியதும் அதர்வ வேதமே. இதனை சதபதப் பிராமணமும் விளக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது. இந்தக் கணிப்பானது தற்கால உடற்கூற்று நிபுணர்களின் துணிபுகளோடு பொருத்தப் பாடுடையதாகக் காணப்படுவது வியக்கத் தக்கதாகும். அதே வேளை முறிந்த எலும்பை மீளப்பொருந்தச் செய்ய வல்லதான மருந்துச்செடி பற்றியும் அதர்வ வேதத்தில் (4-12-1) குறிப்புள்ளது.

மேலும் நோயுற்றவர்களுக்கு வலுக்கொடுத்து அவர்கள் இழந்த தெம்பை மீளப்பெறுவதற்கு வழிசெய்கின்ற தாயத்துக்கள் பற்றியும் அதர்வ வேதம் கூறுகிறது. இத்தாயத்துக்களில், சில நீண்ட ஆயுட்காலத்தைத் தரவல்லன என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது. "மணி என்ற சங்கேத மொழியால் தாயத்துக்கள் அழைக்கப்பட்டன. வியாபக மணி, ஜங்கிடமணி, சங்குமணி, தருப்பை மணி, ஸ்கந்தமணி என ஐந்து வகையான தாயத்துக்கள் அடையாளங்காணப் பட்டுள்ளன. இவற்றின் பயன்பாட்டில் மருத்துவ குணாம்சமும், நம்பிக்கையும் சரி விகிதத்தில் கலந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்லோருக்கும் புரியக்கூடாது என்பதற்காகவே திட்டமிட்டு பிரயோகிக்கப் பட்டுள்ள சங்கேத மொழிகளும் குழூக் குறிகளும் விடுகதை/புதிர் போன்ற பகுதி களும் இவ்வேதத்தில் ஆழ்ந்து கிடக்கும் மருத்துவ உண்மைகளை முழுமையாக அறிய முடியாதவாறு அரண் செய்கின்றன. அதேவேளை சமய சாஸ்திரம் என்ற நிலை கடந்து அறிவியற் கண்கொண்டு அதர்வவேதத்தை ஆராய வேண்டியதும் இன்றியமையாததாகும். எவ்வாறாயினும் இந்துக்களால் வளர்த்தெடுக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவக் கலையின் ஆழமான ஆரம்ப நிலைப் போக்குகளை அதர்வ வேதம் தன்னகத்தே தேக்கி வைத் துள்ளது என்ற உண்மை எவராலும் நிராகரிக்கப்பட முடியாததொன்றாகும்.

## உசாத்துணை நூல்கள்

**ஜம்புநாதர்.எம்.ஆர்,**
**அதர்வவேதம் மொழிபெயர்ப்பு**
ஜம்புநாதன் புத்தகசாலை, சென்னை, 1940

**ஸ்ரீ ராமதேசிகன்.எஸ்.என்.**
**சுஸ்ருத ஸம்ஹிதை (தமிழாக்கம்) பகுதி11**
இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி
இயக்குநர் அகம், சென்னை - 106, 1995

**நஜன், வேதமாதா;**
பிரதீபா பிரசுரம், சென்னை.

**சிவசாமி.வி.**
**சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள்**
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1989

**சற்குணதாஸ்.சாமி**
**புராதன இந்தியாவின் அறிவியல் மேதைகள்**
தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை.

**பசாம், A.L.**
**வியத்தகு இந்தியா**
சிட்சுவிக்குயாக்சன் கம்பனியார்,
லண்டன் 1963.



# விளங்கு வள்ளி காந்தன்

**கு.பாலஷண்முகன்**

***மாணவன், யாழ் பல்கலைக்கழகம்.***

அமுதக் கடலாம் அழகுத் தமிழில் புதுமை செய்த புலவர் அருணகிரியார். கற்குந்தோறும் கற்குந்தோறும் நெக்கு நெக்குருகி நெஞ்சம் குழைகின்ற அற்புதமான படையல்களை அள்ளித் தந்தவர். அதனிலும் கந்தர் அலங்காரம் என்பது கற்கண்டு மலையிலே தேன்மழை பொழிவதை ஒத்ததாகின்றது.

அலங்காரம் என்றால் அழகு செய்வது என்பது பொருள். முருகு என்றாலே அழகு, இளமை என்பது பொருள். இயல்பாக, இயற்கையாக அழகாய் உள்ளபோது அலங்காரம் இனியொன்று தேவையா? ஆனால் அருணகிரியார் அலங்கரித் திருக்கிறாரே! அதுதான் முருக அலங்காரம் என்று பெயரிடாமல் கந்தர் அலங்காரம் என்று பெயரிட்டாரோ? நாங்களும் அழகு செய்கின்றோம். அழியும் அழகு-அழியும் உடலுக்கு இரண்டுமே நிலையில்லாதவை. முருகன் தமிழ்க் கடவுள். தமிழ் என்றும் இளமை குன்றாத கன்னித் தமிழ், முருகன் திருவடி தீண்டப்பெற்ற தமிழ். இதனையே,

**"தாவடி யோட்டு மயிலிலும்**
**தேவர் தலையிலும் என்**
**பாவடி யேட்டிலும் பட்ட தன்றோ........."**
என்கிறார் அருணகிரியார்.

**"பூமியதனிற் ப்ரபுவான புகலியில் வித்தகர்**
**- போல**
**அமிர்தகவித் தொடைபாட அடிமை**
**- தனக்கருள்வாயே..........."**
*(திருக்கைலைத்திருப்புகழ்).*

என்று ஞானக்குழந்தையினது ஆற்றல் வேண்டிப் பெற்று பாடினார். இத்தகைய அற்புதங்கள் பல நிறைந்தவை அருணகிரியாரின் படையல்கள்.

**சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு**
**- வெற்பனைச் செஞ்சுடர்வேல்**
**வேந்தனை செந்தமிழ் நூல்**
**- விரித்தோனை விளங்கு வள்ளி**
**காந்தனைக் கந்தக் கடம்பனைக்**
**- கார்மயில் வாகனனைச்**
**சாந்துணைப் போது மறவா**
**- தவர்க்கொரு தாழ்வில்லையே.**

என்பது கந்தர் அலங்காரம் எழுபத் திரண்டாவது பாடல். சிவத்திருமேனி யுடையவனைப் பற்றினால் பாவங்கள் நீங்கும் என்பது தொனிப்பொருள். இங்கு தான் இரண்டாம் மூன்றாம் அடிகளிலே விளங்கு வள்ளிக் காந்தனைக் குறிப் பிடுகிறார். அற்புதங்கள் பல கொண்ட சிற்பரனாகியவன் சிகண்டி மீதேறும் செங்கோடன். அற்புதம் இங்கு புரிய வைக்கப் படுகிறது. பக்குவப்பட்ட ஆன்மாவை நோக்கிப் பரம்பொருள் வருதலும் உண்டு. ஆன்மா பக்குவம் தேடிப் பரமன் தாழ் சேர்வதும் உண்டு. தெய்வயானை அம்மன் திருமணம் தெய்வேந்திரனால் நன்றிக் கடன் பொருட்டு நடைபெற்றது. இது ஆன்மா ஆண்டவனை நாடிச் சென்றமையைக் காட்டிற்று.

வள்ளியம்மை திருமணம் ஆன்மாவை நாடி ஆண்டவன் ஓடி வருதலைக் காட்டுகிறது.

விளங்கு என்ற வினையடியால் எத்தனை அர்த்தங்கள் புலப்படுகின்றன. விளங்கிய, விளங்குகின்ற, விளங்கும் என விரியும் வினைத் தொகையாக அமைத்து பல கருத்துக்களைத் தருகிறது இந்த அடி.

"மொழி யொன்று புகலாயாயின்
- முறுவலும் புரியாயின்
விழியொன்று நோக்காயாயின் விரகமிக்
- குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டாயாயின்
- மனமுஞ்சற்று ருகாயாயின்
பழியொன்று நின்பாற்சூழும் பராமுகம்
- தவிர்தி என்றான்"

என்பது கச்சியப்பர் பாடல். தினைப்புலம் காத்துக் கொண்டிருந்த பெண்மானிடம் சென்ற பெம்மான் தம் காதல் எடுத்தியம்பி விரக தாபம் தீர்க்கும் படி கேட்டதைக் கூறுவது இப்பாடல். இதனை விளங்கிக் கொண்டு அறுமுகன் ஆடல் கொள்ள அணியினளாகிய வள்ளி என்பது ஒரு பொருள்.

"ஆறிரு தடந்தோள் வாழ்க..................
............................ யானை தன்
அணங்கும் வாழ்க மாறிலா வள்ளி
வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்."

என்பதுவும் கச்சியப்பர் திருவாக்கு. இங்கு மாறிலா வள்ளி என்பது தெய்வானை யிலிருந்து சற்றும் மாறுபடாதவள். அவள் தேவலோகப் பெண் இவள் வேடிச்சி என்ற வேறுபாடு காணாது கூறப்பட்டது.

இன்னும், சந்திரனிற் கூடக் கறையுண்டு. ஆனால் வள்ளி, மாசு மறு ஏதுமற்றவள் இதனால் மாறிலா வள்ளி என்றார். அப்படிப்பட்ட மாறிலா வள்ளி எப்போதும் விளக்கமாகவே காணப் படுவாள் என்பது இன்னொரு பொருள்.

ராம காதையிலே கவிச்சக்கர வர்த்தி கம்ப நாடாழ்வார் "தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க........." என்றார். அங்கு தாமரை மலர் விளக்காகி விட்டது. இங்கு செஞ்சுடர் வேலை வேலன் தாங்குகின்றான். 'அந்த வேல் சுடர் விடுகிறது. வள்ளியின் விளக் கனைய தன்மையால் வேந்தனது வேல் செஞ்சுடர் வேலாகி விட்டது என்பது இன்னொரு பொருள்' வேல் ஒளி விளங்க வைத்த வள்ளியைப் பற்றியவன் என்ற வகையில் இப்பொருள் காணலாம்.

முருகனுக்கு இயல்பாக அழகி ருப்பது போல வள்ளி நாச்சியாரும் அழகுடைய மாதுதான். "மொய்தார் அணி குழல் வள்ளியை வேட்டவன்" என்பது அருணகிரியாரின் இருபத்திரண்டாவது கந்தரலங்காரப் பாடலில் கூறப்படுகின்றது. எழில் ஒழுகும் திருமேனி விளங்க வீற்றி ருக்கும் வள்ளி என்ற பொருள் கிடைக் கிறது. விளங்கு வள்ளி என்பதற்கு இதுவும் பொருளாகும். இன்னும் பல நிறைந்து உள.

"..........பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா............."

என்று திருப்புகழில் பாடுகிறார் அருணகிரியார். இதன் கருத்து இனிய தேன் போன்ற கனிவான மொழி பேசும் கன்னியாம் குறமகள் பாதம் வருடியவர்

வேலவர் என்பது. இங்கு ஒலி விளங்கப் பாகுகனிய ஆலோலம் பாடினார் வள்ளி. "சேவல்காள் ஆலோலம் என்றால் திருந் திழையாள்" என்கிறார் கச்சியப்பர். இங்கே அவளது அழகொளி விளங்குகிறது மெய்யும் மொழியும் செய்யும் அழகு நிறைந்த அருந் தமிழில் ஆயிரம் விளக்கங்கள் விளங்கு வள்ளிக்கு விளக்கந்தரலாம்.

காந்தம் என்றால் பற்று என்பது பொருள். ஈர்ப்பு, கவர்ச்சி என்றும் பொருள் உண்டு. காந்தன் என்றால் இங்கே இத்தகைய விளக்கம் நிறைந்த வள்ளியை ஈர்த்துக் கொண்டவன் என்பது பொருள். கடம்ப மாலை முதலிலே முருகன் சூடிக்கொண்டான். ஆனால் வள்ளியம்மை அருகணைத்து விளங்கவே அது கந்தம் பொழிகிறது என்கிறார் அருணகிரியார். "விளங்கு வள்ளி காந்தனை கந்தக் கடம்பனை......." எனவரும் வகை அதியற் புதமானது. தனியே முருகனையல்ல தனியே வள்ளியையல்ல விளங்கு வள்ளி காந்தனை, சாந்துணைப்போது மறவாதவற்கு ஒரு தாழ்வில்லையே என நிறைவு செய்கிறார்.

பெண்ணுக்குப் பெருமை தாய்மை, அது இயல்பிலேயே உள்ளது. "நற்பெருந் தவத்தாளாய நங்கை" என்கிறார் கம்பர். இது அதியுச்சமான நிலையைக் காட்டு கிறது. இங்கே தவமே வடிவாய் விளங்கும் வள்ளியை தேடி நாடி ஓடி வந்து கோடி கோடியாய்க் கொடுத்து அதனம் என்ற மாடிப் பரணில் வலிதாய் மணந்து மகிழ்கிறார் முருகப்பெருமான்.

செந்தமிழ் நூல் விரித்தோன் என்பதைத் தொடர்ந்தே விளங்கு வள்ளி காந்தன் என்றுளது. தமிழ்ப்பிரியனாகிய செவ்வேள் தமிழணங்கின் தமிழிற்காகவும் சேர்த்தே காதல் கொண்டான்.

"தேனுழறு கிளவிக்கு வாயூறு நின்றவன்" என்ற தொடர் காண்க.

விளங்கு வள்ளி காந்தன் என்பது, தமிழ் விளங்கும் வள்ளியைக் காந்தமாக பாந்தமாக மாற்றியவன் என்ற படியும் பொருள் தருதல் கண்டு கொள்ளலாம்.

ஓரடிக்குப் பொருள் இத்துணை விரிகிறது. அலங்காரம் செய்த அருண கிரியின் செந்தமிழ்ச்செம்மை யென்ற செவ்வேலின் சிறப்பென்ன? செவ்வல்லிப் பெண் வள்ளியம்மையிடம் விளங்கும் செழுமையென்ன?

"தமிழ் தழீ இய சாயலர்" என்று சங்க இலக்கியம் செப்புவதும் இதனையோ?

## உசாத்துணை நூல்கள்


1. கந்தரலங்காரம் மூலமும் உரையும்
2. கந்தவேள் கருணை - வாரியார் சுவாமிகள்
3. திருப்புகழமிர்தம் - வாரியார் சுவாமிகள்
4. கந்தரலங்காரம் - வாரியார் சுவாமிகள்
5. கம்பராமாயணம் - சில பாடல்கள்


**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

-குறள்-

# நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

கலாநிதி க.குணராசா

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றுக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தல வரலாற்றுக்கும் நெருங்கிய பிணைப்புள்ளது. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் நிர்மாணம் குறித்துப் பின்வரும் கருத்துக்களை அல்லது கருதுகோள்களை, தொல்லியல், வரலாறு, இலக்கியம், ஐதீகம் முதலான வற்றிலிருந்து பெறமுடிகின்றது.

1. கி.பி.948 ஆம் ஆண்டு, அதாவது இற்றைக்கு ஆயிரத்து ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பூநகரியிலுள்ள நல்லூரில் முதன் முதற் கட்டப்பட்டது *(ஐதீகம்.)*

2. கி.பி.1248 ஆம் ஆண்டு, அதாவது இற்றைக்கு எழுநூற்றைம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண நல்லூரிலே குருக்கள் வளவில் முதன் முதல் அல்லது மீண்டும் கட்டப்பட்டது *(இலக்கியம்).*

3. கி.பி. 1450 - 1467 காலப்பகுதியில் யாப்பாண நல்லூரில் முத்திரைச் சந்தியில் (பின்னர் வந்த பெயர்) மீண்டும் அமைக்கப்பட்டது (வரலாறு).

4. கி.பி.1734 ஆம் ஆண்டு அதாவது இற்றைக்கு இருநூற்று ஐம்பத்துநான்கு ஆண்டுகளுக்கு முன், மீண்டும் யாழ்ப் பாண நல்லூர் குருக்கள் வளவில் இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் நிறுவப்பட்டது (வரலாறு).

5. கி.பி.1749 ஆம் ஆண்டு, அதாவது இற்றைக்கு இருநூற்று ஐம்பத்துநான்கு ஆண்டுகளுக்கு முன், மீண்டும் யாழ்ப்பாண நல்லூர்க் குருக்கள் வளவில் இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் நிறுவப்பட்டது (வரலாறு).

யாழ்ப்பாண நகர், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்பன அமைக் கப்பட்ட காலம், அமைத்தவர் பெயர் என்பன குறித்து யாவரும் ஆதாரமாகக் கொள்ளும் பாடல் ஒன்று யாழ்ப்பாண வரலாற்றின் இலக்கிய ஆதாரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படும் கைலாச மாலையின் முடிவில் தனிப்பாடலாக அமைந்துள்ளது.

**இலக்கிய சகாத்த மெண்ணூற்**<br>
**- றெழுபதா மாண்டதெல்லை**<br>
**அலர் பொலி மாலை மார்பனாம்**<br>
**- புவனேகவாகு**<br>
**நலமிகும் யாழ்ப்பாண நகரி**<br>
**- கட்டுவித்து நல்லைக்**<br>
**குலவிய கந்தவேட்குக் கோயிலும்**<br>
**- புரிவித்தானே**

*(கைலாசமாலை 1939)*

இத்தனிப்பாடலிலிருந்து இரு விபரங்கள் புலனாகின்றன. ஒன்று நல்லூர்க்

கந்தசுவாமி கோயிலைக் கட்டியவர் புவனேகவாகு என்ற பெயர் பூண்டவர். மற்றையது, அக்கோயில் சகவருடம் எண்ணூற்றெழுபதாமாண்டிற் கட்டப் பட்டது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவர் புவனேகவாகு என்பதற்கு இன்னோர் ஆதாரம், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலிற் காணப்படும் விசுவநாத சாஸ்திரியார் சம்பவ குறிப்பு ஆகும். அது வருமாறு.

**இலகிய சகாத்த மெண்ணூற்**
**- றெழுபதா மாண்டதெல்லை**
**அலர் திரி சங்கபோதியாம்**
**- புவனேகவாகு**
**நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி**
**- கட்டுவித்துக்**
**குலவிய கந்தனார்க்குக் கோயிலொன்**
**- றமைப்பித்தானே**
*(முத்துத்தம்பிப்பிள்ளை ஆ. 1933)*

இச்செய்யுள் கைலாயமாலையில் வரும் தனிச்செய்யுளின் அப்பட்டமான பிரதி. திரிசங்கபோதி புவனேகவாகு கோயிலை அமைப்பித்தாரென அறிந்த விஸ்வநாத சாஸ்திரிகள் கைலாய மாலைத் தனிச் செய்யுளில் மாற்ற முண்டாக்கி யாத்துள்ளார். எவ்வா றாயினும் புவனேகவாகு என்பவரே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய பெருமகன் என்பதிற் பாடபேத மில்லை. இன்னோர் ஆதாரமும் இதனை உறுதிப்படுத்தும். நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டியமே அதுவாகும்.

**சிறீமான் மஹாராஜாதிராஜ**
**அகண்ட பூமண்டலப்ர**
**தியதிகந்தர விச்றாந்த கீர்த்தி**
**சிறீ கஜவல்லி மகாவல்லி**
**சமேத சுப்ரமண்ய**
**பாதார விந்த ஜநாதிருட சோடக**
**மகாதன சூர்யகுல**
**வம்சோத்பவ சிறீசங்க**
**போதி புவனேகவாகு**
(குலசபாநாதன், 1971)

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய புவனேகவாகு, இவ்வாறு கோயிற் கட்டியத்தில் இன்றும் போற்றப படுகிறார். இக்கட்டியத்தின் அர்த்தம் வருமாறு, "திருவருட்சக்திகளான தெய்வயானை அம்மனும், வள்ளியம்மனும் ஒருங்கே பொருந்த வீற்றிருக்கும் சுப்பிரமணியப் பெருமானின் திருவடித் தாரைகளை வணங்குபவனும், மன்னர்களுள் மன்னனும், செல்வங்களுடையவனும், மிகப்பரந்த பூமியடங்கலுமுள்ள திசைகள் எல்லாவற்றிலும் பரவிய புகழையுடையவனும், மக்களுடைய தலைவனும், பெரிய தானங்களைச் செய்பவனும் சூரிய குலத்திலே தோன்றியவனும், சிறீ சங்கபோதி என்னும் விருதுப் பெயர் தரித்தவனுமான புவனேகவாகு" *(சிவசாமி.வி.1971).*

எனவே, கைலாயமாலை கூறும், அலர்பொலி மாலை மார்பன் புவனேக வாகுவும், விஸ்வநாத சாஸ்திரியின் சம்பவக் குறிப்புக் கூறும் திரிசங்கபோதி புவனேகவாகுவும் கோயிற்கட்டியம் கூறும் சிறீசங்கபோதி புவனேகவாகுவும் ஒருவரா என்ற வினா எழுகின்றது. பின்னவர்

இருவரும் ஒருவரே என்பதில் வரலாற்றறிஞர் களிடையே அபிப்பிராய பேதமில்லை.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதன் முதற் கட்டிய புவனேகவாகு என்ற பெயர் கொண்டவர் யார்? கல்வெட்டா தாரங்களும், செப்பேட்டா தாரங்களும் இவர் குறித்துக் கிடையாது விடினும், நூலாதாரங்களும் பதிவேட்டுக் குறிப்பா தாரங்களும் உள்ளன. அவை:

"சிங்கையாரியன் சந்தோஷத் துடனிசைந்து கலைவல்ல சிகாமணி யாகிய புவனேகவாகு என்னும் மந்திரி யையும், காசிநகர்க் குலோத்துங்கனாகிய கெங்காதர ஐயரெனுங் குருவையும் அழைத்துக் கொண்டு, தனது பரிவாரங் களுடன் யாழ்ப்பாணம் வந்திறங்கினான்" என யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் ஜோன் கூறுகிறார். (ஜோன் எஸ் 1882).சிங்கையாரிய மகாராசன் இப்படியே அரசாட்சியைக் கைப்பற்றி நடத்தி வருகையில் புறமதில் வேலையையுங் கந்தசுவாமி கோயிலையும் சாலிவாகன சகாப்தம் 870 ஆம் வருசத்தில் புவனே கவாகு எனும் மந்திரி நிறைவேற்றினான்." என யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூல் கூறுகின்றது. (வைபவமாலை 1949). யாழ்ப்பாணக் கச்சேரியில் 1882 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சைவசமயக் கோயில்கள் பதிவேட்டில் பின்வருமாறு காணப்படுகின்றது. "கந்தசுவாமி கோயில், குருக்கள் வளவு என்ற காணியிற் கட்டப் பெற்றுள்ளது. இது தமிழ் அரசன் ஆரியச் சக்கரவத்தியின் பிரதமமந்திரி புவனேகவாகரால் 884 ஆம் ஆண்டளவிற் கட்டப்பெற்றது"

*(குலசபாநாதன் 1971).*

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பிரதம குருக்களாகவிருந்த சுப்பையா என்பார். 1811 இல் ஆள்வோருக்கு எழுதிய முறைப்பாடு ஒன்றில், கோயிலைக் கட்டியவர் பெயர் புவனேகன்கோ (Pooveneageangoo) எனக் குறிப் பிட்டுள்ளார். (Johnson Alexander - 1916/17).

## புவனேகவாகுகள் :

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றினை நுணுகி ஆராயில் மூன்று புவனேகவாகுகள் ஏதோவொரு வகையில் வரலாற்றின் போக்கில் சம்பந்தப் பட்டிருப்பதனை அறியமுடியும்.

'இலக்கிய சகாத்தமெண்ணூற் றெழுபதாமாண்டு' என முற்குறித்த செய்யுள்களில் வருவது, சகவருடம் 870 ஆம் ஆண்டு என்றால் அது கி.பி.948 ஆம் ஆண்டாகும். (ஜோன் எஸ்.1882) எனவே கி.பி. 948 ஆம் ஆண்டளவில் அதாவது பத்தாம் நூற்றாண்டில் வட விலங்கை அரசில் புவனேகவாகு என்ற அரசர் அல்லது அரசப் பிரதிநிதிகள் இருந் துள்ளனரா? கி.பி. 944 இல் பராந்தகச் சோழன் இலங்கைமீது படையெடுத்துச் சிங்கள மன்னனைப் புறங்கண்டு, சிங்கை நகர் அரசனைக்கொன்று, வடவிலங்கையை வென்று ஒரு இராசப் பிரதிநிதியை நியமித்துவிட்டுச் சோழநாடு மீண்டான் *(இராசநாயகம்.செ.1933).* அந்த இராசப் பிரதிநிதி புவனேகவாகுவாக இருக்கலாம். இக் காலகட்டத்தில் வடவிலங்கையில் புவனேகவாகு என்ற ஒருவன் அரசனாக அல்லது அரசப் பிரதிநிதியாக இருந் துள்ளான் என்பதற்கு மேலும் சில ஆதாரங்கள் உள்ளன.

'பத்தாம் நூற்றாண்டிலே பார்சி யாவின் அரசனாக டோபாக் என்பவன், கர்ஷாஸப் என்பவனின் தலைமையில் அனுப்பிய படை ஒன்று கலா என்ற துறையில் (கலா என்பது ஊர்காவற்றுறை - களபூமி) இறங்கி இருநாட் பயண தூர முள்ள ஓரிடத்தில் வாகுவென்னும் அர-சனை வெற்றி கொண்டது' என்று அசேதி என்ற பார்சியன் கர்ஷிஸ்ப் நமா என்னும் கிரந்தத்தில் எழுதியுள்ளான். பத்தாம் நூற்றாண்டில் வாகு என்னும் பெயருடன் இலங்கை அரசரில் யாழ்ப்பாண மொழிந்த பிறவிடத்தில் எவருமிருந்திலர் *(இராசநாயகம் செ.1933).* வாகு என்று பார்சிய நூல் குறிப்பிடும் மன்னன் அல்லது சிற்றரசன் அக்கால வேளையில் சோழரின் அரசப் பிரதி நிதியாக வடவிலங்கையில் விளங்கிய புவனேகவாகுவாக இருத்தல் வேண்டும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் பூசகராக சின்னமனத்துளார் என்பவர் புவனேகவாகு என்பவருக்கு ஒரு நாள் விருந்து வைத்ததாகவும், அவ்விருந்தில் பரிமாறப்பட்ட பதார்த்தம் ஒவ்வொன்றிற்கும் புவனேகவாகு ஒவ்வொரு வெண்பா பாடியதாகவும் வைபவமாலை குறிப்பிடுகின்றது. இந்தச் சின்னமனத்துளார் சிதம்பர தீட்சிதரின் மகன் பெரியமனத்துளாரின் பேரன் நாகதீவின் (யாழ்ப்பாண அரசின்) முதல் மன்னனான உக்கிரசிங்கன் காலத்தில் (கி.பி.785) தான் பெரியமனத்துளார் இந்தி யாவில் இருந்து கோயிற்றி ருப்பணிக்காக இங்கு வந்துள்ளார். (வைபவமாலை 1949) எனவே மூன்று தலை முறைகளை மனதிற் கொண்டு கணிக்கும்போது அசேதி சந்தித்த வாகு, சின்னமனத்துளார் விருந்தளித்த புவனேகவாகுவாக இருத்தல் சாத்தியமாகும்.

**சிங்கைநகர்:**

யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாக அடையாளங் காணப்படும் உக்கிரசிங்கன் (கி.பி.785) கதிரமலை (கந்தரோடை) யினைத் தலைநகராமாகக் கொண்டு உத்தர தேசத்தை ஆண்டு வந்தான். ஒரு கட்டத்தில் தலைநகரமாக இருந்த கதிரமலையை விட்டுச் சிங்கை நகருக்குத் தனது தலைநகரை மாற்றிக் கொண்டான். (இராசநாயகம் செ.1933). அதற்கான காரணங்கள் தெளிவானவை. கந்த ரோடைப் பிரதேசம் பௌத்த மத மக்களது முக்கிய பிரதேசமாக மாறி யிருந்தது. அத்துடன் சங்கமித்த தேரரின் வருகையின் பின்னர் இந்தியாவி லிருந்து இலங்கைக்கு வருகை தந்த பௌத்த யாத்திரிகர்கள் ஜம்பு கோளப்பட்டினம் (திருவடி நிலை) ஊடாக வந்திறங்கினர். ஜம்பு கோளப்பட்டினத்தில் விகாரை யொன்று கட்டப்பட்டிருந்தது.

இதனைவிட ஸாலிப்பதவிகாரை, திஸ்ஸவிகாரை என்பனவும் நாகதீவில் அமைந்திருந்தன. கந்தரோடையோடு வல்லிபுரத்திலும் பௌத்தமத மக்கள் பரவியிருந்தனர். பௌத்தம் நாகதீபப் பிரதேசத்திற் பரவியிருந்த ஒரு காலகட்டத்தில், சிங்கள ஆட்சியாளரின் ஆதிக்கத்திலிருந்து உக்கிரசிங்கன் நாட்டை விடுவித்திருந்தான். தீவிர

சைவனாக இவன் விளங்கியுள்ளான் என்பதை இவன் ஆற்றிய திருப்பணிகள் நிறுவுகின்றன. கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் இவனாற் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இவனது மனைவியான மாருதப்புரவீகவல்லி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்தான். யாழ்ப்பாண இராச்சியத்தில் சைவம் இழிநிலையிலிருப்பதைக் கண்டு புத்தூக்கம் அளிக்க விரும்பிக் காசிப்பிராமணர்கள், பெரியமனத்துளார் என்ற அந்தணர் என்பவர்களை வருவித்துக் குடியிருத்தியுள்ளான். இந்தியாவிலிருந்து சில விக்கிரகங்கள் எடுத்து வரப்பட்டு இந்துக் கோயில்களில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு உக்கிரசிங்கன் பல்வேறு முயற்சிகள் செய்தும் பௌத்தத்தினது செல்வாக்கு, கதிரமலை, வல்லிபுரம் பகுதிகளில் நிலை கொண்டிருந்தது. அதாவது நாகதீபத்தின் மேற்குப்பகுதி, கிழக்குப்பகுதி என்பன வேற்றுமத ஆதிக்கத்திலிருக்க தென்பகுதி (யாழ்ப்பாணம்), மக்கள் விரும்பிக் குடியேறாத பிரதேசமாக விளங்கியது. இத்தகு நிலையில் தனது தலைநகரை இடம் மாற்றுவதற்கு உக்கிரசிங்கன் விரும்பினான். இதனையே முதலியார் செ.இராசநாயகம், ''உக்கிர சிங்கன் சிவவழிபாடுடையவனான படியால் புத்தபள்ளிகள் நிறைந்த கதிர மலையிலும் சிங்கைநகரே சிறந்ததென நினைத்தான்போலும்'' என்கிறார். (இராசநாயகம்.செ.1933) சைவம் சிறப்புறக்கூடிய புதியதொரு பிரதேசத்தை அவன் தெரிவுசெய்ய விரும்பியமையின் விளைவாக சிங்கைநகர் புதிய தலைநகராக மாறியது.

## சிங்கைநகர் எது?

உக்கிரசிங்கன் புதிய தலைநகர் ஒன்றினைத் தன் இராச்சியத்தில் உருவாக்க விரும்பி வன்னிப் பிரதேசத்தில் திக்குவிஜயம் ஒன்றினை மேற்கொண்டான். அவன் வன்னிமார்க்கமாகச் செல்கையில் வன்னியர்கள் ஏழுபேரும் எதிர்கொண்டு வந்து வன்னிநாடுகளைத் திறைகொடுத்து ஆள உத்தரவு கேட்டார்கள். (வைபவ மாலை - 1949) உக்கிரசிங்கன் அதற்குச் சம்மதித்தான். அத்தோடு வன்னியரின் ஆதிக்கத்தினுள் அடங்காது கிடந்த பூநகரிப் பிரதேசத்தில் அவன் தன் புதிய தலைநகரை உருவாக்கிக் கொண்டான். அதுவே சிங்கை நகராகும். கதிரமலையிலிருந்து தலைநகரை வேறிடத்திற்கு மாற்றிப் புதிய தலைநகர் ஒன்றினை உருவாக்கிய உக்கிரசிங்கனின் பெயரைத்தாங்கி சிங்க(ன்) நகர் என அந் நகர் பெயர் பெற்றது.

தமிழரசின் ஆரம்பத் தலைநகரான சிங்கைநகர் என்பது யாழ்ப்பணத்திற்கு வெளியே வன்னிப் பிராந்தியத்தில் குறிப்பாக பூநகரியில் இருந்ததெனக் கூறமுடியும் *(புஸ்பரத்தினம் ப.1993).* வல்லிபுரப்பகுதியிலே சிங்கைநகர் இருந்ததென்றும், நல்லூருக்கு அருகில் இருந்ததென்றும் வரலாற்றாசிரியர்கள் கொள்வது ஏற்றதாகவில்லை. சிங்கை நகரை உக்கிரசிங்கன் பெரு நிலப் பகுதியிலே நிறுவினான் என்பது பொருத்தமானது. புஸ்பரத்தினத்தின் ஆய்வுகளிலிருந்து பூநகரிப் பிரதேசம் பண்டைய இராச்சியம் ஒன்றின் வளமான பிரதேசமாக விளங்கியிருக்கிறது எனத் தெரிகிறது. பூநகரிப் பிரதேசத்தில் கிடைத்த அகழ்

வாராய்ச்சிப் பொருட்கள் இதனை நிருபிக்கின்றன *(புஸ்பரத்தினம். ப.1993).*

சிங்கள நூல்களிலிருந்தும் கம்பளைக் கல்வெட்டிலிருந்தும் சிங்கை நகர் அலையெறியும் கடற்கரை யோரத்தில் அமைந்திருந்தது எனத் தெரிகிறது. "பொங்கொலிநீர்ச் சிங்கை நகராரியன்" எனக் கோட்டகமக் கல் வெட்டு குறிப்பிடுகின்றது. யாழ்ப்பாணக் கடனீரேரி அன்று பொங்கு கடலாகவே விளங்கியது. சுண்டிக்குள மணல்தடை, ஆனையிறவு மணலணை, பண்ணைப் பாலம், பொன்னாலைப்பாலம் எதுவுமற்ற இந்து சமுத்திரத்தின் கிழக்கு மேற்கு இணைப்பு இக்கடனீரேரியைப் பொங்கு கடலாக வைத்திருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தின் பயன்பாட்டை உணராத எமது மூதாதை யினரான பண்டைய தமிழ் மக்கட் கூட்டத்தினர் தமக்குப் பரிச்சயமான தரைமேல் வடிகால மைப்பைக் கொண்ட நதிகள் பாய்கின்ற வன்னிப் பிரதேசத்தை ஆரம்பத்தில் தமது வதிவிடங்களாகக் கொண்டனர் எனக் கொள்ளலாம்.

கி.பி. 944 ஆம் ஆண்டு பராந்தக சோழன் (2 ஆம் பராந்தகன்) இலங் கைக்குப் படையெடுத்துச் சிங்கள வரசனான 4 ஆம் உதயனைப் புறங் கண்டான் என்றும் சிங்கைநகர் அரசனைக் கொன்றான் என்றும் வரலாற்றுக் குறிப்புள்ளது *(இந்திரபாலா, கா.1969,70).* சிங்கைநகர் மன்னனைக் கொன்ற பராந்தகசோழன், தனது பிரதிநிதியை உத்தரதேசத்தை நிர்வகிக்க நியமித் துள்ளான். இச்சோழ மன்னனின் பிரதிநிதியாகப் புவனேகவாகு என்பான் சிங்கைநகரில் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளான். அவன் பூநகரியில் இன்று குடமுருட்டியாற்றுக்கு மேற்குக் கரையில் அமைந்துள்ள நல்லூர் என்ற பகுதியில் தனது மாளிகையை அமைத்திருக்க வேண்டும். உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற நல்லூர் என்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக் கொள்வதில் தவறில்லை. எனவே புவனேகவாகு என்ற இந்த முதலாவது அரசப் பிரதிநிதி கி.பி.948 இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதன்முதற் கட்டினானா? அவ்வாறு கட்டியிருந்தால் அது நிச்சயமாக யாழ்ப்பாணக் குடா நாட்டி லுள்ள நல்லூராக இருக்க வாய்ப்பில்லை. சிங்கைநகர் அமைந்திருந்த பெருநிலப் பரப்பிலுள்ள நல்லூராகவே இருந்திருக்க வேண்டுமெனத் துணியலாம்.

கைலாயமாலைப் பாடலின்படி கி.பி.948 இல் முதலாவது நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டது என முடிவுசெய்தல் அக்கோயில் பூநகரி நல்லூரில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

யாழ்ப்பாண வரலாற்றிற் சம்பந்தப்படும் இரண்டாவது புவனேகவாகு கி.பி.1248 ஆம் ஆண்டு இடம் பெறுகின்றான். கைலாயமாலை குறிப்பிடும் செய்யுளிலுள்ள "இலகிய சகாத்த மெண் ணூற்றெழுபதாம் ஆண்டு" என்ற வரி குறிப்பிடும் சகவருடம் 870 ஆம் ஆண்டை கி.பி. 1248 ஆண்டெனக் கணிக்கின்றனர்.

யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற சரித்திர நூலின் ஆசிரியரான சுவாமி

ஞானப்பிரகாசரின் கருத்துப்படி "எண்ணூற்றெழுபது என்பது 870 அன்று. ஆயிரமாகிய பேரென்னும் நூற்றி யெழுபதும் சேர்ந்த கணக்காகுமெனத் தோன்றும். எண் என்றால் 1000. இந்த 1000 + 107 = 1107 சக வருடம் 1107 ஆம் ஆண்டு என்றால், அது கி.பி.1248 ஆம் ஆண்டைக் குறிக்கும் என்பதாகும். (ஞானப்பிரகாசர் -1928)

**விசயகாலிங்கச் சிங்கையாரியன்:**

கி.பி.1242 இல் உத்தரதேசத்தின் மன்னனாக விளங்கியவன் விசயகாலிங்க ஆரியசக்கரவத்தியாவான். இவனே வைபவமாலை குறிப்பிடும் பாண்டிய மழவன் என்பவன் அழைத்து வந்த சிங்கையாரியன் ஆவான். இந்த சிங்கையாரியன் மன்னனுக்குப் புவனேகவாகு என்பவன் மந்திரியாக இருந்துள்ளான். (வைபவமாலை-1949). சிங்கை நகரிலிருந்து தலைநகரை மீண்டும் நாகதீபத்திற்கு (யாழ்ப்பாணக் குடாநாடு) இடம் மாற்றிய பெருமை இந்தக் காலிங்க ஆரியச்சக்கரவத்தியையே சேரும். இவனே கி.பி. 1215 இலிருந்து 1236 வரை இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட கலிங்கமாகன் என வரலாற்றறிஞர்கள் இனங் கண்டுள்ளனர்.

உக்கிரசிங்க மன்னன் கதிரமலையிலிருந்து தனது தலைநகரை பூநகரி சிங்கநகருக்கு மாற்றிக்கொண்டான். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பௌத்தரும், சிங்களவரும் ஆதிக்கம் பெற்றதால் இத்தலைநகர் இடமாற்றம் நிகழ்ந்தது. மீண்டும் 13ஆம் நூற்றாண்டில் இந்த நிலை மாறியது நாகதீவிலிருந்து சிங்களவர் தென்புலம் பெயர்ந்தனர். கலிங்கத்துமாகன் மீண்டும் உத்தரதேச மன்னனாகச் சிங்கைநகரில் முடிசூடிக்கொண்ட செய்தி எஞ்சிய பௌத்த, சிங்களவர்களையும் இடம்பெயரச் செய்திருக்குமென நம்பலாம். அதேவேளை அக்கால நாகதீவின் தென்பகுதியில் இன்றைய நல்லூர்ப் பகுதியில் ஓரளவு வளர்ச்சிபெற்ற குடியிருப்பு ஒன்று காணப்பட்டிருந்தது.

வன்னிப்பிரதேசத்திலிருந்து சிங்கைநகரை புதியதோர் பிரதேசத்திற்கு அதாவது குடாநாட்டிற்கு இடம் மாற்றுவதற்கு பல்வேறு காரணங்களை வரலாற்று ஆவணங்களிருந்து ஊகித்தறிய முடிகின்றது. கலிங்கமாகனின் படையெடுப்பினால் இராசரட்டையின் (வன்னி உட்பட) நீர்ப்பாசன நாகரிகம் அழிவுற நேர்ந்தது. பௌத்தத்தையும் சிங்கள மக்களையும் இப்பகுதியிலுருந்து அகற்றும் நோக்கோடு கலிங்கத்துமாகன் எடுத்த நடவடிக்கைகள் 1500 ஆண்டுகளாக நன்கு பயிரிடப்பட்டு வந்த பரந்த வயல்நிலங்களை காடு பரவ வைத்தனர். நீர்பாசனக் குளங்கள் கவனிப்பாரின்றி சிதிலமடைந்தன. உத்தரரட்டையிலும், இராசரட்டையிலும் காட்டுநோய்களும், மலேரியாவும் மக்களை பீடித்து அழிவை ஏற்படுத்தின. வெள்ளப் பெருக்கும், வரட்சியும் இப்பகுதிகளில் சகசமாயின. மக்கள் செறிவாக வாழ்ந்த வன்னிப்பிரதேசம் மக்கள் அரிதாக வாழும் பகுதியாக மாறியது. அதனால் விசயகாலிங்கன் சிங்கை நகரிலிருந்து இராசதானியை வடக்கே நகர்த்த விரும்பியிருக்கலாம். அத்தோடு தென்னிலங்கையிலிருந்து தாக்குதல்கள்

தொடரலாம் என்ற அச்சம் காரணமாக வடக்கே பாதுகாப்பான ஓரிடத்தில் தலைநகரை மாற்ற அவன் விரும்பி யிருக்கலாம். யாழ்ப்பாணம், ஆனை யிறவுக் கடனீரேரி இயற்கையான அகழி போன்ற குடாநாட்டு இராசதானிக்கு அரனாக விளங்கியது. மக்கள் அதிகரிப்பால் வன்னிப் பிரதேசத்தில் ஏற்பட்ட நீர் பற்றாக்குறை தரைக்கீழ் நீர் வளங்கொண்ட நன்னீர்ப் பிரதேசமான குடா நாட்டைநோக்கி நாடவைத்தது. எல்லா வற்றிற்கும் மேலாக தனது முன்னோர் களின் இராசதானியை மீண்டும் சைவச் சூழலில் தாபிக்க இம்மன்னன் விரும்பி யுள்ளான்.

யாழ்ப்பாண இராச்சியம் 13 ஆம் நூற்றாண்டிலே தான் உருவாகி நிலைத்திருந்ததென கருதும் முதலியார் செ.இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோர் உட்பட நவீன வரலாற் றறிஞர்கள் சிலரும், கந்தனாலயம் யாழ்ப்பாண இராச்சியம் செழித் தோங்கியிருந்த ஒரு காலகட்டத்திலே தான் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என கருதுகின்றனர். சிங்கை நகரில் ஆட்சிப் பொறுப்பேற்ற காலிங்கசக்கரவத்தி தனது தலைநகரை குடாநாட்டிற்கு மாற்றிக் கொண்டான். அதற்காக யாழ்ப் பாண நகரி யைத் தனது மந்திரி புவனேக வாகுவைக் கொண்டு கட்டுவித்தான். யாழ்ப்பாண நகரியை நல்லூர் குடியிருப்பில் உருவாக்கிய புவனேகவாகு கந்தவேட்கும் அங்கு ஓர் ஆலயம் எடுப்பித்தான்.

## முதலாவது ஆலயம்:

எனவே நல்லைக் குலவிய கந்தவேட்குக் கோயில் கட்டப்பட்டது கி.பி.948 ஆம் ஆண்டிலா அல்லது கி.பி.1218 ஆம் ஆண்டிலா என்பது முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். முதலாவது ஆலயம் கி.பி. 948 ஆம் ஆண்டு கட்டப்பட்டது எனக்கொண்டால் அது இராசப்பிரதிநிதியாக விளங்கிய புவனேகவாகுவால் பூநகரி நல்லூரில் கட்டப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறன்றி முதலாம் ஆலயம் கி.பி. 1248ம் ஆண்டு காலிங்க ஆரியச்சக்கரவத்தியின் மந்திரி யாகவிருந்த புவனேகவாகுவால் கட்டப் பட்டதாயின் யாழ்ப்பாண நல்லூரிலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விரு கருத்துக்களிலும் பின்னையதே சாத்திய மானதும் ஏற்றமானதுமாகவுள்ளது. எனவே கி.பி.1248 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மன்னனின் மந்திரியாக விளங்கிய புவனேகவாகு, புவனேகவாசர் குருக்கள் வளவு என்று இன்று வழங்கப்படும் இடத்தில் அருள் விளக்கத்துடன் இன்று விளங்கும் திருக்கோயில் அமைந்துள்ள இதே இடத்தில் முதலாவது கந்தவேள் ஆலயத்தை கட்டுவித்தான் எனத் துணியலாம்.

## கந்தசுவாமி கோயிலின் அழிவு:

கனகசூரியசிங்கையாரியன் வடவிலங்கையை ஆண்டவேளை தென் னிலங்கையில் கோட்டை அரசனாக ஆறாம் பராக்கிரமபாகு என்பான் விளங் கினான். அவன் ஆரிய அரசர்கள் மீது மாறாத பகைமை கொண்டிருந்தான். 1450 ஆம் ஆண்டு தனது வளர்ப்புப் புத்திரனும், சேனாதிபதியுமான சப்புமல்குமரய (செண்பகப் பெருமாள்) என்பானைப் பெரும்படையுடன் உத்தரதேசத்தைக் கைப்பற்றுமாறு அனுப்பினான். அவனது

படைமுன் எதிர்நிற்கவியலாது தமிழ்ப் படை தோற்றது. கனகசூரியசிங்கை யாரியன் தன்னிரு புதல்வர்களுடன் இந்தியாவிற்கோடிப் போனான்.

அனுராதபுரத்திலிருந்து பெரும் படையுடன் புறப்பட்ட சப்புமல்குமரயா உத்தரதேசம் எல்லாம் வெற்றிகொண்டு யாழ்ப்பாண நகரினுள்ளே (யாபாபட்டுன) புகுவதற்கு முன் பெருநிலப்பரப்பில் அமைந்திருந்த சிங்கைநகரைத் தாக்கி, அங்கிருந்த மாளிகைகள், கட்டிடங்கள் என்பவற்றை அழித்தான்.

''சப்புமல்குமரயா யாழ்ப்பாணக் தலைநகருட் புகுந்து மதங்கொண்ட களிறெனக் கண்டாரைக் கொன்று அந்தநகர் ஆவணங்களெல்லாம் இரத்த வெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி நகரில் விளங்கிய மாடமாளிகையெல்லாம் இடிப்பித்துத் தரைமட்டமாக்கினான். சீரும் சிறப்போடும் செழித்து விளங்கிய பொங்கொலி நீர்ச் சிங்கைநகர், சப்புமல்குமரயாவின் படையெடுப்பால் சிதைந்து அழிந்தது'' (இராசநாயகம் செ.1933).

சிங்கை நகரை அழித்துத் தரைமட்டமாக்கிய சப்புமல்குமரயாவின் படை, நல்லூரிற் புகுந்தது. அப்படை யாழ்ப்பாணத்தைத் தாக்கியபோது நகரிலிருந்து மாடமாளிகைகள் தரைமட்ட மாக்கப்பட்டன. பழைய தலைநகர் பாழாய் விட்டது. சப்புமல்குமரயாவின் யாழ்ப்பாண் வெற்றியைப் புகழ்ந்துபாடும் "கோகில சந்தேஸய" எனும் குயில்விடுதூதுப் பிரபந்தம் ஒன்று யாழ்ப்பாண பட்டினத்தின் சிறப்புக்ககளையும், படை சென்ற பாதை யில் நிகழ்ந்த யுத்த அழிவுகளையும் பெருமையாகப் பாடியுள்ளது. எனவே சப்புமல்குமரயாவின் படை தலைநகரை தரைமட்டமாக்கியது எனக்கொள்வது தவறில்லை. அவ்வேளை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் தகர்த தெறியப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே கி.பி.1248 ஆம் ஆண்டு புவனேகவாகு என்னும் அமைச்சரால் கட்டப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கி.பி.1450 ஆம் ஆண்டு சப்புமல்குமரயாவின் படையெடுப்பால் தகர்த்தழிக்கப்பட்டது. தான் புரிந்த பாவத்திற்குப் பரிகாரம் தேடுவான் போன்று யாழ்ப்பாண நகரியை மீண்டும் புதுப்பித்த சப்புமல்குமரயா அழிந்து போன நல்லூர் கந்தசுவாமி கோயிலையும் மீண்டும் உருவாக்கினான்.

ஆரியச் சக்கரவத்தியோடு செண்பகப்பெருமாள் கடும்போர் நிகழ்த்திய நாட்களில் அரண்களும், இராச தானியும் பெரிதும் அழிவுற அவற்றைச் செண்பகப் பெருமாள் திருத்தி அமைத்தா னென்றே கொள்ள வேண்டும். சப்புமல் குமாரன் யாழ்ப்பாணப் பட்டிணத்திற் கோட்டைகளையும், காவலரண்களையும் அமைத்தான் என்று ராஜாவலிய சொல் வனவும் இக்கருத்திற்கு ஆதாரமாயுள்ளன. *(பத்மநாதன் சி.1970).*

சப்புமல்குமரயாவின் தந்தை மலையாள தேசத்திலிருந்து வந்த ஒரு பணிக்கனாவான். ஆறாம் பராக்கிரமபாகு அவனை உபசரித்து அவன் தேகவலியிலும்,

வாட்போர்த்திறத்திலும் ஈடுபட்டவனாய் தன் குலத்தினளாகிய ஒரு கன்னிகையை அவனுக்கு மணம் முடிப்பித்தான். இவர் களுக்குப் பிறந்தவனே சப்புமல்குமரயா ஆவான். செண்பகப் பெருமாள் தமிழ்க் குருதி தன் நாளங்களில் ஓடக் கொண்டவனாதலாலும் தமிழுற்பத்தி யாளனேயாகிய அளகேஸ்வரன் காலந் தொட்டு ஜயவர்த்தன கோட்டையிலேயும் வழிபாடு பயின்று வந்தமையாலும் கோகில சந்தேசமுடையார் அவனைப் புத்தமதத் தாபகரென புகழ்ந்தோதிய விடத்தும் தமிழ்ப்பிரசைகட்கிதமாய்த் தமிழ்த் தெய்வ வழிபாடுகளையே யாழ்ப் பாணத்தில் வளர்த்திருப்பான் என்பதிற் சிறிதும் சந்தேகமன்று

*(ஞானப்பிரகாசர் 1938).*

**இரண்டாவது கந்தசுவாமி கோயில்:**

கி.பி. 1450 ஆம் ஆண்டிலிருந்து 1467 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சப்புமல்குமரயா என்ற சிறிசங்கபோதி புவனேகவாகு குருக்கள் வளவு என்ற இடத்திலிருந்து அழிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் புதிதாகக் கட்டுவித்தான். படையெடுப்பின்போது அழிந்து, சிதைந்துபோன முதலாவது தேவாலயம் அமைந்திருந்த இடத்தில் அக்கோயிலை அமைக்காது புதியதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அமைப் பித்தான். அரண்மனை, அரசமாளிகைகள் என்பன அமைந்திருந்த பண்டாரவளவு, சங்கிலித்தோப்பு, (பின்னர் வந்த பெயர்) என்பவற்றுக்கு அருகில் இக்கோயி லுக்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவ்விடம் முத்திரைச் சந்தியில் இன்று கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ள இடமாகும். அவ்விடத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில் இரண்டாவது தடவையாக அமைக்கப்பட்டது.

இக்கோயில் ஆகம விதிகளுக்கு இணங்க அமைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. இக்கோயில் விதானங்கள் செப்புத்தகடுகளில் வனையப்பட்டிருந்தன. சில விக்கிரகங்கள் இக்கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தன. (முத்துத்தம்பிப்பிள்ளை 1933) இக்கோயில் மிகப்பெரியதாக தென்னிந்தியக் கோயில்களை ஒத்ததாக இருந்திருக்க வேண்டும். "யாழ்ப்பாணத்திலேயே பெரிய கோயிலாக இதுவே இருந்தது." என்பதை குவெறோஸ் சுவாமிகளின் குறிப்பிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. இக்கோ யிலைச் சுற்றி நெடுமதில்கள் அமைக்கப் பட்டிருந்தன. இன்றும் இந்தக் கோயில் மதிலின் ஒரு பகுதியே சங்கிலித்தோப்பில் யமுனாரி என்ற பகரவடிவ ஏரிக்குக் கிழக்குப் புறத்திற் காணமுடிகின்றது. நான்கு அடிகள் அகலமாக செங்கற் சுவரின் அத்தி வாரத்தை யமுனாரிக்குச் செல்கின்ற ஒழுங்கை முகப்பிற் காணலாம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில், உயர்ந்த மதில்களுள் அமைந்திருந் தமையாலே தான், பின்னர் யாழ்ப் பாணத்தின் மீது படையெடுத்த பிலிப் ஒலிவேரா என்ற போத்துக்கேய தளபதி, ஒரு கட்டத்தில் இக்கோயிலினுள் தனது வீரர்களுடன் புகுந்து இதனை ஒரு கோட்டையாகப் பயன்படுத்தி இருக் கிறான்.

நல்லூரில் மீண்டும் முத்திரைச் சந்தி கிறிஸ்துவ தேவாலயம் இன்று அமைந்துள்ள கோட்டத்தில் கந்தனாலயம் கோபுர கலசங்களோடு அமைந்தது. இக்கோயிலிலிருந்த சிலாவிக்கிரகங்கள் சிலவற்றை யாழ்ப்பாணத் தொல்பொருள் காட்சிச் சாலையில் இன்றுங் காணலாம். இப்பெரிய ஆலயத்தை அமைத்தமையால், இவனது பெயர் இன்றும் கோயிற் கட்டியத்தில் "சிறீசங்கபோதி புவனேகவாகு" வென நினைவு கூரப்படுகின்றது.

சிறீசங்கபோதி புவனேகவாகு நல்லூரிலிருந்து உத்தரதேசத்தை பதினேழு வருடங்கள் ஆட்சி செய்தான். கி.பி.1467 ஆம் ஆண்டு அவன் தென்னிலங்கைக்கு திரும்பிச் செல்ல நேர்ந்தது. அவனுடைய வளர்ப்புத் தந்தை ஆறாம் பராக்கிரமபாகு இறந்துபோக அவனது பேரன் ஜெயவீரன் கோட்டைக்கு அரசனானான். அதனை விரும்பாத சிறீசங்கபோதி புவனேகவாகு, விஜயபாகு என்பவனை யாழ்ப்பாணத்தின் அரசனாக்கிவிட்டு கோட்டைக்கு மீண்டு, ஜெயவீரனைக் கொன்றுவிட்டு அரசுகட்டிலேறினான். தருணத்தை எதிர்பார்த்து திருக்கோவிலூரில் கரந்துறைந்திருந்த கனகசூரியசிங்கையாரியனும் அவனது இரு புதல்வர்களும், சேனைகளுடன் வந்து விஜயபாகுவைக் கொன்று, இழந்த இராச்சியத்தை மீண்டுக் கொண்டனர்.

கனகசூரிய சிங்கையாரியன் மீண்டும் இழந்த மணிமுடியைத் தரித்துக்கொண்டான். அவன்பின் அவனது மூத்தமகனான பரராசசேகரன் கி.பி.1478ஆம் ஆண்டு சிங்கைப் பரராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனானான். நல்லூரை மேலும் சிறப்புமிக்க நகராக்கியவன் சிங்கைப் பரராசசேகரன் ஆவான். கந்தசுவாமி கோயிலுக்கண்மையில் ஒரு ஏரி எடுப்பித்து யமுனாநதியின் திவ்விய தீர்த்தத்தைக் காவடிகளிற் கொணர்வித்து அவ்வேரிக்குள் பெய்வித்து அதனை யமுனை ஏரி (யமுனாரி) எனப் பெயர் தந்து அழைத்தான். இந்த யமுனாரி என்ற பகர வடிவ ஏரி இன்று அழியுந் தறுவாயிலுள்ளது.

## யோகியார்:

கி.பி.1591 இல் போர்த்துக்கேயர் மூன்றாவது தடவையாக அந்திரே பூர்த்தாடு டி.மென்டொன்சா எனும் படைத் தலைவனை பெரும் படையுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தனர். போர்த்துக்கேயத் தளபதி யாழ்ப்பாண அரசினைப் பெரும் படையுடன் தாக்கினான்.

தமிழர் படையும், பறங்கியர் படையும் வீரமாகாளியம்மன் கோயிலுக்கும், கந்தசுவாமிக் கோயிலுக்குமிடையில் பெரும் வெளியில் அதாவது தற்போதைய நல்லூர் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள இடத்தில் ஒன்றினையொன்று எதிர்கொண்டன.

"அரசனுடைய மகாவீரர்களை கொண்ட அந்தப் பத்துப்படை தங்கள் உயிரை வெறுத்துச் சத்துருக்களை எதிர்த்துப் பொருதின. அக்கடும் போரிற் கலந்த தமிழரெல்லாரும் மாண்டனர். அவர்களை நடாத்திய யோகி ஒருவரும், கந்தசுவாமி கோயிற் பூசகரும் (பெரிய ஆலயத்துப் பிராமணரும்) மாண்டனர்"
*(இராசநாயகம்.செ.1933).*

அக்காலத்தில் யாழ்ப்பாண மண்ணில் துறவிகள் நடமாடினர். தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாண இராச்சியமூடாகச் சிவனொளிபாத மலைக்கும், கதிர்காமத்திற்கும் தல யாத்திரையை யோகிகள் மேற்கொண்டிருந்தார்கள். யோகிகள் வடிவில், கண்டி மன்னனுக்குதவ, போர்வீரர்கள் தென்னிந்தியாவிலிருந்து செல்வதாகப் போர்த்துக்கேயர் சந்தேகப்பட்டிருக்கின்றார்கள். எவ்வாறாயினும் நல்லூரில் யோகியார் ஒருவர் வாழ்ந்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

இவரது பெயர் சிக்கந்தர் என்பர். இவரை சைவமக்களும் அக்காலத்தில் நல்லூரில் வாழ்ந்த முஸ்லீம் மக்களும் ஆதரித்துப் போற்றினர். இந்த இரு மதத்தவர்களுக்குமுரிய அறநெறிகளை அவர் நன்கு தெரிந்து வைத்திருந்த படியாலேயே இருமத மக்களும் அவரை வழிபட்டனர். புராதன நல்லூர் தேவாலயம் அமைந்திருந்த குருக்கள் வளவில் அந்த யோகியார் உலவினார். தன்னை நாடி வந்த மக்களுக்கு அறநெறி புகட்டினார். போர்த்துக்கேயருக்கும், தமிழ்ப் படை வீரர்களுக்குமிடையில், குருக்கள் வளவில் நிகழ்ந்த யுத்தத்தில் அந்த யோகியார் உயிரிழக்க நேர்ந்தது. குருக்கள் வளவின் சுற்றாடலில் அக்கால வேளையில் முஸ்லீம்கள் வாழ்ந்தமையால், அவர்களால் நன்கு மதிக்கப்பட்ட அந்த யோகியாருக்கு, ஒரு சமாதியைக் குருக்கள் வளவிலே கட்டி வழிபாடியற்றி வருவாராயினர்.

அக்காலகட்டத்தில் இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள குருக்கள் வளவு என்றவிடத்தில் முஸ்லீம்கள் குடியேறியிருந்தார்கள் என அறியப்படுகின்றது.

"அக்காலத்தில் கந்தசாய்பு என்பவனால் முகம்மது மார்க்கத்தவர்களாக்கப்பட்ட தமிழ் வம்சத்தவர்களான சில சோனகக் குடிகள் காயல் பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரில் குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாமில் என்னுமிடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரம் பண்ணிக்கொண்டு தாங்களிலிருந்த தென்மிருசுவிலுக்கு உசனென்று பெயருமிட்டனர். சிலகாலம் அவ்விடத்திலிருந்து அவ்விடம் வசதிப்படாததினால் அந்தச் சோனக்குடிகள் அவ்விடத்தை விட்டு நல்லூரில் கந்தசுவாமி கோயிலிருந்த இடத்திற் குடியிருந்தார்கள்".

*(வைபவமாலை - 1949).*

"சோனகர் உசனின்று மகன்று சோனகன் புலவில் சிறிதுகாலம் வைகி, அதுவும் வாய்ப்பாகாமையால், இப்போது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருக்குமிடத்திற்கு மேல்பாகத்தில் குடிகொண்டார்கள். அங்கே ஒரு பள்ளி வாசலுங் கட்டினார்கள்" *(முத்துத் தம்பிப்பிள்ளை ஆ.1933).* "கோயிலின் அயலிலே மேற்குத் திசையாகச் சில காலத்திற்கு முன் மசூதியொன்றிருந்ததாகத் தெரிகின்றது. கி.பி.1560ஆம் ஆண்டு கொன்ஸ் தாந்தினூபிறகன்ஸா யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த போது பறங்கிகளுக்கு எதிராக தமிழர் படையிலுள்ள வடக்கரும், சோனகரும்

போராடினார்" *(ஞானப்பிரகாசர் - 1928).* கி.பி. 1591 இல் யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்ட அந்திரேபூர்த்தாடு மீண்டும் கலகம் விளைவிக்கக் கூடியவர்களென எண்ணமிட்ட எண்ணூறு வடக்கரையும் சில சோனகரையும் சிரச்சேதஞ் செய்துள்ளான். மேலும் கரையிறங்கிய பறங்கிப்படை இவ்விடத்திற் கண்மை யிலிருந்த சோனகரின் வர்த்தகச் சாலைகலைக் கண்டு அவைகளுட் புகுந்து 10000 கண்டி நெல்லையும், 400 கண்டி அரிசியையும் வாரிக்கொண்டு போயினர் *(இராசநாயகம்-1933).* இவற்றிலிருந்து நல்லூரில் சில சோனகக் குடிகள் வாழ்ந்து வந்தனர் எனத் துணியலாம்.

## கோயில் அழிவு:

1450 ஆம் ஆண்டிற்கும் 1467 ஆம் ஆண்டிற்குமிடையில் ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகுவினால் குருக்கள் வளவில் அழிக்கப்பட்டு முத்திரைச் சந்தியில் அமைக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் ஒன்றரை நூற்றாண்டுகளின் பின் 1621 ஆம் ஆண்டு பெப்ரவரி 2ஆம்திகதி, இருந்தவிடம் தெரியாமல் அத்தி பாரத்தோடு அழிவுற நேர்ந்தது.

1620 ஆம் ஆண்டு பில்ப்ஒலிவேறா என்ற போர்த்துக்கேயத் தளபதி பெரும்படையுடன் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தான். இதுவே போர்த்துக் கேயரின் இறுதிப்படை யெடுப்பாகும். அவன் யாழ்ப்பாணத்தைப் பூரணமாகத் தன் ஆதிக்கத்துக் குட்படுத்தினான். பிலிப் ஒலிவேறா யாழ்ப்பாண இராச்சியத் திலிருந்து சைவாலயங்கள், பலவற்றை இடித்துத் தரைமட்டமாக்கினான்.

''யாழ்ப்பாணத்திலன்றித் தமக்கெட்டிய மற்றும் பிறவிடங்களி லெல்லாம் உள்ள புத்த சைவ ஆலயங்கள் எல்லாவற்றையும் சமயம் வாய்த்துழி பறங்கிகள் இடித்து நாசமாக்கி விட்டனர்."
*(இராசநாயகம்.செ.1933).*

"1621 ஆம் ஆண்டு பிலிப் ஒலிவேறா நல்லூரைத் தன்னுறை விடமாக்கிக் கொண்டான். அவன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் தரைமட்டமாக்கி இருந்தவிடமுந் தெரியாமல் அத்திவாரத்தையும் கிளறுவித்தான்" (ஞானப்பிரகாசர் - 1938). அங்கிருந்த பெரிய கோயிலில் கிறிஸ்தவ ரல்லாதவர்கள் மிக்க ஈடுபாடுடையவா களாக இருந்தனர். அவன் அதனை அழியாது விட்டால் அவன் விரும்பிய எல்லாவற்றையும் வழங்குவதாக அவர்கள் வாக்குறுதி செய்து வந்தனர். ஆனால் அவன் ஒரு மதப் பற்றுமிக்க கத்தோலிக் கனாதலால் அவர்களின் நடவடிக்கை அவன் அக்கோயிலை அழித்தற்குக் கொண்டிருந்த விருப்பத்தினை மேலும் அதிகரிக்க வைத்தது. எனவே அதனை அத்திவாரமில்லாது அழிக்குமாறு கட்டளையிட்டான்" என குவேறோஸ் சுவாமிகள் தனது நூலில் எழுதியுள்ளார். (Ouyros F.D.1930) இவ்விதமான கொடுந் தொழில்களைச் செய்வதற்கு அவர்களது சமயப்பிரமாணமும், வைராக்கியமும், மறுசமயத்தவரது வழிபாட்டுக்குரிய கோயில்கள் தம்மத விரோதம் என்ற நம்பிக்கையுமே காரணங்களாயவர்களைத் தூண்டிவிட்டனவெனினும், பொருள் அபகரிக்கும் பேராசையே முக்கிய காரணமென்பது மறுக்கொணாத

உண்மை" (இராசநாயகம்.- 1933). பிலிப் தே ஒலிவேறா முன் கூறியபடி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிடித்து அக்கோயிற் கற்களைக் கொண்டு கோட்டையும், வீடுகளும் கட்டினான். யாழ்ப்பாணத் திலிருந்த சைவ, வைணவ ஆலயங்கள் எல்லாவற்றையும் தரை மட்டமாக இடிப்பித்தான். இதையறிந்த கோயிலதி காரிகளும் அர்ச்சகர்ளும் தத்தம் கோயில் விக்கிரகங்களைக் கிணறுகளிலுங், குளங்களிலும் மறைத்தார்கள்.

*(முத்துத்தம்பிப்பிள்ளை.ஆ.1933).*

கீரிமலையிலிருந்த திருத்தம்ப லேஸ்வரன் கோயிலை அவர்கள் இடிக்குமுன்னே விக்கிரகங்களை அக்கோயில் குருக்களாகிய பரசுபாணி ஐயர் ஒரு கிணற்றிலிட்டு மண்ணால் தூர்த்துவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினார். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை இடிக்கும் முன் அதன் மெய்க்காப்பாளனாயிருந்த சங்கிலி யென்னும் சைவப் பண்டாரம் அக்கோயில் விதானங்கள் வரையப்பட்ட செப்பேடு, செப்புச் சாதனங்களையும் கொண்டு மட்டக்களப்புக்கோடினான். அங்கிருந்த சில விக்கிரகங்கள் தாமிர விக்கிரகங் களையெல்லாம் அக்கோயில் குருக்கள்மார் பூதராயர் கோயிலுக்கு சமீபத்திலுள்ள குளத்திலே புதைத்து விட்டு நீர்வேலிப்பகுதிக்கோடினர்.

*(முத்துத்தம்பிப்பிள்ளை.ஆ.1933).*

**கந்தமடாலயம்:**

கி.பி.1620 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசமாகியது. போர்த்துக்கேய தனியர சாட்சியில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தையே மக்கள் அனைவரும் கைக்கொள்ள வேண்டுமெனப் போர்த்துக் கேய ஆட்சியாளர் வற்புறுத்தினர்.

"சைவமத வணக்கம் செய்யப்படா தென்றும் பூசை முதலியன அனுட்டிப் பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கட்டளை பிறப்பித்ததுமன்றி ஒற்றர்கள் வைத்தும் ஆராயப்பட்டன. ஆனால் அந்தரங்கமாகத் தங்கள் தெய்வங்களை வழிபடுவதையும் சைவ ஆசாரங்களையுஞ் சனங்கள் கைவிட்டாரல்லர். தங்கள் தங்கள் வீட்டுச் சார்களிலும், வளவு களிலும், மரத்தடியிலும் ஒவ்வொரு அடையாளங்களை வைத்து வழிபட்டு வந்தனர். விரத காலத்தில் சாப்பிட்ட இலைகளைக் கூரைகளிலும், வேலி களிலும் மறைவாக ஒளித்துச் செருகி வந்தனர். ஒவ்வொருவருஞ் சிலுவை அடையாளமணிய வேண்டுமென்றுங் கட்டளைபிறந்தது. உலோகங்களால் செய்யப்பட்ட சிலுவைகளை அணிவதற்கு சனங்கள் நாணி தங்கள் தலைப் பாகைகளை சிலுவை ரூபமாக கட்டி வந்தனர். போர்த்துக்கேய பறங்கியர் சைவாலயங்களைப் பாழாக்கிய பின் பெரும்பாலும் அக்கோயில்களிலிருந்த விடங்களிலேயே தங்கள் கோயில்களை கட்டினர். நல்லூர் யமுனாரிக்கருகே விளங்கும் கிறிஸ்தவக் கோயிலிருக்குமிடம் ஒலிவேறாவால் இடிக்கப்பட்ட புராதன கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டிருந்ததே."

*(இராசநாயகம்.செ.1933).*

எனவே போர்த்துக்கேய காலத் தில் நல்லூரில் இடிக்கப்பட்டழிந்த

கந்தசுவாமி கோயில் விளங்கிய விடத்தில், கத்தோலிக்க தேவாலயம் ஒன்றமைக்கப்பட்டது. "முதலில் இந்தத் தேவாலயம் களிமண்ணாலும், பனை யோலையாலும் அமைக்கப்பட்டது."
*(Baleaus - Phillip).*

கி.பி. 1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் ஒல்லாந்தர் வசமாகியது. அவர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலத்திலிருந்து தமது புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தை பரப்பு வதில் தீவிரமாயிருந்தனர். மக்களை கத்தோலிக்க சமயத்தினின்றும் திருப்ப முயன்றனர். முன்பிருந்த கத்தோலிக்க கோயில்களை இடித்தும், சில விடத்துப் புதுக்கியுந்திருத்தியும் தமது மதத் தேவாலயங்கள் ஆக்கினர்.

''ஒல்லாந்தர் தங்கள் அரசாட்சியின் பிற்கூற்றில் சமய விஷயமாக கொண்ட வன்கண்மையைக் குறைத்துக் கொண்டனர்'' (இராஜநாயகம்.செ.1933). அதனால் சைவசமயிகள் தமது ஆசாரங்களையும், வழிபாடுகளையும் பயமின்றிக் கைக்கொண்டொழுகத் தொடங்கினார். நல்லூரில் வாழ்ந்த சைவ சமயிகள் பலர் கந்தசுவாமி கோயி லிருந்தவிடத்திற்கு வந்து வழிபாடி யற்றினர். போர்த்துக்கேய பறங்கியர் களால் இடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகரின் சந்ததி யோராகிய பிராமணர் சிலர் இக் கோயிலின் வழிபாட்டை மீளவும் ஆரம்பிக்க காரணமாக இருந்தார்கள் என அறியப்படுகிறது. கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணோத்தமர் ஒருவர் புராதன கந்தசுவாமி கோயில் இருந்தவிடத்திற்கு அண்மையில் மடாலயம் ஒன்றினை நிறுவி வேலினைப் பிரதிஷ்டை செய்து வழிபாடி யற்றக் காரணமாக இருந்தார் என அறியப் படுகிறது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பறங்கியர்களினால் இடிக்கப்பெற்றுச் சில காலஞ் சென்றபின் கிருஷ்ணையர் சுப்பையர் என்னும் பிராமணோத்மரின் முயற்சியினால் அக்காலவரசினரிடம் உத்தரவு பெற்றுக் கோயில்கட்டி மடால யமாகப் பிரதிட்டை செய்தனர் என யாழ்ப்பாண வைபவம் என்னும் நூல் கூறுகிறது. இந்த உண்மையை ஆங்கிலே யராட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் பிரதம நிதியரசராகவிருந்த சேர் அலெக்சாண்டர் ஜோன்சன் என்பவரின் நினைவுக் குறிப்புக்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

எனவே 1734 ஆம் ஆண்டளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்னர் இருந்த இடமாகிய யமுனகிரிக்குப் பக்கத்தே கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப் பட்டிருந்தபடியால் அதே வளவில் பிறி தோரிடத்தில் ஒரு சிறு மடாலயம் அமைக்கப்பெற்றது. இம்மடாலயம் பழைய கந்தசுவாமி கோயில் இருந்த அதே இடத் திற்றானே அமைக்கப்பெற்றது எனச் சிலர் கருதுகின்றனர். இது கந்தபுராணம் படிக்கும் மடமாகவே பெரிதும் பயன் படுத்தப்பட்டது. இந்த மடத்திற்றானே ஒரு வேலையும் வைத்து வழிபட்டனர் போலும், இது மடாலயமாக இருந்தமையால் கோபுரம், தூபி முதலியனவின்றியே யிருந்தது. மேலும் உயர்ந்த கோபுர

முடைய கோயிலாகக் காணப்படின் ஒல்லாந்தர் அதனை மீண்டும் தரைமட்ட மாக்கிவிடக் கூடும் எனப் பயந்து பக்தர்கள் பெரியகோயில் கட்டியெழுப் பாமல் அமைதியாக வழிபாடு நடத்தி வந்திருத்தல் கூடும் என ஊகிக்க இடமுண்டு.

*(குலசபாநாதன்-1971).*

## மடாலயம் அமைந்த இடம்:

கி.பி.1734 ஆம் ஆண்டிற் கட்டப் பட்ட கோயில் யமுனாரிக்கு அருகில் அமைக்கப்பட்ட மடாலயமா அல்லது இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலா என்பது முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். யாழ்ப்பாண அரசாங்க அதிபராக 1869 தொடக்கம் 1896 வரை கடமையாற்றிய சேர் துவைனம் அவர்களின் குறிப்புக்களி லிருந்தும் 1882 ஆம் ஆண்டில் தயாரிக் கப்பட்ட யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள சைவ சமயக் கோயில் இடாப்பிலிருந்தும் தெரியவருவது இன்றைய கோயிலில் 1734இல் இரகுநாத மாப்பாண முதலி யாரால், கல்லினாலும், செங்கல்லினாலும் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டது. என்பதாகும் (குலசபாநாதன் - 1971) இது ஏற்புடையது அன்று. உண்மையில் யமுனாரிக்குப் பக்கத்தில் நிறுவப்பட்ட கந்த மடாலயமே 1734 இல் அமைக்கப் பட்டது எனக் கொள்ளவேண்டும்.

“இக்கோயிலின் அதிகாரிகளுள் ஒருவராயிருந்த மாப்பாண முதலியார் 1809 ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசாங் கத்திற்கு சமர்ப்பித்த பெட்டிசம் ஒன்றில் இக்கோயில் 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது எனக்குறிப்பிட்டுள்ளார்.” (குலசபாநாதன் - 1971). அதன்படி நோக்கில் இன்றைய கந்தசுவாமி கோயில் 1740 இல் கட்டப்பட்டது எனக்கொள்ள வேண்டும். அதாவது யமுனாரிக்கு அருகில் கந்தமடாலயம் கட்டப்பட்டு 15 வருடங்களின் பின்பாகும். மேலும் முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் யாழ்ப்பாண சரித்திரத்தில் இன்றைய கோயில் 1793 இல் அமைக்கப் பட்டதெனக் குறிப்பிடுகிறார்.

*(இராசநாயகம்-செ.1933).*

எனவே 1749 ஆம் ஆண்டளவில் கிருஷ்ணையர் சுப்பையரும் வேறு சைவ சமயிகள் பலரும் கந்தசுவாமி கோயிலை மீண்டும் ஆலயமாக அமைக்கும் விருப் போடு, அரசாட்சியாருக்கு விண்ணப்பஞ் செய்தனர். ஒல்லாந்தார் காலத்தில் மலபார் சமயத்தில் (சைவம்) கைக்கொண் டொழுகிய தனியார் சிலர் ஒரு காலத்தில் புகழ் பூத்திருந்து பின்னர் அழிவுற்ற கந்த சுவாமி கோயிலை மீண்டும் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிற்கு விண்ணப்பித்தனர். அக்கோயில் கட்டுவதற்காக ஒரு வகை உறுதி வழங்கப்பட்டது. பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு கந்த சுவாமி கோயில் அர்ச்சகரின் சந்ததி யோராகிய சில பிராமணர் “அரசாட்சி யாருக்கோர் விண்ணப்பஞ் செய்து கோயில் அமைக்க உத்தரவு பெற்று முன்னர் கோயில் இருந்தவிடமாகிய யமுனாரிக்குப் பக்கத்தே கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்பட்டிருந்தபடியால் பிராமண வளவு (குருக்கள் வளவு) என்னும் தங்கள் உரிமைக் காணியில் சிறு கோயிலொன்றமைத்துத் தாங்களே

வணங்கி வந்தனர். இக்கோயில் இருக்குமிடம் அம்பலவாணர் கந்தப்பச் செட்டி பெயரில் தோம்பி பதியப்பட்டிருக் கின்றது" என முதலியார் செ.இராசநாயகம் கூறியுள்ளார். இவ்வாறு குருக்கள் வளவில் இன்றைய கந்தசுவாமி கோயிலை நிறுவுவதற்கு, அக்காலத்தில் ஒல்லாந்தர் பணிமனை (கச்சேரி)யில் சிறாப்பராகக் கடமையாற்றிய தொன்யுவான் மாப்பாண முதலியார் உதவி புரிந்துள்ளார்.

"ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் சிறப்பராகக் கடமைபார்த்து வந்த தொன்யுவான் மாப்பாண முதலியார் தமது பதவி காரணமாகத் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் கட்டுவதற்கு உத்தரவு பெற்றார்" என குலசபாநாதன் தனது நூலிற் குறிப்பிடு கிறார். கிறிஸ்தவராகவிருந்த தொன்யுவான் மாப்பாண முதலியாருக்கு ஒரு சைவக் கோயிலைக் கட்டுவதற்கு ஆட்சியாளர் அனுமதி வழங்கியிருப்பார்கள் என்பது ஏற்றதாகாது.

## நான்காவது ஆலயம்:

பறங்கியர்களாலிடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகரின் சந்ததியாராகிய கிருஷ்ணையர் சுப்பையர், மீண்டும் அக்கோயிலை அமைக்க விண்ணப்பித்த போது அந்த விண்ணப் பித்தற்கு உத்தரவு பெற்றுக்கொடுத்தவர் தொன்யுவான் மாப்பாணமுதலியார் ஆவார். சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் முதன் மந்திரியாகவிருந்த புவனேகவாகு முதன்முதல் கந்தசுவாமி கோயில் அமைத்த அதேயிடத்தில் புதிய ஆலயத்தை அமைப்பதற்கு ஒல்லாந்த ஆட்சியாளர் அனுமதி வழங்கினர். அதற்கு இரண்டு காரணங்கள் இருந் துள்ளன என ஊகிக்கலாம். ஒன்று கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகிலி ருக்கும் கந்த மடாலயத்தை அவ்விடத் தின்றும் அகற்றும் நோக்கம்; இரண்டு தமது வர்த்தகத்திற்குப் போட்டியாளராக அமைந்த முஸ்லீம்களை குருக்கள் வளவிலிருந்து அகற்றும் நோக்கம்.

எனவே ஆட்சியாளர்கள், குருக்கள் வளவை கந்தசுவாமி கோயில மைக்கத் தோம்பு எழுதிக் கொடுத்தனர். "அம்பலவாணர் கந்தப்பச் செட்டி எனக் கந்தவேளின் பெயரிலே தோம்பு பதியப்பட்டது". அம்பலவாணர் சுப்பிர மணியம் என நல்லூர்க் கந்தசுவாமி பேரில் பதியப்பட்டதாக குலசபாநாதன் கூறுவார்.

*(குலசபாநாதன் - 1971).*

கிருஷ்ணையர் சுப்பையர் ஆலயத்தை அமைப்பதற்காக ஊர்ஊராக நிதி சேகரித்தார். அவருக்குப் பல வகைகளிலும் உதவியாக இருந்தவர் தொன்யுவான் மாப்பாண முதலியார் ஆவர். எனினும், அவர் நேரடியாக ஆலயத்திருப்பணியில் ஈடுபட முடியாதிருந் தமையால் மைந்தன் இரகுநாத மாப்பாண முதலியாரை, ஆலயத்திருப்பணியில் முழுமூச்சாக ஈடுபட வைத்தார் எனக் கொள்ளலாம்.

'தொன்யுவான் மாப்பாண முதலி யாருக்கு இரகுநாத மாப்பாண முதலியார் எனவும் பெயர்' என குலசபாநாதன் குறிப்

பிடுவது ஏற்றதாகவில்லை. தந்தைக்கும் மகனுக்கும் ஒரே பெயர் இருக்க வாய்ப் பில்லை. அவர் முதல் கிறிஸ்தவராதலால் அவ்வழக்கப்படி மாப்பாணார் என்ற நாமம் அவரது குடும்பப் பெயராகி பிள்ளை களின் பெயரோடு சேர்த்து வழங்கப் பட்டது. மாப்பாண முதலியாரின் மகன் இரகுநாத மாப்பாண முதலியார் என மாப்பாண வம்ச பரம்பரை தெளிவாகச் சுட்டும்போது, மாப்பாண முதலியாரை இரகுநாத மாப்பாணர் எனவும் அழைப்பர் என்பது பொருத்தமற்றதாகும். கோயிற் றாபகர் அவரென வலியுறுத்தும் பொருட்டு இது வலிந்து கொள்ளப்பட்ட கூற்றாகும்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அமைத்ததில் இரகுநாத மாப்பாண முதலியாருக்குரிய இடத்தை எவரும் மறுப்பதற்கு இல்லை. அதே போன்று கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணருக்குரிய இடத்தையும் எவரும் மறுக்கவியலாது. ஆக இவ்விருவரும், கந்தவேள் சந்நிதியை மீண்டும் அமைப்பதில் ஈடுபட்டனர்.

கோயிலை மீளவும் அமைப்ப தற்குரிய காணியில் முஸ்லீம்கள் குடியேறிருந்தனர். "சோனகர் அதிலே குடியிருந்தாற் கந்தசுவாமி கோயில் கட்டவருங் காலத்தில் தடையா யிருக்குமென்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களை அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்தத் தெண்டித்துப் பார்த்தும் கூடாமற் போயிற்று. அந்த நிலங்களுக்கு அதிகவிலை தருவோம். எங்களுக்கு விற்றுவிடுங்கள் என்றுங் கேட்டுப் பார்த்தனர். சோனகர் அதற்குச் சம்மதிக்க வில்லை. யாதொரு இணக்கத்திற்குஞ் சோனகர் சம்மதியாது போனதினால், அந்தத் தமிழர் பன்றியிறைச்சியைக் கொண்டுபோய் தண்ணீர் குடிக்கும் கிணறுகளில் போடுவித்தார்கள். பன்றியிறைச்சியைக் கண்டவுடன் சோனகர் அழுது, புலம்பிப், பசிபட்டினி கிடந்து ஆற்றாமல் ஈற்றில் தமிழருடனே தங்கள் பெருநாட்களில் சந்து சமய வழிபாடு செய்யத் தடைப்பண்ணாதிருப்பதற்கு ஒரு உடன்படிக்கை எழுதுவித்துக்கொண்டு, கிடைத்த விலையையும் வாங்கிக்கொண்டு போய் நாவாந்துறைக்குக் கிழக்குப் பக்கமாக குடியேறினார்கள்'' என மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது. *(யாழ்ப் பாண வைபவமாலை 1949).* முஸ்லீம்கள் நல்லூர் கந்தசுவாமி கோயிலிருக்குமிடத்திற்கு மேல் பாகத்திலே குடிகொண்டார்கள். அங்கே, ஒரு பள்ளிவாசலும் கட்டினார்கள். அப் பொழுது முன் இடிபட்ட கந்தசுவாமி கோயிலை மீளவுங் கட்டுவதற்கு தமிழர் முயன்று சோனகரை அவ்விடத்தினின்றும் நீக்கித் தருமாறு ஒல்லாந்த தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். ஒல்லாந்த தேசாதிபதி அதற்கு அனுகூலம் செய்வ தாக கூறியும் செய்யாது காலம் போக்கி னான். அதுகண்டு தமிழர் சோனகரை அவ்விடத்தை விடும்படி கேட்டும் இரந்தும் பார்த்தார்கள். முடிவில் அந்நிலத்திற்கு பெருவிலை தருவதாகவும் கேட்டனர். அதுகண்டு சோனகர் தங்கள் நிலத்தை விற்றுவிட்டு நாவாந்துறைக்குக் கிழக்கே யுள்ள இடத்தை வாங்கிக் கொண்டு அங்கே குடியேறினார்கள்'' என ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை தமது யாழ்ப்பாணச் சரித்திரத்தில் கூறிச் செல்வர் *(முத்துத்தம்பிப்பிள்ளை- 1933).*

ஆகவே குருக்கள் வளவிலிருந்து வாழ்ந்த முஸ்லீம்கள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னரே, அவ்விடத்தில் கந்தசுவாமி கோயிலை நிறுவ முடிந்துள்ளது.

வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து நோக்கும்போது பொதுமக்களிடமிருந்து ஆலயத் திருப்பணிக்காகச் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு கிருஷ்ணையர் சுப்பையர் நான்காவது தடவையாகக் கோயிலைக் கட்டுவித்தார். கோயில் அவ்விடத்தில் அமைந்திருந்த யோகியாரின் சமாதிக்கு அருகில் நிறுவப்பட்டது

"பின்பு அக்கோயிலைப் பெருப்பித்துக் கட்டும்பொழுது அங்கிருந்து இறந்து அடக்கம் பண்ணப்பட்ட ஒரு முஸ்லீம் பெரியாருடைய சமாதி அக் கோயிலின் உள்வீதிக்குள் அகப்பட்டபடியால், அதையிட்டு முஸ்லீம்கள் கலகம் செய்தனர். பின்பு கோயில் மேற்கு வீதியில் வாயில் வைத்துக் கொடுத்துச் சமாதியையணுகி அவர்கள் வணங்கிவர இடங்கொடுத்ததால் கலகம் ஒருவாறு தணிந்தது. அதற்குச் சாட்சியாக அவ்வாயிற் கதவு இன்றுமிருப்பதும் அதனருகே வெளிப்புறம் பந்தரிட்டுச் சிலகாலத்தின் முன்வரை தொழுகை நடத்தி வந்ததும் இதனை வற்புறுத்தும்"

*(இராசநாயகம்.செ.1933)*

எனவே "பொதுமக்களிடமிருந்து ஆலயத்திருப்பணிக்காகச் சேகரிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு (கிருஷ்ணையர்) சுப்பையர் என்ற பிராமணரால் ஆலயம் அமைக்கப்பட்டது. ஆலயத்தின் பிரதம குருவாக சுப்பையர் தெரிவானார். அவரின் கீழ் (இரகுநாத) மாப்பாண முதலியார் என்பவர் சுப்பையரோடு சேர்ந்து ஆலய பரிபாலனத்தை நடாத்த நியமனமானார். கிருஷ்ணையர் சுப்பையரே அக்கோயிலின் முதற் பூசகராகவிருந்தார்."

"இக் குறித்த பிராமணரும் (இரகுநாதர்) மாப்பாண முதலியாரும் ஆலய பரிபாலனத்தை மிகவுஞ் சிறப்பாக எவ்வித வழுவுமின்றி மிகுந்த முன்னெச்சரிக்கையோடும், சமய ஆசாரத்தோடும் நடத்திவந்தார்கள்"

*(குலசபாநாதன் - 1971).*

## இரகுநாத மாப்பாண முதலியார் சமூகம்

திருவிழாக் காலங்களில் கந்த சுவாமி கோயிலின் ஒரு தாபகராகிய புவனேகவாகுவின் பெயரை முன்னும் இக்கோயிற்றாபகரான இரகுநாதமாப்பாண முதலியார் பெயரைப் பின்னும் கட்டியத்தில் கூறி வருகின்றார்கள்.

தற்போதைய கந்தசுவாமி கோயிலின் தாபகர்களில் ஒருவரான கிருஷ்ணையர் சுப்பையர் ஆலயத்தின் பிரதான குருவாக தெரிவானதனால் ஆலய கட்டியத்தில் அவர் இடம் பெற முடியாதுபோனது. அதனால் அந்த கௌரவம் இரகுநாத மாப்பாண முதலியாருக்கு மாத்திரம் கிடைத்தது. அக்கட்டியம் வருமாறு.

ஸ்ரீமான் மகாராஜாதிராஜா
அகண்ட பூமண்டல
ரத்தியதிகிந்த விஸ்ராந்த கீர்த்தி
ஸ்ரீ கஜவல்லி மகாவல்லி

ஸமேத ஸ்ரீ சுப்பிரமண்ய
பாதார விந்த ஜநாதிருட
சிவகோர் திரோற்பவஹா
இரகுநாத மாப்பாண
முதலியார் சமுகா!

"நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகாமண்டபத்துக் கீழைச் சுவரிலே மேற்கு முகமாக இக்கோயிற்றாபகராகிய இரகுநாத மாப்பாணர் பிரதிமையும், அவர் மனைவி பிரதிமையும் வைக்கப்பட்டிருக் கின்றன. அவற்றை இன்றும் பார்க்க முடியும்"

*(குலசபாநாதன் - 1971).*

கோயிற் கட்டியத்தில் இரகுநாத மாப்பாணரின் பெயர் இடம் பெற்றதால் அக்கோயிற்றாபகர்களில் ஒருவரான கிருஷ்ணையர் சுப்பையரின் பெயர் உரிய கௌரவத்தைப் பெறாது போனது.

## ஆங்கிலேயர் காலம்:

"கி.பி. 1798 ஆம் ஆண்டு யாழ்ப் பாணவரசு ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. குடிகளும் தத்தமது வருணா சாரத்தையும் சமயாசாரத்தையும் சுயேச் சையாகக் கைக்கொண்டொழுகுஞ் சுயாதீனம் ஆங்கிலவரசாற் கொடுக்கப் பட்டது. முன்னர் கோயில் போலல்லாது, கொட்டில்போல இலைமறைவிற் கிடந்த கோயில்களெல்லாம் வெளிப்படத் தொடங்கின. இடிந்த கோயில்களை மீளக் கட்டிக் கொள்ளும்படி ஆங்கிலவரசு வந்தவுடன் அனுமதி கொடுக்கப்பட்டது."

*(முத்துத்தம்பிப்பிள்ளை - 1933).*

அக்காலவேளை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகராக, கிருஷ்ணையர் சுப்பையரின் பேரர் சுப்பையர் என்ற பாலசுப்பிரமணிய ஐயர் இருந்தார். ஆலய தர்மகத்தாவாக இரகு நாத மாப்பாண முதலியாரின் மகன் ஆறுமுக மாப்பாண முதலியார் இருந்தார். ஆங்கில அரசினர் சைவாலயங்களுக்கு அர்ச்சகர்களை நியமனஞ் செய்தனர். "அவர்களுக்குரிய மரியாதைகளும், வரிசைகளும் ஆணைப்பத்திர மூலமாகத் தேசாதிபதி கைச்சாத்தோடு நியமனநிருபம் பெற்றாருள்ளே முதல்வர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகர் சிகி வாகன ஐயர், புத்திரராகிய பால சுப்பிரமணிய ஐயர் இவருக்கும் நியமனப் பத்திரம் 1807 ஆம் ஜனவரி மாதம் 5ஆம் திகதி தேசாதிபதி தோமஸ் மெயிற்லண்ட் (கவனர்) அவர்களாற் கொடுக்கப்பட்டது. அப்பத்திரம் இன்றும் அவர் சந்ததி யாரிடமுள்ளது." (இராசநாயகம்.செ.1933). கிறிஸ்து வருஷம் 1807 ஆம் வருஷம் தை மாதம் 5 ஆம் திகதி சகல குருத்துவ மரியாதைகளுடன் குரு பிரதானியாக இவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி வேறு ஐந்து குருமார்களை இவருக்குத் துணை யாகக் குருத்துவம் நடத்தும்படியும் கவனர் உத்தரவு செய்திருக்கின்றார். அவர்களில் கணபதிஐயரும் இராமசாமி ஐயரும் குறிப்பிடத்தக்கவர்களாவார். பக்தகோடிகளால் நன்கு மதிக்கப்பெற்றுச் சிறப்பாக நித்திய நைமித்தியங்கள் நடைபெற்றன.

கந்தசுவாமி கோயில் ஆலய நிர்வாகத்தில் பிரதம அர்ச்சகர் சுப்பை யருக்கும், தர்மகர்த்தா ஆறுமுக மாப்பாணருக்கும் இடையில் பிரச் சனைகள் முதன்முதலாகத் தலை

தூக்கின. ஆலய நிதியை தனது சுய தேவைகளுக்கு ஆறுமுகமாப்பாணர் பயன்படுத்துவதாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று சுப்பையரால் தாக்கல் செய்யப் பட்டது. அதனைப் பிரதம நீதியரசர் ஸேர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்ரன் என்பவர் விசாரனை செய்தார். அவர் தனது தீர்ப்பைப் பின்வருமாறு வழங்கினார்.

"கந்தசுவாமி கோயிலின் சகல நடவடிக்கைகளையும் இன்றைய பிரதம குருவும் (ஆறுமுக) மாப்பாண முதலி யாரும் இணைந்தே நிர்வகிக்க வேண்டும். ஆலயப்பொருட்களுக்குச் சேதாரம் நேரா வண்ணம் அவை ஓர் அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அந்த அறை இரு பூட்டுக்களால் பூட்டப்பட வேண்டும். அப்பூட்டுக்களின் சாவிகளிலொன்று பிரதம குருவிடம் மற்றையது குறித்த (ஆறுமுக) மாப்பாணரிடமும் இருத்தல் வேண்டும்"

இத்தீர்ப்பு ஆறுமுக மாப்பாண முதலியாருக்குத் திருப்தியைத் தரவில்லை. கோயில் தம் குடும்பச் சொத்து. அதனால் கோயில் நிர்வாகம் முழுவதும் தமக்குரியதென அவர் கருதியதனால் 1809 ஆம் ஆண்டு பிரித் தானிய அரசாங்கத்துக்கு பெட்டிசம் ஒன்றினைச் சமர்ப்பித்தார். *(இராச நாயகம்.செ.1933).* அப்பெட்டிசம் 1811 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கலெக்டரால் (அரசாங்க அதிபர்) விசாரணை செய்யப்பட்டது. அவர் முன் வைக்கப்பட்ட ஆதாரங்கள், கோயிலின் உரிமையில் மாப்பாண முதலியாருக்கே சாதகமாக விருந்தன. "ஆறுமுகமாப்பாண முதலியார் கொடுத்த பெட்டிசத்தை விசாரித்த கறிங்றன் என்னும் கலெக்டர் இம்மாப்பாண முதலியாரின் தகப்பனே இக்கோயிலைக் கட்டுவதற்கு முக்கிய காரணமாயிருந் தமையினால் இவரே இக்கோயி லாதிபத்துவம் பெறுதற்குரியரென்று அரசாட்சியாருக்கு அறிக்கை செய்தார். அதனால் சுப்பையர் குருக்களிடம் நீதிபதி ஸேர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்ரனால் வழங்கப்பட்ட ஆலயப் பண்டசாலையின் ஒரு திறப்பு குருக்களிடமிருந்து மீளப் பெறப்பட்டு ஆறுமுக மாப்பாணரிடம் கையளிக்கப்பட்டது.

கந்தசுவாமி கோயிலின் தர்ம கர்த்தாவாக இருந்த ஆறுமுக மாப்பாணர் தமது முன்னோர்போல கச்சேரி சிறாப் பராகவும் விளங்கினார். "கி.பி.1811 இல் கச்சேரியில் காசு குறைந்ததென்னுங் கார ணத்தால் மாப்பாணர் வேலையால் விலக்கப்பட்டார். விலகிய சில நாட்களுள் அவர் இறந்திருக்க வேண்டும் அவருக்குப் பின் அவர் மருமகனாகிய சின்னத்தம்பி யென்பவர் கோயிலதி காரத்தையேற்றார். பின்பு சிறாப்பு மாப்பாணருடைய பேரனாகிய (இரகுநாத) மாப்பாண முதலியார் அதிகாரியாயினர்"

*(இராசநாயகம்.செ.1933).*

"1807இல் தீவாந்தர தண்டனை யடைந்து மலாக்காவுக்கு அனுப்பப்பட்டு 1812 இல் மன்னிக்கப்பட்டு திரும்பி வந்த வில்லவராய முதலியாரும் பெரிய தாமோதரம்பிள்ளையும் பிராமணர் பக்கம் சார்ந்து (இரகுநாதர்) மாப்பாண முதலியாருக்கு மிகவும் இடர் விளை வித்தனர். அதுபற்றி மாப்பாண முதலியார் 1819 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில்

அவர்கள் தனக்குச் செய்யும் இடையூறு களைப் பற்றித் தேசாதிபதி அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்தனர். அதனை அவ்வூர் சர்ச்வாதிகாரி (கலக்டர்)யே கவனித்து அதற்கு வேண்டிய நீதி செய்யவேண்டும் என்று தேசாதிபதி கட்டளையிட்டார். கலக்டர் செய்த நீதியிதென்று தெரிய வில்லை" (இராசநாயகம்-1933)

"கி.பி.1851 இல் கோயில் அர்ச்சகராயிருந்த பிராமணர் தேசாதி பதியின் கைச்சாத்துடன் தங்கள் முன்னோருக்கு அதிகாரச் சீட்டுக் கொடுத்திருந்ததென்றும் தங்களுக்கும் அவ்வித சீட்டுக் கிடைக்க வேண்டு மென்றும் தேசாதிபதிக்கு விண்ணப் பித்தனர். அதற்குக் கண்டி ஆதீன புத்த கோயில்களிலுள்ள குருமாருக்கன்றிப் பிராமணருக்கு அவ்வித சீட்டுக் கொடுப்ப தில்லையென்றும், அவர்களுள் வியாச்சியமிருந்தால் டிஸ்திரிக் கோட்டில் வழக்குத் தொடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அரசாட்சியார் உத்தரவிட்டனர். அப்படியே வழக்கு வைக்கப்பட்டது. உடனே அக்காலத்தில் இருந்த கோயிலதிகாரியாகிய இரகுநாத மாப்பாண முதலியார் பிராமணருக்கு அவ்வித அதிகார நியமனம் கொடுப் பதற்கு அரசினர்க்கு எதுவித சுதந்திர மில்லையென்றும் இருந்தால் அரசினரே அதனை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தனர். டயிக் ஏசண்டர் அவ்விண்ணப்பத்தைப் பற்றி விசாரித்துச் செய்த அறிக்கை யினால் அரசாட்சியார் அக்காரியத்திற்கு பிரவேசியாது நெகிழவிட்டனர்.

*(இராசநாயகம்-1933).*

எனவே யாழ்ப்பாணக் கலெக்டரின் இச்செயலினால் கிருஷ்ணையர் சுப்பையரின் பரம்பரையினர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயவுரிமையை இழந்தனர். மாப்பாணர் குடும்பத்தினர் ஆலயத்தில் ஏகபோகவுரிமையைப் பெற்றனர்.

## ஆதியில் வழங்கிய வழக்கம்:

"55 திருவிழாக்கள் வருடந்தோறும் நடைபெறும். ஆறுகாலப்பூசை, மகோற் சவம், ஆடி ஆவணியில் 25 நாட்களுக்கு நடைபெறும். சுவாமியை மக்கள் தோளிற் காவிக்கொண்டு நடந்தும், வாகனத்தில் வைத்தும் வீதிவலமாகச் சுற்றி வருவார்கள் கிழக்கு வீதியும், வடக்கு வீதியும் கோயிற்றெரு, மேற்கு வீதி, பருத்தித்துறை றோட்டிலிருந்து திருநெல் வேலிக்குச் செல்லும் தெரு. தெற்கு வீதி, பருத்தித்துறைத் தெரு. மஹோற்சவ காலத்தில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து 1000 தொடக்கம் 2000 யாத்திரிகர் சமூகமளிப்பர்" என வடமாகாண ஏசெண்டாக இருந்த ஸேர் வில்லியம் குறொப்ரன் துவைனம் தனது குறிப்பில் எழுதியுள்ளதாக குலசபாநாதன் குறிப்பிட்டுள்ளார்.

ஆதியில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழா இன்றைய கால வேளைகளில் நிகழும் திருவிழாக்கள் போன்று நிகழவில்லை. "அறையும் பறை யொலியோடு குமிழ்ஞ்சூழ் வெளிச்சத்தில் திருவிழா நடந்து, பின்பு நானாவித வாத்தியவொலியோடு தீவர்த்தி வெளிச் சத்தில் திருவிழா நடந்தது (ஆறுமுக நாவலர்-1875). மேலும் தேர்த் திருவிழாவின்போது "சுவாமி எழுந்தருளப்

பண்ணும் தேரின் உருளையில் வைரவருக்குப் பிரியமென்று ஆடுபலி யிட்டே தேரினை இழுத்தார்கள். சாயங் காலப் பூசைக்கும், இரண்டாங் காலப் பூசைக்கும் இடையே வசந்தமண்டபத்தின் எதிரே பொதுப் பெண்களின் நடன சங்கீத நிகழ்ச்சிகள் நடந்தன"

*(ஆறுமுகநாவலர்-1875).*

திருவிழாக் காலங்களில் தேவதாசிகள் நடனமாடுவது சாதார ணமான நிகழ்ச்சியாக இருந்துள்ளது. "அழகிய கோயில் பெண்கள் ஏராளமான நகைகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டு சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தேரின் முன் நடனமாடினார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் அரை நிர்வாணமாக புழுதியிற் பிரதிஸ்டை செய்தார்கள்" என மிறன் வினஸ்லோ தனது குறிப்பில் எழுதியுள்ளார்

*(Miron Winslow -1835).*

## நல்லூரும் நாவலரும்:

நல்லைநகர்க் கந்தவேளுக்கும், நல்லை ஆறுமுகநாவலருக்கும் இடையில் நெருங்கிய பிணைப்புள்ளது. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை சிவாகமங் களுக்கும், குமாரதந்திரத்திற்கும் இணங்க மாற்றியமைக்க வேண்டுமென அவர் விரும்பினார். "இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குத் தூபி இல்லையே? தூபி யில்லாதது கோயிலாகாதே; இக்கோயில் ஒரு சிறிதேனும் விதிப்படி கட்டப் பட்டிருக்கவில்லை" என அவர் கூறினார். இது மடாலயம் ஆதலாலும், சமாதிக் கோயில் ஆதலாலும் விதிமுறைகளுக்கு இணங்க அமைய வேண்டுமென்ற நியதி யில்லை என்பர்.

"கி.பி. 1873 இல் கந்தையா மாப்பாணர் அதிகாரியாயிருந்த காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் அக்கோயிற்றி ருப்பணியைக் கருங்கல்லாற் கட்டும் விருப்பினராய் அஃதொடு கோயிலாதீனம் ஊரவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சபையால் நடத்தப்பட வேண்டுமென்னும் நோக்கமுடையவராய் அவ்வருடம் தை மாசத்தில் அக்கோயில் மகாசபை ஒன்று கூட்டிப் பிரசங்கஞ் செய்து 6000 வரையில் பணமும் கையொப்பமுஞ் சேர்த்தார். ரூபா 3000 வரையிற் செலவு செய்து கருங்கற்களும் எடுப்பிக்கப்பட்டன"

*(இராசநாயகம்.செ.1933).*

"இந்தியாவிலிருந்து முருகன், தெய்வானை, வள்ளிநாயகி விக்கிர கங்கள் தருவிக்கப்பட்டன. இடையில் நிகழ்ந்த மாற்றங்களால் அவ்விக் கிரகங்கள் நல்லையில் இடம்பெறாமல் தென்மராட்சி விடத்தற்பளை வயற்கரைக் கந்தசுவாமி கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டன" (சிவராமலிங்கம்.க.1995). மேலும் தேர்த்திருவிழாவுக்கு முதல்நாள் செய்து வருகிற ஆட்டுக் கொலையை இனிமேல் செய்வதில்லை என நாவலருக்கு முன்செய்து கொடுத்த பிரதிக்ஞைக்கு மாறாகப் பின்னும் அக்கொலை நடந்தபடியால் நாவலர் அவர்கள் கோபித்து, 1876 ஆம் ஆண்டு மார்கழி மாசம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் ஒரு மகாசபை கூட்டி, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலதிகாரியை விலக்குவதற்கு ஒரு வழக்குத்தொடரவும் பின் அக்கோயிலை ஒழுங்காக நடத்து வதற்குமான ஒரு சபை அக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டது. நியமிக்கப்பட்ட

சபையார் கோயிலதி காரிமேல் வழக்குத் தொடர்ந்தனர். அது விளக்கத்திற்கு வருமுன் நாவலரவர்கள் தேகவியோகமாயினர். 1928 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் திகதி இக்கோயில் பொதுவென்றும், கோயிலதிகாரி கோட்டுக்குக் கணக்குக் காட்ட வேண்டு மென்றுந் தீர்ந்த டிஸ்திரிக் கோட்டுத் தீர்மானம் நாவலர் அவர்கள் தொடங்கிய வழக்கின் பெறுபேறேயாகும்

*(சிவராமலிங்கம்.க.1995).*

"இக்கோயிலுக்குப் பெயர் யாது? கந்தசுவாமி கோயிலில் இருக்கின்ற மூர்த்தி கந்தசுவாமியா? இல்லை வேலா யுதம். கந்தசுவாமி வடிவம் வேலாயுதமா? அது அவர் கைப்படைக்கலம். அவரேவல் செய்யும் அடிமை" என நாவலர் கூறினார். "தீட்சை பெறாத பிராமணர் பூசை செய்வதும், தேவதாசிகள் நடனமாடு வதும், தேர்த்திருவிழாவின்போது தேர்க் காலில் ஆடு வெட்டிப் பலி கொடுப்பதும் ஆகம விதிகளுக்கு முரணானவை என அவர் கருதினார். அதனால் அக்காலத்தில் கோயிலதிகாரியாக இருந்த கந்தையா மாப்பாணருடன் பெரும் சச்சரவுப்பட்டுப் பிரிந்தார். ஒரு கட்டத்தில் இருபத்தைந்து வருட காலம் நல்லூர்க் கோயிலுக்குப் போகாதிருந்துள்ளார்.

நாவலருக்கும் மாப்பாணருக்கும் விரோதம் இருந்துள்ளதை நாவலரின் "நல்லூர்க் கந்தசுவாமி கோயில்" என்ற கட்டுரையிலிருந்து அறிய முடிகின்றது.

"எப்படியாயினும் ஆகட்டும் இங்கே அருள் விளக்கம் இருக்கிறது" என்பதை நாவலரும் ஏற்றுக் கொண்டார்.

கி.பி.1248 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சைவ மக்களின் வழிபாட்டிடமாகவும், தமிழ் மக்களின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்த பெருங்கோயிலாகவும் கடந்த பலநூறு ஆண்டுகளாக விளங்கி வருகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆயிர மாண்டுகள் நீண்ட பாதையில் கந்தவேள் ஆலயம் வரலாறு படைத்துள்ளது.

## உசாத்துணை நூல்கள்:


01. கைலாசமாலை
சா.வே.ஜம்புலிங்கப்பிள்ளை பதிப்பு - 1939

02. யாழ்ப்பாண வைபவமாலை
குலசபாநாதன் பதிப்பு, சுன்னாகம் - 1949

03. யாழ்ப்பாண சரித்திரம்
எஸ்.ஜோன். யாழ்ப்பாணம் - 1882

04. யாழ்ப்பாண வைபவவிமர்சனம்
சுவாமி ஞானப்பிரகாசர், அச்சுவேலி - 1928

05. யாழ்ப்பாணச் சரித்திரம்
முதலியார் செ.இராசநாயகம், யாழ்ப்பாணம் - 1933

06. யாழ்ப்பாணச் சரித்திரம்
ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணம் - 1933

07. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்
கா.இந்திரபாலா. யாழ். தொல்பொருளியற் கழகம், கண்டி - 1972

08. நல்லூர்க் கந்தசுவாமி கோயில்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சென்னை - 1875

09. நல்லூர்க் கந்தசுவாமி
குலசபாநாதன், நல்லூர் - 1971

10. நல்லைநகர் நூல்
கலாநிதி க.குணராசா, யாழ்ப்பாணம் - 1987

11. ஈழத்து வரலாற்று நூல்கள்
பேராசிரியர் சி.பத்மநாதன், பேராதனை - 1970

12. நல்லூரும் தொல்பொருளும்
வி.சிவசாமி, ஒளி சஞ்சிகை - 1974

13. நாவலரும் நல்லூரும்
க.சிவராமலிங்கம், நல்லைக்குமரன் மலர் - 1995.

# கந்தபுராணம் ஒரு நீதிநூற் கருவூலம்

வ.கோவிந்தபிள்ளை
ஒய்வு பெற்ற உதவிப்பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

பிறவிக்கு வித்தாய ஐம்புலன் களையும் ஒருவழிப்படுத்திய அறிவில் மேம்பட்ட பெரியோர்களுக்கே கந்த புராணம் என்னும் இச்சைவப் பேரிலக் கியத்தின் உண்மையான நிலையான பொருளுஞ் சுவையும் தோன்றுமாதலால், அத்தகைய மேலோரே இந்நூலைப் போற்றுவர் என்கின்றார் கந்தபுராண ஆசிரியர். இதனை,

"ஆற்று மைம்புலத் தாறுசெல் மேலையோர்
போற்று கந்த புராணம்"[1]

எனக் கூறுவது மனங்கொள்ளற்பாலதே.

மேலும் சூதமகாமுனிவர் நைமி சாரணிய முனிவர்களை நோக்கி,

"நுங்கள் போலச் செந்நெறி ஒழுகுவோர்க்கே
செப்புவன் புராணம் முற்றும்"[2]

என்று கூறுவதிலிருந்து நல்ல செந்நெறியிற் (சிவநெறியில்) செல்பவர் களுக்கே இறைவன் சம்பந்தமான புராண இலக்கியங்கள் உரியன என்பதும் அவர்களே புராணங்களிற் கூறப்படும் நீதி முறைகள், அனுபவங்கள், சுவைகள் என்பனவற்றைத் திருவருளால் உணர்ந்து அறியும் இயல்பும், ஆற்றலும் அவற்றைப் போற்றும் தகைமையும் உடையவர் களாவர் என்பது ஒருதலை.

அருட்சோதி வள்ளலார், மணி வாசகரின் திருவாசகத் தேனைப் பருகிய போது தாம் அடைந்த அனுபவப் பேற்றினை,

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்
- சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
- இனிப்பதுவே"[3]

என்று கூறுகிறார்.

ஆனால் கந்தபுராணமோ வேறு எந்த இலக்கியமும் கொண்டிராத அளவுக்குப் பத்துச் சுவைகளும் நிறைந்து காணப்படும் சிறந்த பக்தி இலக்கிய மாகும். இவற்றுள்ளும் பக்திச் சுவையே மேலோங்கி நிற்பதையும், இப்பக்தியில் தேவர்கள் முதல் மனிதர்கள் ஈறாக மூழ்கி வழிபடுவதையுங் காணலாம்.

கந்தவேட்பெம்மானது கதையைச் சொல்லுமாறு நைமிசாரணிய முனிவர்கள் கேட்க, அதனைச் சொல்லத் தொடங்கிய போதே சூதகமாமுனிவர் அடைந்த நிலையை,

"அம்மொழி சூதன்கேளா அழற்படு
- மெழுகே யென்னக்
கொம்மென வுருகவுள்ளங் குதூகலித்
- தவசமாகி
மெய்ம்மயிர் பொடிப்பத் தூநீர் விழித்துணை
- அரும்ப"[4]

நின்றார் என்று கூறுவாராயினர்.

இந்த நிலை அருட்சோதி வள் ளலார் அடைந்த நிலையைக் காட்டிலும் பல படிநிலையை மேலாகக் காட்டு கின்றது.

அருட்சோதி வள்ளலார் திரு வாசகத்தினை "நான் கலந்து பாடுங்கால்" என்றுபாடி அவர் அடைந்த இன்ப நிலையைக் காட்டியவாறு இக் கந்த புராணத்தையும் இறைவனோடும், கச்சியப் பரோடும் அவர் பாடிய கந்தபுராணத் தோடும் ஒன்றிக் கலந்து படிப்பவர்கள் சூதமகாமுனிவர் இக்கதையைச் சொல்லத் தொடங்கிய போது அடைந்த நிலையைக் காட்டிலும் பல நிலைகளை அடைவர் என்பது உண்மை. இதனாலேயே ஏனைய நூல்கள் போலல்லாது கந்தபுராணம் மட்டுமே கோவில்கள், மடங்கள், இல்லங்கள் என்ற வேறுபாடின்றியும் ஆண்டு தோறுமன்றித் தினந்தோறும் காலை மாலை என்று இடைவிடாது சலிப்பின்றிப் படிக்கக் கூடியதும் கேட்கக் கூடியதுமான ஒரு சிறந்த நூலாகப் பல்லாண்டுகளாகத் திகழ்கின்றது எனலாம்.

## தமிழர் பண்பாடும் சைவநீதியும்

தமிழரின் பண்பாடுகளுட் தலையாய பண்பாடாகப் பண்டுதொட்டுத் திகழ்ந்து வருவது நீதி முறையேயாகும். நீதியைச் சிவனாகப் போற்றும் இந்த நீதி முறை தமிழரிடையே - சிறப்பாகச் சைவ சமயிகளிடையே - ஏனைய மொழியினர் மதத்தினர் ஆகியோரும் வியக்கும் வண்ணம் பண்டு தொட்டு நிலவி வந் துள்ளமையை, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் முதலிய நூல்கள் விதந்தோதும்.

மனுநீதிச்சோழனது நீதிச் சிறப்பி னைக் கண்டு, தரியாது, திருவாரூர் வீதி விடங்கப் பெருமானே இடபாருடராகக் காட்சி கொடுத்துத் திருவருள் பாலித் தமையை,

**"தண்ணளிவெண் குடைவேந்தன்**
**- செயல்கண்டு தரியாது**
**மண்ணவர்கண் மழைபொழிந்தார்,**
**- வானவர்பூ மழைசொரிந்தார்**
**அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி**
**- மழவிடை மேல்**
**விண்ணவர்கள் தொழநின்றான்**
**- வீதிவிடங்கப் பெருமான்"[5]**

என்று பெரிய புராணங் கூறுவது நெஞ்சை நெகிழ்விப்பதாகும்.

ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருமகன்,

**"ஆடுங் கடைமணி நாவசையாமல்**
**- அகிலமெல்லாம்**
**நீடுங் குடையிற் றரித்த**
**- பிரானென்பர்"[6]**

என்று பிறிதொரு சோழர் குல மன்னனை வாழ்த்துதல் தமிழ் மன்னர்கள் பின்பற்றி வந்த சைவ நீதிச் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாகும்.

## சமய குரவர்களும் சைவ நீதியும்

சைவசமயிகள் சிவனை நீதி சொரூபராகவே கண்டனர். இதனால் நீதி சாராத பஞ்சமா பாதகங்களைச் செய்ய அஞ்சினர். சமய குரவர்கள் எனப்

போற்றப்படும் சம்பந்தப் பெருமான் முதலானோர் சிவனை நீதியின் வடிவாகக் கண்டும் கேட்டும் அவர் வகுத்த வண்ணமே ஒழுகியமையையும் தத்தம் பதிகங்களில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களுட், சம்பந்தப் பெருமான்,

**"நிலமிகு கீழும் மேலும் நிகராதுமில்லை என நின்ற நிதி அதனை"[7]**

**"நீதியார் நெல்வாயிலார்"[8]**

**"இன்னவுரு இன்னநிறம் என்றறிவ**
**- தேலரிது நீதிபலவும்**
**தன்னவுரு வாமென மிகுத்ததவ**
**- நீதியொடு தானமர்விடம்"[9]**

**"நீதி நின்னையல்லால் நெறியாதும் நினைந்தறியேன்"[10] என்றும், அப்பர் சுவாமிகள்,**

**"நீதியை நிறைவை"[11]**

**"நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்"[12]**

**"நெதியவன்காண் யாவர்க்கும் நினைய வொண்ணா நீதியன்காண்"[13]**

என்றும், சுந்தரமூர்த்திசுவாமிகள், நீதிசொருபராகக் கண்ட திருவாரூர்ப் பெருமானிடம், அவரது நீதி முறைகளி லிருந்து தாம் வழுவாது ஒழுகுகின்ற காரணத்தினால் தம்மையும் ஆட்கொண் டருளுவார் என்பதை,

**"நீதியி லொன்றும் வழுவேன் நிட்கண்டகஞ்**
**- செய்து வாழ்வேன்**
**வேதியர் தம்மை வெகுளேன் வெகுண்ட**
**- வர்க்குத்துணை யாகேன்**
**சோதியிற் சோதியெம் மானைச் சுண்ணவெண்**
**- ணீறணிந்திட்ட**
**ஆதி யிருப்பதும் ஆரூர் அவர் எம்மையும்**
**- ஆள்வரோ கேளீர்"[14]** என்றும்,

மணிவாசகப்பெருமான்,

"பங்கயத் தயனு மாலறியா நீதியே"[15]

என்றும், அவ்வாறாகிய நீதிசொருபரிடம்

"எது எமைப்பணிகொளும் ஆறது கேட்போம் எம்பெருமானே"[16]

என்றும் பாடியிருப்பது வெள்ளிடை மலை.

இவ்வாறு நீதியே சிவன், சிவனே நீதி எனச் சமயகுரவர்கள் அவரைக் கண்டும், அவரிடம் கேட்டும் அவர் கூறிய வண்ணமே ஒழுகியும் வந்துள்ளனர்.

இவ்வாறு ஒழுகி வழிபட்ட சமயம் சிவனால் தோற்றுவிக்கப்பட்ட சமய மாதலினால், "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என்றும் கூறலாயினர். இச்சைவ மரபிலே தோன்றி அச்சமய மரபில் ஒழுகிய பண்டைக்கால மன்னர் கள் பலர் நீதி வழங்குவதில் தங்களுக்கு ஐயமேற்படுங் காலங்களில் சிவனை வேண்டி அவனுடைய ஆக்ஞைப் பிரகாரமே நீதி வழங்கினர்.

குலோத்துங்க பாண்டிய னொரு வன் மதுரைச் சோமசுந்தரப் பெருமானை வணங்கி, தன்னிடம் வந்த கொலை நிகழ்ச்சி பற்றி, அற நூல்கள் ஒன்றா லாகிலும் அளந்தறிதற்கரிய தாயிரு கின்றதே உனது திருவருளாலே எனது குறை தீரத் தெளிவிப்பாயென்று குறை யிரந்ததை, திருவிளையாடற் புராண ஆசிரியர்,

"மன்றாடும் மணியேயிம் மறவன்றான் பார்ப்பனியைக்
கொன்றானோ பிறர்பிறிதாற் கொன்றதோ விதுவறநூல்
ஒன்றாலு மளப்பரிதாக் கிடந்ததா லுன்னருளால்
என்றாழ்வு கெடத்தேற்றா யென்றிரந்தான்"[17]

என்கிறார். இவ்வாறு இரந்து சோமசுந்தரப்

பெருமானது வாக்கின் பிரகாரம் நீதி வழங்கியமையை அறிந்து இறும்பூ தெய்தாது இருக்க முடியாது.

## மக்களும் சைவநீதியும்

சமய குரவர்கள், மன்னர்கள் ஆகியோர் எவ்வாறு நீதியைச் சிவனாகப் போற்றி அதற்கு மதிப்பளித்து ஒழுகினரோ அதே போன்று 'மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி" என்ற முதுமொழிக் கிணங்க, மக்களும் சைவநீதியை வழுவாது கடைப் பிடித் தொழுகினர்.

நீதியினின்றும் வழுவியதை அறிந்த மாத்திரத்தே மதுரையை ஆண்ட பாண் டியன் நெடுஞ்செழியன் "யானோ அரசன் யானே கள்வன்" என்று கூறி உயிர் நீத்தமை போன்று, திருவாலங் காட்டிலுள்ள பழைய ஊரில் வாழ்ந்த நீலி என்பவளின் சூழ்ச்சியினை அறியாது அவளின் கணவனாக வணிகனின் உயிரி ழப்புக்குக் காரணமான அவ்வூர் வேளா ளக் குடிமக்கள் எழுபது பேரும் அக் கினிக் குண்டத்தில் வீழ்ந்து பாண்டியன் நெடுஞ்செழியன் போன்று தானிழைத்த குற்றத்திற்குப் பிராயச்சித்தம் தேடியமையை,

"மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை
யாறணிசெஞ் சடைத் திருவா லங்காட் டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறு வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ"[18]

என்னும் பாடல் மக்கள் நீதியைச் சிவனாகப் போற்றி வழுவாது வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெள்ளிதிற் புலனாகின்றது.

## காலங்களைக் கடந்து நிற்பது

சிவ நீதியானது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக் காலத்தில் சிறந்தோங்குவது; எக் காலத்த வராலும், எம் மதத்தினராலும் மறுக்க முடியாத சிறப்பு வாய்ந்தது. இன் னோரன்ன காரணங்களினாலேயே கந்தபுராண ஆசிரியர், "மேன்மை கொள் சைவ நீதி", எனப் பாடலாயினர், அவ் வாறு முக்காலத்திற்கும் மேன்மை நல்கு வதும் எக்காலத்தும் மாறு படாததுமான சிவநீதி உலகமெல்லாம் விளங்க வேண்டும்; அவ்வாறு விளங்கக் காத்தற் கடவுளர் களாகிய விநாயகர், சுப்பிரமணியர் ஆகி யோரை நூலிற் போற்றித் துதிக்கின்றார் கச்சியப்பர்.

## சைவநீதியும் அதன் மாண்பும்

சிவனருளால் உலகமெல்லாம் சைவநீதி விளங்குமாயின், அதன் சிறப்பு அளவிடற்கரியது. வான்முகில் குன்றாது மழை பொழியவும், சகல வளங்களும் சுரக்கவும், மன்னன் செங்கோல் செலுத்தி முறைப்படி அரசு புரியவும் உயிர் வர்க்கங்கள் எந்தவித குறைகளுமின்றி வாழவும், இருக்கு முதலாகச் சொல் லப்பட்ட நான்கு வேதங்களும், ஆதுலர் சாலை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு அறங்களும் செழித் தோங்கவும்; எல்லோருக்கும் நன்மை தரவல்லதாகிய தவம் வேள்வி என்பன பெருகவும் இச்சைவ நீதியே உலக மெல்லாம் விளங்க வேண்டும். அச்சைவ நீதியே இன்னோரன்னவற்றை நிலைபெறச் செய்யும் என்பதை,

"வான்முகில் வழாது பெய்க; மலிவளஞ் சுரக்க;
- மன்னன்
கோன்முறை யரசுசெய்க; குறைவிலா துயிர்கள்
- வாழ்க;
நான்மறை யறங்களோங்க; நற்றவம் வேள்வி
- மல்க;
மேன்மைகொள் சைவநீதி விளங்குக
- வுலகமெல்லாம்."[19]

என விளக்குகின்றார்.

இதற்கு ஆதாரமாக நூற்பயனைக் காட்டுவர். சூரபன்மனாலும் அவன் மகன் பானுகோபனாலும் நாடிழந்தும், நகரிழந்தும் புத்திரனான சயந்தனும் ஏனைய தேவர்களும் மீளாச் சிறையில் மூழ்கவும் மனைவியைக் கூடக் காப்பாற்ற முடியாதவனாகி மூங்கிலுள் மறைந்திருந்து வாழ்ந்தவன் தேவேந்திரன். அவன் மனதில் அனைத்தையும் முருகப்பெருமான்,

"சூரலை வாயிடைத் தொலைத்து
- மார்புகீண்டு
ஈரலை வாயிடு மெ.்.க மேந்தி"[20] யும்

"காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர"[21]

செய்த செயலாலும் நிறைவு பெற்றமை போல, கந்தவேட்பெம்மானது புராணத்தினை விரும்பிக்கற்போர் தாமும் அவனது திருவருள் பெற்று இந்திரராகி பூமி மேல் இன்பமுற்று நன்றாக வாழ்ந்திருந்து தங்கள் மனத்தில் நினைத்த கருமங்களும் நிறைவேறப் பெறுவர் என்பதை,

"இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்
- றினது மேவிச்
சிந்தனையில் னினைந்த முற்றிச்
- சிவகதியதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட
- முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித்
- தோதுவோரே"[22]

என்கின்றார்.

## முருகன் தோற்றமும் நிமித்தமும்

முக்காலத்துக்கும் சிறப்புப் பொருந்திய சைவநீதியை - நீதி முறைகளை ஒரு காலத்தில் தேவர்கள் பண்டு செய்வினையினால் புறக்கணித்தனர்; அசுரர்கள் அவமதித்தனர்; பிரமதேவரின் புத்திரர்களுள் ஒருவனான தக்கன் சிவனை நிந்தித்தான்; வேதத்திற் கூறப்பட்ட முறைமையை மாற்றவும் தலைப்பட்டதோடு அமையாது தன் எண்ணப்படியே ஒழுகவும் செய்தான். இவ்வாறு சிவநீதி சிதைக்கப்பட்டமையினாலும், பண்டு செய்வினையினாலும் தேவர்கள் ஆற்றொணாத் துன்பத்திற்கு ஆளாகினர். எனினும்,

"இவறலும் இகலுமின்றி யார்க்குமோர்
- பெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை
- நல்கும் சிவன்"[23]

என்பதையும், நீதி சொரூபராகிய சிவனைச் சாராது தாங்கள் தவறு பல செய்தமையையும் உணர்ந்த தேவர்கள் மனம் நொந்தனர். தம் குறைகளை உணர்ந்த இத்தேவர்கள் சிவனிடம் நீதிநெறி முறையில் நில்லாத அசுரர்கள் நூற்றெட்டு யுககாலமாக இழைத்த தீமைகள் பலவற்றையும் முறையிடலாயினர். இதனால் தேவர்கள் எய்திய தீமைகளையும், பழி முதலானவற்றையும், அவுணர்களால் இழந்த வேதநெறி,

தொல்லை, வெறுக்கை முதலிய வற்றையும் மீட்டுக் கொடுக்கும் பொருட்டு சுப்பிரமணியப் பெருமான் தோற்றுவிக்கப் பட்டார். இதனை,

"காந்தமா கியபெருங் கடலுள் கந்தவேள்
போந்திடு நிமித்தமும் புனிதன் கண்ணிடை
ஏந்தல்வந் தவுணர்கள் யாரும் அவ்வழி
மாய்ந்திட அடர்த்ததும்"[24]

என்று பாடலாயினார்.

அதாவது, கந்தபுராணமாகிய பெரிய சமுத்திரத்துள் கந்தசுவாமியார் திருவவதாரஞ் செய்த காரணத்தையும் அக்கந்தசுவாமியார் பரிசுத்தராகிய சிவபெருமானது நெற்றிக் கண்ணினின்றும் திருவவதாரஞ் செய்து அதுவாயிலாக நீதியை நிலை நாட்டும் பொருட்டு அசுரர்கள் அனைவரும் இறக்கும்படி பொருததையும் கூறுவாராயினர்.

## விநாயகர், வைரவர், வீரபத்திரர் தோற்றமும் நிமித்தமும்

கந்தசுவாமியார் அவதரித்த காரணம் போன்று விநாயகர், வைரவர், வீரபத்திரர் ஆகியோர் போந்திடு நிமித்தம் பற்றி ''மற்றும் கூறுகேன்'' எனக் கூறுகின்றார். இவர்கள் பற்றிப் பாயிரம் என்னும் கதைச் சுருக்கத்திற் கூறாமை யினாற் கடவுள் வாழ்த்திற் கூறுவா ராயினர். கயாசுரன், திருமால் முதலியோர் மண்ணுலகிற் பிறந்த மாசு நீங்கவும் அவர்கள் விரும்பியதை விரும்பிய வண்ணம் கொடுத்தவர் விநாயகர் என்பதனை,

"மண்ணுல கத்திற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுத லுடைதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்"[25]

என்றும்,

சிவனை மதித்திடாத பிரம தேவரது நடுத்தலையினைக் கொய்தும் ஏனைய தேவர்களது சிரத்தினையும் அவர்கள் கொண்ட அகந்தையையும் நீக்கியவர் வயிரவக் கடவுளே என்ற செய்தியினை,

"பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றல் செய்குவாம்"[26]

என்றும்,

தக்கன் செய்த யாகத்திற்குச் சென்று சிவனை நீக்கி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அவிர்ப்பாகத்ததை உண்ட தேவர்களும், முனிவர்களும், நிலை கலங்கவும், தக்கன் செய்த முறைகேடான யாகம் சிதையவும் அவனது தலையை வெட்டி அவனுக்குத் தண்டனை செய்த வீரபத்திரரது கதையினை,

"அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
ஒடிந்திட மாமகம் ஒடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்."[27]

என்றும்,

பின்னர் விரிவாகக் கூறவுள்ள இவர்களது சரித்திரங்களில் வரும் நீதிமுறையினைச் சுருக்கமாகவும், கடவுள் வாழ்த்தாகவும் கூறியுள்ளமை மனங் கொள்ளற்பாலதே.

## கந்தபுராணம் ஒரு நீதிநூல்

சிவனே நீதி என்றும், தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் அவனால் அவ்வப்போது கையாளப்பட்ட முறைகள் நீதி முறைகள் என்றும் இந்நீதி முறைகள் அவையடக்கம் முதல் வள்ளியம்மை திருமணப் படலம் ஈறாக நூலுள் இழையோடுவதை இந்நூலைக் கற்றோர் அறிவர். இந்த நீதிமுறைகளை எடுத்துக்காட்டும் சைவப் பேரிலக்கியமே கந்தபுராணமாகும். இவற்றால், கந்த புராணம் ஒரு நீதிநூற் கருவூலம் எனச் சைவ சமயிகளாற் கொள்ளப்படுவதும் பேணப்படுவதும் சாலவும் பொருத்த மானதாகும்.

## அடிக்குறிப்புகள்

கந்தபுராணம் அவையடக்கம் 17
கந்தபுராணம் திருநகரப்படலம் 123
ஆளுடைய அடிகள் திருமாலை
(வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள்) 7
கந்தபுராணம் திருநகரப்படலம் 122
பெரியபுராணம் திருநகரச்சிறப்பு 45
தமிழ்புலவர் வரிசை இரண்டாம் புத்தகம் பக். 31
திருமுறை 2.43.8, 2.03.7, 3.48.4, 3.55.6, 5.02.6, 6.26.6, 6.48.9, 7.73.5
திருவாசகம் 29.01, 20.07
திருவிளையாடற் புராணம், பழியஞ்சினபடலம் 32
திருத்தொண்டர் புராண வரலாறு 15
கந்தபுராணம் காப்பு 5, 14
கந்தபுராணம் திருவவதாரப்படலம் 03
கந்தபுராணம் அவையடக்கம் 14
கந்தபுராணம் கடவுள் வாழ்த்து 08, 09, 11, 13, 14

## நல்லைக்கந்தன் சிந்தனைக்காப்பு

கருதிய செல்வமும் கல்வியும்
தந்து எம்மைக் காப்பவனே
கருவினை தீர்த்துன் கதிபெறும்
ஆனந்தக்காட்சிதர்
கருமயிலேறி வனிதயரோடு
வேல்கை பிடித்துக்
கருணைகொண்டு எம்முன் வருபவனே
நல்லைக் கந்தப்பனே

**புத்தூர் பெரியதம்பு சின்னப்பு ஆச்சாரி,**
**(1930ஆம் ஆண்டு)**

# தோகை மேல் உலவும் கந்தன்

கோ.சி.வேலாயுதம்
முன்னாள் கல்விப்பணிப்பாளர்.

தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் அபயகரம் நீட்டும் அரனார் திருமகன் தமிழ் முருகன் என்று தருக்கோடு கூறலாம். "அரிய தமிழ் தானளித்த மயில் வீரா" என்று அருணகிரிநாதர் கூறுவதை இங்கு நோக்கலாம்.

நாம் தமிழர், எமது மொழி தமிழ் என்று இறுமாந்து ஓர் இனம் தழைக் கின்றது என்றால் அம்மொழியின் ஊற்று நிலைக்கின்றது என்பதே உண்மை. அந்தத் தமிழை எமக்களித்த தெய்வம், அழகுத் தெய்வம், அறிவுத் தெய்வம் எமைக் காக்கின்ற காரணத்தாற்றான் இன்றும் இருக்கின்றோம், இன்னலைச் சகிக்கின்றோம். மலையென நிமிர்ந்து நின்று மானங் காக்கும் வாழ்வைப் பற்ற முனைகின்றோம்.

குறிஞ்சிக் குமரன் என உளங் குழைந்து கூப்பிய கரத்தராய் நாம் தொன்று தொட்டு வாழ்ந்திருக்கின்றோம். **"விண் பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ"** என்கிறது திருமுருகாற்றுப்படை. **"அணங்குடை முருகன் கோட்டத்து"** என்பது புறநானூறு செப்பும் செய்தி யாகும். ஐங்குறு நூறும் **"மலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி"** என்று குன்று தோறாடும் குமரனை அன்று தொட்டே மலை முதற் கடவுளாக கூறுகின்றன.

முருகன் தமிழர்களுடன் நெருங்கிய தொடர்புடைய தெய்வம். தமிழ் மொழியுடன் தொடர்புடைய தெய்வம். தமிழர் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த பிஞ்சகன்றன் மைந்தன். முச்சங்க வரலாற் றிலே ஒரு சங்கத்தின் தலைவனாக வீற்றி ருந்த தனிநெடு வேலோன். தமிழ் நெடுங் கணக்கின் கட்டமைப்புக்கும் நெருங்கிய தொடர்புடைய உருவ அமைப்புடையவன். கருணைகூர் முகங்கள் ஆறும் மெய் யெழுத்தின் மூவகை இனப் பாகுபாடொடு பொருந்தக் காணலாம். பன்னிரு விழிகளும், தடக்கை பன்னிரண்டும் பன்னிரண்டு உயிர் எழுத்தைச் சுட்டலாம். ஆய்தம் ஆழ்ந்த கன்று கூர்ந்த அயிலினைச் சுட்டும். இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தியென்ற வாழ்வியல் பூரணத்திற்கு வேண்டிய சக்தி களை முன்னிறுத்தும் திருக்கோவை யழகன் முருகன்.

அறுமுகச் செவ்வேள், சேக்கிழார் தந்த பெரிய புராணத்திலே ஆறு இடங் களில் அகம் மலர புந்திக்கும் சிந் தைக்கும் புத்தூக்கமளிக்கப் போற்றுகின்ற பான்மையைக் காணலாம். அவை தடுத்தாட் கொண்ட புராணம், கண்ணப்ப நாயனார் புராணம், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம், சண்டேசுர நாயனார் புராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், சிறுத்தொண்ட நாயனார் புராணம் என்பனவாம். உருத்திரனின் புகழ் பேச

வந்த சேக்கிழார் உருத்திரகுமாரனை - உலகெலாம் மஞ்ஞையில் உலவிய உம்பர் தொழுதேவனை - தேவர்கள் சேனாதி பதியை ஆறு இடங்களில் எட்டுத் திரு நாமங்களை எடுத்தாண்டு தமிழர் தம் வாழ்வின் விடிவெள்ளியாய் வர்ணிப்பது ஈண்டு சிந்திக்கற்பாலது.

முருகனின் பேரொளி தமிழர் தம் இருளினைப் போக்க வல்லதே. கடந்த காலமும் - நிகழ்காலமும் நிகழ்ந்தவற்றை முன்னிறுத்தி எதிர்கால வாழ்வின் வரு கையை உவகையுடன் எதிர்கொள்ள முருக ஒளி எம்மிடை பிரகாசிக்க வேண் டும். நக்கீரன் திருமுருகாற்றுப் படையிலே "ஓவற விமைக்குஞ் சேண் விளங் கவி ரொளி" என்று முருகப்பெருமானுடைய ஒளியை வியப்பார்.

"செஞ்சுட ரநந்த கோடி செறிந்தொருங்
- குதித்த தென்ன
விஞ்சிய கதிர்கான் றுள்ள வியன் பெரு
- வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி விண்ணோர்
- நின்றனர்"

என கந்த புராணம் எம் சொந்தப் பிரானை - அவனது சோதிப்பிளம்பை துய்த்துச் சொக்க வைக்கிறது.

முருகலர் அலங்கற் செவ்வேல் முருகவேள் என்றும் போரணி நெடுவேலோன் என்றும் "மயிலுடைக் கொற்றவூர்தி வரையுரம் கிழித்த திண்மை அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார்" என்றும் கண்ணப்ப நாயனார் புராணத்தில், அண் ணலார் திண்மையை வியந்து போற்றக் காணலாம். பகைப் புலத்தை வெல்ல, மயிர் நீப்பின் வாழாக் கவரி மான் வாழ்வை எட்ட எந்தை முருகனைச் சிந்தை கொள்ள வேண்டுமென்று கூறவும் வேண்டுமோ! பரமன் திருமகள் பராக் கிரமம் பனைவரப் பொடிப் பொடியாக்க வல்லதென்பது பேசவும் வேண்டுமோ!

"தரணியின் நடுவண் வைகுஞ் சரவணப் பொய்கை தன்னில், விரைசெறி கமலப்போதில் வீற்றிருந் தருளும் செவ்வேள்" தமிழர் தம் அடிமை வாழ்வைத் துடைத்திடக் கோயில் கொண்ட ஊர் நல்லூர். தெற்கிலே தேவர் தம் மனம் புகுந்து மறு நீக்க மாணிக்க கங்கைக் கரையில் வீற்றிருந்து விளை யாடும் வீரவேல் எங்கள் தீரவேல்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரத்திலே இளங்கோவடிகள் முருகனை - அவனது வழிபாட்டைக் கூறுவதை அவதானிக்கலாம். சிலம்பிற்கு முன்பே தமிழகத்தில் முருக வழிபாடு நிலவிய தற்குத் தொல்லியற் சான்றுகள் உண்டு. அக்காலத்தில் செவ்வேள், சேயோன், வேலன் என்னும் பெயர்களால் அழைக் கப்பட்டான். யாழ்ப்பாணத்து கந்தரோடையில் அகழ்வாராய்ச்சியின்போது சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வேல் கண் டெடுக்கப்பட்டது. கி.மு.1200 ஆம் ஆண்டளவைச் சேர்ந்த வேல், சேவல் சின்னம் ஆகியன ஆதிச்ச நல்லூரில் கண்டு பிடிக்கப்பட்டன.

பார் பரவு தெய்வமாக பார்வதி புதல்வன் போற்றியும் ஏற்றியும் வணங்கப் பட்டான். வீரத்தின் நிலைக்களனாகச் சித்தரிக்கப்பட்ட சிவன் சேயை "வெரு வெஞ்சேய்" என புறநானூறும், "செரு

மிகுசேய்'' என அகநானூறும் அணி செய்வதை கண்டு கொள்ளலாம்.

சிலப்பதிகாரத்திலே கல்லால மரத்தின் கீழே தட்சணாமூர்த்தியாகவும் (ஆலமர் செல்வன் புதல்வன் எனவும்) கைலாச மலையிலே வீற்றிருக்கும் கடவுளுமாக விளங்கும் சிவபிரான் (கயிலை நன்மலை இறை மகன்) இமய மலையின் மகளாகிய பார்வதி (மலைமகள் மகன்) ஆகியோரின் வியத்தகு புத்திரனாக முருகப்பெருமான் வர்ணிக்கப்படுகிறார்.

தமிழகத்திலே முருகனுக்கு ஆறு திருத்தலங்கள் உண்டென திருமுருகாற்றுப்படை செப்பும். ஆனால் சிலப்பதிகாரத்திலே முருகனுக்குரிய திருத்தலங்களாக **"சீர்கெழு செந்திலும் செங்கோடும், வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்"** என் நான்கு இடங்கள் கூறப்படுகின்றன. முருகன் ஆடிய துடிக்கூத்தும், குடைக் கூத்தும் பற்றி சிலம்பு, "மாக்கடல் நடுவண் நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன்நின்ற சூர்த் திறம் கடந்தோன் ஆடிய துடியும், படை வீழ்த்து அவுணர் பையுள் எய்தக் **குடை வீழ்த்து அவர்முன் ஆடிய குடையும்"** எனக் கூறும்.

எல்லையில்லா எழிலும், ஆற்றலும் கொண்ட அயிலவன் தில்லைக் கூத்தனின் மைந்தன் என்பதை ஆடல், பாடலிலும் விரவி மெய்ப்பிக்கின்றார்.

பாரெலாம் பரந்து வாழும் பக்த கோடிகள் வணங்கும் தெய்வமாகி - ஈழத்திரு மண்ணிலே மாவையம்பதியிலும், செல்வச் சந்நிதியிலும், நல்லூரிலும்,

தென்னிலங்கையில் கதிர்காமத்திலும், கிழக்கிலே சித்திர வேலாயுதனாகவும் விளங்கும் விமலனை - வேற்படைச் செவ்வேளை நாளும் தொழுவார்க்கு ஏது இடும்பை. அல்லாவிடில் நல்லூரான் வீதி நடந்தார் வினைதீரும் என்று யோகர் சுவாமிகள் விளம்பியிருப்பாரா? எனவே முருகன்,

துணைக்கரத்திருக்கும் வேலை
வணங்குவதெமக்கு வேலை

என்ற உச்சாடனத்தோடு உள்ளொளி பெருக்கி உய்வோமாக

## நல்லூர் நடப்பு

வீர சங்கிலி ஆண்ட பூமி
வெற்றி வேல் ஆளும் பூமி
ஈரக் கொடி ஏறும் பூமி
ஈகை மொழி பாடும் பூமி

தேச ஒலியின் ஞான பூமி
தீமை ஒழிக்கும் வேத பூமி

வீசும் காற்றில் விளையும் பூமி
வாழும் தமிழை வளர்க்கும் பூமி

கீதம் பாடும் முருகன் பூமி
கீர்த்தனை சீறும் குமரன் பூமி
நாதம் ஒலிக்கும் நல்லை பூமி
நாளும் சிரிக்கும் நல்ல பூமி

**நல்லை அமிழ்தன்.**

# நற்காட்சி காண நல்லூரே நற்பதி

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்

முருகன் என்றால் அழகன் என்று பொருள். கலியுக வரதனாம் கந்தக் கடவுள் கைதொழும் அடியார்களின் கடுவினை போக்குவதற்காக நல்லூரிலே கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்தருள் புரிகின்றான். அவன் தமிழ்க் கடவுள். குறிஞ்சிக் குமரனாக விளங்கும் கந்தன் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற தன்மை வாய்ந்தவன்.

தேவர் சிறை மீட்ட செல்வனாக, அசுரர் குலமழிக்கும் வீரனாக, பக்தர்களுக்கருளும் பாலமுருகனாக எழுந்தருளி வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கித் திருவருள் புரிகின்றான்.

முருகன் குமரன் குகனென்று மொழிந்துருகுஞ் செயல் அடியார்களின் பக்திக்கு எடுத்துக்காட்டு. எமக்கு வருகின்ற துன்பங்களையும் துயரங்களையும் நீக்குகின்ற கருணையுள்ளங்கொண்ட கந்தன் நல்லூர் திருவீதியில் வலம் வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மஹோற்சவம் தொடங்கி விட்டால் மக்கள்பாடு கொண்டாட்டம்தான். எங்கு பார்த்தாலும் அருள் காட்சிதான்.

மகர தோரணங்கள் ஆடி அசைய மங்களகரமாக வாழை, கமுகுகள், மூங்கில்களால் வீதிகள் யாவும் அலங்கரிக்கப்பெற்று நல்லூர் நகரமே விழாக்கோலம் பூண்டு கோலாகலமாகக் காட்சியளிக்கும். எல்லா இடங்களிலும் ஒலிபெருக்கிகள் முருகநாமம் ஒலித்த வண்ணமிருக்கும். வீதிகள் தோறும் நாம பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும். அடியார்கள் அனைவரும் பக்தி பூர்வமாகக் காட்சி தருவர். நெற்றியில் திருநீறு, சந்தணம்; வேட்டி சால்வையோடு வீதிவலம் வரும் காட்சி பார்ப்போம் மனதில் மேலும் பக்தியை வளர்க்க ஏதுவாக இருக்கும்.

சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களெனப் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்தவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த புதிய புண்ணிய பூமியான நல்லூர் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒரு தலம். ஆகவே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் முன்னர் யாழ்ப்பாண இராசதானியாகவும் இருந்து வந்திருக்கின்றது. அத்தகைய பெருமை நிறைந்த நல்லூர் நமது வாழ்நாளில் சிறப்புற்றுத் திகழ்வதைக் காண்பதற்கு நாம் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இங்கே நாம் சென்று முருகப் பெருமானைத் தரிசிப்பதற்கும் நல்ல பலன் வேண்டும். நல்ல மனதுடைய நன்மாந்தர் வாழ்கின்ற காரணத்தாலேயே இது நல்லூர் என அழைக்கப்பட்டது.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். அவன் கலியுக வரத கந்தனாக அருள்புரியும் நல்லூர் யோகர் சுவாமிகளால் போற்றப்பட்ட புண்ணிய ஸ்தலமாகும்.

முருகன் ஓங்காரத்துட் பொருளாகவும் அதற்கு அப்பாலும் நின்று நிலவுகின்றான் என்பதற்கு நல்லூர் விழாக்கள் சான்று பகர்கின்றன. அவனது வேல் ஞான சக்தி. மயில் விந்தின் வடிவம். சேவல் கொடியே நாதம், முருகன் அழகன். அவன் மார்பில் வேல் சாய்ந்தே இருக்க வேண்டும். முருகனுடைய கண் புருவத்துக்கு மேல் வேல் உயரக்கூடாது.

நல்லூரிலே ஸ்ரீ வள்ளிதேவ சேனாபதியாக முருகன் எழுந்தருளிவரும் போது இந்த அருமையான காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும். தெய்வயானையும், வள்ளியும் முருகனுடைய சக்திகள். வள்ளி - இச்சாசக்தி; தெய்வயானை கிரியா சக்தி. முருகனின் வலக்கரம் மேல் நோக்கியிருந்து அபயமும் இடக்கரம் கீழ் நோக்கியிருந்து வரதமும் காட்டும். வலப்பக்கம் வள்ளி; இடப்பக்கம் தெய்வயானை. வலக்கண் சூரியன்; இடக்கண் சந்திரன். சூரிய ஒளிபடும் தாமரை மலர் குவிவதில்லை. சந்திர ஒளிபடும் குமுத மலர் குவிவதில்லை.

இந்தமாதிரியான அழகுக்காட்சி நல்லூரிலே காணலாம். முருகனின் ஆறுமுகங்களிலும் ஆறு மகத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. அகரம், உகரம், மகரம், விந்து, நாதம், கலை இந்த ஆறும் முருக தத்துவம். 'ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே' என்பது அருணகிரியார் கூற்று. இந்தத் தத்துவங்களையெல்லாம் காட்டும் முகமாக மாம்பழத் திருவிழா இங்கு நடைபெறுகின்றது. முருகனும் சிவனும் ஒன்று என்பதைச் சொல்லாமல் சொல்லும் திருவிழா கைவாசவாகனம். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழிலும் விளக்கும் திருவிழா இங்கே அழகாக நடைபெறுகின்றது.

முழுமதியன்ன ஆறு முகங்களும் முந்நான்காகும் விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும் அழகிய கரமீராறும் அணிமணித் தண்டையார்க்கும் செழுமலர் அடியும் காண இங்கே பக்தர்கள் குழுமுவர்.

நல்லூர் மடாலயமாக இருந்தாலும் மக்கள் முருகன் அருள் வேண்டி இங்கே நேர்த்திகள் பல வைத்து மன்றாடுவர். காவடிகள் பல வகையிலே காட்சி தருகின்ற ஒரே ஆலயம் நல்லூர்.

**விழிக்குத்துணை திருமென் மலர்ப்பாதங்கள்**
**- மெய்ம்மைகுன்றா**
**மொழிக்குத்துணை முருகாவெனும் நாமங்கள்**
**- முன்பு செய்த**
**பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்**
**- பயந்த தனி**
**வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன்**
**- மயூரமுமே!**

என்று அருணகிரிநாதர் அலங்காரம் செய்த ஆறுமுகப்பெருமான் அருளை அள்ளி வழங்கும் நல்லூரிலே நாமும் சென்று வழிபாடியற்றி கந்தப் பெருமானின் கருணைக்குப் பாத்திரமாகி சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வோமாக.

# கந்தன் கதை கந்தபுராணத்திற்கு முந்தியது

சிவ. சண்முகவடிவேல்,
ஏழாலை மேற்கு,

"கந்தபுராணமாகிய பெருங் கடலுள் கந்தவேள் பெருமான் திருவவதாரஞ் செய்த காரணத்தையும் கந்தவேள் கடவுள் பரிசுத்தராகிய சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினின்றும் உதித்தமையையும் அவ்வழியாக அசுரர்கள் எல்லாம் மாய்ந்திடப் பொறாததையும் ஏனைய வற்றையும் எடுத்து இயம்புவேன்" என்று அவையடக்கத்தில் கச்சியப்ப சிவாச்சாரியர் கூறுமாற்றால் தாம் கூறப்போகும் கந்தன் கதைப் பரப்பைத் தெளிவுபடுத்துகின்றார்.

அவ்வாறு ஆசிரியர் பாட எடுத்துக்கொண்ட கருணைக் கந்தக் கடவுளுடைய கதை அதற்கு முன்னரே சைவ உலகு நன்கு அறிந்திருந்தது. கதையாகவோ புராணமாகவோ எழுத்து மூலம் வடிக்கப்படவில்லை. ஆனால் கதை முழுவதும் கச்சியப்ப சிவாச்சாரியருக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவிவழிக் கேள்வி மூலமாகவோ அல்லது கர்ணபரம் பரையாகவோ தமிழ்நாடு எங்கும் நன்கு பரவியிருந்தது. சைவர்கள் மனம் முழுவதும் கந்தன் கதை நிரம்பி வழிந்தது உண்மையே அன்றிப் பொய்யாகாது.

கந்தபுராணம் கச்சியப்ப சிவாச்சாரியாரால் காஞ்சியில் கட்டுரைக்கப் பெற்றது. கந்தப் பெருமானுடைய கதையை விரித்துப் பாடுவது கந்தபுராணம். கந்தபுராணம் ஆறு காண்டங்களைக் கொண்டது. பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து பாடல்களைக் கொண்டது. விருத்தப் பாக்களால் வீறு நடை போடுவது கந்தபுராணம். முருகப் பெருமானுடைய திருவவ தாரத்தையும் திருவவதாரத்திற்கான ஏதுக்களையும் ஏனையவற்றையும் கந்தபுராணம் எடுத்து இயம்பும்.

கந்தபுராணம் பல யுகங்களுக்கு முந்தியது. அதனால் முன்னிற்குப் பின் முரணான முடிபுகளைக் கொள்ளும். அப்படிக் கொள்ளுவதில் தவறு காண முடியாது.

கச்சியப்ப சிவாச்சாரியார் முருகப் பெருமானுடைய திருவருள் துணை கொண்டு முன்பின் முரண்படாமல் புராணம் இயற்றியுள்ளார். படிப்பவர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தாமலும் கதைச் சுவை குன்றாமலும் செந்தமிழின் பயனுணர்ந்து பாடியமை திருவருள் வசமேயாம்.

ஆசிரியருடைய அவையடக்கச் செய்யுள் (16) அதற்கு அகச்சான்று போல அமைகின்றது. அதன் பொருள் பின்வருமாறு:

**"முன்னர் சூதமகா முனிவர் பாடிய வடநூற் புராணத்தை பின்னரே சிறியேன் தமிழ் நடையில் நாட்டு கின்றேன். இனிய தமிழ்ப் புலவரது நல்ல அறிவின் கண்ணே அவற்றைப் புலப்படுத்தும் விருப்பம். பாடும் பயன் அதுவேயாகும்".**

கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சியம்பதியில் குமர கோட்டத்தில் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்ன ராகக் கந்தபுராணத்தை அரங் கேற்றினார். அவ்வுண்மையை அபியுக்தர் வாக்கால் நன்கு அறியலாம்.

**"புனிதமிகு கச்சியப்ப குரவ னானோன்**
**வாதமுறு புலவர்குழா மகிழ்ந்து போற்ற**
**மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டத்**
**தேதமறு சகாத்தமெழு நூற்றின் மேலா**
**யிலகுகந்த புராணமரங் கேற்றி**
**னானே........"**

மேலும் அவையடக்கத்தில்

**"செந்த மிழ்க்கு வரம்பெனச் செப்பிய**
**முந்து காஞ்சியின் முற்றுணர் மேலவர்**
**கந்த னெந்தை கதையினை நூன்முறை**
**தந்தி டென்னத் தமியனியம்பு கேன் (19)**

பெரியோர்கள், கந்தசுவாமிக் கடவுள் கதையினை முதனூலில் கூறிய முறைப்படி பாடுக என்று பணிப்பத் தமியேன் பாடினேன் என்பார். நூன்முறை என்பதனால் தமிழில் நூன் முறையாக அதற்கு முன்னர் கந்தன்கதை காணப் படவில்லை என்னும் தொனிப்பொருளும் உற்று உணர்வார்க்கு இனிக்கும்.

கந்தன் கதை கச்சியப்பரால் காவியமாகப் புராணமாக நூல் வடிவத்தில் பாடப்பெற்றது. அரங்கேறி ஆயிரம் ஆண்டுகள் அகன்று விட்டன. ஆயிரம் அண்டுகளுக்கு முன்பு காலாதி காலமாகச் சைவ உலகில் பாலர் முதல் படுகிழம் வரையாக உள்ளங் கவர்ந்த கதையாக உலவியது திருவருள் வெளிப்பாடாகும்.

இன் தமிழ்ச் செய்யுளாய் எழுத்து வடிவம் பெற்று ஏட்டில் வரையப் பெறாது சைவர்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டமை தள்ளுவதற்கு இல்லாத சரித்திரச் சான்று. அவ் வுண்மையினைச் செந்தமிழின் மிகப் பழைமையான சங்க இலக்கியங்களில் ஆங்காங்கு பரக்கக் காணலாம். அதன் பின் தோற்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் குறிப்புக்கள் உண்டு. அதன் பின்னர் சைவ சமய எழுச்சியில் எழுந்த பத்திப் பனுவல்களான தேவாரம் முதலிய திருமுறைகளில் பரக்கக் காணலாம். அவை கந்தபுராணக் கதையின் பிழிந்தெடுத்த சாறாகத் திரட்டி உருட்டி வடித்தெடுத்த சொற்றொடர்களாகக் காணப்படும். ஆலம் வித்தினுள் ஆலமரம், கிளை, கொம்பர், விழுது அடங்கி இருப்பது போல உள்ளது. திருமுறைகளில் காணப் பெறும் கந்தன் கதையின் சொற் றொடரின் விரிவு கந்தபுராணக் கதை முழுவதையும் விரித்துரைக்கும்.

முருகப் பெருமானுடைய முறைமையான செய்திகளை விரித்துரைக்க வல்ல சொற்றொடர்கள் பத்தி இலக்கியங்களில் பயிலப்படுவதால் - கந்தன் கதை சைவ உலகில் பின்னிப் பிணைந்து உள்ளங்கவர்ந்து நின்று நிலாவிய உண்மை உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெள்ளிதிற் புலனாகும்.

அவ்வுண்மைக்கு ஆதாரமாக ஒரு சில சொற்றொடர்களை இங்கு எடுத்துக் காட்டுதும்.

### 1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்.

"மாயச் சூரன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது..

"வள்ளி முலைதோய் குமரன்

"இளங்குமரன் தன்னைப்பெற் றிமையவர்தம்
பகையெறிவித்த இறைவனூரே..........

"சேந்தனைமுன் பயந்துலகில் தேவர்கள் தம்
பகைகெடுத்தோன் திகழுமூரே-

"மட மயி லூர்தி....

"பெற்று முகந்தது கந்தனையே...

### 2. திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில்....

"சமர சூரபன் மாவைத் தடிந்தவேற் குமரன்

"நங்கடம்பனைப் பெற்றவள்.......

"ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்.....

"குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள்

"சூரட்ட வேலவன்

"பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை.....

"நஞ்செந்தின் மேய வள்ளி மணாளர்.....

"கோழிக் கொடியோன்

"சமர சூரபன்மாவைத் தடிந்தவேற் குமரன்..........

### சுத்தரமூர்த்தி நாயனார் தேவாரத்திலிருந்து...

"அங்கை வேலோன் குமரன்பிள்ளை..........

"கரும்புவில்லின் மலர்வாளிக் காமனுடல்
வேவக் கனல் விழித்த கண்ணுதலோன்.

### திருமுருகாற்றுப் படையிலிருந்து
(பதினோராம் திருமுறை)

"குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ...

"சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருக......

"மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்.......

"................கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்இசைச் செவ்வேற் சேஎய்.......

".......ஒரு முகம், குறவர் மடமகள் கொடி போல்
நுசுப்பின் மடவரல் வள்ளி யொடுநகை
அமர்ந்தன்றே....

"நெடும் பெருஞ்சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ.......

"வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ........

இவை போல்வன அனேகம் சொற்றொடர்கள் பன்னிரு திருமுறைகளில் ஆங்காங்கு தேவைக்கு ஏற்ப பயின்று வருவன. அவையாவும் கந்தன் கதையை நமக்கு உணர்த்துவன. அவற்றை ஒன்று திரட்டிச் சுருங்கச் சொல்லின் பின்வருமாறு அமையும்.

சிவபிரானுடைய நெற்றிக் கண்ணினின்று உதித்தவர் முருகப் பெருமான். தாயார் உமாதேவியார். மயில் வாகனத்தை ஊர்தியாக உடையவர் முருகவேள். அவர் கொடி கோழியாகும். மயிலும் கோழியும் சூரபன்மன். வரம் பெற்ற சூரபன்மா இந்திரன் முதலாம் தேவர்களுக்கு இன்னல் விளைத்தான். தேவர்களுடைய வழிபாட்டு வைராக்கியத்தால் சிவபிரான் முருக மூர்த்தியை உதிக்கச்செய்தார். தேவர்கள் அதற்குள் அவசரப்பட்டார்கள். மகாதேவர் மலை மகளை மணம் செய்யும் பொருட்டு தெட்சணாமூர்த்தியின் மௌனத்தைக் கலைக்க மன்மதனை ஏவினார்கள். மலர் அம்பு தொடுத்த மன்மதன் மான் கரத்தார் நெற்றிக்கண் அக்கினிப் பொறியில் எரிந்து சாம்பரானான்.

முருகப்பெருமானுக்கு சத்திகள் இருவர். இச்சாசக்தி, கிரியாசக்தியர்கள் என்று போற்றப்படுவர். அவர்கள் தெய்வயானை, வள்ளிநாயகி என்பர். தெய்வயானை தேவலோகத்துத் தெய்வப் பெண். வள்ளிநாயகி மண்ணுலகத்தில் வேடுவ நங்கை.

சூரபன்மன் தேவர்சிறை விடுவதற்கு மறுத்தான். முருகப்பெருமான் போரை மேற்கொண்டார். சூரபன்மன் கடலின் நடுவனாக மாமர உருவாய் நின்றான். கந்தவேள் பெருமான் வேற்படையால் சூரபன்மனைச் சங்காரஞ் செய்தார். அவ்வேற்படை படைக்கலங்களுக்கு நாயகமானது. நம்பிரான் நம்பிக்கு நல்கினார்.

இவ்வாறாக திருமுறைச் சொற்றொடர்கள் கந்தபுராணக் காதையை விரிவு படுத்தும். பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாரிற் பயின்ற கதை பின்னர் கச்சியப்பசிவாசாரியாரால் 'கந்தபுராணம்' எனப் பாடப்பெற்றது.

## முருகன் துணை

நல்லைநகர் மாமணியே முருகையா
நலம் காக்கும் வேலையா ஐயா
உன்பாதம் சரணடைந்தோம் வேலைய்யா
நினைத்த தெல்லாம் தந்திடுவான்
- வேலைய்யா
நினைத்த போது வந்திடுவான் முருகையா
இன்னல்களைத் தீர்த்திடுவான் வேலைய்யா
வேலவனின் தாழ்பணிவோம் வேலைய்யா
உண்மையின் உட்பொருளாம் வேலைய்யா
உன்சேயை ஆதரிப்போம் முருகையா
ஊரெல்லாம் புகழ்பனாம் வேலைய்யா
ஊழ்வினையை நீக்குவானாம் வேலைய்யா

எங்கும் நிறைந்தவனாம் முருகையா
எங்கள்குறை தீர்ப்பவனாம் வேலைய்யா
ஏழைக்கிரங்குபவனாம் முருகையா
ஏகாந்த நாயகனாம் முருகையா
ஐங்கரனின் தம்பியாரே முருகையா
ஐம்புலனுக்கு அப்பால் பட்டவன் முருகையா
ஒப்பற்ற வேலன் அவன் முருகையா
ஒன்று சேர்ந்து பாடிடுவோம் முருகையா
ஓம்கார வடிவுடையான் முருகையா
ஓம்என்றாலே ஓடிவருவான் முருகையா
ஆடி ஆடிப்பாடிடுவோம் முருகையா
வேலவனின் தாழ்பணிவோம் வேலைய்யா

**ச.கனகரெத்தினம், நல்லூர்.**

# மணிவாசகரின் சிவபுராணம் எமது சுய புராணமே!

**எஸ்.ஆர்.சரவணபவன்**
**உபதலைவர், வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழு.**

மணிவாசகப் பெருமானின் திரு வாசகப் பாடல்கள் ஆத்மீக புதையல் களாகும். ''பொருள் உணர்ந்து படிப்போருக்குப் புதிய புதிய அனுபூதிக் கருத்துக்கள் தோன்றிக் கொண்டே இருக்கும்". சிவபுராணத்தை திருவாசகப் புதையல்களுள் ஒரு பெரும் பொக்கி ஷமாகவே கொள்ளலாம்.

"சிவபுராணம்" என்ற சொல்லைப் பார்க்கும்போது சில முரண்பட்ட எண்ணங்கள் தோன்றுகின்றது. அதாவது ''சிவனுடைய புராணம்'' சிவனுக்குப் புராணம் எழுத முடியுமா? புராணம் என்றால் சர்க்கம் (உலகத்தோற்றம்), பிரதிசர்க்கம் (உலகு மீளத் தோன்றல்), வம்சம் (அரச வம்ச வரலாறு), வம்கானு சரிதம் (முனிவர் வரலாறு), மனுவந்தனம் (மனுக்களின் வரலாறு) என்னும் இலக்கணம் கொண்டதாகும். இவைகள் ஏதாவது சிவபுராணத்தில் அடங்கி யுள்ளதா? ''ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி'' என்று திரு வெம்பாவையில் சிவனை அறிமுகப் படுத்திய மணிவாசகர், சிவனுக்கு புராணம் எழுத முற்பட்டாரா?

சிவபுராணத்தைப் பார்க்கும்போது சிவனுக்கு எத்தனையோ உதார ணங்களையும், உவமைகளையும், அனுபவங்களையும், அவனது அருளையும், கரு ணையையும் சொல்லி சிவனுக்கு ஓர் உருவத்தை ஏற்படுத்த முயன்று தோல்வி யுற்று "சொல்லற் கரியானைச் சொல்லி" என்று முடிக்கிறார். இதில் புராண வரை விலக்கணம் எதுவும் இல்லை. ஆனால் மணிவாசகர் மூன்று இடங்களில் தன்னைப் பற்றிக் குறிப் பிடுகிறார். முதலா வதாக "பொல்லா வினையேன்" என்று ஆத்ம சொருபமாக நின்ற தனது முந்திய பிறப்புக்களைக் குறிப்பிடுகிறார். "புல்லாகிப், பூடாகி, புழுவாய், மரமாகி, பல்விருகமாகி, பறவை யாய், பாம்பாகி, கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லஅசுரராகி, முனிவராய், தேவராய்................................ எல்லாப் பிறப்பும் பிறந்து இழைத்தேன்" அதாவது ஒவ்வொரு ஆத்மாவும் எத்த னையோ பிறப்புக்களின் பின்புதான் மனித ரூபத்தில் வந்துள்ளது. ஆத்மாதான் எமக்குள்ளே இருக்கும் சிவன் ("சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்") ஆகவே எமது ஒவ்வொருவரினதும் ஆத்மாவின் பழைய வரலாற்றைத்தான்

மணிவாசகப் பெருமான் ''பொல்லா வினையேன்'' எனத் தன் மூலமாக எம் ஒவ்வொருவரின் பழைய புராணத்தைக் கூறுகின்றார். ''வல்வினையேன் தன்னை'' என இரண்டாவது தடவை தன்னைக் குறிப்பிட்டு, ஆத்மாவின் தற்போதைய நிலை என்ன என்பதை விபரிக்கிறார்.

''வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை அறம், பாவம், என்னும் அருங்கயிற்றாற் கட்டி, புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி, மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய விலங்கு மனத்தால் விமலா உனக்கு கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகி நலந்தான் இலாத சிறியேன்.''

முற்பிறவிகள் பல பிறந்து இளைத்துப்போன ஆத்மா, இந்தப் பிறப்பில் ஓர் உடம்பை எடுத்துள்ளது. அந்த உடம்பு எப்படிப்பட்டது என்ற வருணனைதான் மேலே கூறப்பட்டது. என்னை (ஆத்மாவை) மாயமாகிய இருளைக் கொண்டு மூடி, ஒரு தோற்பையுளில் போட்டு, அறம் பாவம் என நான் முற்பிறப்புக்களில் செய்த பாவபுண்ணியங்களை ஒரு கயிறாக்கி அதனால் அந்தத் தோற்பையைக்கட்டி, அந்தத் தோற்பைக்குள், புழுஅழுக்கை வைத்து மூடி, (ஒரு மனிதன் இறந்து 4அல்லது5 தினங்கள் கவனியாது விட்டால், மிகவிரைவாகப் புழுக்கள் தோன்றுவதை அறிந்துள்ளோம்.) அதற்கு ஒன்பது வாசல் வைத்துள்ளான். (கண் துவாரம்-2, காதுத்துவாரம்-2, மூக்குத் துவாரம்-2, வாய்த்துவாரம்-1, மலவாசல்-1, சலவாசல்-1) இவை எல்லாவற்றிற்கும் ஊடாக வெளியே அழுக்குத்தான். இத்தோற்பையுக்கு ஐந்து புலன்கள் உண்டு. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களும் வஞ்சகத்தைச் செய்து கொண்டே இருக்கிறது. அதாவது வெளிநோக்காக எமது மனதைத் திருப்பி உடம்பால் அனுபவித்து, வாய் மூலம் அனுபவிப்பது, கண்கள் மூலம் அனுப விப்பது, மூக்கு மூலமாக அனுபவிப்பது, செவி மூலம் அனுபவிப்பது என்று அவைதான் அதிசிறந்த அனுபவமாக இருக்க முடியுமெனப் பிழையான அபிப்பி ராயத்தை ஏற்படுத்தி மனதை ஏமாற்றித் தமது வழியிலேயே கொண்டு செல் கின்றன. மனம் விலங்கு போல, மிருகம் போல அந்தப்புலன்களுக்குப் பின்னா லேயே சென்று, கடைசியிலேயே ஏமாற்றம் அடைந்து தோல்வியுறுகிறது. அப்போது உடலும் செயற்றிறன் குறைந்து போகிறது. அதனால் உன்னுடன் கலந்து அன்பு சொரூபமாக இருக்க முடிய வில்லையே! என ஆத்மா அவலக்குரல் எழுப்புகிறது. இது எம் எல்லோரினதும் குரலும் கூட. ஆகவே எமக்குள் இருக்கும் ஆத்மாவின் (சிவனின் நிலை) சிறைவாசம் தோற்பையுள் அடங்கி, பிழையான தகவல் கொடுத்து தவறான வழிகாட்டும் புலன்கள், மிருகக்குணம் கொண்ட மனம். துணையாக இருக்க எவ்வாறு நிரந்தர ஆனந்தத்தைத் தேட முடியும்? இது தான் எமது தற்போதைய நிலை.

மூன்றாவது தடவையாக "வேற்றுவிகார விடக்குடம்பில் உட்கிடப்ப ஆற்றேன்" என்று தன்னைக் குறிப்பிட்டு, எமது ஆத்ம இலட்சியத்தைக் குறிப்பிடு கிறார். அதாவது போக வேண்டிய இலக்கு,

வாழ்க்கையின் இலட்சியம் என்ன என்பதைக் கூறுகிறார். "பொய் கெட்டு மெய்யானால், மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே கள்ளப் புலைக்குடம்பை (உடம்பை எடுக்காமல்) கட்டழிக்க வல்லானே" என்று எமது பிறவியின் நோக்கத்தை, ஆத்ம இலட்சியத்தை, மிகத் தெளிவாகக் காட்டுகிறார். அத்துடன் "அல்லற்பிறவி அறுபானே" என்று பிறவிக் கடலை நீந்திக் கடப்பதே ஆத்ம இலட்சியம் எனக் காட்டுகிறார். ஆத்மாவை சிவமாக்குதலே பிறவியின் இலட்சியம் என்று வலியுறுத்துகிறார்.

ஆகவே, சிவபுராணத்தில் ஆத்மாவின் தொடக்கம், தற்போதைய நிலை ஆத்மாவின் இலக்கு என்ற மூன்று விடங்களைத் தெளிவு படுத்தியுள்ளார்.

முதலில் 16 அடிகளில் இறைவனின் பாதங்களை நினைத்த பின், "சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை, முந்தை வினை முழுதும் ஓய" உரைக்கப் புகுந்த மணிவாசகர், சிவனின் அருள், அவனது தன்மை, கருணை அழகு, ஜோதி ரூபம் ஆகியவற்றை வர்ணிக்க முயல்கிறார். அவரால் சிவனுக்கு ஒரு தோற்றத்தைக் கொடுக்க முடியவில்லை. ஆகவே "சொல்லற் கரியானை" என்று சிவபுராணத்தை முடிக்கிறார்.

ஆத்மாதான் சிவம். அந்த சிவம் பரமாத்மாவுடன் கலக்க வேண்டுமென்ற ஆத்ம இலட்சியத்தை வெளிப்படுத்துவதே சிவபுராணம் அருளிச் செய்த மணி வாசகரின் நோக்கமாகும். ஆகவே சிவ புராணம் எமது சுயபுராணமே!

## நல்லைப்பெருமான் சிறப்பு

முருகன் குமரன்
குகன் என்று மொழிந்து
உருகும் செயல்தந்து
உணர் என்று அருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ வென்குள பஞ்சரனே
பக்தியுடன் உருகி நித்தமும் உனது அடிகள்
பற்றும் அருள் நினைவு தருவாயே.

ஒருமுருகா என்று உள்ளம் குளிர
உபந்து உடனே வரு முருகா என்று
வருவா நிற்பகையிங்கனே
திருமுருகா யென்பதால் புலம்பா
நிற்பத்தையல்முன்னே
திருமுருகாற்றுப்படையுடனே வரும் சேவனனே

மூவர்கள் முதல்வன் வந்தான்
மூக்கணானன் குமரன் வந்தான்
மேவளர் மடங்கல் வந்தான்
எவரும் தெரிதல்தேற்றா
திரிந்திடும் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான்

**சேவகப்பெருமான்,**
(1923ம் ஆண்டு)

# தமிழ் நிலத்தெய்வம் முருகன்

சைவப்புலவர் செ.பரமநாதன்,

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்கின்றது திருமூலரின் திருமந்திரம். "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்கிறார் மாணிக்கவாசகர். உருவமும், அருவமும் இல்லாத இறைவன் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு இடங்களில் பல அன்பர்களுக்கு பல வகைப் பேறுகளை அருள்வதற்காகக் கொண்ட திருவுருவங்கள் பற்பலவாகும். அவற்றுள் ஒன்றுதான் முருகன் திருவுருவம். முருகன் எம்மைப்போன்று கருவில் உருவானவன் அல்லன் என்று அருணகிரியார் பின்வருமாறு கூறுகிறார். "பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' என்று சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவன். தனக்குத் தானே மகனானவன். சிவபெருமானின் ஐந்து முகங்களான ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் போன்றவற்றோடு ஆறாவது முகமான அதோ முகம் (கீழ் நோக்கிய முகம்) கொண்டு முருகனை அவதரிக்கச் செய்தார். முருகன் நெற்றிக்கண்ணில் தீப்பொறியாகத் தோன்றிச் சோதிப்பிழம்பை திருமேனியாகக் கொண்டு உதித்தான் என்கிறது கந்தபுராணம்.

சிவன் வேறு முருகன் வேறு அல்ல என்ற உண்மையை "தனக்குத்தானே மகனாகிய தத்துவன்" என்ற தணிகைப் புராணக் கூற்றாலும், "ஈசனே அவன் ஆடலாய் மதலை ஆயினான் காண்" என்ற கந்தபுராணக் கூற்றாலும் அறியலாம். தமிழ் நாட்டில் பண்டைத்தமிழ் மக்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்கு வகையாகப் பிரித்து, மலையும் மலை சார்ந்த இடத்திற்கும் குறிஞ்சி எனப்பெயரிட்டனர். குறிஞ்சி நிலத்திற்கு உரிய கடவுள் முருகன். "சேயோன் மேய மைவரை உலகமும்'' என்ற தொல்காப்பிய நூற்பாவால் இதை அறியலாம். இவ்வுலகில் முதன் முதலாய் மனிதன் தோன்றிய இடம் குறிஞ்சித்திணையே என்பர். குறிஞ்சி நிலத் தலைவனாகக் கருதி நிலத்தின் முதல் விளைவை அனுபவிக்கும் கடவுளாகக் கொண்டனர்.

அழகு, இளமை, மணம், கடவுள், தன்மை ஆகிய நல்லியல்புகளைக் கொண்ட தமிழர் ''முருகு'' என்ற சொல்லால் குறிப்பிட்டு, அத்தகைய இயல்புகளைக் கொண்ட இறைவனான முருகனை வழிபட்டனர். குறிஞ்சிக் கிழவன், மலைக்கிழவோன் என்ற பெயராலும் அழைத்தனர். குறிஞ்சிக் கடவுள் முருகனை இளங்கோவடிகள் தான் இயற்றிய சிலப்பதிகாரத்தில், வஞ்சிக் காண்டத்தில், குறைக் குறவை என்னும் காதையில் முருகனைத் தமிழ்

மக்கள் வழிபடும் முறைகளை விரிவாகக் குறிப்பிடுகின்றார்.

சங்க நூலான பத்துப்பாட்டில் முருகன் புகழ் பாடும் திருமுரு காற்றுப் படைதான் முதல் நூலாக உள்ளது. சங்க கால நூல்களின் தொடக்க வழிபாட்டுப் பாடலே முருகன் துதியாகி விட்டது. மற்ற சங்க நூல்களுக்கு இல்லாத சிறப்பு "திரு" என்ற அடைமொழி பெற்றதும் ஆகும். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் முருகன் புகழ் பாடும் 31 பாடல்களில் 8பாடல்கள் கிடைத்துள்ளன. "ஆல்கெழு கடவுள் செல்வக்குமரன், கொற்றவைச்சிறுவன், மால்மருகன், மலை மகள் செல்வப் புதல்வன் என்றெல்லாம் சங்க நூல்களில் முருகன் பேசப்படுகிறான்.

தமிழ் நிலத் தெய்வமான முருகனை சங்கத் தமிழோடு தொடர்பு படுத்தி, சங்கத்தமிழின் தலைமைப் புலவன் என்றும் "தோலாத முத்தமிழ் நாவா" என்றும் அழைத்து குமரகுருபரர் பெருமைப்படுகிறார். முத்தமிழால் வைதா ரையும் வாழ வைப்பான் என அருண கிரிநாதர் முருகனைப் பற்றிக் குறிப்பிடு கின்றார். "பலர் புகழ் நன் மொழிப் புலவரேறே" என நக்கீரர் தனது திருமுரு காற்றுப்படையில் கூறுகின்றார்.

முருகனுக்கு காங்கேயன், கந்தன், வேலன், விசாகன், குகன், குமரன் என பல பெயர்கள் உண்டு. தமிழ் மாநிலத்திற்கும், தமிழ் நிலத்திற்கும், தமிழ் இனத்திற்கும், தமிழ் மொழிக்கும் உரிய கடவுள் முருகனே என உணர்ந்து நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலும், அருணகிரியார் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம் போன்ற நூல்களிலும் மிகவும் கசிந்துருகிப் பாடியுள்ளனர்.

தெய்வானையை கற்பொழுக் கத்திலும் வள்ளியைக் களவொழுக்கத்திலும் மணந்த தமிழ்க் கடவுள் முருகன். வட நாட்டில் உள்ளவர்கள் கார்த்திகேயன் என்ற பெயரில் பிரமச்சாரியாகவே வணங்கி வருவது எம்மைச் சிந்திக்க வைக்கிறது. இப்படிப் பெருமை பெற்ற முருகன் தமிழ் நாட்டில் பல தலங்களில் கோயில் கொண்டிருந்தாலும் திரு முருகாற்றுப் படையை இயற்றிய நக்கீரர் சிறப்பாக ஆறு தலங்களையே குறிப்பிடுகிறார். அவற்றிற்கு ஆறுபடை வீடுகள் என்று பெயர். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை என்பவை அவையாகும்.

ஈழத் திருநாட்டில் முருகப் பெருமானுக்குப் பல கோவில்கள் இருந் தாலும் கதிர்காமம், மாவிட்டபுரம், மண்டூர், செல்வச்சந்நிதி, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் என்பனவே மக்களின் மனத்தில் நிலைத்து நிற்கின்றன. இங்குள்ள எல்லாக் கோவில்களையும் விட நல்லூர்க் கந்த சுவாமி கோவிலுக்கே தமிழ் மக்கள் வருகை தந்து பெருமையடைகிறார்கள். யோகர் சுவாமிகளும் நல்லூர்க் கந்தனைப் போற்றிப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடியுள்ளார். நாமும் நல்லூர்க்கந்தனைப் பாடி நலம் பெறுவோமாக!

"வெல்லுதமிழ்ப் பாட்டாலுன் விரிவான புகழ்பாடி
வியந்திங்கு போற்று கின்றோம்.
விடியாத பொழுதாகி முடியாத கதையாகி
விழிசோரும் எங்கள் முன்னே!
வேலோடும் மயிலோடும் விரிசேவற் கொடியோடும்
விருப்போடு வந்தி ருந்து
விழி கொண்ட பயனாகி வழிகண்ட துணையாகி
வினை தீர்க்க நல்லூரில் வரவேண்டுமே"

# என்.கே.பத்மநாதன் எங்களுடனேயே!

வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன்
முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரியும்,
சைவசமய விவகாரக்குழுவின் தலைவரும்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

அளவையூர் நாதஸ்வர கான லாநிதி கலாசூரி என்.கே.பத்ம நாதனை அறியாதார் எவரும் இலர். இசையால் வசமாகா இதயம் ஏதும் உண்டா? தான் ார்ந்த துறையோடு இரண்டறக் கலந்து அத்துறைக்கு மகிமையையும், பெருமை யையும் ஒருங்கே சேர்த்த பெருந்தகை அவர்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கில இலங்கையிலும், கடல் கடந்த டுகளிலும் தமது நாத இசையால் னைவரையும் கவர்ந்து இழுத்தவர் மரர் பத்மநாதன். நல்லைக் கந்தனின் லயத்தின் ஆஸ்தான வித்துவானாக ளிர்ந்த அமரர் அவர்கள் ஆலய திகளில் வருடந்தோறும் தனது ஆற்றல் க்க இசையால் முருகன் அடியார் ளைக் கவர, மக்கள் வெள்ளம் சூழ்ந்து ன்று அவரது இசையைக் கேட்டு கிழ்ந்த நாட்களை நாம் மறந்திட டியாது.

"நல்லூரான் திருவடியை நான் னைத்த மாத்திரத்தில் எல்லாம் றப்பேனடி கிளியே இரவு பகல் ணேனடி" எனப்பாடி யோகர் சுவாமிகள் ருகன் பெருமையை உணர்த்தினார். ம்முருகப்பெருமானின் உற்சவத்தை ணும்போது எங்கள் முன்னே நிழலா வர் நாதஸ்வரத்தைக் கையிலேந்திய அமரர் பத்மநாதன் அவர்களே. ஒளி படைத்த கண்ணினனாய், ஏறுபோல் நடையினனாய் நல்லூர் வீதிகளில் ஏறத்தாழ 50ஆண்டுகள் வலம்வந்து தமது இனிய இசையினால் அனைத்து அடியார் களையும் தன்வசமாக்கியவர். அவரது இசையைத் தாளமிட்டு இரசிக்க முதியோர் கூட்டம் முண்டியடிக்கும் காட்சி அற்புதமானது.

அமரரின் நாதஸ்வர இசை முழங்க, நல்லூரான் வீதி வலம் வரும் போது தம்மை மறந்து முருகனை நேரில் கண்டது போன்ற உணர்வு பெற்று துதித்த பெருமக்கள் பலர். அத்தனை திறமை மிகுந்த பத்மநாதனை நாம் என்றும் மறக்க முடியாது.

நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டு விழாவின்போது நல்லூர் இந்து விடுதி முன்றலில் மங்கள இசை முழங்கிய கலாசூரி என்றும் எங்களு டனேயே வாழ்கின்றார்.

நாதஸ்வர இசையால் தமக்கென நிலையான இடத்தைப் பெற்றிருக்கும் அமரர் பத்மநாதன் அவர்கள் என்றும் எங்களுடனேயே இருக்கிறார் என்று எண்ணி மன நிறைவு அடைவோமாக!

*வாழ்க அவரது இசைத்தொண்டு*
*வளர்க நாதஸ்வர இசைக்கலை.*

# பற்று மிகுந்த எங்கள் தெல்லியூரர்

இரா. இரத்தினசிங்கம்
செயலாளர்,
சைவசமய விவகாரக் குழு.

தன்னை ஈன்ற தாயின் மீது அளவிறந்த பற்றுக்கொண்டு வாழ்ந்த காரணத்தினால் தாய்நாட்டின் மீதும், தம் மக்கள் மீதும் அமரர் தெல்லியூர் நடராஜா அவர்களுக்கு பற்று மிகுந்து காணப் பட்டது இயல்பானதே.

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் 'சுதந்திரன்' பத்திரிகையின் பங்கு மகத்தானது. அந்த வகையில் அதன் ஆரம்பகால ஆசிரியராகத் திகழ்ந்தவர் தெல்லியூரர் அவர்கள். தமிழினம் சிங்கள இனவாதிகளினால் சோதனைக்கு உட்பட்டிருந்த வேளையில் காலத்தின் தேவையறிந்து 'தமிழன் மாட்சி' என்ற நூலினை எழுதி வெளியிட்டதன் மூலம் தமிழரின் தனித்துவம், தமிழர் தாயகம் ஆகியவற்றை வலியுறுத்தி தமது இனப்பற்றை வெளிக்காட்டி இருந்தார்.

பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வுபெற்று சைவசமய வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து பல நூல்களை எழுதியும், சைவம் சார்ந்த பல கருத்தாழம் மிக்க கட்டுரைகளை பத்திரிகைகள் வாயிலாக எழுதி வெளி யிட்டுக் கொண்டிருந்த வேளையிலே யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினருடன் அறிமுகம் ஏற்பட்டது. எமது குழுவின் தலைவராகத் திகழ்ந்த வைத்திய கலாநிதி தெய் வேந்திரன் மூலமாகவே அமரர் தெல்லி யூரர் எமக்கு நன்கு அறிமுகமானார். பழகுவதற்கு இனியவர், பண்பாளர், வெள்ளை உள்ளம் கொண்டவர், ஆசாரசீலர்.

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் வருடா வருடம் மலர் ஒன்றினை எமது குழு வெளியிடல் வேண்டுமென்று 1993 ஆம் ஆண்டில் நாம் தீர்மானித்தபோது பத்திரிகைத் துறையிலும், அச்சிடும் கலையிலும் போதிய தேர்ச்சியும் அனுபவமும் மிக்க தெல்லியூரர் அவர்கள் எமது மலரின் கௌரவ பதிப்பாசிரியராகப் பணியேற்று அம்மலருக்கு 'நல்லைக் குமரன் மலர்' எனப் பெயர்சூட்டினார். மலரிற்கு 10 வயது பூர்த்தியாகும் வரை அதனை நன்கு கவனித்து வேண்டியபோது, ஆலோ சனைகளை அள்ளி வழங்கியமையை எமது குழு எந்நாளும் நினைவில் நிறுத்தும்.

குழுவினால் வருடந்தோறும் வெளியிடப்பட்ட மலர்களில் தமது பல்வேறு வகைப்பட்ட ஆக்கங்களை ஹஜதரன், உமாபதி, தெல்லியூர் அம்பி,

நானா, முல்லை முருகன் போன்ற பல் வேறு புனைபெயர்களில் எழுதி மல ருக்குப் பெருமை சேர்த்த பெரியார் அமரர் தெல்லியூரர். தனது கருத்தினை அனை வரும் ஏற்றக்கொள்ள வேண்டுமென்பதில் அவர் விடாப்பிடியாக இருந்த சந்தர்ப் பங்களை நாம் பல தடவைகள் சந்தித் துள்ளோம். மாற்றுக் கருத்துக் கொண்ட வர்கள் அவருடன் வாதிட்டு ஒருபோதும் வெற்றிபெற முடியாது. அவரும் தமது கருத்தை மாற்றுவதற்குத் தயாராக வில்லை. இத்தருணங்களில் நாங்கள் பல தடவைகள் விட்டுக் கொடுத்து அவரது கருத்தை ஏற்றுக்கொண்டு செயற் பட்டோம் என்பதே உண்மை. அதனால் நாமும் திருப்தியடைந்தோம். வெற்றியும் கண்டோம்.

'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என அனைத்துலக மக்களுக்காகவும் வழி பாடாற்றுகின்ற பழைமையும், தொன் மையும், பெருமையும் மிக்க சைவ சமயத்திலிருந்து அற்ப சலுகைகளுக்காகப் பிற மதங்களுக்கு மாறுவோரின் எண் ணிக்கை அதிகரித்துச் செல்லுவதை எண்ணிக் கவலையுற்ற தெல்லியூரர் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சைவத் தின் பெயரால் இயங்கும் அனைத்து அமைப்புக்களும் ஓர் அணியில் திரண்டு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென உறுதி பூண்டிருந்தார். காலம் அதற்கு இடங்கொடுக்காதது எமது துரதிஷ்டமே.

அவரது இறுதி ஆசையை சைவர்களாகிய நாம் நிறைவேற்று வதற்காக சைவத்தின் பெயரால் இயங்கும் சகல நிறுவனங்களும் தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற் சென்று ஓரணியில் திரண்டு மதமாற்றத்திற்கு எதிராக முழுவீச்சில் செயற்படுவதே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

தமிழ்மொழி மீது பற்று மிகுந்திருந்த அமரர் இறுதி மூச்சுவரை சமயம், சோதிடம் போன்ற துறைகளில் அதீத அக்கறை செலுத்தி அவற்றின் மேம்பாட்டுக்காக அரும்பணியாற்றினார்.

'வாழ்க தெல்லியூரர் நாமம்';
'தொடருவோம் அவரது பணி'.

## நல்லைக்கந்தனிடம் நலிவான வேண்டுகோள்

### வெண்பா

நல்ல மலர்கொண்டு நாந்தொடுக்கு மிம்மாலை
நல்ல மணம்வீசி நாடோறும் - வல்லகுகா!
நின்கழுத்தி லேநிலைத்து வாடாது
நின்றொளிஇன்னருளை ஈவாய் இயைந்து

குலவுமிரு வாலைக் குயுத்தியரோ டென்றும்
உலவுவரும் ஏகாந்தா! ஓங்கி நிலவுமுயர்
பஞ்சம் மிடிபிணிகள் பாரிற் றலைக்காட்டா(து)
அஞ்சி அகல அருள்

தெள்ளுதமி ழாலடியேந் தேமதுரப் பாவிசைத்து
உள்ளம் உருகி உனைப்பணிய - வள்ளலே
காவுறையும் நல்லை களிபொங்க வீற்றிருந்தெம்
நாவுறைவாய் நாளும் நயந்து

சமூக இரத்தினம்
**எம்.கே.இளையப்பு** (கோப்பாய்)

# தூய தொண்டினைத் துடிப்புடன் செய்த தூபலரர் நாமம் வாழ்க!

**இரா.இரத்தினசிங்கம்.**
செயலாளர்,
சைவசமய விவகாரக்குழு.

இறைவனுக்குச் செய்யும் தொண்டுகளில் ஒன்றான தூபமிடும் தொண்டினை தமது இறுதி மூச்சுவரை செய்துவந்த கார்த்திகேசு சுவாமிகளைக் கண்டு, கேட்டு அறியாதார் எவரும் இலர்.

நல்லைக் கந்தனின் ஆலயச் சூழலில் சித்தர்கள் பலர் நடமாடிய அதிர்வுகள் இன்றும் ஒலித்த வண்ணம் உள்ளன. அந்த வரிசையில் தூபலார் கார்த்திகேசு சுவாமிகளின் எளிமையான தோற்றம் எவர் மனதையும் விட்டு நீங்காது நிலைத்திருக்கும்.

நல்லூரானின் உற்சவ காலங்களில் காவியுடை தரித்து மிக எளிமையான தோற்றத்துடன் தூபமிடும் கலசத்தைக் கையில் ஏந்தி சாம்பிராணி நிரம்பிய பொதியை தோளில் கொண்டு வலது கரத்தில் விசிறியுடன் காட்சி தந்து முருகன் வீதியுலா வரும்போது அவன் முன்னே தூப ஆராதனை செய்த வண்ணம் சென்று கொண்டிருந்த சுவாமிகளின் தொண்டு 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்தது.

காலந்தவறாது உரிய நேரத்தில் திருவிழாக்கள் நடைபெறும் ஆலயங்களில் முதன்மையானது நல்லைக் கந்தனின் ஆலயமாகும். பக்தர்கள் கூட்டம் அலைமோதும் ஆலய வீதிகளில் குங்கிலியம், சாம்பிராணி ஆகியவற்றின் தூபமே சிறந்ததென எண்ணி தூபலார் அப்பணியை மிகுந்த உற்சாகத்துடன் செய்து வந்தார்.

அழகன் முருகனின் தளபதியாகத் திகழ்ந்த வீரவாகுதேவரின் பரம்பரையில் வந்த செங்குந்தர், நல்லூரில் சூரன்போர் நடைபெறும்போது படைக்கலம் தாங்கி முருகனுக்கு ஆதரவாகச் செல்வது மரபாகும். அதே மரபில் உதித்த கார்த்திகேசு சுவாமிகள் தமது இளமைக் காலங்களில் கந்தசஷ்டி விரதமிருந்து சூரசம்ஹாரம் செய்வதற்காக நல்லூர் முருகன் ஆலயத்தை நோக்கி நாரத முனிவர், வசிட்டர் போன்றோரின் வேடம் தரித்து சென்ற நாட்களை எண்ணினால் எனது இளமைக்காலம் என் கண்முன்னே நிழலாடும்.

தூப ஆராதனை, மருந்தாகவும் ஆன்மீக எழுச்சிக்கு வித்தாகவும் அமைகின்றன. அந்த வகையில் தூபலார் சுவாமிகள் செய்துவந்த சாம்பிராணி ஆராதனை காற்றிலே கலந்து முருகன் அடியார்களை இறையின்பத்தில் ஆழ்த்தி இயற்கையான சுகத்தினையும், இன்பத்தையும் ஆலயச்சூழலில் முகரச் செய்ததில் வியப்பில்லை.

'அவனன்றி அணுவும் அசையாது' என்ற வாக்கில் அதீத நம்பிக்கை கொண்டு ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டிருக்கும் கார்த்திகேசு சுவாமிகளின் நாமம் வாழ வாழ்த்துவோமாக.

## நல்லைக் கந்தனின் அகவல்

அந்தக னான அருங்கவி ராயன்
சந்தம தாகத் தன்னரு மியாழால்
வேழமோ டீழம் வேண்டுவா னுன்னி
ஈழமாள் வேந்த னேவேல சிங்கனை
இன்புறச் செய்தே யிருங்களிப் புடனே
இன்பரி சதாக ஏலவே பெற்ற
பொன்கை ரென்றே புவியுளோர் புகழும்
நன்னக ரானயாழ்ப் பாணமா நகரின்
நல்லையிற் குடிகொண் டருள்நல் வேளே!
ஒல்லையில் வருவாய் உவப்பன செய்வாய்
அரனார் மகனே! அறுமீன் காதல!
அறுமுகா! ஆசான் ஆண்டலைக் கொடியோய்
கங்கையின் மைந்த! கடம்ப! காங் கேய!
கந்தனே! குழகா! கலையுணர் புலவோய்!
குன்றெறிந் தோனே! குகா! சண்முகனே!
சரவண பவனே! சிகிவா கனனே!
சுரேசனா! சிலம்பா! சுப்பிர மணியா!
செட்டி! சூர்ப் பகைவா! சேந்த செவ்வேளே!
மட்டிளங் குமரா மாசறு சேயே!
சேவற் கொடியோய் தாருகற் செற்றேய!
தேவசே னாபதீ! தெய்வி காந்த!
மஞ்ஞை யூந்தி! மாயோன் மருகா!
பிஞ்ஞகன் புதல்வா! பாவகீ! முருகா!
வள்ளி மணாளா! வரைபக வெறிந்தோய்!
புள்ளி மயிலோய்! தாருகா ரியனே
வேலவா விசாகா! வாகு லேயோய்!
வேலின் இறைவா! வேளே! இறைவா!
அமிழ்தினு மினியநந் தமிழ்மொழி பேசும்
தமிழர் தங்குறை தருக்கொடு தீர்த்து
வையம் செழித்து வாழ் வுற
ஐயனே! அருள்வாய் அன்புட னினிதே!

சமூக இரத்தினம்
**எம்.கே.இளையப்பு, கோப்பாய்.**

# நல்லூர்க் கந்தன் திருப்புகழ்

**சொக்கன்**

அழகு தமிழில் நிலவும் இனிமை
அறிய அருளும் முருகோனே!
அரிய நறிய மணமும் ஒளியும்
அருளும் நிலவும் திருமார்பா!
விழையும் அடியர் உயிரும் உளமும்
விரவி அருளைப் பொழிவோனே!
மிகவும் இழிவு மலியும் அசுரர்
வெதிர அயிலை விடுவோனே!
குழையை அளவும் நெடிய விழியள்
குழலின் இனிய மொழியாளைக்
குறவர் இடையிற் கவர முதிய
கிழவன் உருவில் வருவோனே!
பழையன் எனினும் இளமை குலவும்
பகர அரிய எழிலோனே!
பரமன் அருளப் பதிநல்லையினிற்
பயிலும் முருகப் பெருமானே!

வெதிர - அஞ்ச, குழை - காதணி, அயில் - வேல்

உலகினில் அன்பு நிலை பெறல் ஒன்றே
உயர்வினை என்றும் தருமென்றே
ஒளிமதி யாளர் பலர்பலர் சொன்னார்
ஒருவரும் இன்று கருதார்கள்
அலை அலையாகத் துயரெனும் ஆழி
அடித்தடித் தார்க்கும் நிலைதன்னில்
அடிதடி கொள்ளை கொலையழி வல்லால்
அமைதியை உலகில் எவர் கண்டார்?
நிலை தடுமாறி அலைவுகள் மிக்கு
நீதியென் றொன்றும் இலதாக
நிமலனின் மைந்தா! ஒரு கணம் உன்றன்
நினைவினை ஈந்து மருள் நீக்கித்
தலைமையை வேண்டித் தலைபழு தான
தகைமை யிலாளர் தளைபோக்கித்
தலமுயர் நல்லைப் பதியினில் என்றும்
தயவளி கந்தப்பெ பருமானே!

வெற்றியால் நாமுனை மறவாதே
மிக்கதாம் சோதனை தருவோனே!
கற்றிலாத் தீமையைக் களைவோனே!
கற்பன யாவுமுன் கழல் தாமே
செற்றிடும் ஆவைத் திறம்மாளச்
சித்தியைத் தந்தெமக் கருள்வாயே
பற்றிலார் பற்றிடப் பதிநல்லை
பற்றியே வாழ்கந்தப் பெருமானே!

செற்றிடும் - அழித்திடும்

ஆசைபல காட்டி நேசமுகம் காட்டி
ஆருயிர்போற் காட்டி அற்புதங்கள் காட்டி
அன்புமொழி காட்டி அற்புதங்கள் காட்டி
ஆளணைவு காட்டி அயர்வித்தே
காசுபல காட்டித் தேசு புகழ் காட்டிக்
கீத நடம் காட்டிக் கிளர்வித்தே
கோடும் வழி காட்டிக் கோலம் பல காட்டிக்
கூடும் ஆசை ஊட்டிக் குளிர்வித்து
நாசமிகு நாட்டில் நீசவழி காட்டி
நாடகந்தை கூட்டி நலிவித்து
நேசரென மாட்டிப் பேயனென வாட்டி
நின்றுலகக் காட்டில் நிலையாக்கும்
பாசவழி வீட்டிப் பேசரிய நாட்டம்
பாரில்உன்னில் நீட்டிப் பரிவாயே
பாலகனே; கந்தா; நல்லைய கந்தாய்!
பாரிழிவை ஓட்டும் பெருமானே!

கோடும் - வளையும், வீட்டி - அழித்து

மருளாமல் வெருளாமல் மனதார உனை நாடிக்
கருவாகி உருவாகிக் கழியாதே அருள்வாயே
எருதேறும் சிவனாரின் எழிலாரும் குமரோனே
திருவாரும் நல்லூரில் திகழ்கந்தப் பெருமானே

(நன்றி: நல்லூர்க் கந்தன் திருப்புகழ் :- சொக்கன் 1989)

# "நல்லைக் கந்தனின் அஷ்டவித நாயகிகள்" நாட்டியச் சித்திரம்

இயற்றியவர் "மஹாவித்துவான்",

பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் M.A.

1. ஸ்வாதீனபதிகா
2. வாஸகஸஜ்ஜிகா
3. விரஹோத்கண்டிதா
4. விப்ரலதா
5. கண்டிதா
6. கலகாந்தாரிகா
7. ப்ரோஷிகபத்ருகா

அபிசாரிகா

## அஷ்டவித நாயகிகள் நாட்டிய நிகழ்ச்சி

### 1. ஸ்வாதீனபதிகா:

(நாயகனால் எப்போதும் சந்தோஷிக்கப்படுகின்றவள்)

**இராகம் : கல்யாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மாலை மலர் கமழும் சோலை - எந்தன்
மன்னவன் அன்பொழுக
மதியின் ஒளியினிலே ஸரஸமாடவரும் (மாலை)

**அனுபல்லவி**

சோலை மலரெடுத்து சூட்டுவான் குழலிலே
வாலைக் குமரி எந்தன்
வளையின் கரங்கள் பற்றி அமுதம் எனக்களிப்பான் (மாலை)

**சரணம்**

மானும் தாவுதென மங்கை எனைத் தொடர்ந்து
மலரின் முகவாயைப் பிடித்திடுவான்
தேனின் இனிமை மிகும் தீஞ்சுவை மொழியால்
தேவ கானந்தனைப் படித்திடுவான்
கான வீணையடி நீயெனக்கு எனக்
காதல் கீதம் மீட்டிப் பாடிடுவான்
மானமுடன் உலகில் வாழ்வு தருவான் குகன்
மயில் தனிலே - அயிலுடனே - ஒயிலாய் வரும். (மாலை)

### 2. வாஸக ஸஜ்ஜிகா:

(படுக்கையிலிருந்து கொண்டு கணவனை எதிர்பார்ப்பவள்)

**இராகம் : ஆபேரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வருவாரடி ஸகியே - இது தருணம்
தருவாரடி பேரின்பம்
முருகன் நல்லைக் குமரன் - மனமிரங்கி (வருவாரடி)

**அனுபல்லவி**

திருமாலை நான் புனைந்து திகழாபரணம் சூடி
வருமா மயிலணையே
மகிழ்ந்து கலந்து இன்பம் மங்கை நானும் பெற (வருவாரடி)

**சரணம்**

பாலும் பழமுமொடு பஞ்சனை மஞ்சம்
பன்மலர் பன்னீர் தூவி வைத்தேன்
நீல மயிலழகன் நெஞ்சம் மகிழ மாந்தும்
பூவின் ரஸத்தேனும் பொலிய வைத்தேன்
சோலமாமுருகன் வேலன் சிங்காரன்
கொள்ளும் லீலையிலே முகம் சிவந்தேன்
சீவன் சிவசக்தி பாலன் வந்தணைந்து
